தமிழ் லா சுருக்கம்.

இது

சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டு வக்கீல்,

பீ. ஏ., பீ. எல்.,

ஆர். வெங்கட சுப்பாராவ் அவர்களால்

தெலுங்கில் எழுதப்பட்டு தமிழில் தர்ஜுமா
செய்யப்பட்டிருக்கிறது.

கிரயம் ரூ. 3. தபால் மூலமாய், ரூ. 3-4-0.

AN

EPITOME OF LAW

IN

COLLOQUIAL TAMIL,

For Popular Readers:

Translated from the Telugu Work

OF

R. VENKATA SUBBA RAU, B.A., B.L.,

High Court Vakil, Madras.

MADRAS:

PRINTED AT THE LAWRENCE ASYLUM PRESS, MOUNT ROAD,

BY G. W. TAYLOR.

1889.

All Rights Reserved.

CONTENTS.

The Indian Penal Code.

Offences, § 1......Complaints and Suits, 3......Intention, 4......Joint Commission of Offences, 5......Abetment, 6......Attempt to Commit Offences, 16......Command of Superior Authority, 17......Mistake, 20......Accident, 21......Misfortune, 22......Infancy, 23......Lunacy, 26......Drunkenness, 27......Consent, 28......Compulsion, 33...... Self-defence, 36......Compouuding of Offences, 44......Concealment and Harbouring, 51......Punishments, 59...... Waging War, 66......Unlawful Assembly and Rioting, 67......Public Nuisances, 75......Offences relating to Religion, 93......Bribes and Recommendations, 97......Offences by Public Servants, 101......Contempts of Lawful Authority, 108......False Personation, 123......False Evidence and Fabrication, 128...... Forgery, 135......False Charges, 145......False Suits, 149......Fraudulent Concealment of Property, 151......Extortion, 152......Theft, 156......Stolen Property, 165...... Robbery and Dacoity, 169...... Criminal Misappropriation, 175......Criminal Breach of Trust, 178......Cheating, 180......Counterfeit Coins, 189......Counterfeit Stamps, 193......False Weights and False Measures, 195......Mischief, 196......Criminal Trespass, 208......Culpable Homicide and Murder, 211......Suicide, 218......Infanticide and Abortion, 221......Hurt and Grievous Hurt, 228......Wrongful Restraint and Wrongful Confinement, 237......Assault and Criminal Force, 240......Criminal Intimidation, 246......Kidnapping and Abduction, 251......Forced Labour, 255......Rape, 256......Unnatural Offences, 261......Adultery and Seduction, 262......Defamation, 272......Criminal Breach of Contract, 279......

Hindu Law.

Marriage, § 284 ...... Adoption, 295 ...... Guardianship, 312 ...... Ancestral and Selfacquired Property, 318 ......Debts, 324......Gifts and Wills, 332......Maintenance, 342......Partition, 351......Inheritance, 364......Stridhana, 379......

Matters relating to Village Officers.

Hereditary Right under Regs. 6 of 1839 and 29 of 1802, § 388......Powers of Village Munsiffs, 390......Trial of Petty Suits, 394......Reg. 5 of 1816, Village Panchayet, 405......Panchayet under Reg. 12 of 1816, § 426......Regs. 11 of 1816 and 4 of 1821, Trial of Petty Offences, 427......Reports to Superior Officers, 435......Act 1 of 1858, Compulsory Labour, 444......Act 1 of 1871, Cattle Trespass, 448......

Miscellaneous Matters.

Easements and Suits, § 458, ...Pauper Suits, 466......Imprisonment for Debt, 469...Insolvency, 473......Civil Appeals, 475......Criminal Appeals, 483...Appeals to the Revenue Board and to Government, 488......Vakalutnamahs, 492......Limitation, Act 15 of 1877 as amended, 496......Court Fees, Act 7 of 1870, § 511......Stamps, Act 1 of 1879 § 521......Registration, Act 3 of 1877 as amended, 543......Mortgages, Sales and other Transfers, 564......Promissory Notes and Bonds, 574......Appropriation of Payments, 586......Interest, 590......

PREFACE.

THIS work is a translation from Telugu. It is an attempt to summarise in colloquial language, the main provisions of law that will be found useful in the everyday life of the people of this Presidency. Its object is not to make every man his own lawyer, but merely to obviate, in some measure, the consequences of the general ignorance which at present prevails in regard to most of these provisions, the existence of the so-called translations of the Acts notwithstanding. The subjects dealt with and the nature of the arrangement adopted will be seen from the Table of Contents. The aim throughout has been to render the work easy and interesting for popular perusal.

MADRAS, *April 1889.* } R. V. S.

முகவுரை.

இந்தக்கிரந்தம் கொஞ்ச நாளைக்குமுன் தெலுங்கில் தயார் செய்யப்பட்டு விசேஷமாய் வாங்கப்பட்டது. தமிழிலும் வேண்டுமென்று அநேகர் கோறியபடியால் இப்போது இது அச்சிடப்பட்டிருக்கிறது.

இதில் நான்கு பாகங்கள் இருக்கின்றன - 1-வது பினல் கோட்டு சுருக்கம், 2-வது இந்து லா சுருக்கம், 3-வது கிராம உத்தியோகஸ்தர் விஷயம், 4-வது சில்லரை விஷயங்கள். இந்திந்த பாகங்களில் சேர்க்கப்பட்ட விஷயங்கள் அட்டவணையில் கண்டிருக்கின்றன.

சர்க்கார் சட்டங்களின் தர்ஜிமாக்கள் உள்ளபடி அச்சு போட்டு சுலபமாய் கிரந்தம் தயார்செய்யலாம். ஆனால், இதைக்கொண்டு ஜனங்கள் சங்கதிகளை நன்ராய் தெரிந்து கொள்ளமாட்டார்கள். ஆகையால், அநேக விஷயங்களைச்சேர்த்து சுருக்கமாய், எல்லோருக்கும் சுலபமாய் தெரியும்படி, இந்தக்கிரந்தம் எழுதப்பட்டிருக்கிறது.

இரண்டொரு லா புஸ்தகங்கள் படிக்கிறதினாலேயே எல்லோரும், லாயர்கள் ஆகாமற்போனபோதிலும், தினந்தோறும் சம்பவிக்கிற சிக்குகள், பிழைகள், குற்றங்கள், அநேகமாய் தப்பித்துக்கொள்ளலாம்.

1889 ஞூ,
ஏப்பிரெல் மாசம்.

ஆர். வெ. சு.

அட்டவணை.

*** பினல்கோட் சுருக்கம்.

	பியாரா சங்கை.
குற்றங்கள்	1
பிராதுகள், வியாச்சியங்கள்	3
கெட்ட எண்ணம்	4
பலர்சேர்ந்து குற்றஞ்செய்தல்	5
குற்றத்துக்கு கும்மக்கு செய்தல்	6
குற்றம் செய்வதற்கு பிரயத்தினப்படுதல்	16
அதிகாரியினுடைய கட்டளை	17
தப்பு	20
தற்செயல்	21
ஆபத்து	22
பால்லியம்	23
பைத்தியம்	26
மயக்கம்	27
சம்மதி	28
பயம்	33
ஆத்மசம்ரக்ஷணை	36
குற்றவாளிகளோடு ராஜீசெய்துகொள்வது ...	44
குற்றங்களையும் குற்றவாளிகளையும் மறைத்தல் ...	51
தண்டனைகள்	59
சர்க்காருக்கு விரோதமாய் யுத்தம்செய்தல் ...	66
கூட்டம் கூடுதல், கலகம் செய்தல்	67
ஜனங்களுடைய க்ஷேமத்தையும் சுகத்தையும் கெடுத்தல்	75
மதவிஷயமான குற்றங்கள்	93
லஞ்சம் சிபார்சு	97
சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், அக்கிரமம், அநியாயம், செய்தல்	101

பியாரா சங்கை.

சர்க்கார் உத்தியோகஸ்தருடைய அதிகாரத்தை அலக்ஷியம் செய்தல் 108
ஆள் மாராட்டம் 123
பொய் சாக்ஷியம் 128
போர்ஜரீ 135
பொய் பிராதுகள் 145
பொய் வழக்குகள் 149
சொத்தை மறைத்தல் 151
பலாத்காரம்செய்து சொத்தை வாங்கிக்கொள்ளுதல் 152
களவு குற்றம் 156
களவு சொத்து 165
கொள்ளை 169
சொத்தை அபகரித்தல் 175
நம்பிக்கைத் துரோகம் 178
மோசம் 180
கள்ள நாணயங்கள் 189
கள்ள ஸ்டாம்புகள் 193
கள்ள நிறைகள், கள்ள அளவுகள் 195
கெடுதி 196
அக்கிரமமாய் பிரவேசித்தல் 208
கூனி குற்றம் 211
தற்கொலை 218
சிசுஹத்தி முதலியவைகள் 221
துன்பம் உண்டுபண்ணுதல் 228
அக்கிரமமாய் தடுத்தலும், அடைத்தலும் ... 237
தாக்குதல்... 240
அக்கிரமமாய் பயப்படுத்துதல் 246
மனிதர்களைத் திருடுதல் 251
பிள்ளைகளை விற்பது 254
பலவந்தப்படுத்தி வேலைசெய்வித்தல் 255

பியாரா சங்கை.

துராக்கிரதமான புணர்ச்சி 256
மிருகங்களோடு புணர்தல் 261
வியபசாரம் 262
அவதூறு 272
உடன்படிக்கைத்தவறுதல்... 279

*** இந்துலா சுருக்கம்.

விவாகம் 284
ஸ்வீகாரம், அதாவது தத்து 295
மைனர்களின் சவரக்ஷணை 312
சுவார்ச்சிதம், பிதுரார்ச்சிதம் 318
கடன் 324
தானம், உயில் 332
ஜீவனும்சம் 342
விபாகம் 351
வாரசு பாத்தியதை 364
ஸ்திரீதனம் 372

*** கிராம உத்தியோகஸ்தர் விஷயம்.

1831 ஷு 6 நெம்பர், 1802 ஷு 29 நெம்பர் ரெகுலேஷன்படி பாரம்பரை பாத்தியம் 388
கிராம முன்சீபுகளின் அதிகாரங்கள் 390
சுவல்ப வியாச்சியங்கள் விசாரணை 394
1816 ஷு 5 ரெகுலேஷன்படி கிராம பஞ்சாயத்து 405
1816 ஷு 12 ரெகுலேஷன்படி பஞ்சாயத்து. ... 426
1816 ஷு 11 நெம்பர், 1821 ஷு 4 நெம்பர் ரெகுலேஷன்படி சுவல்பகுற்றங்களின் விசாரணை 427

பியாரா சங்கை.

மேல் அதிகாரிகளுக்கு ரிபோர்ட்டு வகைரு ... 435

1858 ௵ 1 நெம்பர் சட்டத்தின்படி பலாத்காரமாய் வேலைசெய்வித்தல் ... 444

1871 ௵ 1 நெம்பர் சட்டத்தின்படி பவுண்டுகளைக்குறித்து 448

*** சில்லறை விஷயங்கள்.

தண்ணீர், சுவர், ஜனல், முதலிய பாத்தியதைகளைக்குறித்த தாவாக்கள் ... 458

பாபர் வியாச்சியங்கள் 466

சிவில் ஜெயீல் 469

இன்சால்மெண்டு 473

சிவில் அப்பீல் 475

கிரிமினல் அப்பீல் 483

போர்ட் அப்பீல், கவரன்மெண்டு அப்பீல் ... 488

வக்காலத்து நாமா 492

1877 ௵ லிமிடேஷன், அதாவது 15 நெம்பர் சட்டத்தின்படி வியாச்சியங்களுக்கும் அப்ளிகேஷன்களுக்கும் நியமிக்கப்பட்டவாயிதாக்கள் 496

தாவா பிடிஷன் வகைருக்களுக்கு ஸ்டாம்புகள். 511

ரசீது, பிராமிசரிநோட்டு, பத்திரம், வகைரு, தஸ்தாவேஜுகளுக்கு 1879 ௵ 1 நெம்பர் ஆக்ட்டுபடி இருக்கவேண்டிய ஸ்டாம்புகள் 521

1877 ௵ 3 நெம்பர் ஆக்டின்படி தஸ்தாவேஜுகளை ரிஜிஸ்டர் செய்வித்தல் ... 543

அடமானம், கிரயம், வகைரு, திரான்ஸ்பர்கள்... 564

பிராமிசரிநோட்டுகள், பத்திரங்கள் 574

செல்லுகள், வட்டிகள் 586

பினல்கோட் சுருக்கம்.

1860 வருஷத்திய 45 - வது சட்டம்.

*** குற்றங்கள்.

1. இந்தியன் பினல்கோட் - இந்தியாதேசத்தில் குற்றவாளிகளை தண்டிப்பதற்காக ஏர்ப்படுத்தப்பட்ட சட்டமாயிருக்கிறது.

2. குற்றவாளிகள் - பினல் கோடுப்படிக்கு தண்டிக்கப்படுகிறதுமல்லாமல் - அவாளுடைய குற்றத்தினால் நஷ்டமடைந்தவர்கள், அவாளின்பேரில் நஷ்டத்துக்காக தாவாவும் செய்யக்கூடும்.

இது எப்படி யென்றால்—:

களவு, மோசம், நம்பிக்கைத்துரோகம், விபசாரம் முதலாகிய குற்றங்கள் நடந்தால், குற்றவாளியின்பேரில் பிராதுசெய்து, அவனுக்கு தண்டனை செய்விப்பதுமல்லாமல் - அந்த குற்றத்தாலுண்டான நஷ்டத்துக்காக, குற்றவாளியின்பேரில், நஷ்டத்தையடைந்தவன் வியாச்சியமும் செய்துக்கொள்ளலாம்.

*** பிராதுகள் - வியாச்சியங்கள்.

3. சிவில் விவஹாரம் நடத்தவேண்டியபோது, அனேகர், கிரிமினல் விவகாரத்தை ஆரம்பித்து பிராதுகளை தாக்கல்செய்து வருகிறார்கள். அப்படி செய்வதினால் காலதாமசமாகிறதுமல்லாமல், வீண் சிரமமும் ஆகின்றது. ஆகையால் குற்றங்களின் சுபாவம், இது குற்றம் இது குற்றம் அல்ல - இந்த சங்கதிகளை தெரிந்துக்கொண்டிருப்பது மிகவும் உபயோகமாயிருக்கும்.

*** கெட்ட எண்ணம்.

4. அனேக குற்றங்களுக்கு - கெட்ட எண்ணம், முக்கிய மானதா யிருக்கின்றது - அதாவது - அக்கிரமமாய் ஒரு வனுக்கு நஷ்டம் வுண்டுபண்ண வேண்டுமென்றுவது, அல்லது, தானுகிலும் தன்னைச்சேர்ந்தவர்களாகிலும் அக்கிரமமாய் லாபம் அடையவேண்டுமென்றுவது, அல்லது, வேறு எந்த கெட்ட எண்ணத்தோடாவது, குற்றம் செய்யப்பட்டிருக்கவேண்டும். அப்பேர்ப்பட்ட கெட்ட எண்ணமில்லாமல் செய்யப்பட்ட காரியத்தால் யாருக்காவது நஷ்டமுண்டானுல் - அந்த நஷ்டத்திற்காக சாதாரணமாய் சிவில் வியாச்சியம் செய்யவேண்டுமேயல்லாமல் - கிரிமினலில் பிராது செய்யக்கூடாது.

*** பலர்சேர்ந்து குற்றஞ் செய்தல்.

5. அனேகர் சேர்ந்து குற்றம் செய்தபோது - அந்தக் குற்றம் ஒருவனுலேயே நடந்திருந்தபோதிலும், பினல் கோடு 34-வது செக்ஷன்படிக்கி - எல்லோரும் குற்றவாளிகள் ஆகிறுர்கள். மேலும் - முதலில் செய்ய நினைத்த குற்றத்தைப்பற்றி வேறொந்த குற்றம் நடந்தாலும், அந்த குற்றமும்கூட எல்லோரும் செய்தவர்களாகிறுர்கள்.

இது எப்படி யென்றுல்—

சிலர் சேர்ந்து, களவு செய்யவேண்டுமென்று எண்ணி, ஒரு வீட்டில் பிரவேசிக்கிறுர்கள். அதில் இரண்டு பேர் - வீட்டிலுள்ளவர்கள் எதிர்க்கவே, அவர்களை அடித்து, சொத்து யெடுத்துக்கொண்டு போகிறுர்கள். களவு, அடித்தல் - இந்த இரண்டு குற்றங்களும் இரண்டுபேரோ செய்திருந்தபோதிலும் - எல்லோரும் செய்தவர்களே ஆகிறுர்கள். முதலில் எல்லோரும் சேர்ந்து புரப்பட்டபோது, வீட்டிலிருந்தவர்களை அடிக்கவேண்டுமென்கிற எண்ணம் இல்லாதிருந்தபோதிலும் - களவு செய்யும்போது சாதா

ரணமாய் நடக்கக்கூடிய காரியமானதால் - அடித்த குற்றம்கூட எல்லோரும் செய்தவர்களாகிறார்கள்.

ஆனால், மேல் சொன்னவர்களில், ஒருவன் மாத்திரம் - ஒரு ஸ்திரீயை பலாத்காரமாய் எடுத்துக்கொண்டு போய், கெடுத்துவிட்டால் - அப்படி கெடுத்த குற்றத்தை அவன் மாத்திரமே செய்தவனாகிறான்.

*** குற்றத்துக்கு கும்மக்கு செய்தல்.

6. குற்றம் செய்தவனுக்கு மாத்திரமே தண்டனை கிடைக்குமென்றும் செய்வித்தவனுக்கு தண்டனை கிடைக்காதென்றும் அனேகர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி எண்ணிக்கொள்வது சுத்த பிசகு. குற்றம் செய்கிறவன், செய்விக்கிறவன், ஆகிய இரண்டுபேருக்கும், தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

7. ஒருவனைக்கொண்டு, ஏதாவது ஒரு குற்றம் செய்விப்பதற்காக எந்த விதத்தினாலாவது தூண்டிவிட்டாலும், அல்லது, எந்த விதத்திலாவது சகாயம் செய்தாலும், அல்லது, அந்த குற்றத்தின் விஷயமாய் ஏதாவது ஏர்ப்பாடுகள் செய்து வேலை நடப்பித்தாலும் - பினல் கோடு 107-வது செக்ஷன்படி கும்மக்கு, அதாவது, உடந்தை குற்றமாகும்.

8. உடந்தையாயிருந்த குற்றம், நடந்தாலும், நடக்காமல் போனாலும், உடந்தையாயிருந்தவன் தண்டிக்கப்படுவான்.

இது எப்படி யென்றால்—

"ஏ" என்பவன், "பீ" என்பவனை அடிப்பதற்காவது - கொல்லுவதற்காவது, அவன் வீட்டைக் கொள்ளையிடுவதற்காவது, "ஸீ" யென்பவனை தூண்டிவிடுகிறான் - "ஸீ" யென்பவன் அப்படி செய்வதற்கு சம்மதிக்காமல் போனாலும், ஒருவேளை சம்மதித்து அவன் செய்தபிரயத்தினம் கைகூடாமல் போனாலும் - கும்மக்கு செய்ததற்காக - "ஏ" என்பவனுக்கு தண்டனை தப்பாது.

9. குற்றம் செய்தவனுக்கு தண்டனையாகாமல் போன போதிலும், உடந்தையாயிருந்து குற்றம்செய்வித்தவனுக்கு தண்டனையாகாமல் போகாது.

இது எப்படி யென்றால்—

"ஏ" என்பவன் "பீ" என்பவனை தூண்டிவிட்டு ஒரு குற்றம் செய்விக்கிறான். "பீ" என்பவன் ஏழுவயதுக்குக் கீழ்ப்பட்டவனாகவாவது, அல்லது, பைத்தியக்காரனாகவாவது, யிருந்தால், அப்பொழுது அவன் தண்டிக்கப்படமாட்டான். "ஏ" என்பவன் மாத்திரம் உடந்தையா யிருந்ததற்காக தண்டிக்கப்படுவான்.

10. ஆகையால் - லஞ்சம் கொடுத்தவனுக்கும், வாங்கிக்கொண்டவனுக்கும் - பொய் சாக்ஷி சொன்னவனுக்கும், சொல்லிவித்தவனுக்கும் - வியபிசாரம் செய்தவனுக்கும், கூட்டிக்கொடுத்தவனுக்கும் - இருவருக்கும் தண்டனை கிடைக்கும்.

மேலும், லஞ்சம் வாங்கிக்கொள்வதற்கு அதிகாரி சம்மதிக்காவிட்டாலும், லஞ்சம் கொடுக்கவந்தவனுக்கு சிக்ஷை தப்பாது. அப்படியே, பொய் சாக்ஷி சொல்வதற்கு, சாக்ஷி ஒத்துக்கொள்ளாமற் போனபோதிலும், சொல்லும் படி சொன்னவனுக்கு தண்டனை ஆயிக்கொண்டே யிருக்கிறது.

11. உடந்தையாயிருந்த குற்றம் நடந்தால் - குற்றம் செய்தவனுக்கு எவ்வளவு தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறதோ அவ்வளவு தண்டனை உடந்தையா யிருந்தவனுக்கும் கூட 109 - வது செக்ஷன்படிக்கி விதிக்கப்பட்டிருக்கிறது.

12. உடந்தையாயிருந்த குற்றம் நடக்காமல் போனால் - குற்ற நடந்தபோது விதிக்கப்படும் தண்டனையில் சில பாகமாத்திரமே, அந்த உடந்தைக்கு விதிககப்பட்டிருக்கிறது.

13. மேலும் - உடந்தையாயிருந்த குற்றம் நடக்காமல், அதை அனுசரித்து வேறொரு குற்றம் நடந்தால் - இந்தக் குற்றத்துக்கு - முதல் குற்றத்துக்கு உடந்தையா யிருந்தவன் தண்டிக்கப்படுவான்.

இது எப்படி யென்றால்—

"ஏ" யென்பவன் ஒரு சிறு பையனிடத்தில் விஷத்தைக் கொடுத்து, "பீ" யென்பவனுடைய சாப்பாட்டில் கலந்துவிட்டு வரச்சொல்லுகிறான். அந்த பையன், தெரியாமல், "பீ" யென்பவனுடைய யிலைக் கடுத்திருந்த "சீ" யென்பவனுடைய சாப்பாட்டில் கலந்துவிடுகிறான் - அதினால் "சீ" யென்பவன் இறந்து போகிறான். அப்போது, "சீ" யென்பவனை கொல்விக்க வேண்டுமென்னும் எண்ணம் யில்லாதவனாயிருந்த போதிலும், "ஏ" யென்பவன் "சீ" யென்பவனைக் கொல்வதற்கு உடந்தையா யிருந்தவனே ஆகிறான்.

அப்படியே - களவு குற்றத்துக்கு உடந்தையா யிருந்தபோது, களவு முடியாமல், களவு செய்யப்போனவன், வீட்டிலிருப்பவர்களை அடித்து தப்பித்துக்கொண்டுவந்தால் - களவுக்கு உடந்தையா யிருந்தவன் இந்த அடித்த குற்றத்துக்கு உடந்தையா யிருக்கிறான்.

14. உடந்தையா யிருந்த குற்றம் தவிற அதற்கு சம்மந்தப்படாத வேறொரு பிரத்தியேகமான குற்றம் செய்யப்பட்டால் - முதல் குற்றத்துக்கு உடந்தையா யிருந்தவன் இந்த இரண்டாவது குற்றத்துக்கு தண்டிக்கப்படமாட்டான்.

இது எப்படி யென்றால்—

"ஏ" யென்பவன் "பீ" யென்பவனுடைய வீட்டுக்கு நெருப்பு வைப்பதற்காக "சீ" யென்பவனை அனுப்புகிறான். "சீ" யென்பவன், அப்படியே, வீட்டில் ஒரு மூலையிலே நெருப்புவைத்து - வீட்டில் நுழைந்து,

சொத்து எடுத்துக்கொண்டுபோகிறுன் - இங்கே வீட்டுக்கு நெருப்பு வைத்ததற்கு உடந்தையா யிருந்ததற்கு மாத்திரம் "ஏ" என்பவனுக்கு தணடனை கிடைக்கும். "ஸீ" என்பவனுக்கு நெருப்பு வைத்ததற்கும், சொத்து திருடினதற்கும், ஆகிய இரண்டு குற்றத்துக்கும் தண்டனை கிடைக்கும்.

15. உடந்தையா யிருக்கிறவன் - குற்றம் நடக்கும்போது கிட்டே இருந்தால், அவனே குற்றம் செய்தவனுக பெண்ணப்படுகிறுன். ஆகையால், கள்ள புருஷர்களை உள்ளே தள்ளி வெளியே காக்கும் கிளவிகளே! உங்கள் துர்ப்புத்தியை விடுங்கள்.

குற்றம் நடக்கும்போது, உடந்தை தவிர, மற்ருெருவன் எவனுகிலும் கிட்டே இருந்து சும்மா பார்த்துக்கொண்டிருந்தால், அதினுலே மாத்திரம், குற்றவாளி யாகமாட்டான்.

*** குற்றம் செய்வதற்கு பிரயத்தினப் படுதல்.

16. குற்றம் செய்யவேண்டுமென்று மனதில் எண்ணுவதினுல் மாத்திரமே யாரும் குற்றவாளிகளாகமாட்டார்கள் - ஆனுல், குற்றம் செய்வதற்கு யத்தினப்பட்டு - குற்றம் செய்துக்கொண்டிருக்கும்போது - எந்த காரணத்தினுலாகிலும் குற்றம் முடியாமல் போனுல் - 511-வது செக்ஷன்படிக்கி - குற்றம் செய்வதற்கு பிரயத்தினம் செய்தவனுகிறுன். குற்றத்துக்காக செய்த பிரயத்தினம் முடியாதிருந்தபோது - குற்றம் நடந்தால் விதிக்கப்படும் தண்டனையில் பாதி தண்டனை விதிக்கப்படும்.

இது எப்படி யென்ருல்—

"ஏ" என்பவன் "பீ" யென்பவனுடைய பொட்டியிலிருந்து சொத்து திருடவேண்டுமென்று பொட்டியைத் திறந்து பார்க்கிறுன். அதில் சொத்து யில்லாமல் போகிறது - அப்பொழுது, "ஏ" யென்பவனுல் களவு நடக்காமல் போனபோதிலும், களவு செய்வதற்கு

வேண்டிய பிரயத்தினம் செய்ததினால், களவு குற்றத்துக்கு விதிக்கப்பட்ட தண்டனையில் பாதி தண்டனை அவன் அடைவான்.

மறுபடியும் – "ஏ" யென்பவன் "பீ" யென்பவனை கொல்லுவதற்காக, அவனைப் பார்த்து துபாக்கி சுடுகிறான் – "பீ" யென்பவனுடைய அதிருஷ்டத்தினால் குறி தப்பிப்போகிறது. அப்பொழுது – "பீ" யென்பவனை கொல்லும் குற்றம் நடக்காமல் போனபோதிலும் – கொல்வதற்காக வேண்டிய பிரயத்தினம் செய்ததினால், கொலை குற்றத்துக்கு விதிக்கப்பட்ட தண்டனையில் பாதி தண்டனை "ஏ" என்பவன் அடைவான்.

*** அதிகாரியினுடைய கட்டளை.

17. கெட்ட எண்ணமில்லாமல் – சட்டப்படிக்கி நடத்திக்கொண்டிருக்கிறேனென்னும் நம்பிக்கையின்பேரில் – நியாயாதிபதியானவர் செய்கிற காரியம் – தப்பாயிருந்த போதிலும் – குற்றமாக மாட்டாது.

18. அதுவுமல்லாமல், நியாயாதிபதி மேல்சொன்னபடி பிசகாய் கொடுத்த தீர்மானத்தின்படிக்காவது, வுத்திரவின்படிக்காவது – கெட்ட எண்ணமில்லாமல், கீழ் உத்தியொகஸ்தன் அமல் நடத்தினால், இந்த உத்தியோகஸ்தன் குற்றவாளியாகமாட்டான்.

19. எஜமானனுடைய வுத்திரவின்படிக்கு செய்தாலும் – வேறு யாருடைய தூண்டுதலினால் செய்தாலும் – சட்டத்துக்கு விரோதமான காரியம் நடத்தப்பட்டால், அது குற்றமாகவே எண்ணப்படும்.

*** தப்பு.

20. இன்ன காரியம் செயதால் அது சட்டப்படிக்குக் குற்றமாகும் என்பதை தெரியாமல் செய்தபோதிலும், குற்றத்திற்குத் தண்டனை தப்பாது. ஆனால், விஷயங்களை

தப்பாக அறிந்துக்கொண்டு குற்றம் செய்தால் அதற்கு தண்டனை தப்பும்.

இது எப்படி யென்றால்—

ஒருவன் - பூட்டைத்திறந்து தன் வீட்டுக்குள்ளே போகிறான். அப்போ யாரோ ஒருவன் உள்ளே இருந்ததைக்கண்டு, பயந்து, திருடனென்று நினைத்து, பிஸ்தோலால் அவனைக்கொன்றால் 'இவன் திருடனல்லாமல் போனபோதிலும், கொன்றவனுக்குத் தண்டனை யில்லை.

அரையணாவுக்கு பாதரசம் பூசி, ரூபாயாக செலாவணி செய்து, அப்படி செய்தல் சட்டப்படிக்கு தப்பிதமென்று தனக்குத் தெரியாமல், செய்ததாகச் சொன்னால், தண்டனை தப்பாது.

*** <u>தற்செயல்.</u>

21. தற்செயலாயாவது, கிரகசாரவசத்தாலாவது, நடந்த குற்றம், மன்னிக்கப்படும்.

இது எப்படி யென்றால்—

"ஏ" யென்பவன் கோடாலியால் வேலைசெய்துக்கொண்டிருக்கையில் - கோடாலி கைதவறிப்போய் சமீபத்திலிருந்த மனிதன்பேரில் விழுந்து அவன் இறந்துபோகிறான் - இது தற்செயல் விஷயமானதினால் - "ஏ" என்பவன், கெட்ட எண்ணமில்லாமல் தகுந்த ஜாக்கிரதையோடு வேலை செய்துக்கொண்டிருந்திருந்தால், அவன் குற்றவாளி யாகமாட்டான்.

அப்படியே—அகஸ்மாத்தாய் குதிரை மெரண்டு - கையிக்கடங்காமல் ஓடி, வழியில் யாரையாவது மெரித்தால் - அதற்கு குதிரையின்பேரிலிருந்தவன் குற்றவாளி யாகமாட்டான். ஆனால் - குதிரையின்பேரில் சவாரி செய்கிறவன் மற்றொருவனோடு பந்தயம் போட்டுக்

கொண்டு குதிரையை மிகவும் வேகமாய் விட்டபோது, அது, கைக்கடங்காமற்போயி, ஜனங்களை மெரித்தால், அப்படி வேகமாய்விட்டவன் குற்றவாளியாவான்.

*** ஆபத்து.

22. உயிருக்காவது - பொருளுக்காவது - வந்த ஆபத்தை விலக்குவதற்காக செய்யும் காரியத்தால் தீங்கு நேரிட்டபோதிலும் அது குற்றமாகமாட்டாது.

இது எப்படி யென்றால்—

ஒருவன் மற்றொருவன் வீட்டையிடிப்பது குற்றம்தான். ஆனால் ஒரு தெருவில் வீடுகள் பத்திக்கொண்டு வரும்போது - மற்ற வீடுகளுக்கு அபாயம் வராதிருக்கும் பொருட்டு, கெட்ட யெண்ணமில்லாமல், மத்தியிலிருக்கும் வீட்டை யிடித்துப்போடுவது, குற்றமாகமாட்டாது.

பசியினால் உயிர் போயிக்கொண்டிருந்தபோது, உயிரைக் காப்பாத்துவதற்காக திருடினாலும்கூட, தண்டனை தப்பாது என்று அறியவேண்டும்.

*** பால்லியம்.

23. ஏழு வயதுக்குள்பட்ட குழந்தை எந்த தப்புசெய்தாலும், அது குற்றமாகமாட்டாது.

24. ஏழு வயதுக்குமேல்பட்டு, பன்னிரெண்டு வயதுக்குள்ப்பட்ட குழந்தை தப்புகாரியம்செய்தால் அது குற்றமாகவே நினைக்கப்படும் - ஆகிலும் அந்த காரியத்தைச் செய்வதினால் இன்ன தீங்கு நேரிடுமென்று தெரிந்துக் கொள்ளும் அறிவு அந்த குழந்தைக்கு யில்லையென்று ருசுவானால் - அப்போ குற்றமாக நினைக்கப்படமாட்டாது.

25. பன்னிரண்டு வயதுக்குக் கீழ்ப்படாதவர்கள் செய்யும் தப்புகாரியங்கள் குற்றங்களாகவே யெண்ணப்படும்.

2

*** பைத்தியம்.

26. பைத்தியக்காரர்கள், தீங்கான காரியங்கள்செய் தால், அவை குற்றமாகமாட்டா. இன்ன காரியம்செய் தால் தப்பிதம், இதினல் இந்த தீங்கு நேரிடும் என்று அவர்களுக்குத் தெரிந்திருந்துசெய்தால் அந்த காரியங்கள் குற்றங்களாகவே யெண்ணப்படும்.

*** மயக்கம்

27. கள் குடித்து வுடம்பு தெரியாமல் இருக்கும் சம யத்திலாவது - அல்லது, அபினி, கஞ்சா, முதலிய வஸ் துக்களைத்தின்று மயக்கமாயிருக்கும் சமயத்திலாவது - தீங்கான காரியங்கள்செய்தால் - அவைகள் குற்றங்க ளாகவே யெண்ணப்படும். மேலும், செய்யும் காரியம் இன்னகாரியமென்ருவது, அது செய்யத்தகாத காரிய மென்ருவது இன்ன தீங்கு அதினல் நேரிடுமென்ருவது - தெரிந்துக்கொள்ளக்கூடாத அவ்வளவு மயக்கத்திலிருந்த போதிலும், தீங்கானகாரியம்செய்தால் குற்றமாகவே நினைக் கப்படும்.

ஆனல் மேல்கண்ட கள்ளு - அபினி - கஞ்சா முதலிய வஸ்துக்கள் தன் சம்மதியில்லாமலாவது, தனக்குத்தெரி யாமலாவது, மற்ருெருவன் பலவந்தமாய்கொடுத்து மயக் கம்வரும்படியாக செய்திருந்தால் - அப்படிப்பட்ட மயக் கத்தில் செய்த தீங்கான காரியங்கள் குற்றங்களாகா.

*** சம்மதி.

28. 18 வயதுக்கு மேற்பட்டவர்களுடைய சம்மதியைப் பெற்று, அவர்கள் விஷயமாய் - மரணமாவது, பெருந் துன்பமாவது, உண்டுபண்ண வேண்டுமென்கிற எண்ணமில் லாமல் - ஏதாவது காரியம் நடத்தினல், அதினலே அவர் களுக்குத் தீங்குநேரிட்டாலும் - அது குற்றமாகமாட் டாது.

இது எப்படி யென்றால்—

18 வயதுக்கு மேற்பட்ட இரண்டுபேர் - ஒருவரை ஒருவர் கொல்லவேண்டுமென்றாவது, பெருந்துன்பம் உண்டாக்கவேண்டுமென்றாவது, எண்ணமில்லாமல் குஸ்தி செய்கிறார்கள். அப்போ, அவர்களில் யாருக்காவது, துன்பம்நேரிட்டால், அது குற்றமாகமாட்டாது.

ஆனால் அவ்விருவர்களும் கத்தியெடுத்துக்கொண்டு திருப்புகிறார்கள். அப்பொழுது அவாளில் ஒருவனால் மற்றொருவனுக்கு மரணமாவது, பெருந்துன்பமாவது, நேரிட்டால் - அந்த மரணத்தையாவது, பெருந்துன்பத்தையாவது, உண்டுபண்ணினவன் குற்றவாளியாகிறான். அவர்கள் கத்திகளை யெடுத்துக்கொண்டு விளையாட ஆரம்பித்ததினால், மரணமோ, அல்லது பெருந்துன்பமோ, நேரிடுமென்று முன்னதாகவே அறிந்து கத்திவிளையாட ஆரம்பித்தவர்களாக நினைக்கப்படுகிறார்கள்.

29. ஒருவனுக்கு நன்மை செய்யவேண்டுமென்று அவனுடையவாவது, அவன் சம்ரக்ஷணை கர்த்தாவினுடையவாவது சம்மதிபெற்று, அவனுக்கு ஏதாவது உபகாரமான வேலை செய்தபோது, அதினால் அவனுக்கு துன்பம் நேரிட்டாலும் குற்றமாகமாட்டாது.

இது எப்படி யென்றால்—

ஒரு காயிலா மனிதனுக்கு, குணப்படுத்துவதற்காக அவன் சம்மதிபெற்று, ஒரு வைத்தியன் - சஸ்திர முதலான சிகச்சுகளை செய்தபோது, பிரயோசனப்படாமல் துன்பம்நேரிட்டால் - அது குற்றமாகமாட்டாது. மேல்சொன்ன காயிலாமனிதன், 12 வயதுக்குக் கீழ்ப்பட்டாவது - அல்லது, மேல்பட்டிருந்தாலும் சம்மதிகொடுக்கக்கூடாத ஸ்திதியிலாவது - இருந்தால் - அப்பொழுது, அவனுடைய சம்ரக்ஷணை கர்த்தாவின் சம்மதி பெற்றுக்கொண்டால் போதும்.

30. சம்மதி - தானுக மனதறிந்து கொடுக்கப்பட்டதாயும், இன்ன காரியத்திற்காகவென்று அறிந்து கொடுக்கப்பட்டதாயும், இருக்கவேண்டும். இப்பேர்ப்பட்ட சம்மதியோடு மேற்சொன்ன காரியங்கள் செய்யப்பட்டால்தான் அவைகளால் துன்பம்வந்தாலும், குற்றமாகாது.

பலவந்தப்படுத்தியாவது, பயப்படுத்தியாவது, மோசம் செய்தாவது, தெரியவேண்டிய சங்கதிகளை மறைத்தாவது, அடைந்த சம்மதிசெல்லாது. மேலும் - பைத்தியத்திஞலாவது - மயக்கத்திஞலாவது இன்ன விஷயத்தைக்குறித்து, சம்மதிகொடுக்கிறேனென்று நன்ருய் அறியாமல் கொடுத்த சம்மதிசெல்லாது. 12 வயதுக்கு உள்பட்டவஞடைய சம்மதியும் செல்லாது.

31. சம்மதி செல்லாதபோது - துன்பத்தை உண்டாக்கியகாரியம் குற்றமாகவே எண்ணப்படும்.

32. சட்டத்துக்கு விரோதமான காரியங்கள், சம்மதி பெற்று செய்யப்பட்டபோதிலும், குற்றங்களாகவே எண்ணப்படும்.

இது எப்படி யென்ருல்—

ஒரு விதவை, தன் மானத்தைக்காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு கற்பத்தை அழித்துவிடவேணுமென்று, ஒரு வைத்தியனை வேண்டிக்கொள்ளுகிருள். கற்பம் அழியும்படியான மருந்துகொடுத்தால், அந்த விதவை சம்மதித்திருந்தாலும், வைத்தியன்கூட குற்றவாளியாகிருன்.

*** பயம்.

33. எவஞவது, மற்ருெருவனை ஏதாகிலும் குற்றம் செய்யச்சொல்லி நிர்ப்பந்தப்படுத்தி, செய்யாமல்போனுல் உடனே அவனைக்கொல்லுகிறேனென்று பயமுறுத்திஞல் - அப்படிப்பட்ட பயத்திஞல் செய்யப்பட்ட குற்றம் - மன்னிக்கப்படும்.

இது எப்படி யென்றால்—

ஒரு கொள்ளைக்கூட்டமானது - ஒரு தச்சனை பலவந்தமாகப் பிடித்துக்கொண்டுபோய் - கதவுகளை உடைத்து பூட்டுகளைத் திறக்கவேண்டியது, இல்லாவிட்டால் அவனை உடனே கொல்வதாகப் பயமுறுத்துகிறார்கள். அதற்குப்பயந்து, அந்த தச்சன் - கதவுகளை உடைத்து, பூட்டுகளைத் திறந்தால் - குற்றவாளி யாகமாட்டான்.

34. தக்ஷணமேதன்னைக்கொன்றுவிடுவார்கள் என்கிற பயத்தினால் செய்யப்பட்ட குற்றம் மன்னிக்கப்படுமே தவிர - எப்போவோ தன்னைக்கொல்லுவார்கள் என்றாவது, வேறு யாரையோ கொல்லப்போகிறார்கள் என்றாவது, அல்லது தன்னை அடிக்கப்போகிறார்கள் என்றாவது, அல்லது வேறு எந்த விதத்தினாலாவது, உண்டாகும் பயத்தினால் செய்யப்பட்ட குற்றம் மன்னிக்கப்படமாட்டாது.

35. மேலும் - ஒருவனைக் கொல்லுவதற்காகவாவது, துரைத்தனத்தாரின்பேரில் தண்டு எடுத்து யுத்தத்தில் சேருவதற்காகவாவது, பலவந்தப்படுத்தி தக்ஷணமே தன்னைக் கொல்லப்போகிறார்களென்கிற பயம் உண்டாக்கின போதிலும் - தன்னுயிரை இழந்துக்கொள்வதற்கு சம்மதிக்கவேண்டுமேதவிர - அந்த இரண்டுகாரியங்களையும் செய்யக்கூடாது.

*** ஆத்ம சம்ரக்ஷணை.

36. ஒருவனுடைய சரீரத்துக்காவது, சொத்துக்காவது, யாராகிலும் அபாயம்செய்யவந்தபோது - தானாவது, தன்னோர்களாவது, தன் வேலைக்காரர்களாவது, கிட்டேயிருக்கும் வேறுயாராவது - அபாயம் செய்யவந்தவனை - எதிர்க்கலாம். அப்படி எதிர்ப்பதால் எதிர்க்கப்பட்டவனுக்கு அபாயம் நேரிட்டாலும் குற்றமாகமாட்டாது.

37. அபாயம் தக்ஷணமே உண்டாகும் என்கிற பயமிருந்தபோது மாத்திரம், மேல்சொன்னபடி எதிர்க்கலாம். அப்படியில்லாமல், அதிகாரிகளிடத்தில் தெரியப்படுத்திக் கொள்வதற்கு தகுந்த அனுகூலமும் அவகாசமும் இருந்தால், மேல்சொன்னபடிக்கு எதிர்க்கக்கூடாது.

38. சர்க்கார் உத்தியோகஸ்தன், அதிகார முறைமையினாலாவது, மேலான அதிகாரியின் உத்திரவின்படிக்காவது, அமல் செலுத்திக்கொண்டிருக்கும்போது – அந்த அமலும், உத்திரவும் அக்கிரமமாயிருந்தாலும் – அவனை எதிர்க்கக்கூடாது. ஆனால், அக்கிரமமான அமலினால் பிராண பயமாவது, சரீரத்துக்கு அபாயமாவது, சம்பவிப்பதாயிருந்தால், எதிர்க்கலாம்.

இது எப்படி யென்றால்—

சர்க்கார் சேவகன் – கெட்ட எண்ணமில்லாமல் – பிசகாய், ஒருவனுடைய சொத்துக்குப் பதிலாக மற்றொருவனுடைய சொத்தை ஜப்திசெய்கிறான் – அல்லது ஒருவன்பேரில் நடத்தவேண்டிய வாரண்டு அமலை மற்றொருவன்பேரில் நடத்தி பிடித்துக்கொள்ளுகிறான் – அப்பொழுது அவனை எதிர்க்கக்கூடாது. ஆனால் ஒருவன்பேரில் விதிக்கப்பட்டமரண தண்டனையையாவது, அடி தண்டனையையாவது, மற்றொருவன்பேரில் நிறைவேற்றப்போனால் அப்பொழுது எதிர்க்கலாம்.

39. யாராவது – கொல்லவந்தபோதும், கடுந்துன்பம் உண்டாக்கவந்தபோதும், பலாத்காரமாய் ஸ்திரீயை கெடுக்கவந்தபோதும், மனிதனை திருட்டுத்தனமாய்க்கொண்டு போகவந்தபோதும், அல்லது மேலான அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திக்கொண்டு விடுவித்துக்கொள்வதற்கு அனுகூலமில்லாமல் இருக்கும்படியாக அக்கிரமமாய் நிர்ப்பந்திக்கவந்தபோதும் – அப்படிப்பட்டவனை எதிர்த்து, கொன்றாலும், குற்றமாகமாட்டாது.

வேறு எந்த விதத்தினுலாவது - எவனுகிலும் சரீரத்துக்கு அபாயம் செய்யவந்தபோது, அவனை கொல்லக்கூடாது. ஆனல், அபாயத்தை தப்பித்துக்கொள்ளும் பொருட்டு எதிர்ப்பதில், கொல்லாமல் என்னதுன்பம் செய்தாலும் குற்றமாகமாட்டாது.

40. கொள்ளை - ராக்காலத்தில் கதவை உடைத்தாவது, கன்னம்வைத்தாவது, வீட்டுக்குள் பிரவேசித்தல் - வீட்டுக்கு நெருப்புவைத்தல் - ஆகிய குற்றங்கள் நடத்தும்போது குற்றவாளியைக்கொன்று அபாயத்தை தப்பித்துக் கொள்ளலாம்.

41. மேல்சொல்லிய குற்றங்கள் நடத்தப்படும்போது குற்றவாளியைக் கொல்லலாமென்று சொல்லியிருந்தபோதிலும் - கொல்லாமல் அபாயத்தை தப்பித்துக்கொள்ளுதல் சாத்தியமாயிருக்கும்பக்ஷத்தில், கொல்லக்கூடாது. கொன்ருல் குற்றமாகும்.

பிராணபயமாவது, கொடுந்துன்பம் உண்டாகும் என்கிற பயமாவது, இல்லாதபோது - திருடனைக் கொல்லக் கூடாது என்று அறியவேண்டும்.

42. மேலும், அபாயம் தப்பித்துக்கொள்வதற்கு, எவ்வளவு அவசியமோ அவ்வளவு துன்பம் செய்யலாமேயல்லாமல், ஜாஸ்தி துன்பம் செய்யக்கூடாது.

43. மேலும், அபாயம் நேரிடும் என்கிற பயமுண்டாவதற்கு முன்னமேயாவது, உண்டாய்ப்போன பிறகாவது, மேல்சொல்லியபடி கொல்வதும், துன்பம் உண்டாக்குவதும், குற்றமாகும்.

ஆகையால் - திருடன் வீட்டிலிருந்து ஓடிப்போன பிறகு, அவனை கொல்லக்கூடாது. மேலும், திருடன் - பிடிக்கப்பட்டு, ஓடிப்போக யத்தினப்படாமல் இருக்கும்போது - அவனுக்கு ஒரு தீங்கும் செய்யக்கூடாது.

⁂ குற்றவாளிகளோடு ராஜீசெய்துக்கொள்வது.

44. குற்றங்கள் நடந்தபோது, குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல்போனால், ஜனங்களுக்கு பயமும் உபத்திரவமும் உண்டாகிறது. மேலும் துர்மார்க்கர்கள் நிர்பயமாய் குற்றங்களைச்செய்வதற்கும்கூட காரணமாகும். ஆகையால், குற்றவாளிகளும், குற்றங்களினால் நஷ்டப்பட்டவர்களும், ராஜீயாகி, குற்றங்களைக்குறித்து பிராதுசெய்யாமல்விடுவது குற்றமாகிறது.

45. ஆனால் சில சில குற்றங்களால் சர்வருடைய க்ஷேமத்துக்கும் ஹானி ஆகிறதில்லை. அப்படிப்பட்ட குற்றங்கள் நடந்தபோது - ராஜியாகலாம்.

இது எப்படி யென்றால்—

விபசாரமாகிய குற்றம் நடந்தபோது, விபசாரம் செய்தவனோடு, புருஷன் ராஜீசெய்துக்கொண்டு அவன் பேரில் பிராதுசெய்யாமல் விட்டுவிடலாம். அப்படியே, அவதூறு குற்றம் நடந்தபோது, அதினால், மானநஷ்டத்தை அடைந்தவனும் உணடுபண்ணினவனும், ராஜீயாகலாம்.

46. களவு, கொலை, மோசம், இப்படிப்பட்ட குற்றங்கள் நடந்தபோது, குற்றவாளிகளோடு ராஜீசெய்துக்கொண்டு பிராதுசெய்யாமல் விடக்கூடாது. அப்படி ராஜீசெய்துக்கொண்டு பிராது செய்யாமல் விடுதல் - 213, 214 செக்ஷன்களின்படி குற்றமாகிறது.

குற்றத்தை மறைக்கும்பொருட்டு, குற்றவாளிகளிடத்திலிருந்து, சொத்து முதலியது வாங்கிக்கொண்டாவது, போனசொத்தை வரவழைத்துக்கொண்டாவது, அல்லது மற்றெந்தவிதத்திலாகிலும் லாபமடைந்தாவது, ராஜீயானபோதும் ராஜீயாகிறதற்கு பிரயத்தனம் செய்தபோதும் - இருவருக்கும், மேல்குறித்த செக்ஷன்கள்படிக்கி மறைக்க வேண்டுமென்று நினைக்கப்பட்ட குற்றங்களுக்கு விதித்திருக்கிற சிக்ஷையில் ஒரு பங்கு சிக்ஷை விதிக்கப்படும்.

47. மேலும் - சொத்து கொடுத்துவிட்டால் பிராது செய்யாமல் குற்றத்தை மறைத்துவிடுகிறேனென்று சொல்லி, சொத்துகொடுக்காமல் போனதினால் பிறகு பிராதுசெய்தபோதிலும், முதலில் சொத்துகொடுக்கச்சொல்லி கேட்டதற்கு 213-வது செக்ஷன்படிக்கு தண்டனை விதிக்கப்படும்.

48. ராஜீயாகக்கூடாத சில குற்றங்கள் விஷயமாய் - விசாரணைசெய்யும் அதிகாரியினுடைய உத்திரவை அடைந்து - பிராது வாபஸ் வாங்கிக்கொள்ளலாம்.

49. களவு முதலாகிய குற்றங்களால் சொத்துபோன போது, அந்த சொத்தை வரப்படுத்திக்கொள்ள சகாயம் செய்தவர்களுக்கு வெகுமதி கொடுப்பவர்களும் - சகாயம் செய்ததற்காக வெகுமதி வாங்கிக்கொள்ளுகிறவர்களும் - அந்தக் குற்றவாளிகள் தண்டிக்கப்படும்படியாய் தகுந்த பிரயத்தினம் செய்யாமல்போனால் - 215 - வது செக்ஷன் படி 2 வருஷங்கள்வரைக்கும் காவலுக்காவது, அல்லது அபராதத்துக்காவது உள்படுவார்கள்.

50. ஆகையால், போனசொத்து அகப்படும்படியாக செய்கிறவர்களுக்கு வெகுமதி கொடுப்பதாக நோட்டீசு போடும்போது - சொத்து அகப்பட்டவழியைப்பற்றி எந்தவிதமானகேள்விகளும் கேட்கமாட்டோமென்றும், பிராது செய்யமாட்டோமென்றும், சொல்லக்கூடாது. குற்றவாளியைத் தேடுவதற்கும், பிடித்துக்கொள்ளுவதற்கும்கூட அந்த நோட்டீசில் சகாயம் கேட்கவேண்டும்.

*** குற்றங்களையும், குற்றவாளிகளையும், மறைத்தல்.

51. தண்டனையை தப்பிக்கவேண்டுமென்கிற எண்ணத்தோடு குற்றவாளிகளை ஒளிப்பதும், அவர்கள் ஒளிந்திருப்பதற்கு இடங்கொடுப்பதும் - ஆகிய இந்த காரியங்களைச் செய்தவர்களுக்கு 212 - வது செக்ஷன்படிக்கி - அசல் குற்றவாளிசெய்த குற்றத்துக்கு விதிக்கப்பட்ட தண்டனையில் ஒருபங்கு தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

52. இப்படியே - குற்றவாளியை பிடிப்பதற்கு உத்திரவு செய்யப்பட்டிருக்கிறபோதும், காவலிலிருந்து குற்றவாளி தப்பித்துக்கொண்டு ஓடிப்போனபோதும் - இந்த சங்கதிகள் அறிந்திருந்து - குற்றவாளியை பிடிக்காமல் ஒளிக்கிறவர்களும், அவன் ஒளிந்துகொள்வதற்கு இடம் கொடுக்கிறவர்களும் 216 - வது செக்ஷன்படி தண்டிக்கப்படுவார்கள்.

53. குற்றம்செய்தபோது - பெண்ஜாதியை புருஷனும், புருஷனைப் பெண்ஜாதியும் ஒளித்துவைத்தலும், ஒளிந்திருப்பதற்கு வேண்டிய அனுகூலங்களை செய்தலும் - மேல்கண்ட செக்ஷன்படிக்கி குற்றங்களாகமாட்டா. தாயைக்குழந்தையாவது, குழந்தையைத்தாயாவது, வேறொருவனை வேறுயாராவது - ஒளித்தலும், ஒளிந்துகொள்வதற்கு இடம்கொடுத்தலும், குற்றங்களாகவே எண்ணப்படும்.

54. ஏதாவது குற்றம் நடக்கப்போகிறதென்று தெரிந்து, அதற்கு அனுகூலம் செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு, அந்த சங்கதியை மறைத்தவனுக்கும் - மேலும் - அதைக்குறித்து, போலீசார்களையும், அதிகாரிகளையும், மோசம் செய்யும்பொருட்டு, பொய்சொன்னவனுக்கும் - 118 - வது செக்ஷன்படிக்கு, மறைத்தகுற்றத்துக்கு விதிக்கப்பட்ட தண்டனையில் ஒரு பங்கு விதிக்கப்பட்டிருக்கிறது.

மறைக்கப்பட்ட குற்றம் நடந்தாலும், நடக்காமல்போனாலும், மறைத்தவனுக்கு தண்டனை தப்பாது.

55. ஏதாவது குற்றம் நடந்தசங்கதி தெரிந்தபோது - மேலான அதிகாரிகளுக்கு ரிபோர்ட்டுசெய்வது கடமையாய் உள்ள ஒவ்வொருவனும் - அந்த சங்கதியை தெரியப்படுத்தவேண்டியது. அப்படி தெரியப்படுத்தாமல்போனால் 202,176 செக்ஷன்களின்படிக்கி, 6 மாதம்வரைக்கும் காவலுக்காவது, அபராதத்துக்காவது, இரண்டுக்காவது உள்ளாவான்.

56. மேலும், ஏதாவது குற்றம் நடந்தபோது, அதைக் குறித்து மேலான அதிகாரிகள் தப்புவழியில் விழும்பொருட்டு, யாராவது பொய்சங்கதிகளை தெரியப்படுத்தினால், அப்படிப்பட்டவர்கள் 203,177 செக்ஷன்களின்படிக்கி, 2 வருஷங்கள்வரைக்கும் காவலுக்காவது, அபராதத்திற்காவது, இரண்டுக்காவது, உள்ளாவார்கள்.

57. கிராமங்களில் குற்றங்கள் நடந்தபோது - சில இடங்களில் சில போலீசார்களும், கிராம உத்தியோகஸ்த்தர்களும், குற்றவாளிகளிடத்தில் லஞ்சம்வாங்கிக்கொண்டு, மேலதிகாரிகளுக்கு பொய்யான ரிபோர்ட்டு அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். கொலை நடந்திருக்கும்போது பாம்பு கடித்து இறந்துபோனதாகவும் - ஒருவன் மற்றொருவனை கிணற்றில்தள்ளி கொன்றபோது தண்ணி மொள்ளுவதற்காகப்போய் கால்தவறி விழுந்ததாகவும் - இப்படி தெரியப்படுத்துவதுண்டு. அப்படிப்பட்டவர்களுக்கு குற்றத்தை மறைத்ததற்காக மேல்சொல்லப்பட்ட செக்ஷன்களின்படிக்கி தண்டனை யாவதேயல்லாமல், லஞ்சம் வாங்கிக்கொண்டதற்கும் தண்டனையாகும்.

58. ஏதாவது குற்றம் நடந்தசங்கதி தெரிந்திருந்து, குற்றவாளியை மீத்தவேண்டுமென்ற எண்ணத்தோடு குற்றத்தைக்குறித்த சாக்ஷியத்தை, யாராவது மறைத்தால், அவர்களுக்கு, 201 - வது செக்ஷன்படிக்கி, அசல் குற்றத்துக்கு விதிக்கப்பட்ட தண்டனையில் ஒருபங்கு தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

இது எப்படி யென்றால்—

"ஏ" என்பவன் "பீ" என்பவனை கொல்லுகிறான். அப்பொழுது "ஏ" என்பவனுக்கு தண்டனையை தப்பிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, "சீ" என்பவன் - கொலை செய்யப்பட்டவனுடைய பிணத்தை மறைத்துவிடுகிறான். "சீ" என்பவன் - 201 - வது செக்ஷன் படிக்கி, குற்றவாளியாகிறான்.

*** தண்டனைகள்.

59. குற்றவாளிகளை தண்டிப்பதற்கும் - அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் குற்றங்கள் செய்யக்கூடாதென்கிற பயம் உண்டாக்குவதற்கும், குற்றங்களுக்கு தண்டனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

60. அல்ப குற்றங்களுக்கு அபராதம்மாத்திரம் விதிக்கப்பட்டிருக்கிறது. பெருங்குற்றங்களுக்கு அபராதமாவது, காவலாவது, தண்ணீர்மேலேத்துவதாவது, இவை சேர்த்தாவது, தண்டனை விதிக்கப்படும். கொலை முதலிய குற்றங்களுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்படலாம்.

1864 ஹூ த்திய 6-ம் நெம்பர் அடிதண்டனை ஆக்ட்பிரகாரம் - பினல்கோட்படிக்கு விதிக்கப்பட்ட தண்டனையோடாவது, அதற்கு பதிலாகவாவது, அடிதண்டனை விதிக்கப்படலாம். பெண்டுகளுக்கும், 45 வயதுக்கு மேல்பட்ட புருஷர்களுக்கும், அடிதண்டனை விதிக்கக்கூடாது. மேலும், 30 அடிக்கு மேலிட்டு அடிதண்டனை யாருக்கும் விதிக்கக்கூடாது.

61. குற்றங்களுக்கு சட்டப்படிக்கி ஏர்ப்படுத்தப்பட்ட தண்டனையை, முழுமையும் போடவேண்டுமென்பது விதியல்ல. அந்தந்த சங்கதிகளைப்பார்த்து ஆலோசித்து, குற்றவாளிக்கி புத்திவருவதற்கும், மற்றவர்களுக்கு பயம் உண்டாக்குவதற்கும், வேண்டிய தண்டனை விதிக்கப்பட்டு வருகிறது. எப்பொழுதும் குற்றம் செய்யாதவன் கிரகசாரவசத்தினால் குற்றம்செய்தால் கொஞ்சமாயும் - எத்தனை தடவை தண்டித்தாலும் புத்திவராமல் பலதரம் குற்றம் செய்கிறவர்களுக்கு ஜாஸ்தியாயும் - நன்றாய் தெரிந்தவர்கள் புத்தி பூர்வகமாய்செய்த குற்றங்களுக்கு அதிகமாயும் - புத்திமட்டானவர்கள்செய்த குற்றங்களுக்கு குறைச்சலாயும் - தண்டனைவிதிப்பது நியாயமாயிருக்கிறது. மேலும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் குற்றங்கள்செய்தால், சாதாரணமாய், ஜாஸ்திதண்டனை போடப்படுகிறது.

62. சில பாரிஜாதர்கள் சாவுகாரர்கள் முதலிய பணக்காரர்கள், சட்டத்தைமீறி குற்றத்தைசெய்து, எவ்வளவு அபராதம்போட்டபோதிலும் லக்ஷியமில்லாமல் கொடுத்து தப்பித்துக்கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு காவல்தண்டனை விதித்து புத்திவரும்படியாகசெய்ய சில அதிகாரிகளும் பின்வாங்குகிறார்கள். இது பெருத்த அக்கிரமம்.

ஆனால், பல பெரியமனிதர்களும், பணக்காரர்களும், குற்றங்கள்செய்தபோது, அபராததண்டனையினாலேயே அவமானப்பட்டு ஆயிசுபரியந்தம் புத்தியுள்ளவர்களாயிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அபராதமேபோரும். காவல்தண்டனை விதிப்பது அக்கிரமம்.

கூலிவேலை செய்துக்கொண்டு நீசவிருத்தியால் ஜீவிக்கும் சிலருக்கு காவல் லக்ஷியமில்லாமலிருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு அபராதமும், அடிதண்டனையும், தகுந்தவைகளாயிருக்கின்றன.

பிள்ளைகள் குற்றம்செய்தால் அடிதண்டனை விதிப்பது கிரமமாயிருக்கிறது.

எந்தப்பிரகாரம், யாருக்கு, எவ்வளவு தண்டனைசெய்தால் நல்லதோ, அந்த நன்றாய் ஆலோசனைசெய்து சுவாமி சாக்ஷியாய், அதிகாரிகள் குற்றவாளிகளுக்கு தண்டனைகள் விதித்துக்கொண்டிருக்கிறார்கள்.

63. அபராததண்டனை விதிக்கப்பட்டபோது, அபராதம் செலுத்தாமல்போனால், காவல்போடப்படும். அப்படிப்பட்ட காவலை அனுபவித்தாலும், சிக்ஷைவிதித்த நாள் முதல் ஆறுவருஷத்துக்குள்ளாக, குற்றவாளியினுடைய, அசையும் பொருளைக்கொண்டு மேற்படி அபராதத்தை சர்க்காரார் வசூல்செய்துக்கொள்ளலாம். அசையாப்பொருளை தொடக்கூடாது. அந்த ஆறுவருஷத்திற்குள்ளாக குற்றவாளி இறந்துப்போனாலும், மேல்கண்டபடி அசையும்

பொருளைக்கொண்டு அபராதம் வசூல்செய்துக்கொள்ள லாம். மேலும், குற்றவாளிக்கு ஆருவருஷங்களுக்கு மேல் பட்டு காவல் விதிக்கப்பட்டபோது, அந்த காவல்தண்டனை முடிவதற்குள்ளே எப்பொழுதாவது அபராதம் வசூல் செய்யப்படலாம்.

64. அதிகாரிகள், தங்கள் தங்களுக்கு எவ்வளவுதண் டனை விதிக்க அதிகாரமுண்டோ, அதற்கு மிஞ்சி தண்டனை விதிக்கக்கூடாது.

ஹைகோர்ட்டாரவர்களும், ஜில்லா ஜட்ஜியும், எவ்வளவு சிக்ஷையாவது விதிக்கலாம் - ஆனல், ஜில்லாஜட்ஜி தூக்கு தண்டனை விதித்தபோதுமாத்திரம் ஹைகோர்ட்டாருடைய அனுமதிபெருமல் தண்டனை நிறைவேற்றக்கூடாது.

1 - வது கிளாஸ் மாஜீஸ்திரேட்டுகள் - 2 வருஷத்திற்கதி கப்படாமல் காவலும், 1,000 ரூபாயிக்கு அதிகப்படாமல், அபராதமும், விதிக்கலாம். அடிதண்டனையையும் விதிக்க லாம்.

2 - வது கிலாஸ் மாஜீஸ்திரேட்டுகள் - 6 மாதத்திற்கு அதி கப்படாமல் காவலும், 200 ரூபாயிக்கு அதிகப்படாமல அபராதமும், விதிக்கலாம். அடிதண்டனை விதிப்பதற்கும் கூட அனேகர்களுக்கு சர்க்காரார் அதிகாரம் கொடுத்திருக் கிருர்கள்.

3 - வது கிளாஸ் மாஜீஸ்திரேட்டுகள் - 1 மாசத்திற்கு அதி கப்படாமல் காவலும், 50 ரூபாயிக்கதிகப்படாமல் அப ராதமும் விதிக்கலாம். அடிதண்டனை விதிக்கக்கூடாது.

65. கவர்னர்துரையவர்களாவது, கல்கத்தாவிலிருக்கும் கவர்னர்ஜனரல்துரையவர்களாவது - தங்களுக்கு "யுக்த மென்று தோன்றியபோது - குற்றவாளிகளுக்கு விதிக்கப் பட்ட தண்டனையை, முழுமையுமாவது, கொஞ்சமாவது மாப்புசெய்து மன்னிக்கலாம்.

*** சர்க்காருக்கு விரோதமாய் யுத்தம்செய்தல்.

66. சர்க்காருக்கு விரோதமாய் யுத்தம்செய்தலும், யுத்தம்செய்வதற்கு எத்தினம்செய்தலும், அதற்கு உடந்தையாயிருப்பதும், 121-வது செக்ஷன்படிக்கி குற்றங்களாகின்றன.

மேற்படி குற்றங்களுக்கு-மரணதண்டனையாவது, ஆயிசு பரியந்தம் தண்ணீர்மேலேற்றும் தண்டனையாவது விதிக்கப்படும்.

மேலும் குற்றவாளிக்குச்சேர்ந்த எல்லா சொத்துகளும், சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்படும்.

*** கூட்டம் கூடுதல் - கலகம் செய்தல்.

67. சர்க்கார் உத்தியோகஸ்தனை பயப்படுத்த வேண்டுமென்றுவது, அவர் நடத்தும் அமுலை நடக்க ஒட்டாமல் செய்யவேண்டுமென்றுவது, நிலம் புலம் முதலிய சொத்துக்களை பலவந்தமாய் சுவாதீனப்படுத்திக் கொள்ளவேண்டுமென்றுவது, அல்லது, ஏதாகிலும் குற்றம் செய்யவேண்டுமென்றுவது, எண்ணிக்கொண்டு - ஐந்துபேர், அல்லது, ஐந்துபேருக்கதிகப்பட்டவர்கள் கூட்டம் கூடினுல், அவர்கள் 143-வது செக்ஷன்படி குற்றவாளிகளாகிறுர்கள்.

அப்படிப்பட்ட எண்ணத்தோடு கூட்டம் கூடுவதற்கு, 6 மாசம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

68. மேலும் கத்தி முதலிய ஆயுதங்களோடு மேல் சொன்னபடி கூட்டம் கூடினுலும், மேல்கண்ட எண்ணத்தை நிறைவேற்றும்பொருட்டு யார்மேலாவது துராக்கிறதம்செய்தாலும், கூட்டம், கலைந்து போகவேண்டுமென்று அதிகாரி உத்திரவுசெய்தபிறகு கலைந்துபோகாமலிருந்தாலும், அல்லது, கூட்டத்தை கலைக்கவந்தபோது அதிகாரியை எதிர்த்தாலும், ஜாஸ்திதண்டனை விதிக்கப்படும்.

69. மேலும், மெல்கண்ட எண்ணத்தோடு கூலிகளையும் வேலைக்காரர்களையும் ஏர்ப்படுத்தி கூட்டம் உண்டாக்குவதும் - தன்னுடைய நிலத்தில் கூட்டம்கூடி கலகம் நடந்தபோது அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தாமல்போவதும் - அப்படி கூட்டம்கூடி கலகம் நடக்கும் என்பது தெரிய வந்தபோது அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தாமலாவது கலகத்தைத் தடுக்ககூடிய பிரயத்தனம் செய்யாமலாவது சும்மாயிருப்பதும் - குற்றங்களாகும்.

70. நிலம் புலம் முதலிய சொத்துகளுக்கு பாத்தியதையுள்ளவர்களும் கூட அதிகாரிகளிடத்தில் தெரியப்படுத்திக்கொண்டு நியாயம் பெறவேண்டுமேயல்லாமல், கூட்டம் கூடி பலாத்காரமாய் சுவாதீனப்படுத்திக்கொள்ளக்கூடாது.

71. கிராமத்தில், ஒரு கக்ஷிக்கிச்சேர்ந்தவர்கள் - மற்றொரு கக்ஷிக்கிச்சேர்ந்தவர்கள் குடியிருக்கும் தெருவில், அவர்களுக்கு அவமானம் உண்டாகும்படி - உட்சவமுதலியவைகளை நடத்துவது, மேற்கண்ட செக்ஷன்படி குற்றமாகிறது.

72. மேல்கண்டபடிக்கி அக்கிரமமாய் உட்சவமுதலியவைகளை நடத்தியபோதும் கூட, எதிர்கக்ஷிக்காரர்கள் அதிகாரிகளிடத்தில் தெரியப்படுத்திக்கொண்டு நியாயத்தை அடையவேண்டுமேயல்லாமல், கூட்டம்கூடி, தடுத்து, கலகம் செய்யக்கூடாது.

73. மேல்கண்ட 67-வது பாராவில் சொல்லப்பட்ட எண்ணங்கள் ஒன்றுமில்லாமலிருந்தபோது, அனேகர் கூட்டம் கூடுவதினால் மாத்திரம் குற்றமாகமாட்டாது.

பலர்சேர்ந்து சபைசேரி சர்க்காரால் செய்யப்பட்ட காரியங்களைக்குறித்தாவது, மற்றெந்த விஷயத்தைக்குறித்தாவது, தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை தெரிவிக்கலாம். மஹஜர்களும், அர்ஜீகளும், கொடுத்துக்கொள்ளலாம். சர்க்காருக்கு விரோதமான அபிப்பிராயங்களை தெரிவித்தாலும் குற்றமாகமாட்டாது.

ஆனல், சர்க்கார் உத்தியோகஸ்தர்களை பயப்படுத்த வேண்டுமென்கிற எண்ணத்தோடு - சபைகூடுவதும், கும்பல்கும்பலாய் பயங்கரமாக தெருக்களில் திரிதலும் கச்சேரிகளைச்சுற்றிக்கொள்வதும் - ஆகிய இவைகள் குற்றங்களாகும்.

74. கலகம் செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு, நிஷ்காரணமாய் - யாருக்காவது கோபம்வரும்படியான ஒரு கெட்டகாரியத்தை செய்வதும், யாரையாவது அவமானப் படுத்துவதும் - இவைகள் 153, 504 செக்ஷன்கள்படிக்கு குற்றங்களாகின்றன.

*** ஜனங்களுடைய க்ஷேமத்தையும் சுகத்தையும் கெடுத்தல்.

75. இரண்டுபேராவது, இரண்டுபேருக்கு மேல்பட்டவர்களாவது சேர்ந்து, சனங்களுடைய அமரிக்கையை கெடுக்கும்படியாக, தெருவில் சண்டைசெய்தால் - அவர்களுக்கு 160 - வது செக்ஷன்படிக்கி 1 மாசம்வரைக்கும் காவலாவது, 100 ரூபாய்வரைக்கும் அபராதமாவது, விதிக்கப்படும்.

76. குடித்து, உடம்பு தெரியாமல்போய், தான் பிரவேசிக்கக்கூடாதயிடத்தில் பிரவேசித்தாவது, அல்லது தெருவிலாவது, யாருக்காகிலும் தொந்திரவு உண்டாக்கும்படியாக நடந்துகொண்டால், 510 - வது செக்ஷன்படிக்கு, 24 மணிநேரம்வரைக்கும் வெருங்காவலாவது, 10 ரூபாய் வரைக்கும் அபராதமாவது விதிக்கப்படும்.

77. சனங்களுக்கு அபாயகரமான வியாதிகளை பரவும்படியான காரியம் ஏதாவது செய்தால், 269-வது செக்ஷன் படிக்கி, 6 மாசம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

வாந்திபேதி, அம்மை, முதலிய வியாதிகளால் தொந்திரவுப்பட்டுக்கொண்டிருக்கும் ஒருவன், ரயில்வண்டி, படகு முதலியவைகளில் எல்லாரோடும் சேர்ந்து ஏருவது, இந்த செக்ஷன்படி குற்றமாகிறது.

4

மற்றும் மேல்கண்ட குற்றம் கெட்டஎண்ணத்தோடு செய்தால், 2 வருஷங்கள்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

78. விற்பனைக்காக உத்தேசிக்கப்பட்ட - அரிசி, சாதம், நெய்யி, பால் முதலிய ஆகாரபதார்த்தங்களில் - சரீரத்துக்கு வியாதியையுண்டுபண்ணும்விதமாய் கலப்பு செய்வதும், கலப்புசெய்து விற்பதும், இவைகள் - 272, 273 செக்ஷன்களின்படி குற்றங்ளாகின்றன. இதற்கு 6 மாதம் வரைக்கும் காவலாவது, 1000 ரூபாய்வரைக்கும் அபராதமாவது, அல்லது இரண்டுமாவது, விதிக்கப்படும்.

சாதத்தில் சுண்ணும்புதண்ணீரைக்கலப்பதும், நெய்யில் எண்ணெகலப்பதும், இந்த செக்ஷன்படி குற்றமாகின்றன.

சரீரத்துக்கு வியாதியுண்டாகாதபடி கலப்புசெய்தல் குற்றமாகமாட்டாது.

இது எப்படி யென்றல்—

பாலில் தண்ணீர்கலந்து விற்பது குற்றமாகமாட்டாது. ஆனல், பாலில் தண்ணீரைச்சேர்த்து நல்லபாலென்று விற்றல் மோசம் என்கிற குற்றமாகும்.

79. மருந்து சாமான்களில் கலப்புசெய்து, கலப்பு செய்யப்படாததுபோல் விற்பதும் - மேலும், ஒரு மருந்து சாமானே, மற்றொருமருந்து சாமானென்று மனதறிந்து விற்பனைசெய்தலும் - இவைகள் 275, 276, செக்ஷன்களின்படி குற்றங்களாகின்றன. இந்த குற்றங்களுக்கு 6 மாதம் வரைக்கும் காவலாவது, 1000 ரூபாய்வரைக்கும் அபராதமாவது இரண்டுமாவது விதிக்கப்படும்.

80. பலர் உபயோகப்படுத்தும், கிணர், குளம், ஏரி, இவைகளிலுள்ள தண்ணீரை கெடுப்பதும் அழுக்குப்படுத்துதலும், 277 செக்ஷன்படி குற்றமாயிருக்கிறது. இதற்கு 3 மாதம்வரைக்கும் காவலாவது, 500 ரூபாய்வரைக்கும் அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படலாம்.

குளத்தில் ஸ்னனம்செய்யக்கூடாதென்றும் துணிகள் தோய்க்கக்கூடாதென்றும் உத்திரவு செய்யப்பட்டபோது, அப்படி செய்தல் மேல்கண்ட செக்ஷன்படிக்கி குற்றமாகிறது.

81. சமீபத்தில் போய்க்கொண்டிருக்கிறவர்களுக்கும் வசித்துக்கொண்டிருக்கிறவர்களுக்கும் வியாதி வரும்படியாக, நாற்றம், புகை, முதலியவைகளை யுண்டாக்கும் வேலைகளைச்செய்வது - 278-வது செக்ஷன்படி குற்றமாயிருக்கிறது. இதற்கு 500 ரூபாய்வரைக்கும் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

வீடுகளின் சமீபத்தில் செங்கற்சூளைபோடுவதும், சாணி முதலிய நாற்றமுள்ள வஸ்துக்களை குவித்து அழுகும்படியாய்ச் செய்தலும், மேற்கண்ட செக்ஷன்படிக்கு குற்றமாகின்றன.

மேலும், மேற்கண்ட காரியங்கள், தன்னிடத்திலேயே செய்துக்கொண்டதாகவும், வெகுநாளாய் செய்துக்கொண்டுவருகிறதாகவும், சொல்வதினுல் குற்றமாகாமல்போகாது. சனங்களுக்கு வியாதியுண்டாகும்படியான காரியங்கள் தன்னிடத்தில் செய்துக்கொண்டாலும் குற்றமாகவே எண்ணப்படும்.

82. சனங்களுக்கு, துன்பம், பிராணஹானி, உண்டாகும்படி அஜாக்கிரதையாய், வண்டி ஓட்டுவதும் - குதிரை முதலிய ஜந்துக்களின்பேரில் சவாரிசெய்வதும் - கப்பல், படகு முதலியவைகளை நடத்துவதும் - இவைகள், 279-280 செக்ஷன்கள்படிக்கு குற்றமாகின்றன - இதற்கு 6 மாசம் வரையில் காவலாவது, 1000 ரூபாய்வரையில் அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

ஒருவருக்கும் தீங்கு நேரிடாமல் போனபோதிலும், நேரிடும்படியாக மேற்கண்ட காரியங்களை செய்தல் குற்றமாகின்றது. அபாயம் நேரிடுமென்று அறியாமல் செய்தேனென்ருவது, ஒருவருக்கு தீங்கு உண்டாக்கவேண்டுமென்னும் எண்ணம் இல்லை என்ருவது, சொன்னபோதிலும், குற்ற

மாகாமல்போகாது. ஆனால் அகஸ்மாத்தாய் குதிரையாவது, எருதாவது, மெரண்டு அதினால் அபாயம் நேரிட்டால் குற்றமாகாது.

அஜாக்கிரதையாய் வண்டியை ஓட்டின வேலைக்காரனுக்கே தண்டனை தவிர, உள்ளே உட்கார்ந்துக்கொண்டிருந்த எஜமானனுக்கு தண்டனை இல்லை. ஆனால், அப்படி ஓட்டும்படியாக எஜமானன் சொல்லியிருந்தால், இருவரும் குற்றவாளிகளாகிறார்கள்.

83. கெட்ட ஸ்திதியிலிருப்பதினாலாவது, ஜாஸ்தி சுமை ஏற்றுவதினாலாவது, கப்பல் - படகு முதலியவைகள் சனங்களுக்கு பிராணஹானி உண்டாக்கும்படியாயிருந்தால், அவைகளின்பேரில் சனங்களை ஏற்றிக்கொண்டுபோவது, 282-வது செக்ஷன்படி குற்றமாகிறது. இதற்கு 6 மாதம் வரைக்கும் காவலாவது, 1000 ரூபாய்வரைக்கும் அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்

84. ரஸ்தாவில் போகிறவர்களுக்கு - அபாயம் ஹானி, தடை, உண்டாகும்படியாய் ஏதாவது செய்தால் - 283-வது செக்ஷன்படி 200 ரூபாய்வரைக்கும் அபராதம் போடப்படும்.

தெருவில் வழியை அடைக்கும்படியாய் - வண்டியை குறுக்கே நிருத்துதல், செங்கல் முதலியவைகளை குவித்து வைத்தல், துணிகுறுக்கே உலரக்கட்டுதல், தரிகளைப்போடுதல் - சொந்தநிலத்தில் ரஸ்தாவுக்கு அடுத்து வெட்டப்பட்ட பள்ளத்தைசுற்றிலும் கிராதி கட்டாமலிருத்தல் - ஆகிய இவைகள் இந்த செக்ஷன்படி குற்றமாகின்றன.

பாட்டையோரத்திலிருக்கும் சுவர், இடிந்து விழும்படியான ஸ்திதியில் இருந்தபோது, அதை செம்மைப்படுத்தாமல் இருப்பதும்கூட, மேற்கண்ட செக்ஷன்படி குற்றமாகிறது. வாடகைக்கு வாங்கின வீட்டில் அப்பேர்ப்பட்ட சுவரை ரிபெயர் செய்யாமல் விட்டுவிட்டால், வாடகைக்கு வாங்கினவன் குற்றவாளியாவான்.

சொந்தநிலத்தில் சனங்கள் நடப்பதற்கு வழிவிட்டிருந்தபோது, அப்படிப்பட்ட வழியில் ஒருவருக்கும் தெரியாமல் பள்ளம் வெட்டிவைத்தலும் கல்குவித்தலும் மேற்கண்ட செக்ஷன்படி குற்றமாகிறது.

பாட்டையில் நடக்கும் சனங்களுக்கு அபாயம் நேரிடும்படியாக - டப்பாசுகள், பாணங்கள், முதலியவைகளைச் சொந்த நிலத்தில் சுடுதல்கூட மேற்சொன்ன செக்ஷன்படி குற்றமாகிறது.

85. வைக்கோல், வெடிமருந்து, முதலிய நெருப்பு பிடிக்கும் வஸ்துக்கள் - விஷவஸ்துக்கள் - நெருப்பு - யந்திரங்கள் - இவைகளால் சனங்களுக்கு அபாயம் பிராணஹானி உண்டாக்கும்படி, அஜாக்கிரதையாய் ஏதாவது செய்தலும்—மேலும், மேற்படி வஸ்துக்களை வைத்துக்கொண்டிருக்கும் மனிதன், அவைகளால் சனங்களுக்கு அபாயம் பிராணஹானி முதலியவைகள், உண்டாகாமலிருக்கும் பொருட்டு தகுந்த ஜாக்கிறதை எடுத்துக்கொள்ளாமல் போதலும் - இந்தக்குற்றங்களுக்கு, 284,285,286,287, செக்ஷன்களின்படி, 6 மாதம்வரைக்கும் காவலாவது, 1000 ரூபாய்வரைக்கும் அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

86. வீடுகளை யிடிக்கும்போதும், மராமத்து செய்யும்போதும், ஏதாவது ஒடிந்து விழுந்து சனங்களுக்கு அபாயம் உண்டாகாமலிருக்கும்பொருட்டு தகுந்த ஜாக்கிறதையுடன் செய்யவேண்டும். இல்லாமல்போனல் 288 - வது செக்ஷன்படி 6 மாதம்வரைக்கும் காவலாவது, 1000 ரூபாய்வரையில் அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

87. முட்டுமெருதுகள், துட்டநாய்கள், கெட்டகுரங்குகள், புலிகள், முதலிய துஷ்டசந்துக்களை வைத்துக்கொண்டிருக்கிறவர்கள், அவைகளால் சனங்களுக்கு அபாயம் நேரிடாமலிருக்கும்படி பத்திரம்செய்து வைத்துக்கொள்ளாமல்

போனல் - அவர்கள் 289-வது செக்ஷன்படி 6 மாதம் வரைக்கும் காவலுக்காவது, 1000 ரூபாய்வரைக்கும் அபராதத்திற்காவது இரண்டுக்காவது உள்ளாவார்கள்.

சொந்தநிலத்தில் சனங்களுக்கு நடக்க வழிவிட்டிருக்கும்போது - அவ்விடத்தில் துஷ்ட எருது முதலானவைகளை கட்டிவைக்காமல் சும்மா விட்டுவிடுதல் குற்றமாகும்.

துஷ்ட நாய்களை பகலில் கட்டிவைத்து இராக்காலத்தில் அவிழ்த்து தோட்டத்தில் விட்டிருந்தபோது, அங்கே வந்தவர்களை கடித்தால், குற்றமாகமாட்டாது.

துஷ்ட குதிரைகளை - யாருக்காவது, அதின் சுபாவத்தை தெரிவிக்காமல், சவாரிசெய்ய கொடுத்தல், குற்றமாகிறது.

88. மேல்கண்ட பியாராக்களில் சொல்லப்பட்டவைகள் அல்லாமல் இன்னம் ஏதாவது, சனங்களுடைய தேகசவுக்கியத்தையும், க்ஷேமத்தையும், சுகத்தையும் கெடுக்கத்தக்க காரியங்கள் செய்தால், 290-வது செக்ஷன்படி 200 ரூபாய் வரைக்கும் அபராதம் போடப்படும்.

89. சனங்களுக்கு - துன்பம், அபாயம், உண்டாக்குமென்ற காரணத்தால், ஒரு காரியத்தை செய்யக்கூடாதென்று அதிகாரிகள் உத்திரவுசெய்தபோது, அதை செய்வதும், செய்துகொண்டிருந்தால் அதை நிறுத்தாமற்போவதும், 291-வது செக்ஷன்படி குற்றமாகும். இதற்கு 6 மாதம்வரைக்கும் வெருங்காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

90. களாசாஸ்திரமுதலான அயோக்கியமான புத்தகங்கள், பண்டபடங்கள் முதலியவைகளை அச்சிடுதல், விற்பனை செய்தல், சனங்களுக்குக் கொடுத்தல், காட்டுதல்-அல்லது விற்பனைசெய்யும்பொருட்டாவது, சனங்களுக்கு கொடுக்கும்பொருட்டாவது, காட்டும்பொருட்டாவது, வைத்துக்கொண்டிருத்தல் - ஆகிய இவைகள், 292,293 செக்ஷன்கள்

படி குற்றங்களாகின்றன. இதற்கு 3 மாதம்வரையில் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்பட்டிருக்கிறது.

கோவிலுக்குள்ளேயும், மேலேயும், கோவிலுக்குச்சேர்ந்த தேரிலேயும், இருக்கும் பண்டபொம்மைகளின் விஷயமாய் மேற்சொல்லிய செக்ஷன்கள் சம்மந்தப்படுகிறதில்லை.

காசி இராமேசுவரம் முதலிய படங்களை காட்டுபவர்களில் சிலர், நிர்வாணமான மலயாளஸ்திரீபடங்களையும் காட்டுகிறார்கள். அவர்கள் மேற்கண்ட செக்ஷன்கள்படி குற்றவாளிகளாகிறார்கள்.

91. பண்டபாட்டுகளும், பேச்சுகளும், நடுவீதியிலாவது, அதற்கு சமீபத்திலாவது, பாடுதல், உச்சரித்தல் - இவைகளுக்கு, 294-வது செக்ஷன்படி 3 மாதம்வரைக்கும் காவலாவது அபராதமாவது, அல்லது இரண்டுமாவது, விதிக்கப்படும்.

92. சர்க்கார் உத்திரவில்லாமல் லாட்டரீ ஏர்ப்படுத்துவது, 294-"ஏ" செக்ஷன்படி குற்றமாகிறது. இதற்கு 6 மாதம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது, விதிக்கப்படும்.

மேலும், லாட்டரீசீட்டுகள் விற்பனைசெய்தல்கூட குற்றமாகிறது.

*** மதவிஷயமான குற்றங்கள்.

93. எந்த மதஸ்தர்களுக்காவது அவமானமுண்டாகும்படியாய் - அவர்களுடைய கோவில்கள், கோபுரங்கள், ஆராதனை ஸ்தலங்கள், விக்கிரகங்கள், முதலியவைகளை அழித்தல், தீட்டுப்படுத்துதல், அவைகளுக்கு ஏதாவது கெடுதியுண்டாக்குதல், ஆகிய குற்றங்களுக்கு - 295-வது செக்ஷன்படி 2 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

94. மேலும், மதசம்மந்தமான சடங்குகள், பூசைகள் முதலியவைகள் நடத்துவதற்காக சனங்கள் சேர்ந்திருக்கும் போது அவர்களுக்கு தொந்திரவுசெய்தல், 296-வது செக்ஷன்படி குற்றமாகும். இதற்கு 1 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

95. யாருக்காவது மனவருத்தம், அல்லது, அவர்கள் மதத்துக்கு அவமானம், இவைகளை உண்டாக்கும்படியாவது, அல்லது, உண்டாக்க வேண்டுமென்றுவது, சுடுகாடு முதலிய இடங்களில் அக்கிரமமாய் பிரவேசித்தல், பிணத்துக்கு அவமரியாதைசெய்தல், கர்மாந்திரத்தை செய்ய வந்திருக்கும் சனங்களுக்கு தொந்திரவை யுண்டாக்குதல், இவைகள், 297-வது செக்ஷன்படி குற்றமாகும். இதற்கு 1 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

96. மதவிஷயமாய் யாருக்காவது மனவருத்தம் உண்டாக்கவேண்டுமென்ற கருத்தோடு புத்திபூர்வகமாய், அவர்கள் முன்பாக ஏதாவது சொல்லுதல், செய்தல், காட்டுதல் முதலியவைகள், 298-வது செக்ஷன்படி குற்றமாகிறது. இதற்கு 1 வருஷம் வரைக்கும் காவலாவது, அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

இந்த செக்ஷன்படி ஆகும் குற்றங்கள் விஷயத்தில் ராஜீயாகலாம்.

*** லஞ்சம் - சிபார்சு.

97. சர்க்கார் உத்தியோகஸ்தன், ஏதாவது காரியம் செய்வதற்கு லஞ்சம் வாங்கிக்கொள்ளுதலும் - அக்கிரமமானலாபத்தை அடைதலும்-அல்லது லஞ்சம் வாங்கிக்கொள்ளுவதற்காகவாவது, அக்கிரமமான லாபத்தை அடைவதற்காகவாவது பிரயத்தினம் செய்தலும் - மேலும், சர்க்கார்

உத்தியோகஸ்தனைக்கொண்டு ஏதாவது காரியம் செய்விக்கிறதற்காக வேறுயாராவது லஞ்சமாவது லாபமாவது அடைதலும் - இவைகள் 161,162 செக்ஷன்களின்படி குற்றங்களாகின்றன. இதற்கு 3 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

98. சர்க்கார் உத்தியோகஸ்தனிடத்தில் சிபார்சுசெய்து ஏதாவது காரியம் செய்விக்கிறேனென்று லஞ்சம்வாங்கிக்கொள்ளுதல், 163 - வது செக்ஷன்படி குற்றமாகிறது. இதற்கு 1 வருஷம்வரைக்கும் வெருங்காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

சர்க்கார் உத்தியோகஸ்தனிடத்தில் சிபார்சுசெய்து உத்தியோகம் செய்விக்கிறேனென்றாவது, இன்னம் ஏதாவது காரியம் செய்துகொடுக்கிறேனென்றாவது, யாரிடத்திலாகிலும் அந்த சர்க்கார் உத்தியோகஸ்தனுடைய பெண்சாதியாவது, தாயாராவது, தகப்பனாராவது, சினேகிதனாவது ஏதாகிலும் பொருள்வாங்கிக்கொண்டால், இந்த செக்ஷன் படி குற்றமாகும்.

99. சர்க்கார் உத்தியோகஸ்தன், தன் இலாகா விவஹாரத்தில் சம்மந்தப்பட்டவனிடத்தில் எந்த வஸ்துவையாவது, விலைகொடுக்காமல் அல்லது குறைந்தவிலைக்கு வாங்கிக்கொள்ளுதல், 165-வது செக்ஷன்படி குற்றமாகும். இதற்கு 2-வருஷம்வரைக்கும் வெருங்காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

டபேதார்முதலிய கச்சேரி சேவகர்கள், ஜெயித்த கக்ஷிக்காரர்களிடத்தில் இனும்வாங்கிக்கொள்வது, இந்தசெக்ஷன் படி, விலைகொடுக்காமல் பொருள்வாங்கிக்கொள்ளும் குற்றமாகிறது.

100. சர்க்கார் உத்தியோகஸ்தனைக்கொண்டு ஏதாவது காரியம்செய்வித்துக்கொள்வதற்காக, பொன்னாவது, பெண்ணாவது, ஏதாவது வஸ்துவை குறைந்தவிலைக்கு அல்லது

விலையில்லாமலாவது, கொடுக்கிறவர்களும், அல்லது கொடுப்பதற்கு பிரயத்தினப்படுகிறவர்களும் குற்றவாளிகளாகவே எண்ணப்படுகிருர்கள்.

*** சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் – அக்கிரமம், அனியாயம், செய்தல்.

101. ஒருவனுக்கு துன்பம் உண்டுபண்ணவேண்டுமென்ருவது, அல்லது ஒருவனுக்கு கிடைக்கவேண்டிய தண்டனையை கிடைக்காமல் தப்பிவைக்கவேண்டுமென்ருவது, எண்ணி, சர்க்கார் உத்தியோகஸ்தன், தான் நடந்துக்கொள்ள வேண்டிய விதிப்படிக்கி நடந்துக்கொள்ளாமல்போனால், 166,217 செக்ஷன்களின்படி தண்டிக்கப்படுவான்.

102. லஞ்சம் முதலியவைகளினுலாவது, பகையினுலாவது – சர்க்கார் உத்தியோகஸ்தன், புத்திபூர்வகமாய், சட்டத்துக்கு விரோதமான ரிபோர்ட்டை அல்லது உத்திரவை செய்வதும், அனியாயமான தீர்ப்புசெய்வதும், அக்கிரமமாய் யாரையாவது காவலில்வைப்பதும், குற்றமாகும். இதற்கு 219,220 செக்ஷன்களின்படி 7 வருஷங்கள்வரைக்கும் காவலாவது, அபராதமாவது அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

103. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், குற்றவாளியை பிடித்துக்கொள்ளவேண்டியபோது, வேண்டுமென்று பிடித்துக்கொள்ளாமல் இருப்பதும் – குற்றவாளியை காவலிலிருந்து தப்பித்துக்கொண்டு போகும்படியாகச்செய்வதும் – 221, 222 செக்ஷன்களின்படி குற்றமாகும். இதற்கு, அசல் குற்றவாளிசெய்த குற்றத்தின் அளவை அனுசரித்து, தண்டனை விதிக்கப்படும்.

மேல்சொன்னபடி, மனதாரயில்லாமல், அஜாக்கிரதையால் செய்யப்பட்டிருந்தால், குறைந்த தண்டனை, அதாவது, 2 வருஷங்கள்வரைக்கும் வெறுங்காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

104. ஒருவனுக்குத் துன்பம்செய்யவேண்டுமென்ருவது, அல்லது, தண்டனை தப்பிக்கவேண்டுமென்ருவது, சர்க்கார் உத்தியோகஸ்தன், தப்புதர்ஜுமாசெய்வதும், தப்புதஸ்தாவேஜாவது தப்புரிகார்ட்டாவது தயார்செய்வதும், ஆகிய இந்த குற்றங்களுக்கு 167,218, செக்ஷன்களின்படி 3 வருஷங்கள்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

105. சாதாரணமாய் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் வர்த்தகம்செய்யக்கூடாது. செய்தால், 168-வது செக்ஷன்படி 1 வருஷம்வரைக்கும் வெருங்காவலுக்காவது, அபராதத்திற்காவது, அல்லது இரண்டிற்குமாவது உள்ளாவார்கள்.

106. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், ஏலத்தில் தாங்கள் சொத்தை வாங்கக்கூடாதபோது, வாங்குதலும், வாங்குவதற்காக விலைகேட்பதும் - தங்களுக்காக வேருெருவரை வாங்கும்படியாகவாவது, விலை கேட்கும்படியாகவாவது, செய்வதும் - ஆகிய இவைகளுக்கு 169-வது செக்ஷன்படிக்கு 2 வருஷம்வரைக்கும் காவலாவது அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும். மேலும் அப்படி ஏலத்தில் அக்கிரமமாயெடுத்தசொத்து சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்படும்.

107. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஏலத்தில் சொத்து வாங்கக்கூடாதபோது, அவர்களுக்காக ஏலத்தில் சொத்தை வாங்குகிறவர்களும், விலைகேட்கிறவர்களும், 185-வது செக்ஷன்படி 1 மாதம்வரைக்கும் காவலுக்காவது, 200 ரூபாய் வரைக்கும் அபராதத்திற்காவது, அல்லது இரண்டிற்குமாவது, உள்ளாவார்கள்.

*** சர்க்கார் உத்தியோகஸ்தருடைய அதிகாரத்தை அலக்ஷியம் செய்தல்.

108. சர்க்கார் உத்தியோகஸ்தனுல் ஜாரிசெய்யப்பட்ட சம்மனுவது, கட்டளையாவது, நோட்டீசாவது, எடுத்துக் கொள்ளாமல் தப்பித்துக்கொள்ளும்பொருட்டு ஓடிப்போத

லும்-அப்படிப்பட்ட சம்மன், கட்டளை, அல்லது நோட்டீசு கொடுக்கவந்தபோதாவது, பிரசுரம் செய்யவந்தபோதாவது, தடங்கல்செய்தலும் அப்படிப்பட்ட சம்மன், கட்டளை, நோட்டீசுபடிக்கு ஹாஜராகாமல்போதலும், ஹாஜராய் உத்திரவுபெற்றுக்கொள்ளாமல் புறப்பட்டுப்போதலும் - அப்படிப்பட்ட சம்மன், கட்டளை, நோட்டீசுகளின்படி கொண்டு வருவதற்கு பாத்தியப்பட்ட தஸ்தாவேஜுகளை கொண்டுவராமற்போதலும் - இவைகள், 172,173,174,175, செக்ஷன்களின்படி குற்றங்களாகின்றன.

இவைகளில் சிலகுற்றங்களுக்கு 1 மாதம்வரைக்கும் வெருங்காவலாவது, 500 ரூபாயவரைக்கும் அபராதமாவது, விதிக்கப்படும். சிலதுக்கு 6 மாதம்வரைக்கும் வெருங்காவலாவது, 1000 ரூபாய்வரைக்கும் அபராதமாவது, விதிக்கப்படும்.

109. சம்மனை வாங்கிக்கொள்ளாமல்போவதும், சம்மனில் கையெழுத்துபோடாமல்போவதும், குற்றங்களாகமாட்டாது.

சம்மனை வாங்கிக்கொள்ளாமல்போனபோது அதை குடியிருக்குமிடத்தில் ஒட்டி பிரசுரம்செய்யப்படும்.

110. கோர்ட்டிலாவது சர்க்கார் உத்தியோகஸ்தன் எதிரிலாவது, ஹாஜர்படுத்தும்படி நேரிடுமென்று, ஏதாவது தஸ்தாவேஜை நாசமாக்குதல், மறைத்துவைத்தல், கிருக்குதல், படிக்கக்கூடாததாகும்படி பாழாக்குதல் - ஆகிய இந்த குற்றங்களுக்கு, 204-வது செக்ஷன்படி 2 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

111. சர்க்கார் உத்தியோகஸ்தர் அவருடைய அதிகாரத்தின்படி, கேட்கும்கேள்விகளுக்கு உத்திரவுசொல்லாமல் திரஸ்காரம்செய்வது - 179-வது செக்ஷன்படி குற்றமாகிறது. இதற்கு 6 மாசம்வரைக்கும் வெருங்காவலாவது, 1000 ரூபாய்வரைக்கும் அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

112. வாக்குமூலத்தில் கையெழுத்து போடாமல் தடை செய்தல், 180-வது செக்ஷன்படி குற்றமாகிறது. இதற்கு 3 மாசம்வரைக்கும் வெறுங்காவலாவது, 500 ரூபாய்வரைக்கும் அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

113. தமக்குள்ள அதிகாரத்தின்படி, சர்க்கார் உத்தியோகஸ்தர் ஜாரிசெய்த உத்திரவுக்கு உட்படாமற்போவதினுல், ஒருவருக்கு கெடுதி, இடைஞ்சல், உண்டானுலும் சரி, அல்லது உண்டாகும்படியிருந்தாலும்சரி - அப்படி உள்படாமற்போனவனுக்கு, 188-வது செக்ஷன்படி, 1 மாசம்வரைக்கும் வெருங்காவலாவது, 200 ரூபாய்வரைக்கும் அபராதமாவது, விதிக்கப்படும்.

மேலும், அப்படி உட்படாமல்போவதினுல், ஜனங்களுக்கு அபாயமாவது, அவர்களுடைய க்ஷேமத்துக்காகிலும் சுகத்திற்காகிலும் கெடுதியாவது, நேரிட்டாலும், நேரிடும்படியாக இருந்தாலும் - அல்லது, கலகம் நடந்தாலும், நடக்கும்படியாகயிருந்தாலும் - 6 மாசம்வரைக்கும் காவலாவது, 1000 ரூபாய்வரைக்கும் அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

இது எப்படியென்ருல்—

ஒரு தெருவில் உட்சவம் நடத்தக்கூடாதென்ருவது - அப்படி நடத்தும்போது வாத்தியம் செய்யக்கூடாதென்ருவது - வழியில்நடக்கும் ஜனங்களுக்கு பயமுண்டாக்கும்படியாக இடிந்துவிழும் ஸ்திதியிலிருக்கிற ஒரு சுவரை ரிபேர்செய்யவேண்டுமென்ருவது - அல்லது, ஜனங்களுடைய சுகத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் கெடுதி யுண்டாக்கும்படியான காரியம்செய்யாமலிருக்கவேண்டுமென்ருவது - அதிகாரியானவர் உத்திரவு செய்தபோது, லக்ஷியம் செய்யாமல் அந்த உத்திரவை மீறிநடத்தல் மேல்சொல்லப்பட்ட செக்ஷன்படிக்கு குற்றமாகிறது.

114. சர்க்கார் உத்தியோகஸ்தன் அவன் அதிகாரத்தின்படி, ஒருவர் சொத்தை ஜப்திசெய்யவந்தபோது, ஜப்திசெய்யவொட்டாமல் எதிர்த்தல், 183-வது செக்ஷன்படி குற்றமாகிறது. இதற்கு 6 மாசம்வரைக்கும் காவலாவது, 1000 ரூபாய்வரைக்கும் அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

115. குற்றவாளி, தான்பிடிக்கப்படாமல் எதிர்த்தல் - பிடிக்கப்பட்டபிறகாவது, காவலில் இருந்தாவது, ஓடிப்போதல், ஓடிப்போக எத்தனம்செய்தல் - ஆகிய இவைகள் 224-வது செக்ஷன்படி குற்றங்களாகின்றன. இதற்கு, அந்த குற்றவாளிசெய்த அசல்குற்றத்தின் தண்டனையோடுகூட, 2 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

116. குற்றவாளி பிடிக்கப்படாமலிருக்கும்படி வேறு ஒருவன் எதிர்த்தலும் - பிடிக்கப்பட்ட பிறகாவது, காவலிலிருக்கும்போதாவது, குற்றவாளி தப்பித்துக்கொண்டுபோகும்படி வேண்டிய சகாயங்களைச்செய்தலும், சகாயம்செய்வதற்கு எத்தினம் செய்தலும் - ஆகிய இவைகள், 225-வது செக்ஷன்படி குற்றங்களாகின்றன. இதற்கு, அசல் குற்றவாளிசெய்த குற்றத்தின் அளவின்படி தண்டனை விதிக்கப்படும்.

117. சர்க்கார் உத்தியோகஸ்தன் அவனுக்குள்ள அதிகாரத்தையனுசரித்து சொத்தை ஏலம்போடும்போது, ஏலம்போடவொட்டாமல் தடுப்பது, 184-வது செக்ஷன்படி 1 மாசம்வரைக்கும் காவலாவது, 500 ரூபாய்வரைக்கும் அபராதமாவது விதிக்கத்தக்க குற்றமாகிறது.

118. மேலும், மேல்சொன்னபடி ஏலம் நடந்துக்கொண்டிருக்கையில், ஏலஷரத்துகளின்படி நடந்துக்கொள்ளவேண்டுமென்கிற எண்ணமில்லாமல் விலை கேட்பதும் - விலைகேட்கக்கூடாதவர்கள் விலைகேட்பதும், அப்படி விலைகேட்கக்கூடாதவர்களுக்காக மற்றொருவர் விலைகேட்பதும் - ஆகிய

இந்தக்குற்றங்களுக்கு, 185-வது செக்ஷன்படி ஒருமாசம் வரைக்கும் காவலாவது, 200 ரூபாய்வரைக்கும் அபராத மாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

119. சர்க்கார் உத்தியோகஸ்தன் அவனுடைய ஹோதா வின்படி அமுலை நடத்திக்கொண்டிருக்கையில், அவனை தடைசெய்வது, 186 - வது செக்ஷன்படி குற்றமாகிறது. இதற்கு 3 மாசம்வரைக்கும் காவலாவது 500 ரூபாய்வரைக் கும் அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

மேலும், அப்படி அமுல் நடத்தும்போது - மேற்சொன்ன சர்க்கார் உத்தியோகஸ்தனுக்கு சகாயம் செய்யக்கடமைப் பட்டவர்கள் சகாயம் செய்யாமற்போனல், அவர்கள் 187 - வது செக்ஷன்படி குற்றவாளிகளாகிருர்கள்.

120. நியாயவிசாரணை நடந்துக்கொண்டிருக்கையில், அந்த விசாரணை நடத்தும் சர்க்கார் உத்தியோகஸ்தரை வேண்டுமென்று அலக்ஷியம்செய்தலும் - அவர்கேட்கும் கேள்விகளுக்கு சரியான உத்திரவைக்கொடுக்காமல் தொந் திரவுசெய்தலும் - கூச்சல் போடுதலாலாவது, வேறு எந் தவிதத்தினுலாவது அவர் செய்யும் காரியத்திற்கு தடங் கல்செய்தலும் - ஆகிய இவைகள் 228-வது செக்ஷன்படி குற்றங்களாகும். இதற்கு 6 மாசம்வரைக்கும் காவலாவது, 1000 ரூபாய்வரைக்கும் அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

121. சர்க்கார் உத்தியோகஸ்தரால் ஏதாவது காரியம் செய்வித்துக்கொள்ளும்பொருட்டு, அவருக்காவது, அவ ரைச்சேர்ந்தவர்களுக்காவது, துன்பம் உண்டாக்குவதாக மெரட்டுதல், 189-வது செக்ஷன்படி குற்றமாகிறது. இதற் கு 2 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

இது எப்படி யென்ருல்—

"ஏ" என்பவனுடைய வியாச்சியம் ஒன்று ஒரு முனிசீப் கோர்ட்டில் விசாரணையாயிக்கொண்டிருக்கிறது. அந்த

முன்சீபின்பிள்ளை "ஏ" என்பவனிடத்தில் உத்தியோகமாயிருக்கிறான். வியாச்சியத்தை என்பக்ஷம் தீர்ப்பு செய்யாமல்போனால், உம்முடைய பிள்ளையை வேலையிலிருந்து தள்ளிவிடுகிறேனென்று "ஏ" என்பவன் அந்த முன்சீபை பயமுறுத்தினால், அவன், மேல்சொல்லிய 189-வது செக்ஷன்படி, குற்றவாளியாகிறான்.

மேலும், அந்த முன்சீபானவர் "பீ" என்பவனுடைய வியாச்சியத்தின் விஷயமாய் லஞ்சம்வாங்கிக்கொண்ட சங்கதி "ஏ" என்பவனுக்குத்தெரிந்திருக்கிறது. அப்போது "ஏ" என்பவன், தன் வியாச்சியத்தை தன்பக்ஷம் தீர்ப்பு செய்யாமல்போனால், "பீ" என்பவனுடைய வியாச்சியத்தின் விஷயமாய் லஞ்சம்வாங்கிக்கொண்ட சங்கதியை வெளிப்படுத்துவதாய் முன்சீபை பயமுறுத்தினால் - அவன் மேல் சொல்லப்பட்ட செக்ஷன்படி குற்றவாளியாகிறான்.

122. ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தன் லஞ்சம் வாங்கிக்கொள்வதற்கு பிரயத்தினப்பட்டுக்கொண்டிருந்தபோது, லஞ்சம் வாங்கினால் மேலதிகாரிகளுக்கு தெரியப்படுத்துவதாக பயமுறுத்தினால்மாத்திரம் ஒருவன், குற்றவாளியாக மாட்டான். தான் ஏதாவது காரியம்செய்வித்துக்கொள்ளவேண்டுமென்கிற எண்ணத்தோடு பயமுறுத்தினால்தான் குற்றவாளியாவான்.

*** ஆள்மாராட்டம்.

123. ஒருவன்- மற்றொருவனாக ஆள்மாராட்டம்செய்து, ஏதாவது சிவில், அல்லது, கிரிமினல் விவஹாரத்தை நடத்துவதும், சாமீன் இருப்பதும், ஆகிய யிவைகளுக்கு 205-வது செக்ஷன்படி 3 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

124. மேல்சொன்ன விஷயங்களில் மற்றொருவனாக ஆள் மாராட்டம்செய்தபோது, அவனுடைய சம்மதம் பெற்றிருந்தபோதிலும், அது குற்றமாகாமல் போகாது.

இது எப்படி யென்றால்—

"ஏ" என்பவன் கச்சேரியில் ஒரு பிராது செய்யவேண்டியிருக்கிறது. அப்போது தனக்கு அவகாசமில்லாத்தினாலாவது, தொந்திரவு என்று எண்ணியாவது, அவன், "பீ" என்பவனை அனுப்பி இவனே "ஏ" என்பவனாக சொல்லி பிராது தாக்கல்செய்யும்படி செய்கிறான். அப்போது "பீ" என்பவன் அப்படி ஆள்மாராட்டம்செய்து பிராது தாக்கல்செய்தால், மேல் சொன்ன 205-வது செக்ஷன்படி குற்றவாளியாகிறான். "ஏ" என்பவனும் அந்தக்குற்றத்திற்கு உடந்தையாயிருந்ததற்கு தண்டனை அடைவான்.

125. எவனாவது ஒருவன் தனக்கு சர்க்கார் உத்தியோகம் இல்லாதிருக்கும்போது இருக்கிறதுபோல நடந்து, அதினால் ஏதாவது காரியம்செய்தால், அல்லது செய்வதற்கு பிரயத்தினப்பட்டால், அவன் 170-வது செக்ஷன்படி 2 வருஷம்வரைக்கும் காவலுக்காவது, அபராதத்திற்காவது, அல்லது இரண்டிற்குமாவது உள்ளாவான்.

126. ஜனங்கள், தங்களை, சிபாய், போலீஸ், சேவகன் முதலியவர்களென்று நம்பும்பொருட்டு, 'இவர்களுடைய உடுப்பைதரித்து, திரிதல், 140,171 இந்த செக்ஷன்களின்படி குற்றமாகும். இதற்கு 3 மாசம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

127. பகல்வேஷக்காரர்கள் வேடிக்கைக்காக வேஷம் போடுதல் குற்றமாகாது.

*** பொய் சாக்ஷியம்.

128. பொய்சாக்ஷிசொல்வதும், பொய்சாக்ஷியம் உண்டு பண்ணுவதும், 193 - வது செக்ஷன்படி குற்றங்களாகும். இதற்கு 3 வருஷம்வரைக்கும் காவல்தண்டனை விதிக்கப்படும். அபராதமும்போடப்படும்.

மேலும், நியாயவிசாரணை காலத்தில் பொய்சாக்ஷியம் சொல்வதும், அப்படிப்பட்ட விசாரணையில் உபயோகிக்கும் பொருட்டு பொய்சாக்ஷியம் உண்டுபண்ணுவதும் - ஒருவன் பேரில் குற்றம்சாட்டும்பொருட்டு பொய்சாக்ஷியம் சொல்வதும், உண்டுபண்ணுவதும் - ஆகிய இந்த குற்றங்களுக்கு ஜாஸ்தி தண்டனை விதிக்கப்படும்.

129. தப்புசர்ட்டிபிகேட்டு கொடுத்தல் - தப்புபிரமாண பத்திரங்களை தாக்கல்செயதல் - இன்கம்டாக்சு, முன்சீபல் வரிமுதலியவைகளின் விஷயத்தில் வரும்படியைக்குறித்து தப்பானசங்கதிகளை தெரியப்படுத்துதல், தப்புகணக்குகளைக் காட்டுதல் - ஆகிய இவைகள் குற்றங்களாகும்.

130. ஒருவன், தான் நம்பாத சங்கதியை நம்பினதுபோலும், அறியாதசங்கதியை அறிந்ததுபோலும், வாக்குமூலம் கொடுப்பதும்கூட பொய்சாக்ஷியம் ஆகிறது.

131. சொன்ன சங்கதி உண்மையானதாயிருந்தபோதிலும், தான் அறியாதிருக்கும்போது அறிந்தாப்போல் சொல்வது, பொய்சாக்ஷியமாகின்றது.

இது எப்படி யென்றால்—

> "ஏ" என்பவன் ஒருநாள் ஒருஊரில் இருக்கிறான். அவன் அன்றயதினத்தில் அந்த ஊரில் இருந்தானோ இல்லையோ என்பது தனக்குத்தெரியாதிருக்கும்போது தெரியுமென்று ஒருவன் சொல்வது பொய்சாக்ஷியமாகிறது.

"ஏ" என்பவனுக்கு "பீ" என்பவன் 100 ரூபாய்கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. அந்த பாக்கியை நிஜமென்று "பீ" என்பவன் ஒருகாலத்தில் ஒப்புக்கொண்டான். அந்த தருணத்தில் "சீ" என்பவன் இல்லாதிருந்தபோதிலும், தான், இருந்ததாகவும், "பீ" என்பவன் ஒப்புக்கொண்டதை கேட்டதாகவும் வாக்குமூலம்கொடுப்பது பொய்சாக்ஷியமாகும்

132. புத்திபூர்வகமாய் பொய்யென்றறிந்து சொன்னல் பொய்சாக்ஷியமாகுமேதவிற, மெய்யென்று பிசகாய் நம்பி சொன்னபோது சொன்னசங்கதி மெய்யாகாமற்போனலும் பொய்சாக்ஷியமாகமாட்டாது.

133. பொய்சாக்ஷியம் உண்டாக்குவது எப்படிப்பட்டது என்றல்—

"ஏ" என்பவன், "பீ" என்பவன்பேரில், களவு குற்றம் ஸ்தாபிக்கவேண்டுமென்கிற எண்ணத்தோடு, அவன் பொட்டியில் வேறொருவருடைய சொத்தை கொண்டுவந்துவைக்கிறன். "ஏ" என்பவன் பொய்சாக்ஷியம் உண்டுபண்ணினவனுகிறன்.

ஒருவர்த்தகன் கோர்ட்டில் சாக்ஷியமாக காட்டும்பொருட்டு, தன்கணக்குகளில் உண்மையான பாக்கியைக்குறித்து முன் எழுதாத ஒருதொகையை புதிதாக எழுதுகிறன். அப்போது, பாக்கி உண்மையானதாயிருந்தபோதிலும் முன்னமே எழுதினதாக காட்டும்பொருட்டு செய்ததாகையால், அந்த வர்த்தகன் பொய்சாக்ஷியம் உண்டுபண்ணினவனுகிறன்.

134. பொய்சாக்ஷியம் சொல்லிவைக்கிறவர்களும், சிருஷ்டினைசெய்யப்பட்ட பொய்சாக்ஷியத்தை அப்படிப்பட்டதென்று அறிந்திருந்து உபயோகிக்கிறவர்களும், 196-வது செக்ஷன்படி குற்றவாளிகளாகிறர்கள்.

*** போர்ஜரீ.

135. ஒருவருக்கு நஷ்டத்தை உண்டாக்கவேண்டுமென்றுவது, ஏதாவது வியாச்சியத்திற்கு ஆதாரத்தை உண்டுபண்ணிக்கொள்ள வேண்டுமென்றுவது, ஒருவருடையசொத்தை அபகரித்துக்கொள்ளவேண்டுமென்றுவது, மோசம் செய்யவேண்டுமென்றுவது, கெட்டஎண்ணத்தோடு - தப்பு தஸ்தாவேஜு உண்டுபண்ணுதல் - தஸ்தாவேசுகளில் பேருகள், தேதிகள், எண்கள், முதலியவைகளை திருத்தல், கிருக்

குதல் அல்லது கலேத்தல், ஆகிய இவைகள், 465-வது செக்ஷன்படி, போர்ஜரீ, அதாவது தப்பு சிருஷ்டனேயென்னும் குற்றமாகிறது.

இதற்கு 2 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

ரசீதுகள், உயில்கள் அதாவது மரணசாசனங்கள், சர்க்கார் ரிகார்ட்டுகள், முதலியவைகளில் செய்யப்பட்ட போர்ஜரீ குற்றத்திற்கு அதிகமானதண்டனே விதிக்கப்படுகிறது.

136. கெட்ட எண்ணத்தோடு, ஒருவன் வேருெருவனுடைய பெயர், கையெழுத்து, அல்லது முத்திரையைபோட்டு, அவனுடைய உத்திரவில்லாமல் ஏதாவது தஸ்தாவேஜை, சிருஷ்டித்தல், போர்ஜரீ குற்றமாகிறது.

"ஏ" என்பவன், "பீ" என்பவனிடத்தில் உத்தியோகம் சம்பாதிக்கவேண்டுமென்ருவது, தர்மம் பெறவேண்டுமென்ருவது, "சீ" என்பவன் கொடுத்ததாக அவன் கையெழுத்து போட்டு சிபார்சு கடுதாசி ஒன்றை யெழுதுகிருன். இது போர்ஜரீ குற்றமாகின்றது.

137. தானுவது, மற்ருெருவனுவது, எழுதிய, அல்லது எழுதிக்கொடுத்த, தஸதாவேஜுகளில் – கெட்டஎண்ணத்தோடு, முக்கியமானபேர்கள், தேதிகள், எண்கள், முதலியவைகளே திருத்தல் கிருக்குதல் வேறு எந்த விதத்திலைாவது மாற்றுதல், ஆகிய இப்படிப்பட்டவைகள் போர்ஜரீ குற்றமாகின்றன.

138. கெட்டஎண்ணத்தோடு, ஒன்றையெழுதி மற்ருென்ருகவாசித்துக்காட்டி தஸ்தாவேஜை சிருஷ்டனே செய்தல், போர்ஜரீ குற்றமாகிறது.

"ஏ" என்பவன், வியாதியஸ்தனுயிருக்கும்போது, "பீ" என்பவனுக்கு சங்கதிகளேச்சொல்லி, அவனுல் தன் உயில் அதாவது மரணசாஸனத்தை எழுதிவைக்கிருன். "பீ"

என்பவன், "ஏ" என்பவன்சொல்லியபடி எழுதாமல் வேறு விதமாய் எழுதி, மோசம்செய்து அந்த உயிலில் "ஏ" என்பவனை கையெழுத்துபோடும்படியாக செய்கிருன். அப்பொழுது "பி" என்பவன் போர்ஜரீ குற்றம் செய்தவனுவான்.

139. புத்திமாருட்டமானவர்கள், கள்முதலியவைகளைக் குடித்து மயக்கத்திலிருக்கிறவர்கள் – இவர்களைக்கொண்டு தஸ்தாவேஜ் செய்துக்கொள்ளுதலும், இவர்களை தஸ்தாவேஜில் கையெழுக்து போடும்படியாகவாவது அல்லது அதில் ஏதாவது மாறுதல் செய்யும்படியாகவாவது செய்தலும் போர்ஜரீ குற்றங்களாகும்.

140. முன்தேதியைப்போட்டு தப்பு தஸ்தாவேஜுகளை உண்டுபண்ணுவது போர்ஜரீ குற்றமாகின்றது.

141. ஒருவனுக்கு அக்கிரமமாய் நஷ்டம் உண்டுபண்ண வேண்டுமென்ருவது, தான் அல்லது தன்னவர்கள் அக்கிரமமாய் லாபம் அடையவேண்டுமென்ருவது, மோசம் செய்யவேண்டுமென்ருவது, வேறு எந்த விதமாயாவது, கெட்ட எண்ணம் இல்லாமல்போனுல், தப்புதஸ்தாவேஜ் உண்டுபண்ணுவதினுல்மாத்திரம் போர்ஜரீ குற்றமாகமாட்டாது.

142. ஒருவனுல் சிருஷ்டனைசெய்யப்பட்ட தப்புதஸ்தாவேஜுகளை, வேருெருவன், அப்படிப்பட்டவைகளென்று அறிந்திருந்தும், சரியானவைகளாக உபயோகப்படுத்துதல் 471-வது செக்ஷன்படி போர்ஜரீ குற்றமாகிறது.

143. தப்புதஸ்தாவேஜுகளை சிருஷ்டனை செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு, கள்ளமுத்திரை, கள்ளமொகர், கள்ள அச்சு, முதலியசாமான்களை செய்தல், சுவாதீனத்தில் வைத்துக்கொள்ளுதல், இவைகள் 472,473, செக்ஷன்களின்படி குற்றங்களாகின்றன. இவைகளுக்கு 7 வருஷம் வரைக்கும் காவலும், அபராதமும் விதிக்கப்படும்.

144. தப்புரசீதுகள், தப்பு உயில்கள், தப்புரிகார்ட்டுகள் - இவைகளை, சரியானவைகளென்று உபயோகிக்க வேண்டுமென்கிற எண்ணத்தோடு, சுவாதீனத்தில் வைத்துக் கொள்ளுதல், 474-வது செக்ஷன்படி குற்றமாயிருக்கிறது. இதற்கு 7 வருஷம்வரைக்கும் காவலும், அபராதமும் விதிக்கப்படும்.

⁂ பொய் பிராதுகள்.

145. ஒருவன்பேரில் அக்கிரமமாய் குற்றம்சாட்டி அவனுக்கு கெடுதியுண்டுபண்ணவேண்டுமென்கிற எண்ணத்தோடு, வேண்டுமென்று பொய்பிராது செய்தால் 211-வது செக்ஷன்படி குற்றமாகிறது.

இதற்கு 2 வருஷம்வ்ரைக்கும் காவலாவது, அபராதமாவது, இரண்டுமாவது. விதிக்கப்படும். மேலும், கொலைமுதலிய பெருத்தகுற்றங்களை சாட்டவேண்டுமென்கிற எண்ணத்தோடு, வேண்டுமென்று பொய்பிராது செய்தால், 7 வருஷம்வரைக்கும் காவலும், அபராதமும், விதிக்கப்படும்.

146. தகுந்தகாரணங்களாவது, அனுமானமாவது இருந்து பிராது கொண்டுவந்தபோது, அந்த பிராது போதுமான ருசுவில்லாத்தினல் தள்ளிவிடப்பட்டால், பிராது கொண்டு வந்தவன், மேல்சொல்லிய செக்ஷன்படி குற்றவாளியாக மாட்டான்.

147. மேலும், தகுந்தகாரணங்கள் இருந்தபோது - தண்டனைக்கு உள்படுத்தவேண்டுமென்கிற எண்ணத்தோடு விரோதத்தினல் பிராது செய்தபோதிலும் - பிராது செய்தவன் குற்றவாளியாகமாட்டான்.

148. மனதறிந்து பொய்சங்கதிகளைச்சொல்லி யார்பேரிலாவது சர்க்கார் உத்தியோகஸ்தனுடைய அதிகாரத்தை செலுத்தும்படியாகச்செய்தல், 182-வது செக்ஷன்படி குற்றமாகிறது. இதற்கு 6 மாசம்வரைக்கும் காவலாவது, 1000 ரூபாய் வரைக்கும் அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

ஒருவர் வீட்டில், களவு சொத்தாவது, களவு உப்பாவது, இருக்கிறதென்று மனதறிந்து பொய்சொல்லி, சோதனை செய்வதற்கு வாரண்டு பிரப்பித்தல் இந்த செக்ஷன்படி குற்றமாகிறது.

*** பொய் வழக்குகள்.

149. கெட்டஎண்ணத்தோடு புத்திபூர்வகமாய் பொய் தாவாசெய்கிறவர்களுக்கு 209-வது செக்ஷன்படி 2 வருஷம் வரைக்கும் காவலும், அபராதமும் விதிக்கப்படும்.

மேலும், பொய்வழக்குகளைகொண்டுவந்து டிக்கிரீ அடைகிறவர்களுக்கும், தீர்ப்பு மொத்தம் அடைந்தபிறகு மருபடியும் டிக்கிரீ அமுலை நிறைவேற்றிக்கொள்ளுகிறவர்களுக்கும், 210-வது செக்ஷன்படி 2 வருஷம்வரைக்குங் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

150. கடன்கொடுத்தவர்களை மோசம் செய்யவேண்டுமென்கிற கெட்டஎண்ணத்தோடு, சில கடன்காரர்கள் தங்கள்பேரில் பொய்பாக்கிக்காக வேறொருவனை தாவாபண்ணும்படிசெய்து, அதின்மேல் தீர்ப்புக்கு, ஒப்புக்கொள்ளுகிறார்கள். சில சமயத்தில் அவர்கள் தீர்ப்புதொகை கொடுத்துவிட்டபிறகு தங்கள்பேரில் மறுபடியும் தீர்ப்பைநிறைவேற்றிவித்துக்கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட கடன்காரர்களும் அவர்களோடுகூடி கள்ளயோசனை செய்தவர்களும், 208,210, செக்ஷன்களின்படி 2 வருஷம்வரைக்கும் காவலுக்காவது, அபராதத்திற்காவது, அல்லது இரண்டுக்குமாவது - உள்ளாக்கப்படுவார்கள்.

*** சொத்தை மறைத்தல்.

151. அபராதத்தின் நிமித்தம், அல்லது கடனின் நிமித்தம்கொடுக்கும்படியாக நேரிடுமென்று எண்ணி, சொத்தை மோசடியாக மறைத்தலும், வேறொருவருடைய சுவாதீனம் செய்தலும், கள்ளக்கிரயம் கள்ளக்குதவை எழுதிக்கொடுப்

பதும் ஆகிய இவைகள், 206,421 செக்ஷன்களின்படி குற்றங்களாகின்றன. இதற்கு 2 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

மேலும், மேல்சொல்லப்பட்ட எண்ணத்தோடு, பாத்தியதையில்லாதபோது சொத்தை தன் சுவாதீனம் செய்துக்கொள்ளுகிறவனும், சொத்தினிடத்தில் தனக்கு யாதொருபாத்தியதையும் யில்லாமலிருக்கையில் உண்டென்று தாவாசெய்கிறவனும், 207-வது செக்ஷன்படி 2 வருஷம்வரைக்கும் காவலுக்காவது, அபராதத்திற்காவது இரண்டிற்குமாவது உள்ளாவான்.

*** பலாத்காரம்செய்து சொத்தைவாங்கிக்கொள்ளுதல்.

152. ஒருவனை, அவனுக்காவது வேறொருவனுக்காவது துன்பம் உண்டாக்குகிறேனென்று பயமுறுத்தி, அவனிடதிலிருந்து எந்த சொத்தையாவது உபயோகமான தஸ்தாவேஜையாவது பலாத்காரமாய் வாங்கிக்கொள்ளுதலும் - யாருக்காவது பலாத்காரமாய் கொடுக்கும்படிசெய்தலும் -384-வது செக்ஷன்படி குற்றங்களாகின்றன. இதற்கு 3 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

மேலும், மரணம் அல்லது பெருந்துன்பம் நேரிடும்படி செய்கிறேனென்ருவது ஏதாவது பெருங்குற்றங்களை சாட்டுகிறேனென்ருவது பயமுறுத்தி, மேல்கண்ட குற்றங்களை நடத்தினுல், அதிக தண்டனை விதிக்கப்படும்.

153. "ஏ" என்பவன் ஏதோ ஒரு குற்றம்செய்கிருன். அந்த சங்கதியை "பீ" என்பவன் அறிந்துகொண்டு எனக்கேதாகிலும் கொடுக்கவேண்டும் அப்படி கொடுக்காமல் போனுல் அந்த குற்றத்தை வெளியிடுகிறேனென்று பயமுறுத்தி, சொத்தை வாங்கிக்கொண்டால், மேற்கண்ட செக்ஷன்படி குற்றவாளியாகிருன்.

"ஏ" என்னும் ஒரு பிராமணன் ரகசியமாய் சாராயம் குடிக்கிறான். அதை "பீ" என்பவன் தெறிந்துகொண்டு, எல்லாரோடும் சொல்லி உன்னை ஜாதியிலிருந்து தள்ளிவிடும்படியாக செய்கிறேனென்று பயமுறுத்தி, ஏதாவது பொருளை வாங்கிக்கொண்டால், மேற்கண்ட செக்ஷன்படி குற்றவாளியாகிறான்.

"ஏ" என்பவனுடைய பிள்ளை "பீ" என்பவனிடத்தில் உத்தியோகத்தில் இருக்கிறான். உன்பிள்ளையை வேலையிலிருந்து தள்ளிவிடுகிறேனென்று "ஏ" என்பவனை பயமுறுத்தி அவனிடத்திலிருந்து "பீ" என்பவன் அக்கிரமமாய் ஏதாவது பத்திரம், பிராமிசெரிநோட்டு முதலிய தஸ்தாவேஜுகளை எழுதிகொடுக்கும்படி செய்தால், மேற்கண்ட செக்ஷன்படி குற்றவாளியாகிறான்.

154. மேல்சொன்னபடி பயமுறுத்தி, வெருங்காகிதத்தின்பேரில் கையெழுத்து போடும்படியாகச்செய்து அதை வாங்கிக்கொண்டாலும்கூட குற்றமாகவே எண்ணப்படும். அப்படி கையெழுத்து போடப்பட்ட வெருங்காகிதம், பின்பு எப்போதாவது, உபயோகமான தஸ்தாவேஜாய் செய்துக்கொள்ளலாமாகையால், குற்றமாக எண்ணப்படுவதற்கு காரணமாயிருக்கிறது.

155. மேல்சொல்லியபடி பயமுறுத்தி, சொத்தையாவது, தஸ்தாவேஜையாவது, தான் வாங்கிக்கொள்ளாமல், வேறுயாருக்காவது கொடுப்பித்தாலும் குற்றமாகின்றது.

*** களவு குற்றம்.

156. ஒருவனுடைய சுவாதீனத்திலிருக்கும் சொத்தை - அவனுடையவாவது, அவனுடைய அனுமதியைப்பெற்றவனுடையவாவது, சம்மதியில்லாமல்-வேறொருவன், கெட்ட எண்ணத்தோடு, எடுத்துக்கொள்ளுதல் களவு குற்றமாகின்றது.

இதற்கு 379 - வது செக்ஷன்படி 3 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், வேலைக்காரனாவது, குமாஸ்தாவாவது, எஜமானனுடைய சொத்தை திருடுவது - யாராவது, வீட்டுக்குள் நுழைந்து திருடுவது - திருடுவதற்காக கன்னம் வைத்து, கதவு முதலியவைகளை உடைத்து, அல்லது சுவரேறிகுதித்து, வீட்டில் நுழைவது - ஆகிய இவைகளுக்கு அதிக தண்டனை விதிக்கப்படும்.

157. ஒருவனுடைய சொத்தை அவன்சம்மதியில்லாமல் எடுத்துக்கொண்டபோதிலும், கெட்ட எண்ணமில்லாமலிருந்தால் அது களவு குற்றமாகமாட்டாது.

இது எப்படி யென்றால்—

ஒருவன், தன் சிநேகிதனோடு சொல்லாமலும், அவருடைய சம்மதியைப்பெறாமலும், மறுபடியும் கொடுத்துவிடவேண்டுமென்கிற எண்ணத்தோடு, அவருடைய புத்தகமொன்றை எடுத்துக்கொள்ளுகிறான். இது களவு குற்றமாகமாட்டாது.

158. மேலும், முதலில் கெட்ட எண்ணமில்லாமல் சொந்தக்காரனுடைய சம்மதியோடு வாங்கிக்கொண்ட சொத்தின்விஷயமாய், பின்பு துர்புத்தியுண்டாகி, அதை கொடுக்காமல்போவதும், சொத்தை வாங்கிக்கொள்ளவே இல்லையென்று சொல்வதும் - களவு குற்றமாகமாட்டாது. சொத்தை அபகரித்தலென்னும் குற்றமாகலாம்.

159. சொந்தக்காரனுடைய சம்மதியிருந்ததென்றாவது சொத்து தன்னுடையதென்றாவது, சொத்தில் தனக்கு பாத்தியதையிருக்கிறதென்றாவது, பிசகாய் நம்பி, அதை எடுத்துக்கொள்ளுதல், களவு குற்றமாகமாட்டாது. ஆனால், சொந்தக்காரனுடைய சம்மதியில்லாமல் சொத்தை எடுத்துக்கொண்டு, அவனால் தனக்கு வரவேண்டிய பாக்கிக்கு

ஈடாய் எடுத்துக்கொள்ளப்பட்டதென்று, சொன்னபோதிலும், களவு குற்றமாகாமல் போகாது.

160. தன்சொத்தை தான் எடுத்துக்கொள்ளுதலுங்கூட சில சமயங்களில் களவு குற்றமாகிறது.

இது எப்படியென்றால்—

ஒருவன், தன்வேலைக்காரனிடத்திலாவது, வேறுயாரிடத்திலாவது ஒருவஸ்துவை பத்திரப்படுத்தும்படி சொல்லிக்கொடுத்து, அவனிடத்திலிருந்து அந்த வஸ்துவின் விலையை வாங்கவேண்டுமென்கிற கெட்ட எண்ணத்தோடு, அவனுக்குத்தெரியாமல் அதை எடுத்துக்கொள்ளுதல், களவு குற்றமாகிறது.

ஒரு சொத்தை அடகுவைத்து, அடகுபெற்றவனுக்கு பணம் கொடுக்காமலும், அவனுடைய சம்மதியைப் பெறுமலும், அந்த சொத்தை எடுத்துக்கொண்டுபோவது களவுகுற்றமாகிறது.

ரிபெயர் செய்வதற்காவது வேறு எதற்காவது, ஒருவனுக்கு கொடுத்த ஒருபொருளை அவன் தனக்கு சேரவேண்டிய பணத்துக்கு ஈடாகவைத்துக்கொண்டால், அப்படி வைத்துக்கொள்ளாமல் செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு, அந்தபொருளை அவனுடைய சம்மதியில்லாமல் எடுத்துக்கொண்டுவருதல், களவு குற்றமாகிறது.

ஆனால், மேல்சொல்லப்பட்ட விதமாயாவது, வேறு எந்த விதமாயாவது, மற்றவருக்கு சொத்து விஷயமாய் பாத்தியதை இல்லாதபோது, தன்சொத்தை அவர் சம்மதியில்லாமல் பலாத்காரமாய் எடுத்துக்கொண்டுவந்தாலும், களவு குற்றமாகமாட்டாது. அக்கிரமமாய் தாக்குதல் என்னும் குற்றமாகலாம்.

161. புருஷனுடைய சொத்தை, பெண்ஜாதி, தன் ஜார புருஷனுக்கு கொடுத்தபோது, அந்த சொத்து, புருஷனுடையதென்றும், கொடுப்பதற்கு பெண்ஜாதிக்கி அதிகா

மில்லையென்றும், தான் அறிந்திருந்தும், அந்த ஜாரபுருஷன், கெட்ட எண்ணத்தோடு வாங்கிக்கொண்டால், களவு குற்றம் செய்தவனுகிருன்.

அப்படியே, எஜமானனுடைய சொத்தை, அவருடைய குமாஸ்தாவாவது, வேலைக்காரனுவது, அக்கிரமமாய், யாருக்காவது கொடுத்தபோது, அதை அறிந்திருந்தும் வாங்கிக்கொண்டால், களவு குற்றமாகும்.

162. சொத்தை எடுத்துக்கொண்டபோது, அது சொத்துக்காரனுடைய சுவாதீனத்தில் இல்லாதிருந்தால், களவு குற்றமாகாது.

இது எப்படி யென்ருல்—

தெருவில் ஏதாவது ஒரு மோதிரம் அகப்பட்டபோது சொந்தக்காரனை அறியும்பொருட்டு தகுந்த பிரயத்தினம்செய்யாமல் அந்த மோதிரத்தை வைத்துக்கொண்டால், அது, சொத்தை அபகரித்தல் என்னும் குற்றமாகிறதேயல்லாமல், களவு குற்றமாகாது. ஆனுல், அந்தமோதிரம், சொந்தக்காரனிடத்திலாவது, அவன் பெண்சாதியினிடத்திலாவது, குமாஸ்தாவினிடத்திலாவது, வேலைக்காரனிடத்திலாவது, அல்லது அவருடைய பொட்டியிலாவது, வீட்டில் வேறெங்கேயாவது இருந்தபோது, அதை எடுத்துக்கொண்டால், களவு குற்றமாகின்றது.

இறந்துபோனமாடுகள், சொந்தக்காரனுடைய கொட்டாயிலிருந்தபோது, அவனுடைய சம்மதியில்லாமல் எடுத்துக்கொண்டுபோதல், களவு குற்றமாகின்றது. அவைகளைவெளியில் எடுத்துப்போட்டபிறகு கொண்டுபோதல் குற்றமாகமாட்டாது.

163. "ஏ" என்பவன், "பீ" என்பவனுடைய சொத்தை, அவன் சம்மதியில்லாமல் எடுத்துக்கொண்டுபோய், "பீ" என்பவனுடைய கடன்காரர்களுக்குக் கொடுக்கிருன். இந்த

காரியம், "பீ" என்பவனுடைய நன்மைக்காக செய்யப்பட்டபோதிலும், "ஏ" என்பவன், களவுகுற்றம்செய்தவனுகவே எண்ணப்படுகிருன்.

164. திருடினசொத்தை, முடிவில் எடுத்துக்கொண்டு போகாமல் போனபோதிலும், களவு குற்றமாகின்றது.

இது எப்படி யென்ருல்—

ஒரு திருடன் பொட்டியிலிருந்து நகைகளை எடுத்து கீழே வைக்கிருன். அதற்குள் வீட்டிலிருந்தவர்கள் விழித்துக்கொண்டதினுல், நகைகளை விட்டுவிட்டு ஓடிப்போகிருன். அப்பொழுது, நகைகளை எடுத்து கீழேவைத்ததினுலேயே, களவுகுற்றம் முடிந்துவிட்டது.

"ஏ" என்பவனுடைய நிலத்திலிருக்கும் ஒரு மரத்தைத் திருடவேண்டுமென்கிற எண்ணத்தோடு, "பீ" என்பவன், அதை வெட்டுகிருன். பின்பு அதை எடுத்துக்கொண்டுபோகாமல் போட்டுவிட்டுபோனபோதிலும், வெட்டினதினுல் மாத்திரமே, களவுகுற்றம் முடிந்துபோய்விட்டது.

"ஏ" என்பவன், "பீ" என்பவனுடைய நாயை, திருடவேண்டுமென்கிற எண்ணத்தோடு, அதற்கு தின்பண்டங்களைக்காட்டி அழைக்கிருன். அது கொஞ்சதூரம்வந்துபிறகு ஓடிப்போகிறது. ஆனபோதிலும், "ஏ" ஏன்பவன்களவுகுற்றம் செய்தவனுகிருன்.

"ஏ" என்பவன், "பீ" என்பவனுடைய வீட்டிற்குவந்து, அவன்வீட்டில் ஏதாவது சொத்தை - பிறகு கொண்டுபோகவேண்டுமென்கிற எண்ணத்தோடு - அந்த வீட்டின் இரப்பிலாவது, ஓட்டிலாவது, தெரியாமல் மறைத்துவைக்கிருன். அப்பொழுது "ஏ" என்பவன் களவு குற்றம் செய்தவனுகிருன்.

*** களவு சொத்து.*

165. களவுசொத்து - 152 முதலாகிய பியாராக்களில் சொல்லப்பட்டபடி மெரட்டி பலாத்காரமாக அடைந்த சொத்து - 169 முதலாகிய பியாராக்களில் சொல்லபபோ

கிறபடி கொள்ளையடிக்கப்பட்ட சொத்து - 175 முதலாகிய பியாராக்களில் சொல்லப்போகிறபடி அக்கிரமமாய் அபகரிக்கப்பட்டசொத்து - 178 முதலாகிய பியாராக்களில் சொல்லப்போகிறபடி நம்பிக்கைத்துரோகத்தினால் அடையப்பட்டசொத்து - இவைகளை, அப்பேர்ப்பட்ட சொத்துக்களென்று அறிந்திருந்தும், வாங்கிக்கொள்கிறவர்களும், முதலில் அப்படிப்பட்ட சொத்தென்று தெரியாமல் வாங்கிக்கொண்டபோதிலும், தெறிந்தபிறகு சுவாதீனத்தில் வைத்துக்கொள்ளுகிறவர்களும் - 411 - வது செக்ஷன்படி குற்றவாளிகளாகிறார்கள். இந்தசெக்ஷன்படி 3 வருஷம் வரைக்கும் காவலாவது, அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

166. மேலும், அப்படிப்பட்ட சொத்துக்களை வழக்கமாய் வாங்கிவைக்கிறவர்களுக்கும், கொள்வனை விற்பனை செய்கிறவர்களுக்கும், 413-வது செக்ஷன்படி ஆயிசுபரியந்தம் தண்ணீர்மேலேற்றும் தண்டனையாவது, 10 வருஷம் வரைக்கும் காவலாவது விதிக்கப்படும். இந்த தண்டனையோடுகூட அபராதமும் போடப்படும்.

167. கொள்ளையில் அடைந்த சொத்தை, அப்படிப்பட்டதென்று அறிந்து வாங்கிக்கொள்ளுகிறவர்களும் - முதலில் அப்படிப்பட்டதென்று அறியாமல் வாங்கிக்கொண்டபோதிலும், அறிந்தபிறகு சுவாதீனத்தில் வைத்துக்கொள்கிறவர்களும்-412-வது செக்ஷன்படி ஆயுசுபரியந்தம் தண்ணீர்மேலேற்றும் தண்டனைக்காவது, 10 வருஷம்வரைக்கும் காவலுக்காவது உள்ளாவார்கள். அபராதமும் போடப்படும்.

168. மேல்சொல்லப்பட்ட விதமானசொத்துக்களை, மறைப்பதற்காவது, விற்பனைசெய்வதற்காவது, உதவிசெய்தவர்கள், 414-வது செக்ஷன்படி, 3 வருஷம்வரைக்கும், காவலுக்காவது அபராதத்திற்காவது, இரண்டிற்குமாவது உள்ளாவார்கள்.

*** கொள்ளை.

169. ஒருவனுக்கு, மரணம், சரீரத்துக்குத் துன்பம், அக்கிரமமான நிர்ப்பந்தம், இவைகளில் ஏதாவதை உண்டுபண்ணி, அல்லது, உண்டுபண்ணுவதாக பயப்படுத்தி, 155-வது பியாராவில் சொல்லியபடி பலாத்காரமாய் சொத்துவாங்கிக்கொண்டால், கொள்ளைக்குற்றமாகின்றது.

மேலும், திருடுவதற்காகவாவது, திருடுகையிலாவது, திருடினபொருளை யெடுத்துக்கொண்டு போகையிலாவது, கொண்டுபோவதற்குப் பிரயத்தினப்படுகையிலாவது - யாருக்காகிலும், மரணம், சரீரத்துக்குத் துன்பம், அல்லது அக்கிரமமான நிர்ப்பந்தம் உண்டுபண்ணினாலும், உண்டுபண்ணுவதாக பயப்படுத்தினாலும், கொள்ளைக்குற்றமாகின்றது.

170. சொத்துக்காரர்களை பிடித்துக்கொண்டாவது, கட்டிவைத்தாவது, அடித்தாவது, அவர்களுடைய தலைகளை உடைத்தாவது, அவர்களை பிராண அத்திசெய்தாவது, அல்லது இப்படி செய்கிறேனென்று பயப்படுத்தியாவது, அவர்களுடைய சொத்தை எடுத்துக்கொள்ளுவதும், அவர்களிடத்திலிருந்து பலாத்காரமாய் சொத்துவாங்குவதும், ஆகிய இவைகள் கொள்ளைக்குற்றங்களாகின்றன.

171. கொள்ளைக் குற்றத்துக்கு 392-வது செக்ஷன்படி 10 வருஷம்வரைக்கும் கடினகாவலும், அபராதமும், விதிக்கப்பட்டிருக்கிறது.

கொள்ளை நிறைவேறாமல், பிரயத்தினம்மாத்திரம் நடந்தபோது, 393-வது செக்ஷன்படி, 7 வருஷம்வரைக்கும், கடினகாவலும், அபராதமும் விதிக்கப்படும்.

172. ஐந்துபேராவது, ஐந்துபேருக்கதிகமானவர்களாவது, கொள்ளை நடத்துவதும், நடத்துவதற்கு எத்தினம் செய்தலும், பெருங்கொள்ளை என்னும் குற்றமாகிறது. இதற்கு, 395-வது செக்ஷன்படி ஆயுசுபரியந்தம் தண்ணீர் மேலேற்றும் தண்டனையாவது, 10 வருஷம்வரைக்கும் கடினகாவலாவது, விதிக்கப்படும், அபராதமும் போடப்படும்.

173. மேலும், பயங்கரமாக நடத்தப்பட்ட கொள்ளைக்கும், பெருங்கொள்ளைக்கும், அதிகதண்டனை விதிக்கப்படுகிறது.

174. பெருங்கொள்ளையடிப்பதற்கு ஆயத்தம் செய்தலும், கூடுவதும் - கொள்ளைக்கூட்டத்திலாவது திருடர்கூட்டத்திலாவது சேர்ந்திருத்தலும்-ஆகிய இவைகள், 399,402, 400,401, செக்ஷன்களின்படி குற்றங்களாகின்றன. இவைகளில், சில குற்றங்களுக்கு 7 வருஷம்வரைக்கும், சில குற்றங்களுக்கு 10 வருஷம்வரைக்கும், கடினகாவல் விதிக்கப்பட்டிருக்கிறது.

*** சொத்தை அபகரித்தல்.

175. ஒருவருடையசொத்தை அக்கிரமமாய் அபகரித்தல் 403-வது செக்ஷன்படி குற்றமாகிறது. இதற்கு 2 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

இறந்துபோனவன் வசத்திலிருந்தசொத்தை எவனாவது அபகரித்தால் அவனுக்கு 3 வருஷம்வரைக்கும் காவல் தண்டனையும் - அந்த இறந்துபோனவனுடைய வேலைக்காரனாவது, குமாஸ்தாவாவது அபகரித்தால், 7 வருஷம்வரைக்கும் தண்டனையும் - விதிக்கப்படும்.

176. ஒருவனுடைய சொத்தை, தன்சொத்தென்று, கொண்டுவந்தபோது, தன்னுடையதல்லவென்று தெறிந்த பிறகு கொடுத்துவிடாமல் அபகரித்துக்கொள்ளுதலும் - ஒருவனிடத்திலிருந்து இரவல்வாங்கிக்கொண்டுவந்தசொத்தை தன் சொந்த உபயோகத்திற்காக விற்பனை செய்தலும் அடகுவைத்தலும் - கூட்டுசொத்தை விற்பனைசெய்து அந்த விற்பனையினால் வந்த பணத்தை ஒருவனே அனுபவித்தலும் - ஒருவனுடைய சொத்து அகப்பட்டபோது அது இன்னாருடையதென்று தெரிந்தும் அவனுக்குக்கொடுக்காமல் வைத்துக்கொள்ளுதலும் - அது இன்னாருடையதென்று

தெரியாதபோது, சொந்தக்காரனை தெரிந்துகொள்ள தகுந்தபிரயத்தினம் செய்யாமலாவது, போதுமானகாலம் அகப்பட்டசொத்தை வைத்திராமலாவது, செலவழித்துக்கொள்ளுகிறதும் - இவைகள், மேற்கண்ட 403 - வது செக்ஷன்படி குற்றங்களாகின்றன.

177. மேலும், மேல்சொல்லியபடி வேறு ஒருவனுடைய சொத்தை அக்கிரமமாய் சொந்தத்துக்காக எடுத்துக்கொண்டபோது, பிறகு எப்பொழுதாவது அந்த சொத்தை சொந்தக்காரனுக்கு கொடுத்துவிடவேண்டுமென்கிற எண்ணமிருந்தபோதிலும், குற்றமாகவே எண்ணப்படும்.

இது எப்படி யென்றால்—

"ஏ" என்பவனுடைய மோதிரம், "பீ" என்பவனுக்கு அகப்படுகிறது. அப்பொழுது, "ஏ" என்பவனுடையதென்று தெரிந்திருந்தும் அவனுக்கு அதைக்கொடாமல், சிலனாள்பொருத்து கொடுத்துவிடுவோமென்கிற எண்ணத்தோடு, "பீ" என்பவன் அந்தமோதிரத்தை ஒருவனிடத்தில் அடகுவைத்து பணம்வாங்கிக்கொள்ளுகிறான். "பீ" என்பவன், 403 - வது செக்ஷன்படி குற்றவாளியாகிறான்.

*** நம்பிக்கைத்துரோகம்.

178. சவரக்ஷணைகர்த்தர்கள், குமாஸ்தாக்கள், வேலைக்காரர்கள், முதலியவர்கள் - தம்மிடத்தில் ஒப்பிக்கப்பட்ட சொத்தையாவது, சொந்தக்காரனுக்காக தாங்கள் வசூல் செய்யும் சொத்தையாவது, அபகரித்தல், அக்கிரமமாய் விக்கிரயம்செய்தல், உபயோகித்தல், அப்படிப்பட்டசொத்தின் விஷயத்தில் மனப்பூர்வமாய் பொய்கணக்குச்சொல்லுதல், இப்படிப்பட்டவைகள், நம்பிக்கைத்துரோகமாகிறது.

இதற்கு 406 - வது செக்ஷன்படி 3 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

மேலும், இந்தக் குற்றத்தை குமாஸ்தாக்கள், வேலைக்காரர்கள், ஏஜண்டுகள், பியாங்கிதாரர்கள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், இவர்கள் செய்தால் அதிகதண்டனை விதிக்கப்படும்.

179. தான் அக்கிரமமான லாபம் அடையவேண்டும் என்ற அல்லது அடகு வைத்தவனுக்கு அக்கிரமமான நஷ்டம் உண்டுபண்ணவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தோடு, அடகு ஷரத்துக்கு விரோதமாக, அடகு வைத்தசொத்தை, அதின்மேல் கடன்கொடுத்தவன் வேறொருவரிடத்தில் அடகுவைத்தல், மேல்சொன்ன நம்பிக்கைத்துரோகம் என்னும் குற்றமாகிறது.

*** மோசம்.

180. யாரையாவது ஏமாற்றி - அவனிடத்திலிருந்து ஏதாவது சொத்தை தான் வாங்கிக்கொள்ளுதலும், வேறொருவருக்கு கொடுக்கும்படியாகச்செய்தலும், அப்படிப்பட்டவனுடைய சரீரத்துக்காவது மனதிற்காவது மானத்திற்காவது சொத்துக்காவது நஷ்டமுண்டாகும்படியான காரியம், அவனைக்கொண்டு செய்துவைத்தலும், மேலும், அவனுக்கு இந்த விதங்களால் நஷ்டமுண்டாக்கும்பொருட்டு அவன் ஏதாவது செய்யவேண்டிய காரியத்தை செய்யாமல் விட்டுவிடும்படியாக செய்தலும், இவைகள், மோசம் என்னும் குற்றமாகிறது.

இதற்கு 417-வது செக்ஷன்படி 1 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது; அல்லது இரண்டுமாவது, விதிக்கப்படும்.

தன்னையாவது, வேறொருவனையாவது, மற்றொருவனென்று ஆள்மாராட்டம்செய்து மோசம்செய்தபோதும், சம்ரக்ஷணைகர்த்தர்கள் ஏஜண்டுகள் இவர்கள் மோசம்செய்தபோதும், 3 வருஷம்வரைக்கும் காவல்தண்டனை விதிக்கப்படும். மோசஞ்செய்து தஸ்தாவேஜுகளை எழுதிவைத்துக்கொண்

டபோதும், சொத்து வாங்கிக்கொண்டபோதும், யாருக்காவது கொடுக்கும்படியாகச்செய்தபோதும், 7 வருஷம்வரைக்கும் காவல்தண்டனை விதிக்கப்படும்.

181. ஒரு வஸ்துவை மாதிரிகாட்டி, வேறொரு மாதிரியான வஸ்துவை மனதறிந்து விற்பனைசெய்வதும் – கிலிட் நகைகளென்று அறிந்து, அவைகளை நல்ல நகைகளென்று விற்பனைசெய்வதும் – புஷ்பராகத்தருப்பென்று அறிந்து, அவைகளை ரவைகளென்று விற்பனைசெய்வதும் – பாலில் தண்ணீர் கலந்து அதை தண்ணீர் கலக்காதபாலென்று விற்பனை செய்வதும் – இவைகள் மோசக்குற்றங்களாகின்றன.

182. வர்த்தகர்கள் தங்கள் சரக்குகளை நல்லவைகளென்று சாதாரணமாய் சொல்லிக்கொள்ளும்பேச்சை நம்பி, விலைக்குவாங்கினபோது அவைகள் அவ்வளவு நல்லவைகளாயில்லாமற்போனபோதிலும் மோசக்குற்றமாகமாட்டாது.

183. "ஏ" என்பவனுக்கு ஏதாவது சரக்குகளை சப்ளை செய்கிறேனென்று சொல்லி அவனிடத்திலிருந்து "பீ" என்பவன் பணம் வாங்கிக்கொள்ளுகிறான். அப்படி பணம் வாங்கிக்கொண்டபோது சரக்கு சப்ளை செய்யவேண்டுமென்கிற எண்ணம் "பீ" என்பவனுக்கு இராமல் இருந்தால், அவன் மோசம்செய்தவனாகிறான். பணம் வாங்கிக்கொண்டபோது சப்ளைசெய்யவேண்டுமென்கிற எண்ணமிருந்திருந்தால் பிறகு சப்ளைசெய்யாமல்போனாலும், மோசமாகமாட்டாது. ஆனால், "ஏ" என்பவன் "பீ" என்பவன்பேரில் நஷ்டத்துக்கு தாவாசெய்யலாம்.

184. முழுகடிக்கவேண்டுமென்கிற எண்ணத்தோடு கடன் வாங்கிக்கொள்வது மோச குற்றமாகும். ஆனால், கடன் வாங்கிக்கொண்டபோது, அப்பேர்ப்பட்ட எண்ணம் இல்லாமலிருந்தால், பிறகு கடனைதீர்க்காமல் போனபோதிலும், மோசமென்னும் குற்றமாகமாட்டாது.

185. ஒரு சொத்தை ஒருவனுக்கு விக்கிரயம்செய்து, அதின்பேரில் தனக்கு யாதொருபாத்தியதையும் இல்லை யென்பதை அறிந்தும், மறுபடியும் மற்றொருவனுக்கு விக்கிரயம்செய்து அல்லது அடகுவைத்து பணம்வாங்குதல், மோசக்குற்றமாகிறது.

186. செல்லாததென்றறிந்தும், செல்லாதசெக்கையாவது உண்டியையாவது கொடுத்து சரக்குகளை வாங்கிக் கொள்ளுதல் மோசக்குற்றமாகிறது.

ஆனல், செல்லாததென்று அறிந்தும், யாசகனுக்கு தர்மமாக, செல்லாத செக்கையாவது உண்டியையாவது கொடுப்பது குற்றமாகமாட்டாது. அப்படிப்பட்ட செக்கையாவது, உண்டியையாவது கொடுப்பதினல், யாசகனுக்கு அக்கிரமமாய் நஷ்டம் உண்டாகிறதில்லை. ஆகையால் அது மோசக் குற்றம் ஆகமாட்டாதென்று ஊகித்துக்கொள்ளவேண்டியது.

187. ஒருவனுக்குவந்த கடிதத்தை தன்னுடையதாக சொல்லி ஏமாற்றிவாங்கிக்கொள்ளுதலும் - ஒருவன்பேருக்குவந்த மணி ஆர்டரை தனதென்றுசொல்லி கையெழுத்துப்போட்டு பணத்தைவாங்கிக்கொள்ளுதலும்-மோசக் குற்றமாகிறது.

188. ஒரு மதத்திற்குச்சேர்ந்த ஒருவன், வேறொருமதத்திற்குச்சேர்ந்தவனுகச்சொல்லி அந்த மதத்தில் கலியாணம் செய்துக்கொள்ளுதல், குற்றமாகும்.

*** கள்ள நாணயங்கள்.

189. சர்க்கார் நாணயங்களைப்போல கள்ள நாணயங்களைச்செய்வதும், கள்ள நாணயங்களென்று அறிந்து அவைகளை நல்லவைகளென்று வேறொருவருக்குக்கொடுப்பதும், கெட்ட எண்ணத்தோடு ஒரு நாணயத்தை மற்றொரு நாணயமாக அதின் ரூபத்தை மாற்றுதலும், அப்படி மாற்

றப்பட்ட நாணயங்களை அப்பேர்ப்பட்டவைகளென்று அறிந்து நல்லவைகளென்று யாருக்காவது கொடுப்பதும், இவைகள் 232,240,249,250, செக்ஷன்களின்படி குற்றங்களாயிருக்கின்றன.

இவைகளில் சிலவற்றிற்கு 5 வருஷம்வரைக்கும், சிலவற்றிற்கு 7 வருஷம்வரைக்கும், சிலவற்றிற்கு 10 வருஷம் வரைக்கும், காவல் விதிக்கப்பட்டிருக்கிறது.

190. கள்ள நாணயமென்று தெரியாமல் மற்றொருவரிடத்திலிருந்து வாங்கிக்கொண்ட நாணயத்தை, அப்பேர்ப்பட்டதென்று தெரிந்தபிறகு நல்லதென்று யாருக்காவது கொடுப்பது, 241,254, செக்ஷன்களின்படி குற்றமாகின்றது.

இதற்கு, 2 வருஷம்வரைக்கும் காவலாவது, அந்த கள்ள நாணயத்திற்கு 10 மடங்குவரைக்கும் அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

191. ஒருவருக்கும் கொடுக்காமலிருந்தபோதிலும், கள்ள நாணயங்களென்று அறிந்து அவைகளை கெட்ட எண்ணத்தோடு, சுவாதீனத்தில் வைத்துக்கொள்வதும்கூட குற்றமாயிருக்கிறது.

192. கள்ள நாணயங்களென்று அறிந்திருந்து, நல்லவைகளென்று தர்மத்துக்கு கொடுப்பதும் குற்றமாகிறது.

*** கள்ள ஸ்டாம்புகள்.

193. சர்க்கார் ஸ்டாம்புகளின் ரூபத்தை கெட்ட எண்ணத்தோடு மாற்றுதலும் - கள்ள ஸ்டாம்புகளை சிருஷ்டனை செய்தலும் - கள்ள ஸ்டாம்புகளென்று அறிந்திருந்தும் அவைகளை நல்லவைகளாக உபயோகித்தலும், விற்பனை செய்தலும் - ஒருதரம் உபயோகிக்கப்பட்ட ஸ்டாம்புகளை, அறிந்திருந்தும் மறுபடியும் உபயோகப்படுத்துதலும் - ஒருதரம் உபயோகப்படுத்தப்பட்டதென்று காட்டும் அடையா

ளத்தை கெட்ட எண்ணத்தோடு சுரண்டிப்போடுதலும் - இவைகள், 255,258,260,261,262,263, செக்ஷன்களின்படி குற்றங்களாகின்றன.

இவைகளில் சிலவற்றிற்கு, 2-3 வருஷம்வரைக்கும், சில வற்றிற்கு அதிகமாயும் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

194. கள்ள ஸ்டாம்புகளென்று அறிந்து, கெட்ட எண்ணத்தோடு, சுவாதீனத்தில் வைத்துக்கொள்வதும்கூட குற்றமாயிருக்கிறது.

*** கள்ள நிறைகள் - கள்ள அளவுகள்.

195. மோசம் செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு, கள்ள நிறைகளையும் கள்ள அளவுகளையும் உபயோகிப்பதும் - மேலும், அப்பேர்ப்பட்ட எண்ணத்தோடு அவைகளை சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருப்பதும் - யாருக்காவது செய்துகொடுப்பதும், விற்பனைசெய்வதும் - இவைகள், 264,265,266,267, செக்ஷன்களின்படி குற்றங்களாகின்றன.

இதற்கு 1 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது இரண்டுமாவது விதிக்கப்படும்.

*** கெடுதி.

196. ஒருவருக்கு நஷ்டம் உண்டுபண்ணவேண்டுமென்கிற கெட்ட எண்ணங்கொண்டு, ஒரு சொத்தை நாசஞ்செய்தல், அல்லது எந்த விதத்திலாகிலும் அதின் விலையாவது, பிரயோஜனமாவது, குறையும்படி செய்தல், கெடுதி என்னும் குற்றமாகும்.

இது எப்படி யென்றால்—

"ஏ" என்பவன் "பீ" ஏன்பவனுக்கு நஷ்டம் உண்டுபண்ணவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு, "பீ" என்பவனுடைய புஸ்தகத்தையாவது, துணியையாவது, தஸ்தாவேஜையாவது, கிழித்துவிடுகிறான் - அல்லது "பீ" என்பவனுடைய வீட்டிற்கு நெருப்பு வைக்கி

றுன் - அல்லது அவனுடைய ஆடுமாடு முதலியவை களை கொல்லுகிறுன். அப்பொழுது "ஏ" என்பவன் கெடுதிகுற்றம்செய்தவனுகிறுன்.

"ஏ" என்பவன் "பீ" என்பவனுடைய கடன்காரர்களுக் கு நஷ்டம் உண்டுபண்ணவேண்டுமென்கிற எண்ணங் கொண்டு "பீ" என்பவனுடைய சொத்தை அழித்து விடுகிறுன். இது கெடுதி குற்றமாகிறது.

197. ஒருவன் தன் சொந்தசொத்தை கெடுப்பதும் அழிப்பதும்கூட கெடுதிகுற்றமாகலாம்.

இது எப்படி என்றுல்—

"ஏ", "பீ", என்னும் இரண்டுபேர்கள் தங்களிருவருக்கும் பொதுவாய் ஒரு குதிரையைவைத்துக்கொண்டிருக்கி றுர்கள். அப்பொழுது அவர்களில் ஒருவன் மற்றவனுக் கு நஷ்டமுண்டுபண்ணவேண்டுமென்கிற எண்ணத் தோடு, அந்தக்குதிரையைக்கொன்றுவிட்டால், அது கெடுதி குற்றமாகிறது.

"ஏ" என்பவன், தனக்குக்கடன்கொடுத்திருக்கிறவர்க ளுக்கு நஷ்டம் உண்டுபண்ணவேண்டுமென்கிற எண் ணங்கொண்டு, தன்வீட்டிற்கு நெருப்புவைத்து அழித் துவிடுகிறுன், இது கெடுதி குற்றமாகிறது.

தான் ஒருவருக்கும் பாக்கியில்லாமலிருந்தபோதிலும், ஒருவன் தன் வீட்டை நெருப்புவைத்தழித்தால் - சமீ பத்திலிருக்கும் வீடுகளுக்கும் ஜனங்களுக்கும் அபாய முண்டாக்கத்தக்கதாயிருப்பதினுல், 85-வது பியாரா வில் சொல்லியபடி 6 மாசம்வரைக்கும் காவலாவது, 1000 ரூபாய்வரைக்கும் அபராதமாவது அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும். ஆனுல் வீட்டிற்கெந்த பக்கத்திலும், வேறு வீடுகளாவது, சொத்தாவது, இல் லாமலிருந்தால், ஒருவன் தன் வீட்டுக்கு நெருப்பு வைத்துக்கொள்ளுதல் குற்றமாகமாட்டாது.

198. ஒருவருக்கும் நஷ்டத்தை யுண்டுபண்ணவேண்டுமென்கிற கெட்ட எண்ணமில்லாதபொழுது, தன் சொத்துக்காவது, பிறர் சொத்துக்காவது நஷ்டத்தை உண்டாக்குதல் கெடுதிகுற்றமாகமாட்டாது.

கெடுதிகுற்றமானாலும் ஆகாமல்போனாலும், நஷ்டத்தை அடைந்தவன், நஷ்டத்துக்காக தாவாசெய்துக்கொள்ளலாம்.

199. யானை, ஒட்டை, குதிரை, கோவேறுகழுதை, எருமைக்கடா, எருமை, பசுவு, எருது - இவைகளை கொல்வதினாலாவது, இவைகளுக்கு விஷமிடுவதினாலாவது, வேறு ஏதாகிலும் விதத்தில் அவைகளை அப்பிரயோஜனப்படுத்துவதினாலாவது, கெடுதிக்குற்றம் செய்யப்பட்டால், 429-வது செக்ஷன்படி 5 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

200. மேல்சொல்லப்பட்ட மிருகங்கள்தவிர வேறு எந்த மிருகங்களுக்காவது கெடுதி செய்யப்பட்டபோது, அப்படிப்பட்ட மிருகத்தினுடைய விலை 50 ரூபாய்க்குக் கீழ்ப்படாமலிருந்தால், 5 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

50 ரூபாயிக்குள்பட்டு 10 ரூபாயிக்குக்கீழ்படாமலிருந்தால், 2 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

10 ரூபாயிக்குக்கீழ்ப்பட்டிருந்தால், 3 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

201. பயிரு முதலானவைகளுக்கு தண்ணீர் சப்ளை செய்யும் வாய்க்கால் முதலானவைகளை உடைத்து வெட்டிவிடுதல், அவைகளுக்கு எந்த விதத்திலாவது கெடுதியுண்டாக்குதல் - ஜனங்கள் நடக்கும்பாட்டை, வாராவதி, டோணி, படகு, முதலியவைகள் போகும்கால்வாய், அல்லது

ஆறு, இவைகளுக்கு கெடுதியுண்டாக்குதல் - ஆகிய இக் தக்குற்றங்களுக்கு, 430,431, செக்ஷன்படி 5 வருஷம்வ ளாக்கும் காவலாவது, அபரார்தமாவது, அல்லது இரண்டு மாவது விதிக்கப்படும்.

ஒருவருக்கு நஷ்டத்தையுண்டாக்கவேண்டுமென்கிற எண் ணத்தோடு, அவர் வயல்களுக்கு தண்ணீர் சப்ளைசெய் யும் கால்வாய்களுக்கு அக்கிரமமாய் குறுக்கே அணை போட்டு தண்ணீரை தடுத்துவிடுதல், 430-வது செக்ஷன் படி கெடுதிகுற்றமாகிறது.

202. சர்க்கார் எல்லைக்கல்லுகளை கெடுத்தல், மாற்று தல், ஆகிய இந்தக்கெடுதிக்குற்றங்களுக்கு 434-வது செக் ஷன்படி 1 வருஷம்வரைக்கும் காவல்ாவது, அபராதமா வது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

203. ஒருவருக்கு நஷ்டத்தையுண்டுபண்ணவேண்டுமெ ன்கிற எண்ணத்தோடு, அவர் சொத்தின்பேரில் அடை யாளமாக போடப்பட்ட குறிகளை கெடுப்பதும், எடுத்துவிடு வதும் ஆகிய இவைகளுக்கு 489-வது செக்ஷன்படி, 1 வரு ஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, இரண்டுமா வது விதிக்கப்படும்.

204. வீடுகள், கோவில்கள், களஞ்சியங்கள், இவைக ளுக்கு நெருப்புவைத்து கெடுதிகுற்றம்செய்தால், 436-வது செக்ஷன்படி, ஆயுசுபரியந்தம் தண்ணீர்மேலேற்றுவதும், அபராதமும், விதிக்கப்படும். அல்லது 10 வருஷம்வரைக் கும் காவலும் அபராதமும் விதிக்கப்படும்.

205. பத்துரூபாய்க்குக்குறையாத மதிப்புள்ள பயிருக் காவது, 100 ரூபாய்க்குக்குறையாத மதிப்புள்ள எந்த சொத் துக்காவது, நெருப்பினால் கெடுதியுண்டாகும்படியாகச் செய்தால், 435-வது செக்ஷன்படி 7 வருஷம்வரைக்கும் காவலும் அபராதமும் விதிக்கப்படும்.

206. ஒருவருக்கு நஷ்டம் உண்டுபண்ணவேண்டுமென் றுவது, வேறு எந்த கெட்ட எண்ணத்தோடாவது - ஒரு

வுயில் அதாவது மரணசாசனம், தத்துவாங்கிக்கொள்வதற்கு அதிகாரம்கொடுக்கும் பத்திரிகை, வேறு ஏதாவது உபயோகமுள்ள தஸ்தாவேஜு – இவைகளை மறைத்துவைப்பது, ரத்துசெய்து கெடுப்பது, நாசஞ்செய்வது, பிரயோஜனமற்றுப்போகும்படி செய்வது, அவைகளுக்கு வேறெந்த விதத்திலாவது கெடுதிசெய்வது, ஆகிய இந்தக்குற்றங்களுக்கு 477-வது செக்ஷன்படி, ஆயுசுபரியந்தம் தண்ணீர் மேலேற்றுவதாவது, 7 வருஷம்வரைக்கும் காவலாவது விதிக்கப்படும். அபராதமும்போடப்படும்.

207. மேல்படி பியாராக்களில் சொல்லப்பட்ட விதங்களினுலல்லாமல் வேறு எந்த விதத்தினுலாவது கெடுதிகுற்றம்செய்யப்பட்டபொழுது – அப்படிப்பட்டகெடுதியால் 50 ரூபாயிக்காவ்து, அதற்கு மேற்பட்டாவது நஷ்டமுண்டானுல், 2 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது இரண்டுமாவது விதிக்கப்படும். சுவல்ப நஷ்டமுண்டானுல் 3 மாதம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

இந்த பியாராவில் சொல்லப்பட்ட கெடுதிகுற்றங்கள் விஷயமாய் ராஜீயாகலாம். மற்றகெடுதிகுற்றங்கள் விஷயமாய் ராஜீயாகக்கூடாது.

*** அக்கிரமமாய் பிரவேசித்தல்.

208. ஏதாவது குற்றத்தை செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடாவது – சொத்துக்குடையவர்களை பயப்படுத்துதல், அவமானப்படுத்துதல், அவர்களுக்கு மனவருத்தத்தை யுண்டுபண்ணுதல், ஆகிய இப்பேர்ப்பட்ட எண்ணத்தோடாவது – ஒருவருடைய நிலத்தில் அல்லது வீட்டில் அக்கிரமமாய் பிரவேசிப்பதும், கிரமமாகப் பிரவேசித்து மேற்சொல்லியபடி செய்யவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு நின்றிருப்பதும், ஆகிய இவைகள், அக்கிரமமாய் பிரவேசித்தலென்னும் குற்றமாகிறது.

209. அக்கிரமமாய்பிரவேசித்தலென்னும் குற்றத்திற்கு, 447-வது செக்ஷன்படி 3 மாசம்வரைக்கும் காவலாவது, 500 ரூபாய்வரைக்கும் அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும். ஒருவருடைய வீட்டில் அக்கிரமமாய் பிரவேசித்தபோது 448-வது செக்ஷன்படி 1 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

மேலும், ஏதாவது பெரியகுற்றம் செய்யவேண்டுமென்கிறஎண்ணத்தோடு அக்கிரமமாய் பிரவேசித்தால், ஜாஸ்திதண்டனை விதிக்கப்படும்.

இரகசியமாயாவது, இராக்காலத்திலாவது, வீட்டில் அக்கிரமமாய் பிரவேசித்தல் - கன்னமிட்டாவது, சுவரேரிகுதித்தாவது, கதவுமுதலியவைகளை உடைத்தாவது அக்கிரமமாய் வீட்டில் பிரவேசித்தல் - இவைகளுக்கு ஜாஸ்திதண்டனை விதிக்கப்படும்.

210. தனக்கு பாத்தியதை யுண்டென்னும் நம்பிக்கையிருக்கும்போது, தன் பாத்தியதையை ஸ்தாபித்துக்கொள்ளும்பொருட்டு பிரவேசித்தல் - மேற்சொல்லியபடி குற்றமாகமாட்டாது.

*** கூனி குற்றம்.

211. ஏதாவது காரியத்தைசெய்து அல்லது ஏதாவது லோபம்செய்து, புத்திபூர்வகமாய், ஒருவனைக்கொன்றால், அது கூனிகுற்றமாகிறது.

மேலும், மரணம் சம்பவிக்கும்படியாக புத்தி பூர்வகமாய் ஒருவருடைய சரீரத்திற்கு துன்பம் செய்வதினால் மரணம் நேரிட்டபோதும் மரணம் நேரிடுமென்று அறிந்திருந்து ஏதாவது காரியம் செய்வதினால், அல்லது, லோபம்செய்வதினால் மரணம் நேரிட்டபோதும் - கூனிகுற்றமாகிறது.

212. "ஏ" என்பவன், "பீ" என்பவனைக்கொல்லவேண்டுமென்கிற எண்ணத்தோடு, அவனை நோக்கி துபாக்கியை சுட்டு, அவனைக்கொல்லுகிறான். அது கூனி குற்றமாகிறது.

மிகவும் ஆழமான ஒருகால்வாயை தாண்டுவதற்காக ஜனங்கள் அதில் இரங்காதிருக்கும்படி காற்கும்பொருட்டு, அந்த இடத்தில் ஒரு சேவகன் வைக்கப்பட்டிருக்கிறான். அவன் தன் வேலையைவிட்டு தூங்கிக்கொண்டிருப்பதினால், யாராவது அந்த கால்வாயில் இரங்கி செத்தபோதும் - யாராவது தெரியாமல் இரங்கிக்கொண்டிருக்கையில் அந்த சேவகன்பார்த்தும் அவனைத்தடுக்காமல்போவதினால் செத்தபோதும் - அந்த சேவகன் கூனிகுற்றம் செய்தவனாகிறான்.

"ஏ" என்பவனுடைய நாய் "பீ" என்பவனைக்கடிக்கப்போகிறது. அப்பொழுது "ஏ" என்பவன் தன் நாயை அழைக்காமல் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்கிறான். அதினால் அந்த நாய்கடித்து "பீ" என்பவன் செத்துப்போகிறான். அப்பொழுது, "ஏ" என்பவன் கூனி குற்றம்செய்தவனாகிறான்.

"ஏ" என்பவன் நலலதடி எடுத்துக்கொண்டு "பீ" என்பவனுடைய தலைமேல் ஓங்கி அடிக்கிறான் - அல்லது கத்தி எடுத்துக்கொண்டு வீசி "பீ" என்பவன் சரீரத்தில் பெரியகாயம் உண்டாக்கிறான். அதினால் "பீ" என்பவன் சில நாளுக்குப்பிறகு இறந்துபோகிறான். அப்பொழுது "ஏ" என்பவன் கூனி குற்றம் செய்தவனாகிறான்.

"ஏ" என்பவன் நாள் நிறைந்த கர்ப்பிணியான ஒரு ஸ்திரீயை, கர்ப்பிணியென்று அறிந்து அவள் வயிற்றின்பேரில் பலமாய் உதைக்கிறான். அதினால், அந்த ஸ்திரீ இறந்துபோகிறாள். அப்பொழுது "ஏ" என்பவன் கூனி குற்றம் செய்தவனாகிறான்.

"ஏ" என்பவன் "பீ" என்பவனை பலாத்காரமாய ஒரு அறையில் போட்டுபூட்டிவிட்டு அவனுக்கு சில நாள்வரைக்

கும் ஆகாரம் கொடுக்காமலிருக்கிறான். அதினால், "பீ" என்பவன் இறந்துபோகிறான். "ஏ" என்பவன் கூனி குற்றம் செய்தவனாகிறான்.

"ஏ" என்பவன் ஒரு காட்டில் தனகசு வழிகாட்டும்பொருட்டு "பீ" என்பவனை ஏர்ப்படுத்திக்கொள்ளுகிறான். "பீ" என்பவன் "ஏ" என்பவனை அக்கிரமமாய் நடுகாட்டில் விட்டு ஓடிப்போகிறான். அதினால் வழிதெரியாமல் "ஏ" என்பவன் இறந்துபோனால், "பீ" என்பவன் கூனி குற்றம் செய்தவனாகிறான்.

213. கூனி குற்றத்திற்கு 302-வது செக்ஷன்படி, தூக்குதண்டனையாவது, ஆயுசுபரியந்தம் தண்ணீர்மேலேற்றுவதாவது விதிக்கப்படும். அபராதமும் போடப்படும்.

214. ஒருவன் தன் பெண்சாதி வியபிசாரம் செய்துக்கொண்டிருக்கையில் பார்த்து அப்பொழுது உண்டான கோபாவேசத்தினால், பெண்சாதியையாவது, கள்ளபுருஷனையாவது, இருவரையும்ாவது, கொன்றபோதும் - வேறு எந்த விதத்தினாலாவது, ஒருவனால் கோபம் மூட்டப்பட்டபோது மெய்ம்மறந்து அவனை கொன்றபோதும் - சடிதியிலுண்டான சண்டையில் கோபாவேசத்தால் மரணம் சம்பவித்தபோதும் 18-வயதுக்கு அதிகப்பட்டவர்கள் குஸ்தீ செய்கையில் ஒருவனால் மற்றொருவனுக்கு மரணம் நேரிட்டபோதும் - 36 முதலிய பியாராக்களில் சொல்லப்பட்ட ஆத்மசம்ரக்ஷணையின் பாத்தியதையைமீறி ஒருவனைக்கொன்றபோதும் - தூக்குதண்டனை விதிக்கப்படாது.

ஆயுசுபரியந்தம் தண்ணீர்மேலேற்றுவதாவது, 10 வருஷம்வரைக்கும் காவலாவது விதிக்கப்படும்.

215. "ஏ" என்பவன் "பீ" என்பவனை ஒரு அடி அடிக்கிறான். "பீ" என்பவனுக்கு அந்த அடிபட்ட இடத்துக்குள்ளே ஒருநோய் இருப்பதினால், அந்த அடிவிழுந்தமாத்திரத்தில் அவன் இறந்துபோகிறான். அப்போது "ஏ"

என்பவன் கூனி குற்றம் செய்தவனுகமாட்டான். அடித்த தற்குமாத்திரம் குற்றவாளியாகிறுன். நோய் இருப்பதை யறிந்து அடித்திருந்தால் கூனி குற்றமாகிறது.

"ஏ" என்பவன் ஒரு ஸ்திரீயை தன்னேடு சம்போகிக் கும்படி கேட்கிருன். அதினுல் அந்த ஸ்திரீ கிணற்றில் விழுந்து செத்துப்போகிருள். "ஏ" என்பவன் கூனிகுற்றம் செய்தவனுகமாட்டான்.

216. நன்றுய் ஆலோசிக்காமல், வைத்தியன் வேகமான மருந்து கொடுப்பதால் மரணம் நேரிட்டபோதும் - நன் றுய்வைத்தியம் செய்யத்தெரியாதவன் மருந்து கொடுப்ப தால் மரணம் நேரிட்டபோதும் - கத்திகள், துப்பாக்கிகள், முதலியவைகளே, அஜாக்கிரதையாய் சிறியவர்களிடத்தில் கொடுப்பதால் மரணம் உண்டானபோதும் - மிகுந்தவேக மாய் முன்பின்பாராமல் அஜாக்கிரதையாய் வண்டி ஓட்டுவ தினுலாவது, குதிரையின்பேரில் சவாரி செய்வதினுலாவது, மரணமுண்டானபோதும் - கூனி குற்றமாகமாட்டாது.

ஆனல், 304 "ஏ" செக்ஷன்படி, அஜாக்கிரதையாய் து டுக்கானகாரியம்செய்து மரணமுண்டாக்குதல் என்னும் குற் றமாகிறது. இதற்கு 2 வருஷம்வரைக்கும் காவலாவது அபராதமாவது அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

217. மேலும், ஜனங்களுக்கு துன்பமாவது பிராணசே தமாவது உண்டாகும்படியாக அஜாக்கிரதையாய் ஏதாவது காரியத்தை ஒருவன செய்தால் - அதினுல் அபாயம் நே ரிட்டாலும் நேரிடாமற்போனுலும் - 336-வது செக்ஷன் படி 3 மாசம்வரைக்கும் காவலாவது, 250 ரூபாய்வரைக் கும், அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

வெடிமருந்து, விஷமருந்து, திராவகங்கள் முதலிய அபா யகரமான வஸ்துக்களே தகுந்த ஜாக்கிரதையோடு பியாக் செய்யாமல் - அதாவது பொட்டி முதலியவைகளில் வைத் து பத்திரம்செய்யாமல் - கூலிக்காரனிடத்தில் அவைகளே

எடுத்துக்கொண்டுபோகும்படி கொடுத்தல் இந்த செக்ஷன் படி குற்றமாகின்றது.

மேலும், மேற்படி குற்றத்தால் யாருக்காவது துன்பம் நேரிட்டால், 337,338, செக்ஷன்களின்படி அதிகதண்டனை விதிக்கப்படும்.

*** தற்கொலை.

218. ஒருவன், தன்னைத்தானே கொலைசெய்துக்கொண்டபோது, அதற்கு உடந்தையாயிருந்து சகாயம் செய்தவர்களுக்கு, 306-வது செக்ஷன்படி 10 வருஷம்வரைக்கும் காவலும், அபராதமும், விதிக்கப்படுகிறது.

219. மேலும், 18 வயதிற்கு கீழ்பட்டவர்களும், பைத்தியக்காரர்களும் சித்தப்பிரமையுள்ளவர்களும், மயக்கத்தினால் உடம்பு தெரியாதிருப்பவர்களும், தற்கொலைசெய்துக் கொண்டபோது, அவர்களுக்கு உடந்தையாயிருந்து சகாயம் செய்தவர்களுக்கு, 305-வது செக்ஷன்படி மரணதண்டனையாவது, ஆயுசுபரியந்தம் தண்ணீர்மேலேற்றுவதாவது, 10 வருஷம்வரைக்கும் காவலாவது விதிக்கப்படும். அபராதமும் விதிக்கப்படும்.

220. தற்கொலை செய்துக்கொள்ள வேண்டுமென்று ஒருவன் பிரயத்தினப்பட்டு ஏதாவது செய்தால், 309-வது செக்ஷன்படி 1 வருஷம்வரைக்கும் வெறுங்காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

*** சிசுஹத்தி முதலியவைகள்.

221. மருந்து முதலியவைகளை வாங்கிக்கொண்டு கர்ப்பத்தை அழித்துக்கொள்ளும் ஸ்திரீகளுக்கும் - மருந்து முதலியவைகளைக்கொடுத்து கர்ப்பத்தை அழிக்கிறவர்களுக்கும் - 312-வது செக்ஷன்படி 3 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

மேலும், கர்ப்பத்தில் குழந்தை அசைய ஆரம்பித்தபிறகு கர்ப்பத்தை அழித்துக்கொண்டவர்களுக்கும் அழிக்கச்செய்தவர்களுக்கும் 7 வருஷம்வரையில் காவலும், அபராதமும், விதிக்கப்படும்.

222. ஸ்திரீயினுடைய சம்மதமில்லாமல் கர்ப்பத்தை அழியச்செய்தவர்களுக்கு 313-வது செக்ஷன்படி ஆயுசுபரியந்தம் தண்ணீர்மேலேற்றுவதாவது, 10 வருஷம்வரைக்கும் காவலாவது விதிக்கப்படும். அபராதமும் போடப்படும்

223. மேலும், கர்ப்பத்தை அழிக்கும்பொருட்டு ஒருவன் மருந்து முதலியவைகளை கொடுத்தபொழுது, அல்லது அதற்காக வேறேதாவது செய்தபோது, ஸ்திரீயானவள் இறந்துபோனால், அதிக தண்டனை விதிக்கப்படும்.

224. பிறந்த சங்கதியை மறைக்கவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு, பிறந்து இறந்துபோன குழந்தையையாவது, உள்ளே இறந்து பிறந்த குழந்தையையாவது, ரகசியமாய் புதைத்துப்போடுதல், வேறு எந்த விதத்தினலாவது அதை தொலைத்துவிடுதல், ஆகிய இவைகளுக்கு 318-வது செக்ஷன்படி 2 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, இரண்டுமாவது, விதிக்கப்படும்.

225. உயிரோடுபிறந்த் குழந்தைகளை கொல்வது கொலைகுற்றமாகிறது.

226. தாயாருடைய பிராணத்திற்கு அபாயத்தை தப்பிக்கும்பொருட்டு கர்ப்பத்தை அழித்தல் - வயற்றிலிருக்கும் சிசுவை துண்டித்தல் - முதலாகிய இவைகள் குற்றமாகமாட்டாது.

227. தாயாவது, தந்தையாவது, சம்ரக்ஷணைகர்த்தாவாவது, 12 வயதிற்கு கீழ்ப்பட்ட குழந்தைகளை, சுத்தமாக ஒழித்து விடவேண்டுமேன்கிற எண்ணத்தோடு எவ்விடத்திலாவது விட்டுவிட்டால், 317-வது செக்ஷன்படி, 7 வரு

ஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது, விதிக்கப்படும்.

விதவைஸ்திரீகள், திருட்டுத்தனமாக பிள்ளைகளைப்பெற்று, அந்த சிசுக்களை குப்பைமேடு, ஏரிக்கரை, முதலான இடங்களில் விட்டுவிட்டு போகிறுர்கள். அவர்கள் இந்த செக்ஷன்படி குற்றவாளிகளாகிறுர்கள்.

*** துன்பம் உண்டுபண்ணுதல்.

228. அடிப்பதினுலாவது, வேறு எந்த விதத்தினுலாவது, மனதார ஒருவனுடைய சரீரத்துக்குத் துன்பம்உண்டாக்குதல், 323-வது செக்ஷன்படி குற்றமாகிறது. அதற்கு 1 வருஷம்வரைக்கும் காவலாவது, 1000 ரூபாய்வரைக்கும் அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

229. மேலும் - மூக்கையறுத்தாவது, காதைக்கிழித்தாவது, பல்லையுடைத்தாவது, கண்ணையெடுத்தாவது, கைகால் ஒடித்தாவது, தலையை உடைத்தாவது, வேறேதாகிலும் உறுப்பைகெடுத்தாவது, முகத்தை நிரந்தரமாய் விகாரப்படுத்தியாவது, துன்பம் உண்டாக்கினபோதும் - 20 நாள் வரைக்கும் வேலைப்பாடுகளைச் செய்யக்கூடாமலிருக்கும்படி துன்பம் உண்டாக்கினபோதும் - 325-வது செக்ஷன்படி 7 வருஷம்வரைக்கும் காவலும், அபராதமும், விதிக்கப்படும்.

230. மேலும், கத்தி, துப்பாககி, அம்பு முதலிய ஆயுதங்களாலாவது - விஷம், நெருப்பு முதலிய அபாயகரமான வஸ்துக்களாலாவது - பாம்பு, தேள், குரங்கு, நாய், முதலியசந்துக்களாலாவது, துன்பத்தை உண்டாக்கினபோதும் - ப்லாத்காரமாய் ஏதாவது சொத்து தஸ்தாவேஜு முதலியவைகளை அடையும்பொருட்டாவது, பாக்கி பணத்தை வசூல்செய்துக்கொள்வதற்காகவாவது, அக்கிரமமாய் ஏதாவது காரியத்தை செய்விப்பதற்காகவாவது, ஒருவனுக்கு அல்லது அவனைச்சேர்ந்தவர்களுக்கு துன்பம் உண்டாக்கினபோதும் - எதாவது குற்றத்தைக்குறித்த சங்கதிகளைச்

சொல்விப்பதற்காவது தெரிந்துகொள்வதற்காவது ஒருவ னுக்கு துன்பம்உண்டாக்கினபோதும் - சர்க்கார் உத்தி யோகஸ்தன் அமுலை நடத்தக்கூடாமற்செய்யும்பொருட்டு அவனுக்குத் துன்பம் உண்டாக்கினபோதும் - அதிகதண் டனை விதிக்கப்படும்.

231. வியபிசாரம் முதலிய கெட்ட காரியங்கள் நடந்த போது, அப்படிசெய்தவர்களை அடிப்பதும், வெட்டுவதும், சூடுபோடுவதும், ஆகிய இப்பேர்ப்பட்ட செய்கைகள் குற் றங்களாகமாட்டாவென்று சிலர் நினைத்திருக்கிறார்கள். இ வைகள் குற்றங்களே என்று அறிந்துகொள்ளவேண்டியது.

232. வியபிசாரம் செய்யவேண்டுமென்றாவது, சொத் தை அபகரிக்கவேண்டுமென்றாவது, வேறு ஏதாகிலும் குற் றத்தைசெய்யவேண்டுமென்றாவது செய்விக்கவேண்டுமென் றாவது, எண்ணங்கொண்டு - ஒருவனுக்கு கள், சாராயம் முதலிய மயக்கவஸ்துக்களை, அல்லது சரீரத்திற்கு துன்பம் உண்டுபண்ணும் வஸ்துக்களை, கொடுத்தால், அதற்கு 328-வது செக்ஷன்படி 10 வருஷம்வரைக்கும் காவலும், அபராதமும், விதிக்கப்படும்.

233. ஒருவனால் கோபம் மூட்டப்பட்டபோது, அந்த கோபாவேசத்தினால் அவனுக்குத் துன்பத்தையுண்டாக்கி னால், அதற்குக்குறைந்த தண்டனை விதிக்கப்படும்.

234. தாய், தகப்பன், சவரக்ஷணைகர்த்தா, உபாத்தியா யர் இவர்கள், பிள்ளைகளை மிதமாக தண்டிப்பது குற்றமாக மாட்டாது. ஆனால் குரூரமாகதண்டித்தல் குற்றமாகும்.

235. எசமானர்கள், வேலைக்காரர்களை அடித்தல் குற்ற மாகிறது. ஆனால், வேலைகற்றுக்கொள்ளுகிறவர்களை மித மாக தண்டித்தல் குற்றமாகமாட்டாது.

236. சுவல்பதுன்பம் உண்டாக்கப்பட்டபோது ராஜீ யாகலாம். சிலசமயங்களில் விசாரணைசெய்யும் அதிகாரியி னுடைய உத்திரவைப்பெற்று ராஜீயாகலாம். அதிக துன் பமுண்டாக்கப்பட்டபொழுது ராஜீயாகக்கூடாது.

*** அக்கிரமமாய் தடுத்தலும், அடைத்தலும்.

237. தனக்குப்போக பாத்தியதையிருக்கும் வழியில் போயிக்கொண்டிருக்கிற ஒருவனை போகவொட்டாமல் தடுத்தல், 341-வது செக்ஷன்படி குற்றமாகிறது.

இதற்கு 1 மாசம்வரைக்கும் வெருங்காவலாவது, 500 ரூபாய்வரைக்கும் அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும். இந்தக்குற்றத்தின் விஷயமாய் ராஜீயாகலாம்.

தடுப்பதற்கு தனக்கு பாத்தியதையிருக்கிறதென்று நம்பி, கெட்ட எண்ணமில்லாமல் தடுத்தால், குற்றமாகமாட்டாது.

238. ஒருவனை, அக்கிரமமாய், அறையில்போட்டு பூட்டிவிடுதல், காவலில்வைத்தல், நிர்ப்பந்தப்படுத்துதல், தன்னோடுகூட வரும்படியாயாவது, அல்லது எங்கும்போகாமலிருக்கும்படியாயாவது, செய்தல், இவைகளுக்கு, 342-வது செக்ஷன்படி 1 வருஷம்வரைக்கும் காவலாவது, 1000 ரூபாய்வரைக்கும் அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

இந்த குற்றம் ராஜீயாகலாம்.

239. மேலும், மூன்று நாள் அல்லது அதற்கு அதிகப்பட்டகாலம் ஒருவனை அக்கிரமமாய் அடைத்தலும் - அவனைச்சேர்ந்த ஜனங்களுக்காவது சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்காவது, தெரியவொட்டாமல் அவனை ரகசியமாய் அடைத்தலும்-பலாத்காரமாய் சொத்து, தஸ்தாவேஜு முதலியவைகளை அடையும்பொருட்டாவது, பாக்கியை வசூல்செய்துக்கொள்வதற்காகவாவது, அக்கிரமமாய் ஏதாவது காரியத்தை செய்யும்படி பலவந்தப்படுத்துவதற்காகவாவது, ஏதாவது குற்றத்தைக்குறித்த சங்கதிகளை சொல்விப்பதற்காகவாவது தெரிந்துகொள்ளும்பொருட்டாவது, அவனை அல்லது அவனைச்சேர்ந்தவனை, அடைத்துவைத்தலும் - ஆகிய இவைகளுக்கு 2,3 வருஷம்வரைக்கும் காவலும், அபராதமும், விதிக்கப்படும்.

இப்படி நடந்தபோது ராஜீயாகக்கூடாது.

*** தாக்குதல்.

240. ஏதாவது குற்றம்செய்வதற்காவது, ஹானி செய்வதற்காவது, பயப்படுத்துவதற்காவது, தொந்திரவுசெய்வதற்காவது - ஒருவன்பேரில், அவனுடைய சம்மதியில்லாமல் எந்த விதத்தினுலாவது பலத்தை உபயோகித்தல், தாக்குதல் என்னும் குற்றமாகிறது.

ஒருவனை தள்ளுதல், வண்டியில் போயிக்கொண்டிருக்கும்போது வண்டி எருதுகளையாவது, குதிரையையாவது அடித்தல், போயிக்கொண்டிருக்கிறவனை நிறுத்துதல், அவன்பேரில் நாயைவிடுதல், கல்லெறிதல், தண்ணீர்கொட்டுதல், உமிழ்தல், வஸ்திரத்தை அவிழ்த்துவிடுதல், மீசை, குடிமை முதலியவைகளை பிடித்திழுத்தல் அறுத்தல் கத்தரித்தல் சரைத்தல் இப்படிப்பட்டவேலைகளை - அவனுடைய சம்மதியில்லாமல், அவனைப்பயப்படுத்தவேண்டுமென்கிற அல்லது ஹானி, தொந்திரவு செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு செய்தால், தாக்குதலென்னும் குற்றமாகின்றது.

கெட்ட எண்ணத்தோடும், சம்மதமில்லாமலும், மேற்சொன்னபடி செய்யப்பட்டால்தான் குற்றமாகும்.

241. மேல்பியாராவில் சொல்லப்பட்ட எண்ணத்தோடு, ஒருவனைநோக்கி, முஷ்டியைகாட்டிக்குத்துவதாகச்சொல்வது, குத்தப்போவதாகபயப்படுத்துவது, கொம்பை எடுத்து அடிக்கப்போவது, நாயை அவிழ்த்து மேல்விடுகிறேனென்று பயப்படுத்தி அதின் சங்கிலியை அவிழ்க்கப்போவது, மேல்படாமல் கல், கொம்பு இவைகளை எறிவது, ஆகிய இவ்விதங்களால் மெரட்டுவதும்கூட குற்றமாகிறது.

மெரட்டினபடி நடத்துவதற்கு சக்தியில்லாதபோது குற்றமாகாது. ரொம்ப தூரத்திலிருந்தபோதும், மிகவும் சக்தியற்றவனுகயிருக்கும்போதும், வெறும்வாய்வார்த்தைகளால் மெரட்டுதல் மேல்படி குற்றமாகமாட்டாது.

242. தாக்குதல் என்னும் குற்றத்திற்கு 352-வது செக்ஷன்படி 3 மாசம்வரைக்கும் காவலாவது, 500 ரூபாய்வரைக்கும் அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

243. ஒருவனுல் கோபம் மூட்டப்பட்டபோது அப்பேர்ப்பட்ட கோபாவேசத்தினுல் அவன்மேல் தாக்குதலுக்கு, குறைந்த தண்டனை, ஆதாவது 1 மாசம்வரைக்கும் காவலாவது, 200 ரூபாய்வரைக்கும் அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

244. சர்க்கார் உத்தியோகஸ்தன் அமுலை நடத்திக்கொண்டிருக்கும்போதும், நடத்தப்போகும்போதும், செய்யப்பட்ட தாக்குதல் குற்றத்திற்கும் - ஒரு ஸ்திரீக்கு மானபங்கமாவது, ஒருவனுக்கு அவமானமாவது, உண்டாக்கும் பொருட்டு செய்யப்பட்ட தாக்குதல் குற்றத்திற்கும் - 2 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

245. கோபம்மூட்டினவன்மேல் கோபாவேசத்தினுல் தாக்குதல் குற்றம்செய்யப்பட்டபோதும் - ஒருவனை அவமானப்படுத்தும்பொருட்டு தாக்குதல்குற்றம் செய்யப்பட்டபோதும் - அல்பசொல்பமாய் தாக்குதல் குற்றம்செய்யப்பட்டபோதும் - ராஜீயாகலாம். மற்றப்போது ராஜீயாகக்கூடாது.

*** அக்கிரமமாய் பயப்படுத்துதல்.

246. ஒருவனைக்காப்பராப் படுத்தவேண்டுமென்ருவது, அக்கிரமமாய் ஒருவனைக்கொண்டு ஏதாவது வேலைசெயவிக்கவேண்டுமென்ருவது, அல்லது, ஒருவன் கிரமமாய் செய்துக்கொண்டிருக்கும்வேலையை விட்டுவிடும்படி செய்யவேண்டுமென்ருவது - அவனுடைய, அல்லது, அவனைச்சேர்ந்தவருடைய, சரீரத்துக்கு, பேருக்கு, அல்லது சொத்துக்கு கெடுதி உண்டுபண்ணுகிறேனென்று பயப்படுத்துதல் - 506-வது செக்ஷன்படி குற்றமாகிறது.

இதற்கு, 2 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

இந்த குற்றத்தின்விஷ[ய]மாய் ராஜீயாகலாம். ஆனால் கீழ்பியாராக்களில் சொல்லும்படி பயப்படுத்தினால், ராஜீயாகக்கூடாது.

247. மேலும், கொன்றுவிடுவேனென்றாவது, பெருந்துன்பம் உண்டாக்குவேனென்றாவது, வீடுமுதலிய சொத்தை கொளுத்திவிடுவேனென்றாவது, பெரிய குற்றமான காரியமேதாவது செய்துவிடுவேனென்றாவது, ஒரு ஸ்திரீக்கு விபசாரப்பட்டம் கட்டிவிடுவேனென்றாவது, பயப்படுத்தினால், 7 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது, விதிக்கப்படும்.

மொட்டை விண்ணப்பம் மூலமாய் பயப்படுத்தினபோதும்கூட அதிகதண்டனை விதிக்கப்படும்.

248. ஒருவன்மேல், அல்லது, அவனைச்சேர்ந்தவர்களின்மேல் கடவுளுக்கு கோபம்வரும்படி செய்கிறேனென்று பயப்படுத்தி அவனைக்கொண்டு ஏதாவது அக்கிரமமான வேலையை செய்வித்தல், அல்லது அவன் கிரமமாய்செய்துகொண்டிருக்கிற வேலையை செய்யாமல் விட்டுவிடும்படி செய்தல், 508-வது செக்ஷன்படி குற்றமாகும். இதற்கு 1 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

இது எப்படி யென்றால்—

எனக்கு பிச்சைகொடுக்காமல்போனால் நாக்கை அறுத்துக்கொள்கிறேன், அல்லது, இவ்விடத்திலேயே பிராணனை விடுகிறேன் - அந்தப்பாவம் உனக்குவந்து, கடவுளுடைய கோபத்துக்கு பாத்திரனாவாய் - என்று பயப்படுத்தி பிச்சையைவாங்குதல், இந்த செக்ஷன்படி குற்றமாகிறது.

உன்பிள்ளைக்கு என்பெண்ணையே கலியாணம் பண்ணிக்கொள்ளவேண்டும். அப்படியல்லாமல் "ஏ" என்ப

வனுடைய பெண்ணை கலியாணம் செய்துக்கொண்டால், என்பெண்ணைக்கொன்று விடுகிறேன். அந்தப் பாவம் உனக்குவந்து கடவுள் உன் பிள்ளையைக்கொன்றுவிடுவார் - என்று பயப்படுத்தி, "ஏ" என்பவன் பெண்ணை கலியாணம் பண்ணிக்கொள்ளவொட்டாமல் செய்தால் மேல்சொல்லியபடி குற்றமாகிறது.

சூன்னியம்செய்து கொன்று விடுகிறேனென்று பயப்படுத்தி ஏதாவது பொருளை வாங்கிக்கொள்வதும், சந்தர்ப்பணை முதலியவைகளை செய்விப்பதும் குற்றங்களாகும்.

249. மேலதிகாரிகளிடத்தில் சொல்லிக்கொண்டு நியாயமடையாமற்போகும்படி செய்யவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு ஒருவனுக்கு ஏதாவது கெடுதியுண்டுபண்ணுகிறேனென்று பயப்படுத்துதல், 190 - வது செக்ஷன்படி குற்றமாகிறது.

இதற்கு 1 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது, விதிக்கப்படும்.

250. அக்கிரமமாய் பயப்படுத்துதல்தான் குற்றமாகும். கிரமமானதாவா அல்லது பிராது தாக்கல்செய்வேன் என்று சொல்லுதல் குற்றமாகாது. ஆனால் இப்படிசொல்லி மெரட்டி சொத்தை வாங்கிக்கொள்ளுதல் 153-வது பியாராவில் சொன்னபடி குற்றமாகலாம்.

*** மனிதர்களைத்திருடுதல்.

251. 14 வருஷத்துக்குக்கீழ்ப்பட்ட ஆண்பிள்ளையையும், 16 வருஷத்துக்குக்கீழ்ப்பட்ட பெண்பிள்ளையையும், அவர்களுடைய சவரக்ஷணை கர்த்தர்களின் வசத்திலிருந்து திருட்டுத்தனமாய் கொண்டுபோதலும், சவரக்ஷணைகர்த்தருடைய அனுமதியில்லாமல் கெட்ட எண்ணத்தோடு அழைத்துக்கொண்டுபோதலும், 363 - வது செக்ஷன்படி குற்றங்களாகின்றன.

இதற்கு 7 வருஷம்வரைக்கும் காவலும், அபராதமும், விதிக்கப்படும்.

252. அந்தப்பிள்ளைகளுக்கு மேல்சொன்ன வயசுகடந்து போயிற்றென்று பிசகாய் நம்பினேனென்றுவது, அந்த பிள்ளைகள் சம்மதித்துத் தாமாகவந்தார்களென்றுவது சொல் வதினுல் குற்றமாகாமல்போகாது.

253. மேலும், பலிகொடுப்பதற்காவது, கொல்லுவதற் காவது, பெருந்துன்பம் உண்டாக்குவதற்காவது, அக்கிர மமாய் நிர்ப்பந்தப்படுத்துவதற்காவது - மேற்சொன்ன வய சுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளை அழைத்துக்கொண்டுபோன போதும், அந்த வயசுக்கு மேல்பட்டவைகளை பலவந்தமா யாவது மோசடியாயாவது அழைத்துக்கொண்டுபோனபோ தும், கலியாணம் செய்துக்கொள்ளும் பொருட்டாவது புணர்ச்சிக்காவது பெண்பிள்ளைகளை திருட்டுத்தனமாக கொண்டுபோனபோதும், பெண்டுகளை பலவந்தமாயாவது, மோசடியாயாவது அழைத்துக்கொண்டு போனபோதும், அதிக தண்டனை விதிக்கப்படும்.

*** பிள்ளைகளை விற்பது.

254. வேசித்தனம் முதலிய விஷயங்களுக்காக பிள்ளை களை விற்பனை செய்வதும், விலைக்குவாங்குவதும், ஆகிய இவைகளுக்கு 372,373-வது செக்ஷன்களின்படி, 10 வரு ஷம்வரைக்கும் காவலும், அபராதமும், விதிக்கப்படும்.

*** பலவந்தப்படுத்தி வேலைசெய்வித்தல்.

255. அக்கிரமமாய்பலவந்தப்படுத்தி ஒருவரைக்கொண் டு வேலைசெய்வித்தால், 374-வது செக்ஷன்படி 1 வருஷம் வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது, இரண் டுமாவது விதிக்கப்படும்.

*** துராக்கிரதமான புணர்ச்சி.

256. ஸ்திரீயினுடைய சம்மதமில்லாமல் பலவந்தமாய் அவளோடு புணர்ந்தால், துராங்கிருத புணர்ச்சியென்னும் குற்றமாகிறது.

இதற்கு, 376-வது செக்ஷன்படி ஆயுசுபரியந்தம் தண்ணீர்மேலேற்றுவதாவது, 10 வருஷம்வரைக்கும் காவலாவது, விதிக்கப்படும். அபராதமும் போடப்படும்.

257. வேசிகளோடும், குடிசட்டிகளோடும், பலவந்தமாய் புணர்தலும்கூட மேல்சொல்லப்பட்ட குற்றமாகின்றது. தன் வைப்பாட்டியோடு துராக்கிருதமாய் புணர்தலும் கூட குற்றமாகின்றது.

ஆனல், பெண்சாதியோடு பலவந்தமாய் புணர்தல் குற்றமாகமாட்டாது.

258. பத்துவயசுக்குக்கீழ்ப்பட்ட சிறுபெண்ணோடு புணர்தல் - அவளுடைய சம்மதிபெற்று செய்தபோதிலும் - மேல்சொல்லப்பட்ட குற்றமாகின்றது. மேலும் அந்த சிறுபெண் தன்பெண்சாதியாயிருந்தபோதிலும், குற்றமாகவே எண்ணப்படும்.

259. கொல்லுவேனென்றுவது, உபத்திரவப்படுத்துவேனென்றுவது பயப்படுத்தி ஸ்திரீயினுடைய சம்மதிபெற்றுக்கொண்டு அவளோடு புணர்வதும் - ஸ்திரீயினுடைய புருஷனைப்போலவாவது அவளுடைய கள்ளபுருஷனைப்போலவாவது நடித்து, அல்லது வேறு எந்தவிதத்தினுலாவது மோசம்செய்து, அவளுடைய சம்மதியைப்பெற்று புணர்வதும்-குடிமுதலியவற்றுல் மயக்கத்திலிருக்கும் ஸ்திரீயோடாவது பைத்தியக்காரியோடாவது புணர்வதும் - மேல்சொல்லப்பட்ட குற்றமாகவே நினைக்கப்படும்.

260. சம்பூர்ணமாய் புணராமற்போனபோதிலும் அந்தப் பிரவேசமானதினுலேயே மேல்சொல்லப்பட்ட குற்றமாகிறது.

*** மிருகங்களோடு புணர்தல்.

261. பசுக்கள், எருமைகள், கழுதைகள், முதலிய மிருகங்களோடு புணர்தலும், புருஷர்களோடு புருஷர்கள் புணர்தலும் 377-வது செக்ஷன்படி குற்றமாகிறது. இதற்கு ஆயுசுபரியந்தம் தண்ணீர்மேலேற்றுவதாவது, 10 வருஷம் வரைக்கும் காவலாவது, விதிக்கப்படும். அபராதமும் போடப்படும்.

*** வியபிசாரம்.

262. ஸ்திரீயினுடைய சம்மதியில்லாமல் பலவந்தமாய் அவளோடு புணர்தல் துராக்கிருதமான புணர்ச்சியென்னும் குற்றமாகிறதென்று 256-வது பியாராவில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்திரீயினுடைய சம்மதிபெற்று புணர்ந்தபோதிலும், அவள் வேறொருவனுடைய பெண்சாதியென்று தெரிந்திருந்தால், வியபிசாரமென்னும் குற்றமாகின்றது. இதற்கு 497-வது செக்ஷன்படி 5 வருஷம்வரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

263. விதவைகளொடும், கலியாணமாகாதபெண்டுகளோடும், அவர்களுடைய சம்மதியைப்பெற்று புணர்வது குற்றமாகமாட்டாது.

ஆனல், அப்படி புணர்வதால் கர்ப்பம் உண்டாயி அந்த கர்ப்பத்தை அழித்தல், 221-வது பியாராவில் சொல்லப்பட்டபடி குற்றமாகிறது,

264. புருஷன் ஜீவித்து இருக்கிறனென்பதும், வேறொருவனுடைய பெண்சாதியென்பதும், வியபிசாரம் செய்கிறவனுக்கு தெரிந்திருந்தால்தான் குற்றமாகும். அப்படி தெரியாமல், கல்லியாணமாகவில்லையென்றுவது, புருஷன் இறந்துபோனனென்றுவது, பிசகாய் நம்பி வியபிசாரம் செய்தால், குற்றமாகமாட்டாது.

265. புருஷன் சம்மதித்தபோதும், வியபிசார நடக்கை புருஷனுக்குத்தெரிந்து அவன் சும்மாயிருந்தபோதும் குற்றமாகாது.

266. வேறொருவனுடைய பெண்சாதி, தானாகவந்து, மேல்விழுந்து, பலவந்தம் செய்தபோதிலும், அவளோடு வியபிசாரம் செய்வது குற்றமாகவே எண்ணப்படும்.

267. வியபிசாரம் நடந்தபொழுது புருஷர்களுக்கு யாதொரு நஷ்டமும் உண்டாகிறதில்லை. ஸ்திரீயிக்கு சம்சாரம் கெட்டுப்போகிறதுமல்லாமல், பவுஷிகாரமும் போடப்படுகிறது. வேறுகல்லியாணம் செய்துக்கொள்வதற்கும் ஆசாரமில்லை. யாரும் செய்துக்கொள்ளவும் மாட்டார்கள். ஆகையால் வியபிசாரம்செய்த புருஷனுக்கு மாத்திரமே தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ஸ்திரீயிக்கு தண்டனையில்லை. மேல்விழுந்து பலவந்தப்படுத்தின ஸ்திரீயிக்குக் கூட தண்டனையில்லை.

268. கூட்டிக்கொடுக்கும் ஸ்திரீகளும், புருஷர்களும், உடந்தை குற்றத்திற்காக, 10-.வது பியாராவில் சொல்லப்பட்டபடி, தண்டனைக்குள்ளாவார்கள்.

269. வியபிசாரம் செய்தவனும் அந்த ஸ்திரீயினுடைய புருஷனும் ராஜீசெய்துக்கொள்ளலாம்.

மேலும், புருஷனாவது, அந்த ஸ்திரீயை சவரக்ஷணைசெய்துக்கொண்டிருக்கிறவர்களாவது, பிராதுசெய்தாலொழிய மற்றவர்கள் பிராதுசெய்தால் வியபிசாரகுற்றம் விசாரிக்கப்படமாட்டாது.

270. வியபிசாரம் நடக்காமற்போனபோதிலும், செய்ய வேண்டுமென்கிற எண்ணத்தோடு, வெறொருவனுடைய பெண்சாதியை அழைத்துக்கொண்டுபோவதும் - தானாவது, வேறுயாராவது, வியபிசாரம் செய்வதற்காக, ஒருவனுடைய பெண்சாதியை அழைத்துக்கொண்டுபோவதும் - ஆகிய

இந்தக் குற்றங்களுக்கு 498-வது செக்ஷன்படி 2 வருஷம்வ ரைக்கும் காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டு மாவது விதிக்கப்படும்.

மேலும், வேறொருவனுடைய பெண்சாதி தானாகவந்து வேண்டிக்கொண்டபோதிலும், மேல்சொல்லியபடி அழைத் துக்கொண்டுபோவது குற்றமாகவே எண்ணப்படும்.

271. ஒரு ஸ்திரீயை வெட்கப்படுத்துவதற்காக ஏதாவ து பேசுதல் தொனிசெய்தல், சேஷ்டைசெய்தல், ஜாடை பண்ணுதல், ஏதாவது காட்டுதல், அல்லது அந்த ஸ்திரீயிருக் கும் ஏகாந்த இடத்தில் அக்கிரமமாக பிரவேசித்தல் - ஆகிய இந்தக்குற்றங்களுக்கு 509-வது செக்ஷன்படி, 1 வருஷம்வ ரைக்கும் வெருங்காவலாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

*** அவதூறு.

272. வாய்மொழியினாலாவது, எழுத்து மூலமாயாவது, நியூஸ்பேபர் முதலானவைகளில் ஏதாவது சங்கதி அச்சிடு வதினாலேயாவது, ஒருவனுடைய பேர்கெட்டுபோகும்படி ஏதாவ்து நிந்தனைசெய்வது, அவதூறு என்னும் குற்றமாகி றது.

இந்தக்குற்றத்திற்கு 500 - வது செக்ஷன்படி 2 வருஷம் வரைக்கும் வெருங்காவலாவ!து, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது, விதிக்கப்படும்.

மேலும் ஒருவனுக்கு அவதூரானவிஷயம் அடங்கியிருக் கிற நியூஸ்பேபரையாவது, வேறு ஏதாகிலும் கடுதாசியாவ து, புஸ்தகத்தையாவது, அச்சிடுகிறவர்களும், விற்கிறவர்க ளும், குற்றவாளிகளாகிறார்கள்.

273. இறந்துபோன ஒருவனைப்பற்றி, அவன் பந்துக்க ளுக்கு மனவருத்தம் உண்டுபண்ணவேண்டுமென்கிற எண் ணத்தோடு, நிந்தனை செய்வதுங்கூட அவதூறாகும்.

274. ஜனங்களுடைய நன்மைக்காகவாவது, அல்லது, யாராவதொருவனுடைய நன்மைக்காகவாவது, ஒருவனைப் பற்றிய எதார்த்தமான அவதூறை பிரசித்தப்படுத்துவதும், யாருக்காவது தெரியப்படுத்துவதும் குற்றமாகமாட்டாது.

இது எப்படி யென்றால்—

"ஏ" என்னும் வக்கீல், உபயக்க்ஷிக்காரர்களிடத்திலும் பீசுவாங்கிக்கொள்கிறான். "பீ" என்னும் வைத்தியன், வைத்தியம் செய்யும் சாக்கைக்கொண்டு பெண்டுகளைக் கெடுக்கிறான். இந்த சங்கதிகள் உண்மையாயிருக்கும் பட்சத்தில், பிரசித்தப்படுத்துவதினால் ஜனங்களுக்கு நன்மையுண்டாகுமாதலால், அப்படிப்பிரசித்தப்படுத்துவது குற்றமாகமாட்டாது.

"ஏ" என்பவன் திருடன், அவனை வீட்டுக்குள் வரவொட்டக்கூடாது - "பீ" என்பவன் துர்மார்க்கன், அவனை சம்சாரிகள் வீட்டுக்குள் வரவொட்டக்கூடாது - "ஸீ" என்பவனுக்கு கடன்கொடுத்தால் அவன்மோசஞ்செய்கிறான் - "டி" என்பவன் அடங்காதவன், அவனைவேலையில் வைத்துக்கொள்ளக்கூடாது, நான் நேற்றுதான் அவனை வேலையிலிருந்து தள்ளிவிட்டேன் - என்கிற இந்த சங்கதிகள் உண்மையாயிருந்தால், அவைகளை ஒருவன் தன் சிநேகிதனோடாவது, வேறுயாரோடாவது, அவனுடைய நன்மைக்காகவும், அவன் சாக்கிரதையாயிருக்கும் பொருட்டும் சொல்வது குற்றமாகமாட்டாது.

வேலைக்காரனுடைய தப்பிதத்தைக்குறித்து அவன் எசமானனோடாவது மேலதிகாரியோடாவது சொல்வதும் - சிறுவர்களுடைய தப்பிதங்களைக்குறித்து தாய் தந்தையர்களோடாவது சவரட்சணை கர்த்தர்களோடாவது உபாத்தியாயரிடத்திலாவது சொல்வதும் - தப்பிதங்கள்செய்தபோது வேலைக்காரர்களை எசமானர்களும், சிறுவர்களை தாய் தந்தையர் முதலியவர்களும் கண்டிப்பதும் - ஆகிய இவைகள் குற்றங்களாகமாட்டா.

275. உண்மையாயிருந்தபோதிலும், சனங்களுக்கு நன்மையுண்டாகும்படி இராதபோது, அவதூறுகும் விஷயங்களை பிரசித்தப்படுத்துவது குற்றமாகும்.

ஒரு வக்கீலினுடைய வியபிசார நடத்தையைப்பிரசித்தப்படுத்துவதினால் சனங்களுக்கு நன்மை உண்டாகாதாதலால், அப்படிப்பிரசித்தப்படுத்துவது குற்றமாகிறது.

“நம்முடைய தாசில்தார் மிகவும் பெரியமனிதர், செருப்படிபட்ட பிறகு வாழைத்தோட்டத்தில் வியபிசாரம் செய்வதை விட்டுவிட்டார்.” இந்த சங்கதி எதார்த்தமானதாயிருந்தபோதிலும், பிரசுரப்படுத்துவதினால் சனங்களுக்கு நன்மை உண்டாகாதாதலால், பிரசுரப்படுத்துவது குற்றமாகிறது.

கோர்ட்டு முன்சீபு, குமாஸ்தாவினுடைய பெண்சாதியோடு, வியபிசாரம் செய்துக்கொண்டிருக்கும்போது அவரை பிடித்து அவருடைய குடிமையை கத்தரித்துக்கொண்டிருப்பதாக படமெழுதி பிரசித்தப்படுத்துவது குற்றமாகிறது.

276. சர்க்கார் உத்தியோகஸ்தன் தன்னுடைய உத்தியோகத்துக்குறிய காரியங்களை நடத்தும்விஷயமாய் அவனுடைய நடத்தையைக்குறித்தாவது, சாமார்த்தியத்தைக்குறித்தாவது, யோக்கியதையைக்குறித்தாவது, கெட்ட எண்ணமில்லாமல் ஒருவன் தன் அபிப்பிராயத்தை தெரியப்படுத்துவது குற்றமாகமாட்டாது.

277. பாலிஷ்டர்கள், லாயர்கள், பிளீடர்கள், முதலியவர்கள், கோர்ட்டில் வாதிக்கும்போது, கெட்ட எண்ணமில்லாமல், சாட்சியத்தில் காணப்படும் சங்கதிகளைக்கொண்டு ஏதாவது சொல்வதால் யாருடைய பேருக்காவது கெடுதி உண்டானாலும், அது குற்றமாகமாட்டாது.

278. அவதூறு குற்றத்தைப்பற்றி ராஜீசெய்துக்கொள்ளலாம். அவதூறினால் சம்பவித்த நஷ்டத்தைக்குறித்து சிவில் வியாச்சியம் செய்துக்கொள்ளலாம்.

*** உடன்படிக்கைத்தவறுதல்.

279. ஒருவன் உடன்படிக்கையின்படி நடவாமல் தவறிப்போனபோது, அதினால் உண்டாகும் நஷ்டத்தைக்குறித்து சிவில் வியாச்சியம் செய்யவேண்டுமேதவிற சாதாரணமாய் கிரிமினல் பிராது செய்யக்கூடாது. ஆனால் சில உடன்படிக்கைகளை தவறிப்போவது குற்றம். அப்படிப்பட்ட உடன்படிக்கைகளை தவறிப்போனபோது, பிராது செய்து குற்றவாளிக்கு தண்டனை விதிக்கப்படும்படியாக செய்யலாம்.

280. பல்லக்குப்போயி, வண்டிக்காரன், மூட்டைக்காரன், படுகுக்காரனாகிய இவர்கள் நடுவழியில் விட்டுப்போவது 490-வது செக்ஷன்படி குற்றமாகிறது. இதற்கு, 1 மாசம்வரைக்கும் காவலாவது, 100 ரூபாய்வரைக்கும் அபராதமாவது, இரண்டுமாவது, விதிக்கப்படும்.

மேற்சொன்ன போயி,வண்டிக்காரன், முதலியவர்கள் பலவந்தமாய் அவர்கள் இஷ்டத்துக்கு விரோதமாய் அழைத்துக்கொண்டுபோகப்பட்டால், அவர்கள் நடுவழியில் விட்டுப்போவது குற்றமாகமாட்டாது. மேலும், நோயினாலாவது எஜமானனுடைய குரூர நடத்தையினாலாவது அப்படி விட்டுப்போனால், குற்றமாகமாட்டாது.

281. சிறுவர்களையும், வியாதிஸ்தர்களையும், பயித்தியக்காரர்களையும், சாக்கிரதையாய் காத்துக்கொண்டு அவர்களுக்கு வேண்டிய உபசாரம் செய்யும்பொருட்டு ஏர்ப்படுத்தப்பட்ட வேலைக்காரர்கள் புத்தி பூர்வகமாய் விட்டுப்போவது, 491-வது செக்ஷன்படி குற்றமாகிறது. இதற்கு 3 மாசம்வரைக்கும் காவலாவது, 200 ரூபாய்வரைக்கும், அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

282. தச்சன் முதலியவேலைக்காரர்கள், எஜமானனுடைய சிலவில் தூரஸ்தலத்துக்குப்போய் வேலைசெய்வதாக எழுத்து மூலமாய் கிரமமான உடன்படிக்கை செய்துக்கொண்டு தகுந்த காரணமின்றிப் புத்தி பூர்வகமாய் அதின்

படிக்கிப்போகாமல் தவறிப்போவதும், அப்படிப்போய் வேலைசெய்துக்கொண்டிருக்கும்போது மத்தியில் விட்டுவந்து விடுவதும், 492-வது செக்ஷன்படி குற்றமாயிருக்கிறது.

இதற்கு 1 மாசம்வரைக்கும் காவலாவது, மேல்சொல்லிய தூரஸ்தலத்துக்கு அழைத்துக்கொண்டுபோவதற்கு உண்டாகும் சிலவுக்கு இரட்டிப்புத்தொகை வரையில் அபராதமாவது இரண்டுமாவது விதிக்கப்படும்.

283. உடன்படிக்கைத்தவறுதல் என்னும் குற்றம் நடந்தபோது ராஜீசெய்துக்கொள்ளலாம்.

பினல்கோட் சுருக்கம் முற்றிற்று.

இந்துலா சுருக்கம்.

*** விவாகம்.

284. தந்தையினுடைய சம்மதமில்லாமல், தாயாவது வேறுயாராவது, பெண்பிள்ளைகளுக்கு விவாகம் செய்யக் கூடாது.

285. தாயாருடைய இஷ்டமில்லாமல், பெண்ணுக்கு தந்தை விவாகம் செய்யலாம். அவிபக்த குடும்பத்திலுள்ள பெண்பிள்ளைக்கு விவாகம் செய்யும்விஷயத்தில், பெண்ணினுடைய தாயாரைக்காட்டிலும் தமயனுக்கும், சிறிய தகப்பனுருக்கும், பெரிய தகப்பனுருக்கும், பாட்டனுருக்கும், விசேஷ அதிகாரமுண்டு.

286. அம்மான் பெண், அத்தை பெண், சகோதரிகளுடையபெண் - இவர்களை விவாகம்செய்துகொள்வது, தர்மசாஸ்திரத்திற்கு விரோதமாயிருக்கிறது. ஆனாலும் வழக்கமாயி நடந்துகொண்டு வருகிறதினுல் அப்படிப்பட்ட விவாகங்கள் செலாவணி ஆயிக்கொண்டிருக்கின்றன.

287. பெண்ணை - பைத்தியக்காரனுக்காவது, நபும்சகனுக்காவது, கொடுத்து விவாகம் செய்தபோதிலும், தர்மசாஸ்திரத்தின்படி அப்படிப்பட்ட விவாகம் செல்லுகிறது.

288. இஷ்டமில்லாமல்போனுல், நிச்சிதார்த்தம் நடந்தபிறகுகூட கலியாணத்தை நிருத்திவிடலாம். அப்படி நிருத்தினபோது, விவாகம் நடத்தவேண்டுமென்று தாவாகொண்டு வரப்பட்டால் அது செல்லாது. ஆனுல், அக்கிரமமாய் நிருத்தப்பட்டபோது, நிருத்திவிட்டவர்களின்மேல் மற்றவர்கள் நஷ்டத்துக்கும் செலவுக்கும் தாவா செய்துக்கொள்ளலாம்.

289. புஷ்பவதியாகிறவரைக்கும் பெண்சாதி தாய்வீட்டிலிருப்பது ஆசாரமாகயிருக்கிறது. ஆகையால் அதற்கு முன் பெண்சாதியை தன்னிடத்தில் அனுப்பவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்வதற்கு புருஷனுக்கு ஹக்கு இல்லை.

புஷ்பவதி யானபிறகு புருஷனிடத்தில் இருப்பதற்கு, பெண்சாதி கடமைப்பட்டிருக்கிறாள்.

290. புருஷர்கள் வேண்டியவ்வளவுபேர் பெண்சாதிகளை கலியாணம்செய்துக்கொள்ளலாம். ஆனபோதிலும், பெண்சாதி பிழைத்திருக்கும்போது மற்றொருபெண்சாதியை தகுந்தகாரணமில்லாமல் கலியாணம் பண்ணிக்கொள்வது, ஜனங்களால் தூஷிக்கப்படும்.

291. புருஷன் பிழைத்திருக்கும்போது, பெண்சாதி மற்றொருபுருஷனை கலியாணம் பண்ணிக்கொள்ளக்கூடாது. எனக்கு இந்த புருஷன் வேண்டாமென்று சொல்வதற்கும் பெண்சாதிக்கு ஹக்கு இல்லை.

புருஷனிடத்தில் இருக்கமாட்டேன் என்று பெண்சாதி திரஸ்காரம்செய்தால் புருஷன், அவள்பேரில் தாவாசெய்து தன்னிடத்திலிருக்கும்படி டிக்ரீ அடையலாம். அப்போதும் இருக்கமாட்டேனென்று சொன்னால், கோர்ட்டார் பெண்சாதியை புருஷனிடத்திற்கு பலவந்தமாய் அனுப்பமாட்டார்கள். ஆனால், நியாயமென்று தோன்றினால், அவளுடைய சொத்தை ஜப்திசெய்து அவளை காவலில்வைப்பார்கள்.

புருஷனிடத்தில் இருக்கமாட்டேனென்று பெண்சாதி அக்கிரமமாக திரஸ்காரம்செய்தால் அவளுக்கு சீவனம்சம் கொடுக்கவேண்டிய விதியில்லை.

292. புருஷன் மற்றொருபெண்சாதியை கலியாணம்செய்துகொண்டானென்கிற காரணத்தினாலாவது, வைப்பாட்டியைவைத்துக்கொண்டானென்கிற காரணத்தினாலாவது, தப்புசெய்தபோது புத்திவருவதற்காக மிதமாய் தண்டித்

தானென்கிற காரணத்தினுலாவது, சாதாரணமாய் சமுசாரத்தில் உண்டாகும் கலகங்களினுலாவது, புருஷனைவிட்டு பெண்சாதி போகக்கூடாது. ஆனுல், பெண்சாதியினிடத்தில் புருஷன் குரூரமாக இருந்து அவளை எப்பொழுதும் இம்ஸைபடுத்திக்கொண்டிருந்தால் அவள் புருஷனை விட்டுப்போகலாம். மேலும், கோர்ட்டில் வழக்கிட்டு புருஷனிடத்தில் இருப்பது அவசியமில்லையென்று தீர்ப்பை அடைந்து ஜீவனும்சம்கூட பெறலாம். அப்பொழுதும்கூட பெண்சாதி மற்றொருபுருஷனை கலியாணம் செய்துகொள்ளக்கூடாது.

293. புருஷன் கிரிஸ்துமதத்தில் சேர்ந்துபோனுல், அப்பொழுது பெண்சாதியும் சேருகிறேனென்று சொல்லும் பட்சத்தில், அவன் மற்றொரு பெண்சாதியை கலியாணம் பண்ணிக்கொள்ளக்கூடாது.

அப்படி சேருவதற்குப் பெண்சாதிக்கு இஷ்டமில்லாமற் போனுல் கோர்ட்டாரால் கலியாணத்தை ரத்துசெய்வித்துக் கொண்டு, புருஷன் வேறுபெண்சாதியை கலியாணம் பண்ணிக்கொள்ளலாம். ஸ்திரீயும்கூட வேறுபுருஷனை செய்துகொள்ளலாம்.

294. விதவைகள் கலியாணம்பண்ணிக்கொள்ளலாமென்று தர்மசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. விதவைகள் கலியாணம்செய்துகொண்டால் செல்லுமென்று சர்க்காராரும் 1856ஹு 15-வது நம்பர் சட்டத்தினுல் பிரசித்தம் செய்திருக்கிருர்கள்.

பெண்பிள்ளைகளுக்கு சிறுவயதில் கலியாணம்செய்வதும், அவர்கள் சம்சாரசுகத்தை அறிவதற்குமுன்னமே புருஷன் இறந்துபோனபோதிலும் மறுபடியும் கலியாணம் செய்யாமல் முட்டாக்குபோட்டு வீட்டில் உட்காரவைப்பதும், இந்த குரூர துராசாரங்களால் எத்தனை பாவமான காரியங்கள் நடந்தாலும் பார்த்து சும்மா இருப்பதும், ஆகிய இவைகள் மிகவும் அக்கிரமமானவைகளென்று எல்லோருக்கும் தெரிந்

தேயிருக்கிறது. ஆகிலும் எல்லோரும் ஒருமித்துவராததால் காரியம் நிறைவேறுகிறதில்லை.

விதவைகள் கலியாணம் செய்துகொண்டால், முதல் புருஷனுடைய ஆஸ்திக்கு வாரஸ்பாத்தியதையும், ஜீவனும் சைபாத்தியதையும் போய்விடும்.

*** ஸ்வீகாரம் அதாவது தத்து.

295. பிள்ளையாவது, பேரன் - என்றால் பிள்ளைக்குப்பிள்ளை யாவது - கொளபேரனாவது இருந்தபோது தத்து வாங்கிக் கொண்டால் செல்லாது. தத்து புத்திரன் இருக்கும்போது, மறுபடியும் தத்துவாங்கினால் செல்லாது.

மேல்சொல்லப்பட்ட பிள்ளை, பேரன், முதலியவர்களுடைய சம்மதிபெற்று தத்துவாங்கிக்கொண்டபோதிலும் அந்த தத்து செல்லமாட்டாது மேலும் அப்படி தத்துவாங்கிக் கொண்டபிறகு, மேற்சொன்ன பிள்ளை முதலியவர்கள் இறந்துபோனாலும் அந்த தத்து செல்லாது.

296. குமாரன் மதப்பிரஷ்டனானால், தத்துவாங்கிக் கொள்ளலாம். ஆனால் அப்படி மதப்பிரஷ்டனாய்ப்போன பிள்ளைக்கு குடும்பசொத்தில் பாத்தியதை இல்லாமற்போக மாட்டாதென்று சர்க்காரார் 1850ஆ 21-வது நெம்பர் சட்டம் ஏர்ப்படுத்தியிருப்பதால் அந்த தத்து பிள்ளைக்கு தத்து தகப்பனுடைய சுவார்ஜிதம்மாத்திரமே கிடைக்கிறது.

297. பெண்சாதி கர்பிணியாயிருக்கும்போது தத்துவாங்கிக்கொண்டால் அந்த தத்து ரத்தாகமாட்டாது. தத்து வாங்கினபிறகு பிள்ளை பிரந்தால் 309-வது பியாராவில் சொல்லியபடி அவர்களுக்கு சொத்தில் பாகம் ஏர்ப்படும்.

298. பிரமசாரிகளும், பெண்சாதி இறந்துபோனவர்களும்கூட தத்துவாங்கிக்கொண்டால், செல்லும்.

இது நல்லது இது கெட்டது என்று அறிந்துக்கொள்வ தற்குத் தகுந்த வயசு வந்திருந்தால் மைனர்களும் தத்துவாங் கிக்கொள்ளலாம். தத்து வாங்கிக்கொள்வதற்கு பெண்சா திக்கு அதிகாரமும் கொடுக்கலாம். கார்டியனை - அதாவது சம்ரக்ஷணைகர்த்தாவை - சர்க்காரார் ஏர்ப்படுத்தியிருக்கும் பட்க்ஷத்தில், கலெக்டர் அவர்கள் மூலமாய் மேற்படியாரு டைய உத்திரவுபெருமல் மைனர்கள் தத்துவாங்கிக்கொள் ளக்கூடாது.

குருடர்களும், நபும்சகர்களும், தத்துவாங்கிக்கொண் டால், அந்த தத்து பிள்ளைக்கு குடும்பசொத்து சேரமாட் டாது. தத்து தகப்பனுடைய சொந்தசொத்து மாத்திரந் தான்சேரும்.

299. பெண்சாதியினுடைய சம்மதமில்லாமல் புருஷன் தத்துவாங்கிக்கொள்ளலாம் - ஆனல் புருஷனுடைய சம்மத மில்லாமல் பெண்சாதி தத்துவாங்கிக்கொண்டால் செல் லாது.

எழுத்து மூலமாயாவது, வாய்மொழி மூலமாயாவது, புருஷன் அதிகாரம்கொடுத்தால், பெண்சாதி தத்துவாங்கிக் கொள்ளலாம்.

300. தத்துவாங்கிக்கொள்வதற்கு அதிகாரம் கொடுக்கா மல் புருஷன் இறந்துபோனல், பெண்சாதி தன் மாமனரு டைய அனுமதியைப்பெற்று தத்துவாங்கிக்கொள்ளலாம். மாமனர் இல்லாமற்போனல் சமீபக்கியாதியினுடைய அனு மதிபெற்றுல் போதும். ஆனல், அவிபக்தகுடும்பமாயிருந் தால், பங்காளிகள் எல்லாருடைய அனுமதியும் பெறவேண் டியதாயிருக்கிறது.

301. தத்து வேண்டாமென்று புருஷன்சொல்லி இறந் துபோனல், பெண்சாதி தத்துவாங்கிக்கொள்ளக்கூடாது. மேலும், சொத்து முழுவதையும் எல்லாருக்கும் கொடுத்து விட்டு புருஷன் இறந்துபோனல், அப்போது தத்து அவசி

யமில்லையென்று அவர் அபிப்பிராயப்பட்டிருந்ததாக நினைக்கத்தக்கதாயிருப்பதால், பெண்சாதி தத்துவாங்கிக்கொள்ளக்கூடாது.

302. தத்துவிஷயமாய் அதிகாரம்கொடுத்து புருஷன் இறந்துபோனபோது, பெண்சாதி தத்துவாங்கிக்கொண்டாலும் வாங்கிக்கொள்ளலாம். இஷ்டமில்லாமல் விட்டுவிட்டாலும் விட்டுவிடலாம். வாங்கிக்கொள்ளவேண்டுமென்று அவளை பலவந்தப்படுத்துவதற்கு இடம் இல்லை.

மேலும் அவள், இஷ்டமுண்டாகிறவரைக்கும் சும்மாயிருந்து பிறகு தத்துவாங்கிக்கொள்ளலாம் - ஆனால், இதற்குள்ளாக ஆஸ்தி வேறொருவருடைய சுவாதீனமாய் விட்டால், அனேக சங்கடங்கள் நேரிடும்.

303. தத்துவாங்கிக்கொள்ளும் விஷயமாய் பெண்சாதிக்குத்தவிற வேருயாருக்கும் புருஷன் அதிகாரம் கொடுக்கக்கூடாது. கொடுத்தால் செல்லாது.

இரண்டு மூன்றுபேர் பெண்சாதிகள் இருந்தபோது அவர்களில் புருஷன் யாருக்கு அதிகாரம்கொடுக்கிறானோ அவளே தத்துவாங்கிக்கொள்ளவேண்டுமேயல்லாமல் மற்றவர்கள் வாங்கிக்கொள்ளக்கூடாது.

பிள்ளை இருக்கும்போது வேறொருவனை தத்துவாங்கிக்கொள்ளவேண்டுமென்றாவது, இருக்கிற பிள்ளை அனுகூலமாயிராமற்போனால் வேறொருவனைத் தத்துவாங்கிக்கொள்ளவேண்டியதென்றாவது, புருஷன் அதிகாரம் கொடுத்தால் அந்த அதிகாரம் செல்லாது. அப்படிப்பட்ட அதிகாரத்தை அனுசரித்து தத்துவாங்கிக்கொண்டபிறகு சொந்தபிள்ளை இறந்துபோனபோதிலும் அந்த தத்து செல்லமாட்டாது. மேலும், சொந்தபிள்ளை சந்ததி இல்லாமல் இறந்துபோனாலும்கூட மேல்சொல்லப்பட்ட அதிகாரத்தை அனுசரித்து தத்துவாங்கக்கூடாது.

ஆனல் புருஷன் இறந்துபோகும்போது, பிள்ளையிருந்த போதிலும், அந்த பிள்ளை சந்ததி இல்லாமல் இறந்துபோகும்பக்ஷத்தில் தத்துவாங்கிக்கொள்ளவேண்டுமென்றுவது, அப்படி தத்துவாங்கிக்கொண்ட பிள்ளை சந்ததி இல்லாமல் இறந்துபோகும் பக்ஷத்தில் வேறொருவனையும், அவனும் அப்படியே இறந்தால் மற்றொருவனையும், தத்துவாங்கிக் கொள்ளவேண்டுமென்றுவது, புருஷன் அதிகாரம் கொடுத்தால் செல்லும்.

304. தத்துவிஷயமாய் புருஷன் கொடுத்த அதிகாரத்தின்படியே சரியாய் பெண்சாதி நடக்கவேண்டியது.

இன்னானையே தத்துவாங்கிக்கொள்ளவேண்டியது என்று சொல்லி புருஷன் இறந்துபோனல், அந்தப்பிள்ளையைத் தவிற வேறுயாரையும் தத்துவாங்கிக்கொள்ளக்கூடாது. அந்தப்பிள்ளையிறந்துபோனலும் அவன் தாய்தந்தையர்கள் கொடுக்கமாட்டேனென்று சொன்னலும், சும்மாயிருக்க வேண்டுமேயல்லாமல் வேறுயாரையும் தத்துவாங்கிக்கொள்ளக்கூடாது.

இன்னானை என்று சொல்லாமல் தத்துவாங்கிக்கொள்ள வேண்டியதென்று மாத்திரம் புருஷன் அதிகாரங்கொடுத்தால், எந்த பிள்ளையையாவது வாங்கிக்கொள்ளலாம் - ஆனல், ஒருதரம் தத்துவாங்கிக்கொண்டஉடனே, கொடுத்த அதிகாரம் முடிந்துபோய்விடுகிறது. தத்து புத்திரன் சந்ததியில்லாமல் இறந்துபோனலும் அந்த அதிகாரத்தை அனுசரித்து மறுபடியும் தத்துவாங்கிக்கொள்ளக்கூடாது.

புருஷன் இறந்துபோகும்போது பெண்சாதி கர்பிணியாயிருக்கிருள். அப்போது, பிறக்கும் குமாரன் இறந்துபோகும் பட்சத்தில் தத்துவாங்கிக்கொள்ளவேண்டியதென்று புருஷன் பெண்சாதிக்கு அதிகாரம்கொடுக்கிருன். அப்படியே குமாரன் பிறந்து இறந்துபோனல் தத்துவாங்கிக் கொள்ளலாமேயல்லாமல் பெண்குழந்தை பிறந்தால்

தத்துவாங்கிக்கொள்ளக்கூடாதென்று தீர்மானம் செய்திருக்கிறார்கள்

305. தாயாருடைய சம்மதி இல்லாமலே, பிள்ளையை தந்தை தத்துகொடுக்கலாம். ஆனால், தந்தையினுடைய சம்மதி இல்லாமல் தாய் கொடுக்கக்கூடாது. தகப்பன் இறந்துபோனபிறகு தாய் தத்துகொடுக்கலாம். மேலும், தகப்பன் தேசாந்திரம் போய்விட்டபோதும், சன்னியாசியாயி விட்டபோதும், தாய் தத்துகொடுக்கலாம்.

306. மூத்த பிள்ளையையும், ஒரேபிள்ளையாயிருந்தால் அவனையும், தத்துகொடுப்பது சரியல்லவென்று தர்மசாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. ஆனபோதிலும் கொடுத்துவிட்டால் செல்லாமல்போகாது.

தாய்தந்தையர்கள் தவிற, தமையன் முதலியவர்கள் யாவரும் பிள்ளையை தத்து கொடுக்கக்கூடாது. யுக்தாயுக்தம் பார்த்து பிள்ளையை யாருக்காவது தத்து கொடுக்கவேண்டியதென்று தாய் தந்தையர்கள் சொல்லிவிட்டு இறந்துபோனபோதிலும், தமையன் முதலியவர்கள் தத்து கொடுத்தால் செல்லாது.

இன்னாருக்கு இன்னபிள்ளையைத் தத்துகொடுக்கவேண்டியதென்று தந்தையாவது தாயாராவது ஏர்ப்பாடுசெய்து சொல்லி இறந்துபோனால், தமையன் முதலியவர்கள் தங்கள் கையினால் தத்துகொடுக்கலாம். இப்படி ஏர்ப்பாடுசெய்து தாய்தந்தையர்கள் இறந்துபோனால்மாத்திரம், தாய்தந்தையர்களில்லாத பிள்ளைகளை தத்துவாங்கிக்கொள்ளலாம். மற்றப்படிக்குக்கூடாது.

307. பிள்ளையைக்கொடுப்பதும்வாங்கிக்கொள்வதும் தத்துக்கு பிரதானமாயிருக்கிறது. தத்துஹோமம் நடத்துவதும், மணையின்மேல் உட்கார்வதும் பலபேரை தாம்பூலம் முதலியவைகளுக்கு அழைப்பதும் அவசியமல்ல. ஆனால் இப்படி நடத்தினால் தத்தைக்குறித்து வழக்குநேரிட்ட

போது தத்துவாங்கிக்கொண்டதை சுலபமாய் ருஜூசெய் துவைக்கலாம்.

பிராம்மணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள் இந்த மூன்று வர்ணத்திலும், உபநயனம் நடந்தபிறகு பிள்ளையைத் தத்துவாங்கிக்கொண்டால் செல்லாதென்று தர்மசாஸ்திரத்தில் சொல்லி இருக்கிறது. ஆனாலும் சில பிரதேசங்களில் சகோதரர்களுடைய பிள்ளைகளை உபநயன மானபிறகும்கூட தத்து வாங்கிக்கொள்ளும் ஆசாரம் உண்டென்று மதிராஸ் ஹைகோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கிறார்கள்.

சூத்திரர்களில் கலியாணமான பிள்ளையை தத்து வாங்கிக் கொண்டால் செல்லாது.

308. தத்து வாங்கிக்கொள்ளப்படும் பிள்ளை சகோத்திரனாயிருக்கவேண்டுமென்பது அவசியமில்லை.

பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய ஜாதிகளில்-தத்துவாங்கிக் கொள்ளப்படும் பிள்ளையினுடைய சொந்த தாய், தத்து வாங்கிக்கொள்ளும் தகப்பனுக்கு பெண்சாதியாயிருக்கத் தகுந்த முறையில் இருக்கவேண்டுமென்று தர்மசாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. ஆகையால், புத்திரியினுடைய பிள்ளை, சகோதரிகளுடைய பிள்ளை, சிறியதாயார் பெரியதாயார் பிள்ளை, தம்பி, சிறியதகப்பன், அம்மான், ஆகிய இவர்களை தத்து வாங்கிக்கொள்ளக்கூடாதென்று தெரியவருகிறது. ஆனாலும், புத்திரியினுடைய பிள்ளையையும், சகோதரிகளுடைய பிள்ளையையும், தத்துவாங்கிக்கொள்ளுதல் அனேக இடங்களில் ஆசாரமாக இருந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஆசாரம் இருக்கும் இடங்களில் மேல்சொல்லப்பட்டவர்களுடைய தத்து செல்லுகிறது.

சூத்திரசாதியில், புத்திரியினுடைய பிள்ளை, சகோதரிகளுடைய பிள்ளை, தம்பி, சிறியதகப்பனர், அம்மான், முதலியவர்களில் எவனை தத்துவாங்கிக்கொண்டாலும் செல்லுகிறது.

309. தத்து புத்திரனுக்கு - பிறந்த குடும்பத்தின் ஆஸ்திக்கு பாத்தியதை போயி, தத்துவந்த குடும்பத்தின் ஆஸ்திக்கு பாத்தியதை உண்டாகிறது.

தத்துவாங்கிக்கொண்டபிறகு பிள்ளை பிறந்தால் தத்து புத்திரனுக்கு ஒருபங்கும் சொந்தபிள்ளைக்கு நான்குபங்குமாக ஆஸ்திக்கு பாத்தியதையுண்டாகிறதென்று தர்மசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சூத்திரர்களில் மாத்திரம் இருவரும் சமமாக ஆஸ்தியை பங்கிட்டுக்கொள்ள வேண்டியது.

பங்கிடக்கூடாத ஜமீன்தாரிவிஷயத்தில் தத்துவாங்கிக் கொண்டபிறகு பிள்ளை பிறந்தால் தத்துபுத்திரனுக்கு ஜீவனும்சம்மாத்திரந்தான் கிடைக்கும்.

310. புத்திவந்து சரியாயிருந்தால் வைத்துக்கொள்ளுகிறோம், இல்லாவிட்டால் வைத்துக்கொள்ளமாட்டோம் என்னும் ஷரத்தின்பேரில் பிள்ளையை தத்துவாங்கிக்கொண்டால், அந்த ஷரத்தை ரத்துசெய்து, தத்து ஸ்தாபிக்கப்படும்.

வாங்கக்கூடாத தத்து வாங்கப்பட்டால், வாங்கின சங்கதி தெரிந்தது முதல் 6 வருஷங்களுக் குள்ளாக அந்த தத்தை ரத்துசெய்விக்கும்பொருட்டு தாவா கொண்டுவரவேண்டியது.

தத்து செல்லாதபோது, பிறந்த குடும்பத்தின் ஆஸ்திக்கு பாத்தியதை போகமாட்டாது.

311. வேசிகள் பெண்பிள்ளைகளை வளர்த்துக்கொள்வது ஆசாரமாயிருக்கிறது.

மைனர்களின் சவரக்ஷணை.

312. மைனர்கள் என்றால் யுக்தவயசு வராதவர்கள். ஸ்திரீ, புருஷர்களுக்கு 18 வயசு ஆனஉடனே யுக்தவயசு வந்ததாக எண்ணப்படுகிறது.

ஸர்க்காரால் கார்டியன் ஏர்ப்படுத்தப்பட்டபோது, 21 வயசுசென்றபிறகுதான் யுக்தவயசு வந்ததாக எண்ணப்படும்.

313. மைனர்களைப்பற்றிய சுதந்திரமும் சவரக்ஷணையும் முதலில் தந்தைக்குச்சேர்ந்தது. தந்தைக்குப்பிறகு தாயிக்குச்சேர்ந்தது. தாயிக்குப்பிறகு தமையன் பெரியதகப்பனர், சிறியதகப்பனர் முதலியவர்களுக்குச்சேர்ந்தது.

பெற்றதாயைக்காட்டிலும் தத்துவாங்கிக்கொண்ட தாயிக்கு சம்ரக்ஷணைபாத்தியதை அதிகமாயிருக்கிறது.

314. தகப்பன், இறந்துபோகும்போது, குழந்தைகளுடைய சம்ரக்ஷணை பாத்தியதையை தாயிக்கில்லாமல் வேறு யாருக்காவது ஒப்பிவைத்துப்போகலாம்.

தாய் - திறமையில்லாதவளாயிருந்தபோதும், புருஷன் போனபிறகு வேறு கலியாணம்செய்துக்கொண்டபோதும், ஜாதிப்பிரஷ்டளாய் போனபோதும் - முதல் புருஷனல் பிறந்த குழந்தைகளுடைய சம்ரக்ஷணை பாத்தியதை அவளுக்கு தப்பிப்போய், அந்த குழந்தைகளுடைய தமயன் முதலியவர்களுக்கு சேறுகின்றது.

தகப்பனர் வேறுமதத்தில் சேர்ந்தபோதிலும் யுக்தவயசு வராதகுழந்தைகள் அவருடைய சம்ரக்ஷணையிலும் மதத்திலும் இருக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

315. தாய் தந்தையர் முதலியவர்களுடைய சம்ரக்ஷணையில் குழந்தைகள் இருக்கும்போது, அந்த சவரக்ஷணைகர்த்தர்களின் துர்நடத்தையால் குழந்தைகளுடைய சிரேயசுக்கும், க்ஷேமத்திற்கும், கெடுதி நேரிடுமென்று தோன்றினல் கோர்ட்டார், அவர்களை நீக்கி வேறு சவரக்ஷணை கர்த்தர்களை ஏர்ப்படுத்துவார்கள்.

316. மைனர்கள், இஷ்டம் வந்தபடி சுவேச்சையாய் இருக்கக்கூடாது. சவரக்ஷணை கர்த்தர்களுடைய அதிகாரத்திற்கு உள்பட்டிருக்கவேண்டும்.

மைனர்கள் கிரிஸ்துமுதலிய அன்னியமதத்தில் சேரக் கூடாது. அவர்களை சேர்த்துக்கொள்ளவும் கூடாது. அவர்களுக்கு இஷ்டமிருந்தபோதிலும் யுக்தவயசு வருகிறவரைக்கும் சவரக்ஷணை கர்த்தர்களுடைய ஆதீனத்திலேயே யிருக்கவேண்டும்.

14 வயசுக்கு உள்பட்ட ஆண்பிள்ளைகளையும், 16 வயசுக்கு உள்பட்ட பெண்பிள்ளைகளையும், சவரக்ஷணை கர்த்தர்களுடைய சமமதமில்லாமல் கிரிஸ்து முதலிய அன்னிய மதங்களில் சோத்துக்கொண்டால், பினல்கோடு 363-வது செக்ஷன்படி குற்றமாகிறது. இந்தக்குற்றத்திற்கு 251-வது பியாராவில் சொல்லியபடி தண்டனை விதிக்கப்படும்.

317. மைனர்களுடைய ஆஸ்தியை சம்ரக்ஷணை கர்த்தர்கள் அக்கிரமமாய் விற்பனையாவது துர்வினியோகமாவது செய்தால், யுக்தவயசு வந்தபிறகு அவர்கள் தாவாசெய்து அந்த விற்பனை முதலியவைகளை ரத்து செய்விக்கலாம். அதினால் உண்டாகும் நஷ்டத்திற்கு சவரக்ஷணைகர்த்தர்கள் பாத்தியபபடவேண்டியவர்களா யிருக்கிறார்கள்.

⁂ சுவார்ச்சிதம் - பிதிரார்ச்சிதம்.

318. தகப்பனார், பாட்டனார், முப்பாட்டனார் - இவர்களிடத்திலிருந்து கிடைத்த சொத்து பிதிரார்ச்சிதமென்று சொல்லப்படும். பிதிரார்ச்சிதத்தினால் வந்த ஆதாயமும் பிதிரார்சிதத்தை உபயோகித்து சம்பாதித்த சொத்தும் பிதிரார்ச்சிதமாகவே எண்ணப்படும்.

319. அண்ணன் தம்பிமார்கள், சிறிய தகப்பனார் பெரிய தகப்பனார், முதலியவர்களிடத்திலிருந்து கிடைத்தசொத்தும் - பிதிரார்ஜிதமாவது, குடும்ப சொத்தாவது, உபயோகிக்காமல், சொந்தமாக சம்பாதிக்கப்பட்ட சொத்தும், சுவார்ஜிதமாக எண்ணப்படும்.

சாப்பாடு, படிப்பு, கலியாணம், முதலியவைகளுக்காக குடும்ப சொத்தை நால்வரோடு அனுபவித்தபோதிலும், சொந்தமாக சம்பாதிக்கப்பட்டசொத்து, சுவார்ஜிதமாகவே எண்ணப்படும்.

குடும்பசொத்து செலவழித்து ஒருவனை படிப்பித்ததனுல் மாத்திரம், அவன் சொந்த சக்தியால் சம்பாதித்தசொத்தை குடும்பசொத்தாக எண்ணக்கூடாது. ஆனல் சாதாரணமானபடிப்பல்லாமல், டாக்ட்டர் பரிக்ஷை, லாயர் பரிக்ஷை, பாரிஸ்டர் பரிக்ஷை, போலொத்தவைகளுக்கு குடும்பசொத்தை செலவழித்து படிப்பு சொல்லப்பட்டிருந்தால், அதினுல் சம்பாதிக்கப்படும் சொத்து குடும்பசொத்தேயல்லாமல் சுவார்ஜிதசொத்தாகமாட்டாது.

320. தகப்பனுக்குக்கிடைத்த பிதிரார்ஜிதசொத்தில் பிள்ளைகளும், பேரன்மார்களும், கொள் பேரன்மார்களும், பாத்தியதை யுள்ளவர்களாயிருக்கிறூர்கள். தகப்பனுடைய சுவார்ஜிதசொத்தில் பிள்ளைகளுக்கு பாத்தியதையில்லை.

321. தேவடியாள் வேசித்தனத்தினுல்சம்பாதிக்கும்பொருள் அவளுடைய சுவார்ஜிதம், அதில் அவளுடைய தாயிக்கு பாத்தியதையில்லை.

தாயார் கற்பித்த நாட்டியம் முதலிய வித்தையினுல் தேவடியாள் சம்பாதிக்கும் சொத்தில் தாயிக்குங்கூட பாத்தியதையுண்டு.

322. பங்கிடக்கூடாத ஜமீன்தாரி விஷயத்தில், அதினுடைய ஜமீன்தார் தன்காலத்து வரும்படியில் மீற்றிவைத்த சொத்து அவருடைய சுவார்ஜித சொத்தாகிறது. அப்படிபபட்டசொத்து, அவர் பிறகு பிள்ளைகள் இல்லாமல்போனுல், அவருடைய பெண்சாதிக்குச்சேருமேயல்லாமல் அண்ணன் தம்பிமார்களுக்கு சேராது.

323. ஒருசொத்தின் விஷயமாய், சுவார்ஜிதமோ, பிதரார்ஜிதமோவென்று, தகரார் நேரிட்டால் சுவார்ஜிதமென்

று சொல்லுகிறவர்கள்தான் சாதாரணமாய் ருஜூ செய்ய வேண்டியிருக்கிறது.

*** கடன்.

324. தகப்பனும், பிள்ளைகளும், பங்குபிரித்துக்கொண்டு, வெவ்வேருக இருக்கும்போது, தகப்பனுடைய கடன் விஷயமாய் பிள்ளைகளுக்கு சம்பந்தமில்லை. தகப்பனிடத்திலிருக்கும் ஆஸ்திமாத்திரந்தான் கடன்காரர்களுக்குச்சேரும்.

325. தகப்பனும் பிள்ளைகளும் ஒன்ருய் இருக்கும்போது, தகப்பன் செய்த கடனைத்தீர்ப்பது பிள்ளைகளுடைய கடமையாயிருக்கிறது. அந்தக்கடன் தகப்பன் தன் சொந்தத்திற்காக செய்தாலும், அல்லது குடும்பசெலவுக்காக செய்தாலும், அதை தீர்ப்பது பிள்ளைகளுடைய கடமையாகவேயிருக்கிறது. அப்படிப்பட்ட கடன்விஷயமாய் பிதரார்ஜிதத்தில் தகப்பனுடைய பாகம்மாத்திரமல்லாமல் பிள்ளைகளுடைய பாகமும்கூட கொடுத்துவிடவேண்டியது. ஆனல், பிள்ளைகள் தங்களுடைய சுவார்ஜிதத்தை கொடுக்கவேண்டியதில்லை.

தகப்பன், தன்னுடைய சுவார்ஜிதம் பிதரார்ஜிதம் எல்லாத்தையும் பிள்ளைகளுக்கு ஒன்றுமில்லாமல் கடனுக்காக விற்கலாம். அல்லது அடமானம் வைக்கலாம். கடன்களைத்தீர்க்காமல் தகப்பன் இறந்துபோனபோதிலும், தகப்பனிடத்திலிருந்து பிள்ளைகளுக்கு கிடைத்த எல்லா ஆஸ்தியையும், கடன்காரர்கள் வாங்கிக்கொள்ளலாம்.

326. தகப்பன்செய்த கடனுக்காக பிதிரார்ஜித சொத்து அடமானம் வைக்கப்பட்டிருந்தால், பிள்ளைகள் பணங்கொடுத்து, சொத்தை மீட்டுக்கொள்ளலாம். அடமானத்தை மீட்டும்பொருட்டு பிள்ளைகள் சித்தமாக இருக்கும்போது அந்த சொத்தை ஏலம் போடக்கூடாது.

327. சூதாடுதல், குடித்தல், ஜாரத்துவம், முதலிய அயோக்கியமான விஷயத்திற்காக, தகப்பன் கடன்வாங்கி இருந்தால், அப்படிப்பட்ட கடன்களுக்காக, தகப்பன் தன்னுடைய சுவார்ஜிதத்தையும், பிதரார்ஜிதத்தில் தன்பாகத்தையும் கொடுத்துக்கொள்ளவேண்டியதேயல்லாமல், பிள்ளைகளுடைய பாகத்தை கொடுக்கக்கூடாது. அப்படிப்பட்ட அக்கிரமமான கடன்களுக்காக பிதரார்ஜிதத்தில் பிள்ளைகளுடைய பாகத்தை விற்பனை செய்வதற்கும், அடமானம் வைப்பதற்கும், தகப்பனுக்கு பாத்தியதை இல்லை.

அப்படிப்பட்ட அக்கிரமமான கடன்களை தீர்க்காமல் தகப்பன் இறந்துபோனால், பிள்ளைகள், தீர்க்கவேண்டியதில்லை. மேலும், தகப்பனுடைய பிதரார்ஜிதத்தில் தகப்பனுடைய பாகம்கூட அப்படிப்பட்ட கடன்களுக்காக கொடுக்காமல், எல்லாவற்றையும் பிள்ளைகள் வாங்கிக்கொள்ளலாம். தகப்பனுடைய சுவார்ஜிதம்மாத்திரம் கொடுத்துவிடவேண்டும்.

328. தகப்பனுடைய கடன்களை தீர்க்கும்விஷயத்திலும், தீர்க்காமலிருக்கும் விஷயத்திலும், பிள்ளைகள் எப்படி கடமைப்பட்டிருக்கிறார்களோ, அப்படியே, அவர்களில்லாமற் போனபோது, பேரன்மார்களும், பேரன்மார்களில்லாமற் போனபோது, கொளபேரன்மார்களும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

329. தாயாருடைய கடனைத்தீர்ப்பதற்கு பிள்ளைகளுக்காவது, பிள்ளைகளுடைய கடனை தீர்ப்பதற்கு தாய்தகப்பன்மார்களுக்காவது, தமயனுடைய கடனைத்தீர்ப்பதற்கு தம்பிக்காவது, தம்பியினுடைய கடனைத் தீர்ப்பதற்கு தமயனுக்காவது, சிறிய தகப்பனார் பெரிய தகப்பனார்களுடைய கடனை தீர்ப்பதற்காவது, யாதொருவிதியுமில்லை. ஆனால், அவர்களுடைய ஆஸ்தி கிடைத்தால் மாத்திரம் அந்த ஆஸ்தி மொத்தம் வரையிலும் அவர்களுடைய கடன்களை தீர்க்கவேண்டியது.

330. அவிபக்த குடும்பத்தில், தகப்பனார் தவிற, வேறு யாராவது பங்காளி தன்னுடைய சொந்த செலவுக்காக கடன்வாங்கினால், அந்தக்கடனை, அவன் அந்த குடும்ப ஆஸ்தியில் தனக்குண்டான பாகத்தைக்கொண்டும், தன்னுடைய சுவார்ஜிதத்தைக்கொண்டும் தீர்த்துக்கொள்ளவேண்டுமேயல்லாமல் மற்றபங்காளிகளுக்கு சம்மந்தமில்லை. மேலும், அந்தப்பாகமும்கூட அவன் பிழைத்திருக்கும்போதே கடன்காரர்களின் சுவாதீனப்படுத்தாமல் போனால் - அவன் இறந்துபோனபிறகு, அது மற்றபங்காளிகளுக்குப் போய்விடுவதினால், கடன்காரர்கள் அதை கிரயம் செய்விக்க அனுகூலமில்லாமல் போய்விடுகிறது. அவனுடைய சுவார்ஜிதம் மாத்திரம், கடன்காரர்களுக்குச்சேரும்.

அவிபக்த குடும்பத்தில், தகப்பனார் தவிற, வேறு எந்த பங்காளியாவது, பொது ஆஸ்தியில் தனக்குண்டான பாகத்தை, யாருக்காவது அடமானம்வைத்தால், அல்லது, விக்கிரயம் செய்தால், அந்தப்பாகத்தை அவன் பிழைத்திருக்கும்போதே சுவாதீனப்படுத்திக்கொண்டால் தவிற, அவன் இறந்துபோனபிறகு, அந்த அடமானமும், விக்கிரயமும் செல்லமாட்டாது.

331. அவிபக்தகுடும்பத்தில், குடும்பத்தின் காரியங்களை நடத்துகிறவனுக்கு கடன் கொடுக்கிறவன், அந்தகடன் அவசியமானதும், அல்லாததும் - கிரமமான செலவுக்காக வேண்டியதும், இல்லாததும் - நன்றாய் அறிந்துகொண்டு பிறகு கொடுக்கவேண்டும்.

*** தானம் - உயில்.

332. மைனர்கள் உயில் எழுதக்கூடாது. ஸ்திரீகள், தங்களுக்கு பூர்த்தியான பாத்தியதையுள்ள ஸ்திரீதனம் விஷயமாய் உயில்செய்யலாம். ஆனால், வாரஸ்பாத்தியத்தினால் புருஷர்களிடத்திலிருந்து தங்களுக்குக்கிடைத்தசொத்தின் விஷயமாய் உயில் எழுதக்கூடாது.

333. குடும்பத்தில், ஓரேபுருஷன் இருந்தபோது, ஜீவனும்சம் கிடைக்கவேண்டியவர்களுக்கு, தகுந்த ஆஸ்தியை வைத்துவிட்டு, மற்ற எல்லா ஆஸ்தியையும், பிதிரார்ஜிதமானாலும், சுவார்ஜிதமானாலும், இஷ்டம்வந்தவர்களுக்கு கொடுத்துவிடலாம் - உயிலும் எழுதிவைக்கலாம்.

334. தகப்பனும், பிள்ளைகளும், வெவ்வேறாக இருந்தபோது - தகப்பன் தன் ஆஸ்தி முழுவதையும், இஷ்டம் வந்தவனுக்கு கொடுத்துவிடலாம். உயிலும் எழுதலாம். ஜீவனும்சம் பெறவேண்டியவர்களுக்கு மாத்திரம், அவர்களுடைய ஜீவனும்சத்துக்குப்போதுமான ஆஸ்தி வைக்கவேண்டும். அப்படி வைக்காமல் ஆஸ்தி முழுவதையும் கொடுத்துவிட்டால், அந்த ஆஸ்தியை அடைந்தவர்கள், ஜீவனும்சம் பெறவேண்டியவர்களுக்கு, ஜீவனும்சத்துக்கு தகுந்த சொத்தை கொடுக்கவேண்டியதாயிருக்கிறது.

335. தகப்பனும் பிள்ளைகளும் ஒன்றாய் இருக்கும்போது - தகப்பன் தன் பிதரார்ஜிதத்தையாவது, சுவார்ஜிதமான பூஸ்திதியையாவது, வேறு ஒருவருக்கும் கொடுக்கக்கூடாது. அதின் விஷயமாய் உயிலும் எழுதக்கூடாது. தான் சொந்தமாக சம்பாதித்த அசையும் பொருளைமாத்திரம் தகப்பன் இஷ்டம் வந்தவர்களுக்கு கொடுத்துவிடலாம், உயிலும் யெழுதிவைக்கலாம். ஆனால், பிள்ளைகளுக்கு வேறு ஒன்றும் ஜீவனத்திற்கு ஆதாரம் இல்லாமலிருந்தால், அவர்களுக்குக் கொஞ்சங்கூட வைக்காமல், இந்தப்படி செய்யக்கூடாது.

336. அவிபக்த குடும்பத்தில், புருஷசந்ததி இல்லாத பாகஸ்தன், பொதுசொத்தில், தன்பாகத்துக்குள்ள சொத்தை, யாருக்காவது விக்கிரயம்செய்து, சுவாதீனப்படுத்தினால், செல்லும். ஆனால் தானமாககொடுக்ககூடாது. உயிலும் எழுதக்கூடாது. சுவார்ஜிதத்தை தானமாககொடுத்தாலும், உயில் எழுதினாலும், செல்லும்.

337. குஷ்டரோகிகளுக்கும், குருடர்களுக்கும், பைத்தியக்காரர்களுக்கும், சொத்துகொடுக்கும்படியாக உயில் எழுதிவைத்தாலும் செல்லும். ஆனல், உயில்தாரன், மரணகாலவரைக்கும் பிறந்திராதவர்களுக்கு ஆஸ்தி கொடுக்கும்படியாக உயில் எழுதிவைத்தால், செல்லாது. பிள்ளை பிறக்காமல்போனபோதிலும் கர்ப்பத்தில் இருந்தால் பிறந்ததாகவே எண்ணப்படும்.

இனிமேல் வாங்கிக்கொள்ளப்படும் தத்து புத்திரனுக்கு ஆஸ்திகொடுக்கும்படி உயில் எழுதிவைத்தால் செல்லும்.

338. உயில், வாய்மொழியாயிருந்தாலும், எழுதப்பட்டிருந்தாலும், செல்லும். எழுதப்பட்டிருந்தால், வியாச்சியம் வந்தபோது ருசுசெய்வதற்கு அனுகூலமாயிருக்கும்.

339. அசையாப்பொருளை யாருக்காவது தானம்செய்தபோது, ரிஜிஸ்டர் தஸ்தாவேஜ் மூலமாய் செய்யவேண்டும். அசையும்பொருளை தானம் செய்தபோது, சொத்தை சுவாதீனப்படுத்தினல் போரும்.

உயில் மூலமாக கொடுக்கப்பட்ட சொத்தை உடனே சுவாதீனப்படுத்தவேண்டிய அவசியமில்லை.

340. கடன்காரர்களை மோசம் செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு, சொத்தை யாருக்காவது தானம் செய்தால் அந்த தானம் செல்லாது.

341. ஆஸ்தி யாருக்காவது தானம் செய்தபோதும், உயில் எழுதினபோதும் – அந்த ஆஸ்தியை அனுபவிக்காமல், வைத்திருக்கவேண்டுமென்ருவது, யாரிடத்திலும் அடமானமாகவைக்கக்கூடாதென்ருவது, விக்கிரயம் செய்யக்கூடாதென்ருவது, பெண்களுக்கும் தத்து புத்திரர்களுக்கும் போகும்படி செய்யக்கூடாதென்ருவது, கடன்காரர்களுக்கு கடனுக்காக கொடுக்கக்கூடாதென்ருவது, ஜீவனும்சமாகொடுக்கக் கூடாதென்ருவது, அந்த ஆஸ்தியினல் வரும் ஆதாயத்தை செலவழிக்காமல் சேர்த்துவைக்கவேண்

டுமென்றுவது, ஷரத்துகளை சேர்த்தால், அந்த ஷரத்துகள் செல்லமாட்டா.

*** ஜீவனும்சம்.

342. வயசுவராத குழந்தைகளை போஷிப்பது தகப்பனுடைய கடமை. கிழவர்களான தாய்தந்தையர்களை போஷிப்பது பிள்ளைகளுடைய கடமை. சகோதரிகளுக்கு விவாகம் செய்விப்பதும் அதுவரையிலும் அவர்களைப்போஷிப்பதும்கூட அவர்களுடைய கடமையாயிருக்கிறது.

343. பெண்சாதியைப்போஷிப்பது புருஷனுடைய கடமை. விவாகமானபிறகு புஷ்பவதியாகிறவரையிலும் பெண்சாதி தாய்வீட்டிலிருப்பது ஆசாரமாக நடந்துக்கொண்டு வந்தபோதிலும், தாய்வீட்டுக்காரர்கள் கேட்கும்பக்ஷத்தில் புஷ்பவதியாகிறவரையிலும் அவளைப்போஷிக்கும் சிலவுகளை புருஷன்கொடுக்கவேண்டியதாயிருக்கிறது.

பெண்சாதியை அக்கிரமமாய் விட்டுவிட்டால் அவளுக்கு புருஷன் ஜீவனும்சம் கொடுக்கவேண்டியது.

தகுந்த காரணமில்லாமல் அக்கிரமமாய் புருஷனைவிட்டு, பெண்சாதி ஓடிப்போனல் அவளுக்கு ஜீவனும்சம் கொடுக்கவேண்டியது கடமையல்ல.

பெண்சாதி யாரையாவது, அழைத்துக்கொண்டுபோய், பிறகு, புருஷனிடத்திற்கு திரும்பிவந்தபோதிலும், புருஷன் அவளைவைத்துக்கொள்ளாமல், துறத்திவிடலாம். ஜீவனும்சமும் கொடுக்கவேண்டியதில்லை.

பெண்சாதி வியபசாரம்செய்தால், அவளை, வீட்டிலிருந்து துறத்திவிட்டு, ஜீவனும்சம் கொடுக்காமல் இருக்கலாம். ஆனல், சுத்தமாக ஆத்திரமில்லாமலிருந்து, வியபசாரத்தை விட்டு, சரியாய் நடந்துகொண்டிருந்தால், சாப்பாட்டுக்குமாத்திரம் புருஷன் மனதிரங்கி கொடுக்கவேண்டியதென்று தர்மசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

344. பெண்சாதியையாவது வயசுவராத பிள்ளைகளையாவது போஷிக்காமல் யாராவது விட்டுவிட்டபொழுது, கலெக்டர் சப்கலெக்டர் அசிஸ்டாண்டு அல்லது டிப்டி கலெக்டர் அவர்களிடத்தில் பிராதுசெய்துக்கொண்டால், அவர்கள் விசாரணைசெய்து, மாசம் ஒன்றுக்கு ரூபாய் 50 க்கு மேற்படாமல், அவரவர் சக்திக்குத் தகுந்தப்படி ஜீவனும்சம் கொடுக்கும்படியாக உத்திரவு செய்வார்கள். இப்படி உத்திரவு செய்யப்பட்டபிறகு பெண்சாதி வியபிசாரம்செய்தால் அந்த உத்திரவு ரத்துசெய்யப்படும்.

புருஷனிடத்தில் இருக்கமாட்டேனென்று தகுந்தகாரணமில்லாமல், பெண்சாதி திரஸ்காரம்செய்தால், மேல்சொல்லியபடி ஜீவனும்சம் கொடுப்பிக்கப்படமாட்டாது.

பெண்சாதி வியபிசாரியாக திரிந்துகொண்டிருக்கும்பொழுதும், புருஷனும் பெண்சாதியும் இஷ்டப்பட்டு வெவ்வேறாக இருக்கும்பொழுதும், ஜீவனும்சம் கொடுப்பிக்கப்படமாட்டாது.

345. விபக்த குடும்பத்தில் புருஷன் இறந்துபோனால் - மாமனார், மைத்துனர்கள், முதலியவர்களிடத்திலிருந்து ஜீவனும்சம் கேட்க, பெண்சாதிக்கு பாத்தியதையில்லை.

346. அவிபக்த குடும்பத்தில், புருஷன் இறந்துபோனபிறகு, குடும்பசொத்தில் பங்குகேட்பதற்கு பெண்சாதிக்கு பாத்தியதையில்லை. ஜீவனும்சம் பெறுவதற்கும், குடும்பவீட்டிலிருப்பதற்கும், பாத்தியதையுண்டு.

புருஷன் இறந்துபோனபிறகு, பெண்சாதி மாமியார் வீட்டில் இருக்கவேண்டியது விதியல்ல. வேறாய் இருப்பதினால் ஜீவனும்சத்துக்கு பாத்தியதை போகாது.

ஆனால், மாமியார்வீட்டிலேயே இருக்கவேண்டுமென்று புருஷன் ஏர்ப்பாடு செய்திருந்தபோதும், குடும்ப ஆஸ்தி மிகவும் சுவல்பமாக இருந்தபோதும், வேறாக ஜீவனும்சம் கொடுக்கவேண்டுமென்று கேட்பதற்கு பாத்தியதையில்லை

வியபிசாரம் செய்துகொண்டிருந்தால், ஜீவனும்சத்திற்கு பாத்தியதை இராது.

347. பெண்சாதியினுடைய ஜீவனும்சத்துக்கு இல்லாமல் ஆஸ்தி முழுவதையும், புருஷன் தன் இஷ்டமானவர்களுக்கு கொடுத்துவிடக்கூடாது. உயிலும் எழுதக்கூடாது. அப்படி ஆஸ்தி முழுவதையும் கொடுத்துவிட்டபோதும், உயில் எழுதிவிட்டபோதும் அந்த ஆஸ்தி பெற்றவனிடத்திலிருந்து பெண்சாதி ஜீவனும்சம் பெறலாம்.

348. ஜீவனும்சபாத்தியதையை அடமானமாக வைக்கக்கூடாது. விக்கிரயமும் செய்யக்கூடாது. மேலும் அந்த பாத்தியதையை, கடன்காரர்கள் டிக்கிரீ நிறைவேற்றும்போது, ஜப்திசெய்விக்கக்கூடாது. ஆனால் ஜீவனும்சத்தொகை பாக்கியிருந்தால், அந்த பாக்கிமொத்தத்தை ஜப்திசெய்விக்கலாம்.

349. ஜீவனும்சத்தொகை அவரவர்களுடைய ஸ்திதிகதியை அனுசரித்து, ஏர்ப்படுத்தப்படும்.

ஜீவனும்சத்தொகை ஏர்ப்படுத்தும்போது, நகைகள், வஸ்திரங்கள், முதலிய வரும்படிதராத ஸ்ரீதனத்தை கணக்கில் சேர்க்கக்கூடாது. மான்னியம் முதலிய வரும்படி வரத்தக்க ஸ்ரீதனமிருந்தால் அதின் வரும்படியை கணக்கில் சேர்க்கலாம்.

350. ஜீவனும்சம் வியாச்சியம் 12 வருஷத்திற்குள்ளாக கொண்டுபோகவேண்டியது.

*** விபாகம்.

351. கூடி இருப்பதற்கு இஷ்டமில்லாமற்போனல், பங்காளிகள், தங்கள்தங்களுக்குள்ள பங்குகளை விபாகித்துக்கொண்டு, வெவ்வேருக இருக்கலாம். அவசியமானல்,

விபாகம் செய்துக்கொள்ளும்பொருட்டு வியாச்சியம்கொண்டுபோகலாம்.

352. அவிபக்த குடும்பத்தில், ஒரு பங்காளி தன்னுடைய பாகத்தை ஒருவரிடத்தில் அடகுவைத்தால், அல்லது கிரயம்செய்தால், அந்த அடகு பெற்றவனும் கிரயம் தாரனும், விபாகத்தின்பொருட்டு தாவா செய்யலாம். ஆனால், தானமாகக்கொடுத்தால், தானம் பெற்றவன் அப்படி தாவா கொண்டுவரக்கூடாது. பங்கிட்டுக்கொண்டபிறகு தன்னுடைய பங்கை தானம்செய்தால் அந்த தானம் செல்லும்.

353. விபாகத்தின் பொருட்டு மைனர் தாவா கொண்டுவரக்கூடாது. ஆனால், மைனருடைய பாகத்துக்கு அபாயம் நேரிடும்படியாக இருக்கும்பட்சத்தில், மைனருடைய தரபில், அவனுக்கு வேண்டியவர்கள் விபாகத்தின்பொருட்டு தாவா கொண்டுவரலாம்.

354. அவிபக்த குடும்பத்தில், சில பாகஸ்தர்கள் மைனர்களாக இருந்தபோதிலும், விபாகம் செய்துக்கொண்டால் செல்லும். ஆனால், மைனர்களுடைய பாகங்களைக்குறித்து, ஏதாகிலும் அனியாயமாவது, மோசமாவது, நடந்த பட்சத்தில் அந்த விபாகத்தை ரத்துசெய்யும்பொருட்டு அந்த மைனர்கள் தங்களுக்கு யுக்தவயசு வந்தபிறகு தாவா கொண்டுவரலாம்.

355. பாகஸ்தர்களில் யாராவது ஒருவர் தேசாந்திரம் போயிருந்தால், அவருக்குள்ள பாகத்தை பிரத்தியேகமாக வைத்திருப்பது விதியாயிருக்கிறது.

யாராவது ஒரு பாகஸ்தனுக்கு அவனுடைய பாகத்தைக் கொடுக்காமல், ஆஸ்தி யெல்லாம் மற்றவர்கள் பங்கிட்டுக் கொண்டுவிட்டால், அந்த பாகஸ்தன், தன் பாகத்தைக்குறித்து, 12 வருஷங்களுக்குள்ளாக தாவா கொண்டுவரவேண்டும்.

356. தகப்பன் இறந்துபோகும்போது, பிள்ளைகள் எல்லோரும் ஒருமித்து இருக்கவேண்டுமென்று, ஆக்கியாபித்துப்போயிருந்தபோதிலும், விபாகம் செய்துக்கொண்டால் செல்லும்.

357. விபாகம் செய்துகொள்ளும்போது - பங்காளிகளில் சந்ததி இல்லாமல் யார் இறந்துபோனாலும், அவனுடைய பங்கு மற்றபங்காளிகளுக்குச் சேரவேண்டுமென்றும், அந்த பங்கை அவன், தானமாயாவது, உயில் மூலமாயாவது, யாருக்கும் கொடுக்கக்கூடாதென்றும், உடன் படிக்கை செய்துகொண்டால், அந்த உடன்படிக்கை செல்லாது.

358. விபாகம் செய்துகொள்வதற்குமுன், யாராவது பங்காளி இறந்துபோனால், அவன் பங்கு - அவன் பிள்ளைக்கும், பிள்ளை இல்லாமல்போனால் பேரனுக்கும், பேரனில்லாமல்போனால் கொளபேரனுக்கும் சேருகிறது. இவர்களில்லாமற்போனால் அந்த பங்கு மற்ற பங்காளிகளுக்குச்சேருமேதவிற பெண்சாதிக்குச்சேரமாட்டாது.

அவிபக்த குடும்பத்தில், பெண்சாதிக்கு ஜீவனும்ச பாத்தியதை மாத்திரமே உண்டு. புருஷனுடைய சுவார்ஜித மாத்திரம், பிள்ளைகளில்லாமல் போனபோது, பெண்சாதிக்குச் சேரும்.

359. தகப்பனுடைய சுவார்ஜிதத்தில் பங்கு கேட்பதற்கு பிள்ளைக்குப்பாத்தியதையில்லை. ஆனல் தகப்பனுடைய பிதரார்ஜிதத்தில் பங்குகேட்பதற்கு பிள்ளைக்குப்பாத்தியதை உண்டு. பிள்ளை பிழைத்திருக்கையில், பேரனவது, கொளபேரனவது, பாட்டனை குடும்ப ஆஸ்தியை பங்கிடும்படியாகக்கேட்பதற்கு சுதந்திரமில்லை.

360. விபாகம் செய்துகொள்ளும்போது, குடும்ப கடனுக்காகவும், ஜீவனும்சம் பெறவேண்டியவர்களுடைய ஜீவனும்சத்திற்காகவும், சிலசொத்தை வேருகவைப்பது விதியாயிருக்கிறது.

அண்ணன் தம்பிகள் விபாகித்துக்கொள்ளுகையில், உடன் பிறந்தபெண்பிள்ளைகளுடைய விவாகத்திற்காகவும், நிஷேகத்திற்காகவும், அதுவரைக்கும் அவர்களை போஷிப்பதற்காகவும், கொஞ்சசொத்தை வேறாகவைக்கவேண்டும்.

தகப்பனும் பிள்ளைகளும் விபாகித்துக்கொள்ளுகையில் உடன்பிறந்த பெண்பிள்ளைகள் தகப்பனுடைய சவரக்ஷணைக்குச்சேருகிறார்களாகையால் அவர்களுக்காக பிரத்தியேகமாய் பங்கு கொடுக்கவேண்டிய விதியில்லை.

361. விபாகம் செய்துகொள்ளும்போது, வம்சத்தின் கிளைகளின்படி முதலில் பங்குபிரித்து, பிறகு அந்தந்த கிளைக்குச்சேர்ந்தவர்களுக்கு பங்கு பிரிக்கவேண்டும்.

இது எப்படி யென்றால்—



"ஏ" என்பவனுக்கு "பீ", "ஸீ" என்னும் இரண்டு பிள்ளைகளும், "ஸீ" என்பவனுக்கு "டி" என்னும் பிள்ளையும் இருக்கிறார்கள். அப்பொழுது, ஆஸ்தி "ஏ","பீ","ஸீ" என்பவர்களுக்கு மூன்று பங்காக பிரித்து, "ஸீ" என்பவனுடைய பங்கை, அவனுக்கும், அவனுடைய பிள்ளை "டி" என்பவனுக்கும் பேர்ப்பாதியாக கொடுக்கவேண்டும்.

மேலும், "பீ","ஸீ" என்பவர்கள், விபாகம் செய்யவேண்டுமென்று "ஏ" என்பவனைக்கேட்கலாம். "ஸீ" இறந்துபோனால், "டி" என்பவனும் "ஸீ","டி" இருவரும் இறந்துபோனால், "டி" என்பவனுடைய பிள்ளையும், விபாகம் செய்யவேண்டுமென்று "ஏ" என்பவனைக் கேட்கலாம். ஆனால், "ஸீ" என்பவன் ஜீவித்திருக்கையில், விபாகம் செய்யவேண்டுமென்று கேட்பதற்கு "டி" என்பவனுக்கு சுவதந்திரமில்லை. "ஏ" என்பவ

ளுேடு விபாகம் செய்துகொள்ளவேண்டுமென்று, தன் தகப்பனை பலவந்தப்படுத்துவதற்கும்கூட "டி" என்பவனுக்கு சுவதந்திரமில்லை.

362. தகப்பனும் பிள்ளைகளும் விபாகம்செய்துக்கொள்ளும்போது, தாயார் கர்ப்பிணியாயிருந்து, பிறகு பிள்ளையைப்பெற்றுல், யாவத்து ஆஸ்தியும் மறுபடி எல்லோரும் பங்கிட்டுக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது.

தாயார், விபாகமானபிறகு, கர்ப்பிணியாய் பிள்ளையைப் பெற்றுல், அந்த பிள்ளை, தகப்பனுடைய பங்குக்கும், தகப்பனுடைய சுவார்ஜிதத்திற்கும் சொதந்திரவாளியாகிறுன். தகப்பன் தனக்கு பங்குவைத்துக்கொள்ளாமல் ஆஸ்தி எல்லாம் பிள்ளைகளுக்கு பங்கிட்டுக் கொடுத்துவிட்டால், பிறகு பிறந்த பிள்ளைகளுக்கு, மற்றபிள்ளைகள் பங்குகொடுக்கவேண்டியதாயிருக்கிறது.

363. நபும்ஸகர்கள், பைத்தியக்காரர்கள், பிறவிக்குருடர், செவிடர், ஊமைகள், கை கால் இல்லாத மொண்டி மொடவர்கள், தீராத குஷ்டரோகி முதலிய வியாதிஸ்தர்கள், சனியாசியாய்ப் போனவர்கள், ஆகிய இவர்களுக்கு பங்கு கொடுக்கவேண்டியதில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு ஜீவனும்சம்மாத்திரம் கொடுக்கவேண்டும்.

மேல்கண்ட வியாதிஸ்தர்களுக்கு வியாதியில்லாத பிள்ளைகளாவது, பேரர்களாவது, கொள்ளபேரர்களாவது, இருந்தால், அவர்களுக்கு பங்கு கொடுக்கவேண்டும்.

பங்கு பிரித்துக்கொண்டபிறகு, மேல்கண்ட வியாதிகளில் எது உண்டானபோதிலும், கிடைத்த பங்குபோகாது.

மேல்சொல்லிய வியாதிஸ்தனை நீக்கி ஆஸ்தியை பங்கிட்டபிறகு, அவனுக்கு வியாதி நீங்கினுலும் அல்லது அவனுக்கு வியாதியில்லாத பிள்ளைகள் பிறந்தாலும் - அவனுடைய பங்கை, மற்றபங்காளிகள் கொடுக்கவேண்டியிருக்குமென்று மதிராஸ் ஹைகோர்ட்டார் தீர்மானம் செய்திருக்கிறுர்கள்.

*** வாரசு பாத்தியதை.

364. அவிபக்த குடும்பத்தில், யாராவது பங்காளி, புத்திர சந்ததி இல்லாமல், இறந்துபோனல், அவன் பங்கு மற்றபங்காளிகளுக்குச்சேரும். அவன் பெண்சாதிக்காவது, பெண் பிள்ளைகளுக்காவது, சேராது. இவர்களுக்கு, அவனுடைய சுவார்ஜிதம் மாத்திரம் சேரும்.

பங்காளிகள் ஒருவரும் இல்லாமல்போனல், ஆஸ்தி முழுவதும் சமீபவார்சுக்குச்சேரும்.

365. ஒருவன் மதப்பிரஷ்டனுய்ப் போவதினுலேயாவது, குலத்திலிருந்து நீக்கப்பட்டதினுலேயாவது, அவனுடைய வாரஸ் பாத்தியதை போகமாட்டாதென்று சர்க்காரார் 1850-ம் ஹூத்திய 21-வது சட்டம் ஏர்ப்படுத்தியிருக்கிறுர்கள்.

366. நபும்ஸகர்கள், பைத்தியக்காரர்கள், பிறவிக்குருடர், செவிடர், ஊமைகள், கை கால் இல்லாத மொண்டி மொடவர்கள், தீராத குஷ்டரோகி முதலிய வியாதிஸ்தர்கள், சனியாசியாய்ப்போனவர்கள், ஆகிய இவர்களும் இவர்களுடைய பெண்சாதிகளும், தத்து புத்திரர்களும், வாரசாகமாட்டார்கள்.

மேல்சொல்லப்பட்ட வியாதிகளை உடையவர்கள், யாருக்காகிலும் சமீபவாரசுகளானல், அவர்கள் இல்லாததுபோலவே நினைக்கப்படுகிறுர்கள். அப்போது அவர்களுடைய பிள்ளைகளாவது, பேரர்களாவது, கொளபேரர்களாவது, மேல்கண்ட வியாதிகளில் ஒன்றும் இல்லாதவர்களாக இருந்தால், அவர்களும் – அவர்களில்லாமல்போனல் அவர்களுக்குப்பின்வரவேண்டிய வாரசுகளும், ஆஸ்தியை அடைகிறுர்கள்.

வார்சு பாத்தியத்தினுல் ஒருவனுக்கு ஆஸ்தி கிடைத்தபிறகு, அவனுக்கு என்னவியாதி வந்தபோதிலும், கிடைத்த ஆஸ்தி போகமாட்டாது.

367. மேல்சொல்லப்பட்ட வியாதிஸ்தர்களுக்கு வாரசு பாத்தியதையினுல் சொத்து வராமற்போனபோதிலும், அவர்களுக்கு தானமாயாவது, உயில் மூலமாயாவது, யாராவது சொத்தைக்கொடுத்தால் அப்படிப்பட்ட சொத்தை அவர்கள், பெற்றுக்கொள்ளலாம்.

368. பங்காளிகளில்லாதபோது, வாரசு பாத்தியதை அடியில் சொல்லுகிற கிரமப்படி ஏர்ப்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் முன்சொல்லப்பட்டவர்கள் இருக்கையில் பின்சொல்லப்பட்டவர்களுக்கு ஆஸ்தி வரமாட்டாது.

1. பிள்ளைகள், பேரர்கள், கொளபேரர்கள்— } இவர்களில்லாமல்போனுல்,
2. பெண்சாதி.
3. பெண் பிள்ளைகள்—இவர்களில் கலியாணமாகாதவர்கள், முன்வாரசுதார்கள். அவர்களில்லாமற்போனுல் கலியாணமானவர்களில் ஏழைகளும், இவர்களுக்குப்பின் கலியாணமானவர்களில் பணக்காரர்களும் வாரசுதார்களாகிருர்கள்.
4. தௌஹித்திரன்—அதாவது குமாரத்தியினுடைய பிள்ளை.
5. தாயார்—மாத்தாந்தாயாருக்கு பாத்தியதை யில்லை
6. தகப்பன்.
7. அண்ணன்தம்பிகள்—முதலில் சொந்தவர்கள்,என்ருல், ஒரு தாய்வயற்றில் பிறந்தவர்கள் - பிறகு, சக்களத்திக்குப் பிறந்தவர்கள்.
8. அண்ணன் தம்பி பிள்ளைகள்— ஷை—
9. அண்ணன் தம்பிமார்களுடையபேரர்கள். ஷை—

10. தகப்பனுருடைய தாயார்.

11. பாட்டன் - என்றுல்—தகப்பனுக்குத் தகப்பன்.

12. சிறியதகப்பன்மார்கள் பெரியதகப்பன்மார்கள்—	முதலில் சொந்தவர்கள், பிறகு சக்களத்திக்குச்சேர்ந்தவர்கள்.
13. சிறியதகப்பன்மார் பெரிய தகப்பன்மார் பிள்ளைகள்—	ஷை—
14. சிறியதகப்பன்மார் பெரிய தகப்பன்மார் பேரர்கள்—	ஷை—

15. பாட்டனுருடைய தாயார்.

16. கொளபாட்டன் - என்றுல்—தகப்பனுடைய தகப்பனுக்குத் தகப்பன்.

17. பாட்டனுருடைய அண்ணன் தம்பிகள்—	முதலில் சொந்தம், பிறகு சக்களத்தி சம்மந்தம்.
18. பாட்டனுருடைய அண்ணன் தம்பிமார் பிள்ளைகள்—	ஷை—
19. பாட்டனுருடைய அண்ணன் தம்பிமார் பேரர்கள்—	ஷை—

20. கொளபேரனுடைய பிள்ளைகள்.

21. தூரக்கியாதிகள்.

22. தமக்கை தங்கைகளுடைய பிள்ளைகள்.

23. தகப்பனுருடைய தமக்கைதங்கைகளின் பிள்ளைகள்

24. தாயாருடைய தாயார்.

25. தாயாருடைய தகப்பனுர்.

26. அம்மான்கள்.

27. அம்மான் பிள்ளைகள்.

28. அம்மான் பேரர்கள்.

29. சிறியதாயார் பெரியதாயார் பிள்ளைகள்— } தாயார் பக்கத்தில் ஒருவரும் இல்லாமல் போனால்—

30. தமக்கை தங்கைகள்—சக்களத்திக்குப் பிறந்தவர்களுக்கு சுவந்திரமில்லை.

தூரபந்துக்களும்கூட ஒருவரும் இல்லாமல்போனால், ஆஸ்தி சர்க்காருக்குச்சேரும்.

369. இரண்டு மூன்று பெண்சாதிகளுக்குப் பிறந்தபிள்ளைகளிருந்தால், ஆஸ்தி பிள்ளைகளின் சங்கையின்படி பங்கிடப்படுமே யல்லாமல், பெண்சாதிகள் சங்கையின்படி பங்கிடப்படாது.

370. மேலும், பிள்ளைகளுக்கும், பேரர்களுக்கும்; கொளபேரர்களுக்கும், வாரசுபாத்தியதை சமமாக இருக்கிறது.

இது எப்படி யென்றால்—



மேல்காட்டிய வம்சவிருக்ஷத்தில். "பீ" "சீ" "டி" என்பவர்கள் "ஏ" என்பவனுடைய பிள்ளைகள். அவர்கள் விபாகம் செய்துக்கொண்டு வேறாய்ப்பிறிந்த சில நாள்களுக்குப் பிறகு, "சீ" "டி" "எப்" என்பவர்கள் இறந்துபோகிறார்கள். பிறகு, "ஏ" என்னும் மூலபுருஷன் இறந்துபோகிறான். "ஏ" என்பவன் இறந்துபோகும்போது அவன் பிள்ளை "பீ" என்பவனும், பேரன் "ஈ" என்பவனும், கொளபேரர்கள்

"ஜீ" "எச்" என்பவர்களும் இருக்கிறார்கள். "ஏ" என்னும் மூலபுருஷனுடைய ஆஸ்தி இம்மூன்று குடும்பங்களுக்கும் மூன்று சமபங்காக பாகிக்கப்படும்.

371. விபாகிக்கக்கூடாத ஜமீன்தாரி விஷயத்தில், ஜமீன்தாரனுடைய பெரிய பிள்ளையும், அவன் பிறகு அவனுடைய பெரியபிள்ளையும் பட்டத்திற்குவரவேண்டியவர்கள். பிள்ளைகள் இல்லாமல்போனால், வார்சுபாத்தியம் தம்பிக்குப்போகின்றது. தம்பியாவது, வேறுபுருஷவார்சனாவது இருக்கையில் பெண்சாதிமுதலிய ஸ்திரீகளுக்கு பாத்தியமில்லை.

ஜமீன்தாருக்கு இரண்டு மூன்று பெண்சாதிகள் இருந்தால், எந்த பெண்சாதிக்கு முதலில் பிள்ளை பிறக்கிறதோ அவனே பெரியபிள்ளை என்று நினைக்கப்படுகிறான். அவனுக்குதான் பட்டத்திற்கு சுதந்திரம் உண்டாகின்றது.

372. பிள்ளைகள் இல்லாவிடில் பெண்சாதிக்கும், பெண்சாதி இல்லாவிடில், பெண் பிள்ளைகளுக்கும், வாரசு சுவதந்திரம் உண்டாகின்றதென்று 368-வது பியாராவில் சொல்லப்பட்டிருக்கிறது.

இரண்டு மூன்றுபேர் பெண்சாதிகளாவது, இரண்டுமூன்றுபேர் பெண்பிள்ளைகளாவது இருந்தால், ஆஸ்தி முழுவதும் அவர்களுக்கு பொதுவாகவருகின்றது. பங்கிட்டுக்கொள்ள அவர்களுக்கு சுவதந்திரமில்லை. ஆனால், அனுபவிப்பதற்கு அனுகூலமாயிருக்கும்பொருட்டு, அவர்கள் வெவ்வேறாக ஆஸ்தியை ஏர்ப்படுத்திக்கொள்ளலாம். அவர்களில் யாராவது இறந்துபோனால், ஆஸ்தி முழுவதும் மற்றவர்களுக்குச்சேரும். எல்லோரும் இறந்துபோகிறவரைக்கும், அவர்களுக்குப்பின் வரத்தகுந்த வார்சுகளுக்கு போகாது.

373. இறந்துபோனவனுடைய பெண்சாதி மறுபடியும் கலியாணம் செய்துகொண்டால் அவனுடைய ஆஸ்திக்கு அவளுக்குள்ள பாத்தியதைபோய்விடும். அந்த ஆஸ்தி அவளுக்குப்பின்வரத்தகுந்த வாரஸ்தாரர்களுக்குச்சேரும்

மருபடியும் கலியாணம் பண்ணிக்கொள்ளலாமென்று புருஷன் அனுமதிகொடுத்து இறந்துபோனால் மேல்சொல்லியபடி பாத்தியதை போகமாட்டாது.

374. பெண்சாதி வியபிசாரியாய் திரிந்துகொண்டிருந்தால், அவள் புருஷனுடைய ஆஸ்திக்கு வாரீஸ்தாரிளாகுவதற்கு யோக்கியளாகமாட்டாள். ஆனால், ஆஸ்தியைபெற்றபிறகு வியபிசாரியாய் திரிந்துகொண்டிருந்தால் கிடைத்த ஆஸ்தி போகமாட்டாது.

குமாரத்தி, தாயார், தமக்கை, தங்கை முதலிய ஸ்திரீகள் வியபிசாரிகளாய் இருந்தபோதிலும், அவர்கள் வாரசு பாத்தியத்தினால் ஆஸ்தியைப்பெறுவதற்கு ஆக்ஷேபனையில்லை. கிடைத்த ஆஸ்தியும் போகமாட்டாது.

375. இரண்டு மூன்று குமாரத்திகளுக்கு வாரசு பாத்தியத்தினால் ஆஸ்தி கிடைத்தபிறகு, அவர்களில் யாராவது இறந்துபோனால், அவளுடைய பங்கு அவள் பிள்ளைக்கு வரமாட்டாது, மற்ற குமாரத்திகளுக்கே சேரும்.

எல்லா குமாரத்திகளும் இறந்துபோனபிறகு; அப்பொழுது பிழைத்திருக்கும் தௌஹித்திரர்கள் எல்லோருக்கும் சமமாக அந்த ஆஸ்தி பங்கிடப்படும். ஒரு பெண்ணுக்கு இரண்டுபிள்ளைகளும், மற்றொருபெண்ணுக்கு மூன்றுபிள்ளைகளும் இருந்தால், ஆஸ்தி ஐந்துபங்காக பிரிக்கப்படும்.

எல்லாபெண்களும் இறந்துபோவதற்குமுன், இந்த தௌஹித்திரர்களில் யாராவது இறந்துபோனால், அவன் பிள்ளைகளுக்கு யாதொருபாத்தியதையும் இல்லை.

376. தௌஹித்திரன் இல்லாமல்போனால், வாரசுபாத்தியதை, சொத்து தாரனுடைய தாய் தந்தையர்களுக்குப் போகிறது. தௌஹித்திரனுடைய பிள்ளைகளுக்கு இல்லை.

தௌஹித்திரனுக்கு ஆஸ்தி வந்தபிறகு, அந்த ஆஸ்தி அந்த தௌஹித்திரனுடைய பிள்ளை முதலியவர்களுக்கு, வரு

மேயல்லாமல், முதல் ஆஸ்திதாரனுடைய வாரசுகளுக்குப் போகாது.

377. தௌஹித்திரர்களுக்கு வந்ததுபோல, சகோதிரர்களுடைய பிள்ளைகளுக்கும்கூட, ஆஸ்தி சம பாகமாய் வருகின்றது. அதாவது, ஒரு சகோதிரனுக்கு இரண்டு பிள்ளைகளும், மற்றொருசகோதிரனுக்கு நான்கு பிள்ளைகளும் வாரசுகளாக இருந்தால், ஆஸ்தி ஆறுபங்குகளாக பாகிக்கப் படும்.

அண்ணனாவது தம்பியாவது பிழைத்திருக்கும்போது, இறந்துபோன அண்ணன் தம்பிகளுடைய பிள்ளைகளுக்கு வாரசு சுவதந்திரமில்லை.

378. வாரசு சுவந்தரத்தினால், புருஷருக்கு ஆஸ்தி கிடைத்தால், அந்த ஆஸ்தியில் அவர்களுக்கு முழுசுவந்திரம் உண்டாகின்றது. அந்த ஆஸ்தி அவர்கள் பிறகு, அவர்கள் வாரசுகளுக்கு, அதாவது, அவர்கள் பிள்ளைகள் முதலியவர்களுக்கு வருமேயல்லாமல், முதல் ஆஸ்திதாரனுடைய வாரசுகளுக்கு வராது.

வாரசு சுவந்ததிரத்தினால், பெண்சாதி, பெண், தாயார், முதலிய ஸ்திரீகளுக்கு ஆஸ்தி கிடைத்தால், அவர்களுக்கு அந்த ஆஸ்தியில் முழுசுவதந்திரம் உண்டாகமாட்டாது. மேலும், அந்த ஆஸ்தி அவர்கள் பிறகு முதல் ஆஸ்திதாரனுடைய வாரஸ்களுக்குப் போகுமே தவிற, அந்த ஸ்திரீகளுடைய வாரஸ்களுக்கு வராது.

ஆகையால், ஸ்திரீகளுக்கு, வாரசு சுவதந்திரத்தினால், புருஷர்களுடைய ஆஸ்தி கிடைத்தபோது — அவர்கள் அந்த ஆஸ்தியை குடும்ப சவரக்ஷணைக்காகவும், குடும்பத்தில் சேர்ந்தவர்களுடய விவாகம் முதலிய காரியங்களுக்காகவும், ஆஸ்திதாரனுடைய கடன்களை தீர்ப்பதற்காகவும், கர்மாந்திரம் முதலிய உத்திரக்கிரயைகள் நடத்துவதற்காகவும் இப்பேர்ப்பட்ட அவசியமான செலவுகளுக்காக உபயோகப் படுத்தலாம். ஆனால், காசீ, ராமேசுவரம் முதலிய இடங்

களுக்கு யாத்திரை செய்யும்பொருட்டும் - கோவில்கள், கோபுரங்கள் ஏரிகள், குளங்கள், கோவில்களுக்கு மானியங்கள் முதலிய விஷயங்களின்பொருட்டும், அதிகமாக செலவழிக்கக்கூடாது. அந்த ஆஸ்தி, அனவசியமாக ஒத்திவைத்தால், அல்லது விக்கிரயமாவது தானமாவது செய்தால், அந்த ஒத்தி, விக்கிரயம், தானங்கள் அந்த ஸ்திரீ சீவித்திருக்கிறவரையில் மாத்திரமே செல்லும். ஆகையால், அந்த ஸ்திரீக்குப்பிறகு வாரசாக சுவதந்திரமுள்ளவர்கள், 12 வருஷங்களுக்குள்ளாக வியாச்சியம்செய்து, மேற்படி ஒத்தி, கிரயம், தானம், முதலியவைகள். தங்களுடைய சுதந்திரத்தை பாதிக்கமாட்டாதென்று கோர்ட்டாரால் தீர்ப்பையடையலாம்.

மேற்படி வார்சுதார், ஆஸ்தியை சுவாதீனப்படுத்திக்கொள்ளும்பொருட்டு, அந்த ஸ்திரீ இறந்துபோன 12 வருஷங்களுக்குள்ளாக வியாச்சியம் செய்யலாம். மேலும், மேற்படி ஸ்திரீ, ஆஸ்தியை நாசஞ்செய்துக்கொண்டிருந்தால், அவள் பிழைத்திருக்கும்போதே, வியாச்சியம்செய்து, ஆஸ்தியை அவளுடைய சுவாதீனத்திலிருந்து நீக்கி, மானேஜரை ஏற்படுத்திவைக்கலாம்.

ஸ்திரீயானவள், வார்சு சுவதந்திரத்தினுல், தனக்கு கிடைத்த மூல ஆஸ்தியை அனுவசியமாக செலவழிக்கக்கூடாது. .ஆனல், அதினின்று உற்பத்தியாகும் வரும்படி முழுவதையும் தனக்கிஷ்டம்வந்தபடி செலவழித்துக்கொள்ளலாம்.

*** ஸ்திரீதனம்.

379. புருஷனுடையவாவது, தகப்பனுடையவாவது. பிள்ளையினுடையவாவது, சகோதரர்களுடையவாவது, ஆஸ்தி, வாரசு சுவதந்திரத்தினுல் ஒரு ஸ்திரீக்குக் கிடைத்தால், அப்படிப்பட்ட ஆஸ்தி அவளுடைய ஸ்திரீதனமாகமாட்டாது. அந்த ஆஸ்தி, அவளுக்குப்பிறகு, அவளுடைய வாரசுக்குப்போகாமல், முதல் ஆஸ்திதாரனுடைய வாரசு

களுக்குப்போகும். மேலும், அந்த ஆஸ்தி, அந்த ஸ்திரீ, தான் பிழைத்திருக்கிறவளாக்கும், அனுபவிக்கலாமேதவிர, இஷ்டம்வந்தபடி செலவழிப்பதற்கும் சுவதந்திரமில்லை.

380. விவாகத்திற்கு முன்னும்,விவாககாலத்திலும்,விவாகத்திற்குப்பிறகும், ஒரு ஸ்திரீக்கு, அவளுடைய புருஷனாவது, பந்துக்களாவது, பிரீதியினால் கொடுத்தசொத்தும், ஆபரணங்களும், பூஸ்திதி முதலியவைகளும், அவளுடைய ஸ்திரீதனமாகின்றது.

மேற்படி ஸ்திரீதனத்தில், கணவன்கொடுத்த பூஸ்திதியாகிய ஸ்திரீதனம் தவிர, மற்ற எல்லா ஸ்திரீதனமும், ஸ்திரீ, தனக்கிஷ்டம்வந்தபடி செலவழித்துக்கொள்ளலாம். தனக்கு வேண்டியவர்களுக்கும் கொடுக்கலாம். அந்த விஷயத்தில் கூடாதென்று அவளைத் தடுப்பதற்கு அவள் புருஷனுக்கும்கூட சுவதந்திரமில்லை. ஆனால் கஷ்டகாலம் நேரிட்டபோதும், கடன்காரர்கள் தொந்திரவு படுத்தினபோதும், அப்படிப்பட்ட ஸ்திரீதனத்தை அவள் புருஷன் உபயோகித்துக்கொள்ளலாம். அப்படி உபயோகப்படுத்திக்கொள்வதற்கு அவன் இஷ்டப்படாமல்போனால், கடன்காரர்கள் மேற்படி ஸ்திரீதனத்தைத் தொடக்கூடாது.

புருஷனால் கொடுக்கப்பட்ட பூஸ்திதியாகிய ஸ்திரீதனத்தை-அவன் உயிரோடிருக்கும்போதாவது, அதின் பிரகாவது-பெண்ஜாதி தன்னிஷ்டம்வந்தபடி செலவழிக்க சுதந்திரவாளியல்ல.

381. ஸ்திரீக்கு உயில்மூலமாக கொடுக்கப்பட்ட ஆஸ்தியும், ஜீவனாம்சத்திற்காக அவளுக்கு பிரத்தியேகமாய் முழு சுவதந்திரத்தோடு கொடுக்கப்பட்ட ஆஸ்தியும், ஸ்திரீதனமாகவே எண்ணப்படுகின்றது.

382. ஒரு ஸ்திரீயினுடைய விவாகம் கன்னியாதானமாக நடத்தப்பட்டிருந்தால், அவளுடைய ஸ்திரீதனம், அவளுக்கு பிறகு இதனடியில் சொல்லப்படும் கிரமப்படி வார்சு

களுக்குச் சேருகின்றது. இதில் முதலில் சொல்லப்பட்டவர்கள் பிழைத்திருக்கையில், பின் சொல்லப்பட்டவர்களுக்கு கிடைக்கமாட்டாது.

1. குமாரத்திகள்.—முதலில், கலியாண மாகாதவர்கள் - பிறகு, கலியாணமானவர்களில் ஏழைகள், அதின்பிறகு, கலியாண மானவர்களில் பணக்காரர்கள்-குமாரத்திக ளில்லாவிடில்,

2. குமாரத்தியினுடைய குமாரத்திகள்.— ஒரு பெண்ணுக்கு இரண்டுபேர்களும், மற்றொரு பெண்ணுக்கு மூன்றுபேர்களும், பெண்பிள்ளைகளிருந்தால், ஆஸ்தி தாயார்களுடைய சங்கியையின்படி, இரண்டுபங்காக பாகிக்கப்பட்டு, பிறகு அந்த பங்குகள் பேத்திகளுக்கு பங்கிடப்படும்.

3. குமாரத்தியின் பிள்ளைகள்.
4. புத்திரர்கள்.
5. பேரன் அதாவது பிள்ளையின் பிள்ளை.
6. கொளபேரன்.
7. புருஷன்—மேல் சொல்லப்பட்டவர்கள் இருக்கும்போது பெண்சாதியினுடைய நகை முதலிய ஸ்திரீதனங்கள் கணவனுக்குச்சேரமாட்டாது.

8. சக்களத்தியின் பெண்.
9. சக்களத்தியினுடைய பெண்ணின் பெண்.
10. சக்களத்தியின் பிள்ளையின் பிள்ளை.
11. சக்களத்தியின் பிள்ளை.
12. சக்களத்தியின் பேரன்.
13. சக்களத்தியின் கொளபேரன்.

14. மைத்துனன்மார்கள்—அதாவது, புருஷனுடைய அண்ணன் தம்பிமார்கள்.
15. மைத்துனன்மார் புத்திரர்கள்.
16. புருஷனுடைய மருமான்.
17. அண்ணன் தம்பிமார்கள்.
18. அண்ணன் தம்பிமார்களுடைய பிள்ளைகள்.
19. தமக்கை தங்கைகளின் பிள்ளைகள்.
20. மாமியார்.
21. மாமனார்.
22. மாமனார் தாயார்.
23. மாமனார் தகப்பனார்.

383. ஸ்திரீயினுடைய விவாகம் கன்னியாதானமாயல்லாமல், பணம் வாங்கிக்கொண்டு பெண்ணைக்கொடுத்து கலியாணமாயிருந்தால், அவளுடைய ஸ்திரீதனம் அவளுக்குப் பிறகு இதனடியில் சொல்லப்படும் கிரமப்படி வாரசுகளுக்கு சேருகின்றது.

1. குமாரத்திகள்.
2. குமாரத்திகளின் குமாரத்திகள்.
3. குமாரத்திகளின் குமாரர்கள்.
4. குமாரன்.
5. பேரன்.
6. கொள்ளுபேரன்.

} 382-வது பியாராவில் சொல்லியபடியே.

7. தாயார்.
8. தகப்பன்.
9. அண்ணன் தம்பிமார்கள்—முதலில் சொந்தம், பிறகு சக்களத்தி சம்பந்தம்.
10. அண்ணன் தம்பிமார்களின் பிள்ளைகள்— ஷை—
11. அண்ணன் தம்பிமார்களின் பேரர்கள்— ஷை—
12. தமக்கை தங்கையின் பிள்ளைகள்— ஷை—
13. தகப்பனாருடைய தாயார்.
14. தகப்பனாருடைய தகப்பனார்.
15. சிறியதகப்பனார் பெரியதகப்பனார்-வகைருக்கள்.

தகப்பன் பக்கத்தில் யாரும் இல்லாவிடில், புருஷன் முதலியவர்களுக்கு 382-வது பியாராவில் 7 முதல் சொல்லப்பட்ட கிரமப்படி ஸ்திரீதனத்திற்கு வாரசுகள் ஏற்படுகிறார்கள்.

384. விவாகமாவதற்குமுன், பெண் இறந்துபோனால், அவளுடைய நகைகள் முதலிய ஸ்திரீதனம், அவளுடைய அண்ணன் தம்பிமார்களுக்கும், அவர்களில்லாமல்போனால் தாயாருக்கும், தாயாரில்லாவிடில் தகப்பனாருக்கும், தகப்பனில்லாவிடில் சமீபபந்துக்களுக்கும் சேருகின்றது.

சொந்த அண்ணன் தம்பிமார்களில்லாவிடில், சக்களத்திக்குப்பிறந்த அண்ணன் தம்பிமார்களுக்குச் சேருகின்றது.

385. ஒரு ஸ்திரீயினுடைய ஸ்திரீதனம், மற்றொரு ஸ்திரீக்கு வாரசு பாத்தியத்தினால், கிடைத்தால், அப்படிப்பட்ட ஆஸ்தியை புருஷனுடைய அனுமதியில்லாமல் அவள் செலவழிக்கக்கூடாது.

மேலும், அந்த ஆஸ்தியையடைந்த இரண்டாவது ஸ்திரீக்குப்பிறகு இவளுடைய அண்ணன் தம்பிமார்கள், தாய், தகப்பன், சமீபபந்துக்கள், இந்தக்கிரமப்படி அந்த ஆஸ்திக்கு வாரஸதார்ராகிறார்கள்.

386. ஸ்திரீயானவள், வியபிசாரியாய் திரிந்துக்கொண்டிருந்தபோதிலும், வார்சு பாத்தியத்தினால், மற்றொரு ஸ்திரீயினுடைய ஸ்திரீதனத்தை அடைவதற்கு யாதொரு ஆட்சேபனையும் இல்லை.

இந்துலா சுருக்கம் முற்றிற்று.

கிராம உத்தியோகஸ்தர் விஷயம்.

387. கிராம உத்தியோகஸ்தர்களைக்குறித்த இந்தபாகத்தில், அவர்களுக்கு உபயோகப்படும் சட்டங்களினுடையவும், ரெகுலேஷன்களினுடையவும் முக்கியமான விஷயங்கள் சுருக்கமாக சொல்லப்படுகின்றன.

இதற்குமுன் சொல்லப்பட்ட, பினல்கோட், இந்தூலா சுருக்கங்களிலும், இந்தக்கிரந்தத்தின் கடைசியில் சொல்லப்படும் சில்லரைவிஷயங்களிலும், கிராம உத்தியோகஸ்தர்களுக்கு உபயோகமான சங்கதிகள் அனேகம் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

*** பரம்பரை பாத்தியம்.

388. 1831-ம் வருஷம் 6-வது நம்பர் ரெகுலேஷன்படிக்கும், 1802-ம் வருஷம் 29-வது நம்பர் ரெகுலேஷன்படிக்கும், கிராம உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் விஷயமாய் பரம்பரைபாத்தியதையை அனுசரிக்கவேண்டியதாயிருந்த போதிலும், அப்படிப்பட்ட பாத்தியஸ்தர்கள், அந்த உத்தியோகத்திற்கு தகுந்த யோக்கியதையில்லாதவர்களாயும், ஒன்றும் தெரியாதவர்களாயும் இருந்தால், வேருயாராவது தகுந்தவர்களாக ஏற்படுத்தப்படுகிறார்கள்.

389. சர்க்கார் கிராம உத்தியோகங்களின் விஷயமாய், பரம்பரை பாத்தியதையைக்குறித்து கலெக்டரவர்களிடத்திலாவது, டிவிஷனுபீஸரிட்த்திலாவது, வியாச்சியம்கொண்டுவரலாம். இதற்கு வாயிதா வேறொருவனை நியமித்த தேதிமுதல் மூன்றுவருஷம். கலெக்டரவர்களுடைய தீர்ப்

பின்பேரில் ரிவினியூபோர்டாருக்கு அப்பீல்செய்து கொள்ளலாம். அதற்கு வாயிதா மூன்றுமாதம்.

ஜமீன்தாரீ கிராமகணக்கர்களின் விஷயத்தில், பாத்தியதையுள்ளவர்கள் 6 வருஷங்களுக்குள்ளாக, சிவில்கோர்ட்டில் வியாச்சியம்செய்யவேண்டியது.

*** கிராம முன்சீப்களின் அதிகாரங்கள்.

390. சில்லரை (லாவாதேவிகள்), அடிதடி முதலிய அற்ப குற்றங்கள், விஷயமாய் நியாயமடையும்பொருட்டு பெரிய அதிகாரிகளிடத்திற்குப்போவது சாமான்னியஜனங்களுக்கு மிகுந்த தொந்திரவாகிறதென்று நினைத்து, அப்படிப்பட்ட விஷயங்களில் விசாரணைசெய்து, நியாயம்செய்யும் அதிகாரத்தை, சர்க்காரார் கிராம முன்சீப்புகளுக்கு கொடுத்திருக்கிருர்கள். ஆகையால், அவர்கள் இந்த அதிகாரத்தைக்குறித்த சங்கதிகளையெல்லாம் நன்ருக அறிந்துகொண்டு கிரமமாக நடந்துக்கொள்வதும், அப்படி நடந்துக்கொள்வதால் தங்கள் உத்தியோகத்தின் கெளரவத்தை காப்பாற்றிக்கொண்டு, மேல் அதிகாரிகள் மெச்சும்படியாய் செய்துக்கொள்வதும் முக்கியமாயிருக்கின்றது.

391. லஞ்சம் வாங்கிக்கொண்டாவது - பக்ஷபாதம், துர்நடத்தை, அல்லது துர்புத்தி முதலியவைகளினுலாவது - கிராமமுன்சீபுகள் தங்களுடைய அதிகாரத்தை அக்கிரமமாக செலுத்தினுல், அப்படிப்பட்டவர்கள் தங்களுத்தியோகங்களை போக்கடித்துக்கொள்வதேயல்லாமல், பினல்கோட்டில் சொல்லியபடி சிக்ஷைக்கும் உள்ளாகிருர்கள்.

392. சிவில் கிரிமினல் விசாரணைசெய்யும் விஷயத்தில் சாக்ஷிகளை சம்மன்செய்தல் முதலிய அதிகாரங்கள் கிராம முன்சீப்புகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மேலும், அப்படிப்பட்ட விசாரணைகாலத்தில், சம்மன் படிக்கு ஹாசராகாமல் போகிறவர்களும், தப்பு சாக்ஷியம் சொல்லுகிறவர்களும், சரியானகேள்விகளுக்கு உத்திரவு சொல்ல மறுக்கிறவர்களும், விசாரணையை தடுக்கிறவர்களும், பினல்கோட்படிக்கு குற்றவாளிகளாகிறார்கள்.

393. கிராம முன்சீபுகளிடத்தில் தாக்கல்செய்யும் தாவாக்களுக்கும், பிராதுகளுக்கும், ஸ்டாம்பு ஒட்டவேண்டிய அவசியமில்லை.

ஞாயிற்றுக்கிழமைதினம், கிராமமுன்சீபுகள் சிவில் கிரிமினல் விசாரணைகள் செய்யக்கூடாது.

*** சுவற்ப வியாச்சியங்கள் விசாரணை.

394. கிராமமுன்சீபுகள் சுவற்ப வியாச்சியங்களை, விசாரணைசெய்யும் விஷயமாய் இதுவரையிலும் அமலில் இருந்த 1816-ம் வருஷத்திய 4-வது நம்பர் ரெகுலேஷனும், 1883-ம் வருஷத்திய 4-வது நம்பர் ஆக்ட்டும், ரத்துசெய்து, மதிராஸ் கவரன்மென்டார் 1889-ளு 1-வது நம்பர் ஆக்ட்டை நூதனமாய் எற்படுத்தியிருக்கிறார்கள்.

395. இந்தப் புதுசட்டத்தின்படி 20 ரூபாய மதிப்புக்கு மேற்படாத அசையும்பொருளைக்குறித்தும், 20 ரூபாயிக்கு மேற்படாத ரொக்ககடன்களைக்குறித்தும் கொண்டுவரப்பட்ட வியாச்சியங்களை கிராமமுன்சீபுகள் விசாரிக்கலாம்.

மேலும், கிராமமுன்சீபு விசாரிக்கலாமென்று எழுத்துமூலமாய் உபயகக்ஷிக்காரர்களும் அவர்முன்பாக ஒப்புக்கொள்ளும்பக்ஷத்தில், 200 ரூபாய் வரைக்கும் வியாச்சியங்களை அவர் விசாரிக்கலாம்.

396. கூட்டுகணக்கு பைசல்செய்து ஏற்படுத்தவேண்டிய பாக்கிக்காக கொண்டுவரப்பட்ட வியாச்சியங்களை கிராம முன்சீபு விசாரணைசெய்யக்கூடாது. ஆனால் கணக்குகள்

பைசல்செய்துகொண்டு, பாக்கி ஏற்படுத்திக்கொண்டபிறகு, அந்த பாக்கிக்காக கொண்டுவரப்பட்ட வியாச்சியத்தை அவர் விசாரிக்கலாம்.

397. உயில்மூலமாக வரவேண்டியசொத்து விஷயமாய் கொண்டுவரப்பட்ட வியாச்சியங்களும், வாதியாவது பிரதிவாதியாவது மைனராயிருந்தால் அந்த வியாச்சியங்களும், பூஸ்திதி முதலிய அசையாப்பொருளுக்குச் சம்மந்தப்பட்ட வியாச்சியங்களும், அவதூரு முதலிய விஷயங்களில் நஷ்டத்திற்காக கொண்டுவரப்பட்ட வியாச்சியங்களும், காலதோஷம் உண்டான வியாச்சியங்களும், கிராமமுன்சீபுகள் விசாரணை செய்யக்கூடாது.

398. வீடு, நிலம், முதலியவைகளின்பேரில் வரவேண்டிய வாடகை அல்லது குத்தகை பணத்தைப்பற்றி எழுத்துமூலமாய் ஏற்பாடுசெய்துகொண்டிருந்தால், அப்படிப்பட்ட பாக்கிவிஷயமாய் கொண்டுவரப்பட்ட வியாச்சியங்களை கிராம முன்சீபுகள் விசாரணை செய்யலாம்.

399. வரவேண்டிய பாக்கித்தொகை 20 ரூபாயிக்கு மேற்பட்டிருந்தாலும், 20 ரூபாய்வரைக்கும் மாத்திரமே வியாச்சியம் கொண்டுவந்து கிராம முன்சீபுகளிடத்தில் விசாரணை செய்துக்கொள்ளலாம். ஆனல், அப்படி விட்டுவிடப்பட்ட தொகையைக்குறித்து பிறகு எங்கும் வியாச்சியம் கொண்டுபோகக்கூடாது.

400. பிரதிவாதிகள் எல்லோரும் எந்த கிராமத்தில் குடியிருக்கிறார்களோ, அல்லது வாத்தகம் முதலிய வியாபாரங்களை செய்துக்கொண்டிருக்கிறார்களோ அந்தக் கிராம முன்சீபினிடத்திலேயே வியாச்சியம் கொண்டுவரவேண்டியது.

அப்படிப்பட்ட கிராமமுன்சீப்புக்கு, வியாச்சியத்தின் விஷயமாய் தனக்கு சொந்தமாயாவது பந்துக்கள் மூலமாயாவது சம்மந்தமிருந்தால், அந்த வியாச்சியம் அக்கம்பக்கத்தில் இருக்கும் எந்த கிராம முன்சீபினிடத்திலாவது வாதி தாக்கல்செய்யலாம்.

401. மேல்சொல்லப்பட்ட வியாச்சியங்கள் கிராமமுன்சீபுகளிடத்தில் கொண்டுவரலாமென்று சொல்லப்பட்டிருந்தபோதிலும், கக்ஷிக்காரனுக்கு இஷ்டமில்லாமல்போனால், டிஸ்திரிக்ட்டு முன்சீப்கோர்ட்டில் தாக்கல் செய்யலாம்.

மேலும், கிராமமுன்சீபினிடத்தில் தாவா தாக்கலானபிறகு வாதிப் பிரதிவாதிகளில் யாராவது, தகுந்த காரணங்களுடன், டிஸ்திரிக்ட்டு முன்சீப்பவர்களிடத்தில் மனுவுசெய்துக்கொண்டு, அந்த வியாச்சியத்தை அவர் கோர்ட்டு பைலுக்காவது, வேறொரு கிராமமுன்சீபினிடத்திற்காவது, டிரான்ஸ்பர் செய்வித்துக்கொள்ளலாம்.

402. லஞ்சம் முதலியவைகளாலாவது, பக்ஷபாதத்தினுலாவது, கிராமமுன்சீப் அக்கிரமமான தீர்ப்புசெய்தபோதும் - கிராமமுன்சீப் தனக்கு அதிகாரமில்லாத வியாச்சியத்தை விசாரணைசெய்தபோதும், கிராமமுன்சீப் நடவடிக்கைகளில், முக்கியமான தப்பிதமாவது, குறைவுகளாவது, இருந்தபோதும், கிராமமுன்சீப் செய்ததீர்ப்பு அசாஸ்திரீயமாயாவது, அனியாயமாயாவது சுவஷ்டமாய் காணப்பட்டபோதும் - 60 நாள்களுக்குள்ளாக டிஸ்திரிக்டு முன்சீப் அவர்களிடத்தில் பிடீஷன் கொடுத்துக்கொண்டால், அதின்பேரில் அவர் விசாரணைசெயது நியாயம்செய்வார். அதின்மேல் அப்பீலில்லை.

மேலும், மேல்சொல்லப்பட்டபடி டிஸ்திரிக்ட்டு முன்சீபவர்களிடத்தில், பிடீஷன் கொடுத்துக்கொண்டபோது, கிராமமுன்சீபினுடைய தீர்ப்பை ஜாரிசெய்யாமல் நிருத்திவைக்கும்படி செய்துகொள்ளலாம்.

403. லஞ்சம், பக்ஷபாதம், துர்நடத்தை, முதலிய காரணங்களால் கிராமமுன்சீப் அனியாயமான தீர்ப்புசெய்ததாக தெரியவந்தால், டிஸ்திரிக்ட்டு முன்சீப் கோர்ட்டார், அதைக்குறித்து ஜில்லா ஜட்ஜியவர்களுக்கு ரிபோர்ட்டுசெய்வார். அதின்பேரில் ஜில்லா ஜட்ஜியவர்கள் உத்திரவுசெய்தால் கலெக்டரவர்கள் மேற்படி கிராம முன்சீபை ஸஸ்பெண்டாவது பரதர்பாவது செய்வார்.

மேலும், லஞ்சம் முதலியவைகளை வாங்கிக்கொண்டபோது, கிராமமுன்சீப், பினல்கோட்படிக்கு தண்டனைக்கு உரியவனாகிறான்.

ஜில்லா ஜட்ஜியவர்களுடைய உத்திரவின்பேரில், கலெக்டரவர்கள், ஸஸ்பெண்டாவது பரதர்பாவது செய்தபோது, ஹைகோர்ட்டாருக்கு 3 மாதங்களுக்குள்ளாக அப்பீல் செய்துக்கொள்ளலாம்.

404. கிராம முன்சீப், துர்நடத்தை யுள்ளவனென்றாவது, அசமர்த்தனென்றாவது, தன் உத்தியோகத்தைச்சேர்ந்த காரியங்களைக்குறித்து அசிரத்தையா யிருக்கிறானென்றாவது தெரியவந்தால் கலெக்டரவர்கள் தாமே அந்த கிராம முன்சீபை ஸஸ்பெண்டாவது, பரதர்பாவது, செய்யலாம். அதின்பேரில் 3 மாசங்களுக்குள்ளாக ரிவினியூபோர்ட்டாருக்கு அப்பீல் செய்துக்கொள்ளலாம்.

*** கிராம பஞ்சாயத்து.

405. எவ்வளவுமொத்தமாயிருந்தபோதிலும், ரொக்கத் தொகையைக்குறித்தாவது, எவ்வளவு விலையுள்ளதா யிருந்தபோதிலும், அசையும்பொருளைக்குறித்தாவது, தகாதா உண்டானபோது, அதை தீர்மானிக்கும்பொருட்டு கிராம பஞ்சாயத்தை சேர்க்கவேண்டுமென்றும், அவர்கள் செய்யும் தீர்ப்பை ஒப்புக்கொள்ளுகிறோமென்றும், வாதிப் பிரதிவாதிகள், தங்களூர் கிராம முன்சீபினிடத்திலாவது, மற்றொரு ஊர் கிராம முன்சீபினிடத்திலாவது, எழுத்துமூலமாய், கேட்டுக்கொண்டால், அந்தக் கிராம முன்சீப் கிராம பஞ்சாயத்தை சேர்ப்பதற்கு, 1816-ம் வருஷத்திய 5-வது ரெகுலேஷனால், அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

406. மேல் சொல்லியபடி கேட்டுக்கொண்டபோது, கிராம முன்சீப், தன் கிராமத்திலிருக்கும் பெரிய குடித்தனக்காரர்களில் சிலரை பஞ்சாயத்துக்காக நேமிக்கலாம்.

அப்படி நியமித்தபோது அந்த பஞ்சாயத்தில் சேரமாட்டேனென்று யாராவது நிராகரித்தால், கிராம முன்சீப் அவருக்கு 5 ரூபாயிக்கு மேற்படாமல், தனக்கு யுக்தமென்று தோன்றிய அபராதத்தை விதிக்கலாம். அந்த அபராதம் செலுத்தாமற்போனால், சுவல்ப வியாச்சியங்களில் கிராமமுன்சீப்கள் செய்யும் டிக்கிரிபணத்தை வசூல்செய்வது போல மேற்படி அபராதத்தொகையையும் வசூல் செய்யலாம்.

407. பஞ்சாயத்தில் சேரவேண்டுமென்று இதர கிராமத்தாரை நிர்ப்பந்தப் படுத்துவதற்கு கிராம முன்சீபுக்கு அதிகாரமில்லை. ஆனால், அவர்கள் இஷ்டப்பட்டால், பஞ்சாயத்தில் சேர்த்துக்கொள்ளலாம். பஞ்சாயத்தை சேர்ப்பது கிராம முன்சீபினுடைய கடமையே தவிர, பஞ்சாயத்தில் அவனும் சேர்ந்திருக்கவேண்டுமென்பது அவசியமல்ல.

408. பஞ்சாயத்தார்களின் சங்கை ஒற்றையாயிருக்கவேண்டும். 5-க்குக்குறைந்தும், 11-க்கு மேற்பட்டும் இருக்கக்கூடாது.

409. வாதிப்பிரதிவாதிகள், வெவ்வேறு ஜாதியர்களாய் இருந்தால், பஞ்சாயத்தில் இவ்விரண்டு ஜாதியார்களையும் சமமாக ஏர்ப்படுத்தி, மற்றவர்களை வேறு ஜாதியர்களாக நியமிக்கவேண்டும்.

கிராம முன்சீப் ஏர்ப்படுத்திய பஞ்சாயத்துதார்களில் யாரைக்குறித்தாவது வாதியாகிலும், பிரதிவாதியாகிலும், இஷ்டமில்லையென்று தகுந்த ஏதுக்களுடன் ஆட்சேபணை செய்தால், கிராம முன்சீப் அப்படிப்பட்டவரை நீக்கிவிட்டு, அவருக்குப்பதிலாக வேரொருவரை ஏர்ப்படுத்த வேண்டியது.

இஷ்டமாயிருந்தால், வாதி இரண்டுபேர்களையும் பிரதிவாதி இரண்டுபேர்களையும், கிராம முன்சீப் ஒருவரையும் ஆக ஏற்படுத்தி பஞ்சாயத்து சேர்க்கலாம்.

410. விசாரணை ஆரம்பிப்பதற்குமுன், பஞ்சாயத்தார்கள் தங்களுடைய தீர்ப்பை வாதிப்பிரதிவாதிகள் ஒப்புக்கொள்வதாக அவர்களிடத்திலிருந்து 8 அணு ஷ்டாம்பு கடுதாசியில் முன்சீப் கணக்கர்களுடைய சாக்ஷி கையெழுத்தோடு கரார்நாமா பெற்றுக்கொள்ளவேண்டியது. அப்படி முன்னதாக கரார்நாமா பெற்றுக்கொள்ளாமற்போனால் பஞ்சாயத்து தீர்ப்பு செல்லாது.

411. பஞ்சாயத்தார் முன்பாக பேசுவதற்காக வாதிபிரதிவாதிகள், தங்கள் பந்துக்களுக்காவது, குமஸ்தாக்களுக்காவது, அல்லது தம்மைச்சேர்ந்த வேறுயாருக்காவது, வகாலத்து கொடுக்கலாம். மற்றவர்களுக்கு கொடுக்கக் கூடாது.

412. மேல் சொல்லியபடி வாதிப்பிரதிவாதிகளிடத்திலிருந்து கரார்நாமா பெற்றுக்கொண்டபிறகு பஞ்சாயத்தார்கள் வாதியினுடைய தாவாவை தாக்கல் செய்துக்கொண்டு அதின் விஷயமாய் உத்திரவு தாக்கல் செய்யும்படி பிரதிவாதியை கேட்கவேண்டும். உத்திரவு கொடுப்பதற்கு பிரதிவாதி வாயிதா கேட்கும்பக்ஷத்தில், 7 நாள்களுக்கு மேற்படாமல் வாயிதா கொடுக்கலாம்.

பிரதிவாதியினுடைய உத்திரவு தாக்கலானபிறகு, பஞ்சாயத்தார்கள் வாதிப்பிரதிவாதிகளுடைய தஸ்தாவேஜுகளையும், சாக்ஷி ஜாப்தாவையும் பெற்றுக்கொண்டு, விசாரணைக்கு நாள் ஏர்ப்படுத்தி சாக்ஷிகளை ஆஜர் செய்விக்கும் பொருட்டு கிராம முன்சீபுக்கு தெரியப்படுத்தவேண்டியது.

413. விசாரணைக்காக ஏர்ப்படுத்தப்பட்ட நாளில், வாதிபிரதிவாதிகளிருவருமாவது, அவர்களில் ஒருவனாவது தாமாக அல்லது வக்கீல் மூலமாக ஆஜராகாமல்போனால், பஞ்சாயத்தார்கள் அதற்குப்பிறகு 5 நாள்களுக்கு மேல்பட்டு விசாரணைக்கு வேறொரு நாள் ஏர்ப்படுத்தி, அந்த சங்கதியை கிராம முன்சீப் மூலமாக நோட்டீசு பிறப்பித்து பிரசித்தப்படுத்தவேண்டியது.

414. அப்படி மறுபடியும் ஏர்ப்படுத்தப்பட்ட நாளில் வாதி ஆஜராகாமல்போனுல் வியாச்சியத்தை தள்ளிவிட வேண்டியது. ஆஜராகாமல் போனதற்கு தகுந்த காரணம் இருந்தாலொழிய அப்படி தள்ளிவிடப்பட்ட வியாச்சியத்தை மறுபடியும் கொண்டுவரக்கூடாது.

மேற்படி நாளில் பிரதிவாதி ஆஜராகாமல்போனுல், அல்லது ஆஜராய் உத்திரவு சொல்லாமல்போனுல், வாதியினுடைய சாக்ஷிகளை விசாரணைசெய்து தஸ்தாவேஜுகளை பரிசோதித்து தீர்ப்புசொல்ல வேண்டியது.

415. பஞ்சாயத்தார்கள் தங்கள் தீர்ப்பை விசாரணை தினத்திலாவது சொல்லலாம். அல்லது, ஆலோசிப்பதற்கு சாவகாசம் வேண்டியதாயிருந்தால் சில நாள்களுக்குப்பிறகு சொல்லலாம்.

பஞ்சாயத்தாருக்குள் அபிப்பிராயம் வேறுபடுகிறபட்சத்தில், அனேகர் எந்த அபிப்பிராயத்தைக்கொள்ளுகிறுர்களோ, அந்த அபிப்பிராயத்தின்படி தீர்ப்பு சொல்ல வேண்டியது. அப்பொழுது இவர்கள்மாத்திரம் தீர்ப்பில் கையெழுத்துசெய்தால் போதும். மற்றவர்கள் இஷ்டமிருந்தால் தங்கள் அபிப்பிராயத்தையும் அதற்குள்ள காரணங்களையும் எழுதலாம்.

416. பஞ்சாயத்தார்கள், தங்கள் தீர்மானத்திற்கு இரண்டு நகல்களை தயார்செய்து, அவைகளை கிராம முன்சீப் மூலமாய் வாதிக்கொன்றும், பிரதிவாதிக்கொன்றும் கொடுப்பிக்கவேண்டியது. அந்த நகல்களின்பேரில் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தேதிபோட்டு, முன்சீபு கணக்கர்களும் பஞ்சாயத்து தாரர்களில் ஒருவரும் கையெழுத்து பண்ணவேண்டியது.

417. பஞ்சாயத்தார்கள் விசாரணை செய்யும்போது, அவர்களுக்கு அவசியமென்று தோன்றினுல், எல்லாசாட்சிகளைக்கொண்டாவது சில சாட்சிகளைக்கொண்டாவது பிரமாணம் செய்விக்கலாம்.

418. கிராம பஞ்சாயத்தார்களிடத்தில் அவமரியாதை யாயாவது, அலட்சியமாயாவது நடக்கிறவர்களும், அவர்கள் முன்பாக சாக்ஷியம் சொல்வதற்குவராமல் அலட்சியம் செய்கிறவர்களும், குற்றவாளிகளாகிறார்கள்.

419. பஞ்சாயத்தார்கள் தீர்ப்பின்பேரில் அப்பீலில்லை- ஆனால், அவர்கள் பட்சபாதம் செய்தால், தீர்ப்பு நகல்கள் கொடுத்தபிறகு 30 நாள்களுக்குள்ளாக, அந்த விஷயமாய், ஜில்லா ஜட்ஜீ யவர்களிடத்தில் அர்ஜீ கொடுத்துக்கொள்ள லாம்.

மேலும், அந்த அர்ஜீ பைசலாகிறவரைக்கும், பஞ்சாயத் தார்கள் தீர்ப்பின்படிக்கி நடவடிக்கைகள் நடத்தாமலிருக் கும்படி நிருத்திவைத்துக்கொள்ளலாம்.

420. கிராம பஞ்சாயத்தார்கள் கொடுத்த டிக்கிரீ மொத் தம் 100 ரூபாயிக்கு மேற்பட்டிருந்தால், கோர்ட்டார் மூல மாக டிக்கிரீ அமுலை நிறைவேற்றிக்கொள்ளவேண்டியது.

டிக்கிரீ துகை 100 ரூபாய்களுக்கு மேற்படாதபட்சத்தில், அந்த டிக்கிரீ அமுலை கிராம முன்சீப் மூலமாக நிறைவேற் றிக்கொள்ளலாம். 20 ரூபாயிக்கு மேற்படாத வியாச் சியங்கள் விஷயமாய் கிராம முன்சீப்கள் கொடுத்த டிக்கிரீ அமுல் நடத்தப்பட்டபடியே பஞ்சாயத்தார்களுடைய டிக் கிரீயும் நடத்தப்படவேண்டும்.

421. பஞ்சாயத்தார்களில் யாராவது, லஞ்சம் வாங்கிக் கொண்டால், 3 மாசங்களுக்குள்ளாக, ஜில்லா ஜட்ஜீ யவர் களிடத்தில் பிராது தாக்கல் செய்துக்கொள்ளவேண்டியது.

லஞ்சம் வாங்கிக்கொண்ட சங்கதி ருசுவானால், லஞ்சத் தொகை எவ்வளவோ அவ்வளவு அபராதம் லஞ்சம் கொ டுத்தவனுக்கு விதிக்கப்படும். அதற்கு மூன்றளவு தொகை யும், வியாச்சியத்தின் செலவு முழுவதும் அபராதமாக லஞ் சம் வாங்கிக்கொண்ட பஞ்சாயத்தாருக்கு விதிக்கப்படும்.

லஞ்சம் வாங்கிக்கொண்ட சங்கதி ருசுவாகாமல் போனால், பிராது செய்தவனிடத்திலிருந்து, பிராது செய்யப்பட்ட பஞ்சாயத்துதாரனுக்கு பிடித்த செலவும், நஷ்டமும், கொடுப்பிக்கப்படும். மேலும் அந்த பிராது செய்தவனுக்கு, லஞ்சத்தொகைக்கு மேற்படாமல் அபராதமும் போடப்படும்.

422. வியாச்சிய விஷயமாய் சாட்சி சொல்லவேண்டியவர்களை, பஞ்சாயத்தில் சேர்க்கக்கூடாது.

423. தீர்ப்பு சொல்லுவதற்கு முன்பாக, பஞ்சாயத்தார்களில் யாராவது இறந்துபோனால், பஞ்சாயத்தும், வாதிப் பிரதிவாதிகள் தாக்கல்செய்த கரார்நாமாவும் ரத்தாய்ப் போனதாக நினைக்கப்படும்.

அப்பொழுது வாதிப் பிரதிவாதிகள் வேறு பஞ்சாயத்தாவது கேட்டுக்கொள்ளலாம். அல்லது அந்த வியாச்சியத்தை கோர்ட்டிலாவது தாக்கல் செய்துக்கொள்ளலாம். வேறு பஞ்சாயத்து கேட்டுக்கொண்ட பட்சத்தில், முன் பஞ்சாயத்தார்களால் எழுதப்பட்டு சாட்சியினுடைய கையெழுத்தாவது, குறியாவது போடப்பட்ட வாக்குமூலங்களை புதிய பஞ்சாயத்தார்கள் உபயோகித்துக்கொள்ளலாம்.

424. ☞ மேல் சொல்லப்பட்ட சங்கதிகள் எல்லாம் 1816-ம் ஷ௵ 5-வது நம்பர் ரெகுலேஷன்படிக்கி அசையும்பொருள் விஷயமாயாவது, ரொக்கத்தொகை விஷயமாயாவது, கிராம முன்சீப் மூலமாக ஏர்ப்படுத்தப்பட்ட பஞ்சாயத்துகளுக்கு சம்மந்தப்படுகிறது.

அசையாப்பொருளைக் குறித்தாவது, அவதூறு முதலியவைகளால் உண்டான நஷ்டத்தைக் குறித்தாவது, வியாச்சியங்களை தீர்க்கும்பொருட்டு பஞ்சாயத்தை சேர்ப்பதற்கும், அப்படிப்பட்ட பஞ்சாயத்தில் சேர்மாட்டேனென்று நிராகரித்தவர்களுக்கு அபராதம் விதிப்பதற்கும் ஆகிய இவைகளுக்கு, மேல்சொல்லப்பட்ட ரெகுலேஷனால் கிராமமுன்சீபுக்கு அதிகாரமில்லை.

425. ☞ அசையாப் பொருளைக்குறித்த வியாச்சியங்களின் விஷயமாயும், மற்றெல்லாவிதமான வியாச்சியங்களின் விஷயமாயும், வாதிப் பிரதிவாதிகள் தாங்களேயாவது, அல்லது பெரிய மனிதர்களின் மூலமாயாவது, மத்தியஸ்தனை அல்லது மத்தியஸ்தர்களை அல்லது பஞ்சாயத்தை ஏற்படுத்திக்கொண்டு, அவர்களுடைய தீர்ப்பைப்பெறலாம். அப்படி அடையப்பட்ட தீர்ப்பை வாதியாவது, பிரதிவாதியாவது, கோர்ட்டில் தாக்கல் செய்தால், கோர்ட்டார், அதின்படிக்கி டிக்கிரி பிரப்பிப்பார்கள்.

426. எல்லை, நீர், பயிர், ஆகிய இவைகளைக்குறித்து தகரார்கள் நேரிட்டபோது, சிவில் கோர்ட்டில் வியாச்சியம் தாக்கல் செய்வதற்கு பதிலாக, 1816-ம் ஹு 12-வது ரெகுலேஷன்படிக்கு கலெக்டரவர்களிடத்தில் வியாச்சியம் கொண்டுவந்து, தகராரை தீர்க்கும்பொருட்டு கிராம முன்சீப் மூலமாக கிராம பஞ்சாயத்தையாவது டிஸ்திரிக்ட்டு முன்சீப் மூலமாக டிஸ்திரிக்ட்டு பஞ்சாயத்தையாவது ஏற்படுத்தப்படும்படியாக உத்திரவைப்பெறலாம். அப்படிப்பட்ட பஞ்சாயத்தார்செய்த தீர்ப்பை கலெக்டர் அவர்கள் காயம் செய்வார்.

பஞ்சாயத்தார் பட்சபாதம் செய்தால், அதைக்குறித்து 20 நாள்களுக்குள்ளாக, கலெக்ட்டரவர்களிடத்தில் அர்ஜீ கொடுத்துக்கொள்ள வேண்டியது. நிஷ்காரணமாய் அர்ஜீ கொடுத்தால், 100 ரூபாய் வரைக்கும் அபராதம் போடப்படும்.

மேல் சொல்லப்பட்ட 1816-ம் ஹுத்திய 12-வது ரெகுலேஷன்படிக்கு கலெக்டர் அவர்களிடத்தில் தாக்கல் செய்யும் வியாச்சியங்களுக்கு, ஸ்டாம்பு அவசியமில்லை.

*** அற்பகுற்றங்களின் விசாரணை.

427. அற்பசண்டை, தாக்குதல், அடித்தல், திட்டுதல் முதலிய அற்பகுற்றங்கள் விஷயத்தில் 1816-ம் ஹுத்திய

11-வது ரெகுலேஷனுலும் ஒரு ரூபாயிக்கு மேற்படாத சுவல்ப திருடுகளின் விஷயமாய் 1821-ம் ஸூத்திய 4-ம் நம்பர் ரெகுலேஷனுலும் வாய்மொழியில் விசாரணை செய்யும்பொருட்டு கிராம முன்சீபுகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

428. மேல் சொல்லப்பட்ட அல்ப குற்றங்களின் விஷயமாய் கிராம முன்சீப் விசாரணை செய்தபோது, குற்றம் ருசுவாய், தண்டிக்கத்தகுந்ததாக தோன்றினுல் குற்றவாளிக்கு 12 மணி நேரம், அதாவது நான்கு ஜாமங்களுக்கு அதிகப்படாமல், கிராம சாவடியில் காவல் விதிக்கலாம்.

குற்றவாளி ஈனகுலஸ்தனுய் தொழுவில் போடுவதற்கு தகுந்தவனுயிருந்தால் கிராம சாவடியில் காவலுக்கு பதிலாக 6 மணி காலம் அதாவது இரண்டுஜாம நேரத்திற்கு மேற்படாமல் அவனை தொழுவில் போட்டுவைக்கலாம்.

பறையன், சக்கிலி முதலிய தாழ்ந்த குலஸ்தர்களுக்கே தவிற தட்டான், தச்சன், கருமான், குடியானவன் முலுக்கன் முதலியவர்களுக்கு தொழுசிட்சை விதிக்கத்தக்கதல்ல.

குற்றவாளிகளுக்கு அபராதம் போடுவதற்கு கிராம முன்சீபுக்கு அதிகாரமில்லை.

429. மேல் பியாராவில் சொல்லியபடி, தண்டனை விதிக்கப்பட்ட கேசுகளுக்கு, ஓர் ரிஜிஸ்டர் எழுதிவைத்து, அதினுடைய எக்ஸ்டிராக்ட்டை அந்தந்த மாச கடைசியில் மாஜிஸ்டிரேட்டாரவர்களுக்கு, கிராம முன்சீப் அனுப்பவேண்டும்.

430. வீட்டுக்குள் பிரவேசித்து ஒருவன் களவுசெய்தபோதும், வேலைக்காரனுவது, குமஸ்தாவாவது, எஜமானனுடைய சொத்தை திருடினபோதும், குற்றவாளி பேர்போன துர்மார்க்கனுயிருந்தபோதும், திருடப்பட்ட சொத்தின் விலை 1 ரூபாயிக்கு உள்பட்டதாயிருந்தபோதிலும் கூட- விசாரணை செய்வதற்கு கிராம முன்சீபுக்கு அதிகாரமில்லை.

திருடப்பட்ட சொத்தின்விலை 1 ரூபாயிக்கு உட்பட்டிருந்தபோதிலும், திருட்டுசொத்தை வாங்கிக்கொண்டவனை விசாரிப்பதற்கு கிராம முன்சீபுக்கு அதிகாரமில்லை.

ஆட்டுக்குட்டி, விரகு, வைக்கோல், சர்க்கார் செடிகள் இப்பேர்பட்டவைகளின் விஷயமாய் நடந்த களவுகள், 1 ரூபாயிக்கு மேற்படாமலிருந்தால், கிராம முன்சீப் விசாரிக்கலாம்.

வீட்டின்மேலாவது, பழக்கடையிலாவது, வீட்டுககு வெளியே தாழ்வாரத்திலாவது இருந்த துணிமுதலிய வஸ்துக்கள், திருடப்பட்டபோது, அந்த வஸ்துக்களின் விலை 1 ரூபாயிக்கு மேல்படாமலிருந்தால், கிராம முன்சீப் விசாரணை செய்யலாம்.

தங்கள் அதிகாரத்திற்கு உள்படுத்திக்கொண்டு விசாரணை செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு, திருடப்பட்ட சொத்துக்கு கிராம முன்சீபுகள் குறைந்தவிலை மதிக்கக்கூடாது.

431. களவு, தாக்குதல் முதலிய குறறங்களின் சுபாவத்தைப்பற்றியும் தற்செயல், சிறுவயது, பைத்தியம், முதலியவைகளால் செய்யப்பட்ட குற்றங்கள் மன்னிக்கப்படுமென்கிற விஷயத்தைப்பற்றியும்-இந்த புத்தகத்தின் பினல்கோடு சுருக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த விஷயங்களை கிராம முன்சீபுகள் நன்ருய் படித்து ஞியாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டியது.

432. மேல்சொல்லப்பட்ட அல்ப குற்றங்களின் விஷயமாய், கிராம முன்சீபினிடத்தில் எழுத்துமூலமாய் பிராது தாக்கல்செய்யவேண்டிய அவசியமில்லை. எழுத்துமூலமாய் பிராது தாக்கல் செய்தாலும், பிராது அர்ஜிக்கு ஸ்டாம்பு ஒட்டவேண்டியது அவசியமில்லை.

433. தன் கிராமத்தில் நடந்த குற்றங்களைத்தவிற, வேறு கிராமங்களில் நடந்த குற்றங்களை விசாரிப்பதற்கு கிராம முன்சீபுக்கு அதிகாரமில்லை.

434. கிராம முன்சீபினல் விதிக்கப்பட்ட காவலிலிருந்தாவது, தொழுவிலிருந்தாவது, தப்பித்துக்கொண்டு போகிறவர்களும், தப்பித்துக்கொண்டு போவதற்கு எத்தினப்படுகிறவர்களும், இந்த புத்தகத்தின் 115-வது பியாராவில் சொல்லியபடிக்கு, பினல்கோடு, 224-வது செக்ஷன்படி குற்றவாளிகளாகிருர்கள்.

மேலும், மேல்சொல்லியபடி தப்பித்துக்கொண்டு போவதற்கு தூண்டுகிறவர்களும், சகாயம் செய்கிறவர்களும், உடந்தைகளாக தண்டிக்கப்படுவார்கள்.

*** மேல் அதிகாரிகளுக்கு ரிபோர்ட்டு வகைரு.

435. கிராமத்தில் குற்றங்கள் நடந்தபோது, அவைகளைப்பற்றி மேலதிகாரிகளுக்கு ரிபோர்ட்டு செய்வதும், அவைகளைக்குறித்து சங்கதிகளைக்கண்டுபிடித்து, குற்றவாளிகளை தண்டனைக்குள்படுத்துவதற்கு வேண்டிய பிரயத்தினங்களை செய்வதும், கிராமத்தில் ஏதாவது குற்றம் நடக்கப்போகிறதென்று தெரியவந்தபொழுது, அதின் விஷயமாய் போலீசாருக்கு தெரியப்படுத்தி அந்த குற்றம் நடக்காமல் தடுக்கும்பொருட்டு தகுந்த பிரயத்தினங்கள் செய்வதும், எல்லாவிஷயங்களிலும் போலீசாருக்கு தகுந்த சகாயம் செய்வதும் கிராம முன்சீபினுடைய கடமையாயிருக்கிறது.

கிராம முன்சீப், தன்கிராமத்தில் நடந்த குறறங்களைக் குறித்து மேலதிகாரிகளுக்கு ரிபோர்ட்டு அனுப்பாமல் போவதும், தப்பு ரிபோர்டடு அனுப்புவதும், பினல்கோடு, 176, 202-177, 203, செக்ஷன்களின்படி குற்றங்களாயிருக்கின்றன. [இந்த புஸ்தகத்தில் 55, 56, 57 பியாராக்களைப்பார்க்க வேண்டியது.]

குற்றங்கள் நடக்காமல் தடுப்பது, குற்றவாளிகளை பிடித்துக்கொள்வது, சர்க்காருடைய அமலை செலுத்துவது, இப்பேர்ப்பட்ட விஷயங்களில் கிராம முன்சீப் சகாயம்செய்யாமல்போனால், பினல்கோடு 187-வது செக்ஷன்படி 6 மாசம் வரைக்கும் காவலாவது, 500 ரூபாய் வரைக்கும் அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படலாம்.

436. தற்செயல் மரணமாவது, அனுமானமுள்ள மரணமாவது, கிராமத்தில் நேரிட்டபோது, கிராமமுன்சீப், போலீசாருக்கும், மாஜிஸ்திரேட்டாரவர்களுக்கும், அதின் விஷயமாய் உடனே தெரியப்படுத்தி, அவர்கள் வருகிறவரைக்கும் பிணத்தினிடத்தில் தகுந்த காவல்வைக்கவேண்டியது. போலீசார் வந்த உடனே, கணக்கரையும், இரண்டு மூன்று பேர் பெரிய மனிதர்களையும் கூடவைத்துக்கொண்டு, மேற்படி மரணத்தைப்பற்றி விசாரணை செய்யவேண்டியது.

போலீசாராவது, மாஜிஸ்திரேட்டாரவர்களாவது, சமயத்தில் வருவதற்கு அனுகூலப்படாமல்போனால், இரண்டு மூன்றுபேர் பெரிய மனிதர்களின் முன்பாக கிராமமுன்சீப் விசாரணை செய்து, பிணத்தின்பேரில் அடி,காயம், முதலான அடையாளங்கள் இருந்தால், அவைகளை நன்றாய் விவரித்து மாஜிஸ்திரேட்டாரவர்களுக்கு ரிபோர்ட்டு அனுப்பவேண்டியது.

437. குற்றத்தைக்குறித்த சங்கதிகளை அறிந்துகொள்வதற்காக போலீசார் குற்றம் சாட்டப்பட்டவன் முதலியவர்களை அடித்து, அல்லது இம்சைப்படுத்தி, பயப்படுத்தினபோதும், அக்கிரமமான ஆசைகாட்டிக்கொண்டிருந்தபோதும் கிராம முன்சீப்கள் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்கக்கூடாது. அதைக்குறித்து மாஜிஸ்திரேட்டாரவர்களுக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டியது. [இந்த புத்தகத்தில் 230-வது பியாராவைப் பார்க்கவேண்டியது.]

438. திருட்டுசொத்தைக்குறித்து, நம்பத்தகுந்த சமாசாரம் தெரியவந்து அதின் விஷயமாய் பந்தோபஸ்து செய்வது அவசியமென்று தோன்றினல், கிராம முன்சீப் சோதனை செய்யலாம். அப்படிப்பட்ட சோதனையில் திருட்டுசொத்து அகப்பட்டால், அதையும், குற்றவாளியையும், மாஜிஸ்திரேட்டாரவர்களிடத்திற்கு அனுப்பவேண்டியது.

சூரியோதயத்திற்கு முன்னும், சூரியாஸ்தமானத்திற்குப் பின்னும் வீட்டில் பிரவேசித்து சோதனை செய்யக்கூடாது.

439. கிராமத்தில் யாராவது, திருட்டுத்தனமாக உப்பு பைரிடுகிருர்களென்ருவது, திருட்டுப்பை விற்பனை செய்கிருர்களென்ருவது, வைத்துக்கொண் டிருக்கிருர்களென்ருவது, நம்பத்தகுந்த சமாசாரம் தெரியவந்தால், கிராம முன்சீப் இரண்டு மூன்றுபேர் பெரிய மனிதர்களை கூட அழைத்துக்கொண்டுபோய், சோதனைசெய்து, அப்படிப்பட்ட சோதனையில் கண்டுபிடிக்கப்பட்ட எல்லா உப்பையும் அதற்கு சம்பந்தித்த பாத்திரங்களையும், சாமான்களையும், சுவாதீனப்படுத்திக்கொண்டு, ரிபோர்ட்டுடன் போலீசாரிடத்திற்கு அனுப்பவேண்டியது.

சூரியாஸ்தமனத்திற்கு பின்னும் சூரியோதயத்திற்கு முன்னும் வீட்டுக்குள் நுழைந்து சோதனை செய்யக்கூடாது.

திருட்டு உப்பென்று அறிந்து அப்படிப்பட்ட உப்பை விலைக்கு வாங்கிக்கொள்ளுகிறவர்களும், நிறுக்கிறவர்களும், அளக்கிறவர்களும், குற்றவாளிகளாகிருர்கள். இவர்களுக்கு 3 மாசங்கள் வரைக்கும் காவலாவது, 500 ரூபாய்கள் வரைக்கும் அபராதமாவது, இரண்டுமாவது, விதிக்கப்படும்.

தகுந்த காரணங்களில்லாமல், திருட்டு உப்பு இருக்கிறதென்னும் சாக்குவைத்துக்கொண்டு, யார்வீட்டிலாவது கிராம முன்சீப், சோதனை செய்தால், 6 மாதம் வரைக்கும் காவலுக்காவது, 500 ரூபாய் வரைக்கும், அபராதத்திற்காவது, உள்ளாவான்.

வேண்டுமென்று பொய் சமாசாரத்தைச்சொல்லி, சோதனை செய்வித்தவர்களுக்கு, பினல்கோடு 182-வது செக்ஷன்படிக்கு 6 மாதம் வரைக்கும் காவலாவது, 1000 ரூபாய் வரைக்கும் அபராதமாவது அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும். [இந்த புத்தகத்தில் 148-வது பியாராவை பார்க்க வேண்டியது.]

440. அனுமானப்பட்டத்தக்க ஊர்சுற்றிகள் முதலிய கூட்டங்கள் கிராமத்திலேவந்தால் அவர்களைக்குறித்து அறியக்கூடியவரைக்கும் சங்கதிகளை அறிந்துகொண்டு, போலீசாருக்கும், மாஜிஸ்திரேட்டாரவர்களுக்கும், கிராம முன்சீபு தெரியப்படுத்தவேண்டியது.

441. திருடர் கூட்டங்கள், அனுமானிக்கத்தக்க நபர்கள், முதலானவர்களைக்குறித்த சங்கதிகளை, கிராம முன்சீபுகள் ஒருவருக்கொருவர் தெரியப்படுத்திக்கொண்டு, குற்றவாளிகளை பிடிப்பதைக்குறித்தும், தேசத்தின் பத்திரத்தின் பொருட்டும், க்ஷேமத்தின் பொருட்டும், ஒருவருக்கொருவர் சகாயம் செய்துக்கொண்டிருக்கவேண்டியது.

442. வியவிசாயத்தினாலல்லாமல், வர்த்தகமூலமாயாவது வட்டிவியாபாரம் முதலியவைகளின் மூலமாயாவது, வருஷம் 1க்கு 500 ரூபாய் அல்லது அதற்குமேல்பட்டு வரும்படி அடைகிறவர்களுடைய பேர்களும், அவர்களுக்குக் கிடைக்கும் சுமார் வரும்படியையும், அவர்களுக்கு இன்கம்டாக்ஸ் போட்டுவைக்கும்பொருட்டு தாசில்தார் அவர்களுக்கு தெரியப்படுத்திக்கொண் டிருக்கவேண்டியது.

443. பூமியில், அல்லது சுவர் முதலியவைகளில் பத்து ரூபாயிக்கு மேற்பட்ட, பணமாவது, சொத்தாவது, கிராமத்தில் யாருக்காவது அகப்பட்டால், அந்த சங்கதியை கிராம உத்தியோகஸ்தர்கள், தாசில்தாரவர்களுக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டியது.

*** பலாத்காரமாக வேலைசெய்வித்தல்.

444. பலாத்காரமாக வேலைக்காரர்களைக்கொண்டு வேலை செய்விப்பதைக்குறித்து 1858-ம் ஷூ த்திய 1-வது நம்பர் ஆக்ட்டு ஏர்ப்படுத்தப்பட்டிருக்கிறது.

445. ஏரிக்கரைகள், கால்வாய்கரைகள், ஆற்றணைக்கட்டுகள், முதலியவைகள் தற்செயலாய் உடைப்பெடுத்துக்கொண்டபோதும், உடைப்பெடுத்துக்கொள்ளும் ஸ்திதியில இருந்தபோதும் - அதினுல் உண்டாகும் வெள்ளத்தைத் தடுத்து அபாயம் தப்புவிக்கும்பொருட்டு மரம்மதுசெய்து பந்தோபஸ்து செய்விப்பதற்காக - மேற்படி கரைகள், அணைக்கட்டுகள் முதலியவைகளுக்காக ஏர்ப்படுத்தப்பட்ட ஆபீஸராவது, அவர் ஆஜராயில்லாவிடில், தாசீல்தாரவர்களாவது, வேலைக்காரர்களை சப்பளைசெய்யும்படி அக்கம்பக்கம் கிராம முன்சீப்களுக்கு, தாக்கீது அனுப்பலாம்.

அப்போது மேற்படி கிராம முன்சீப்கள், தங்கள் தங்கள் கிராமங்களிலிருக்கும் வேலைக்காரர்களில், சரீரதாரட்டியமுள்ள ஆண் ஆள்களை, மரம்மத்துக்காக வரவேண்டுமென்று கேட்கலாம். அப்படி கேட்கப்பட்டபோது, வரமாட்டேனென்று சொல்லுகிற பிரதி நபரும், 100 ரூபாய்வரைக்கும் அபராதத்திற்காவது 1 மாசம்வரைக்கும் வெருங்காவலுக்காவது, அல்லது இரண்டிற்குமாவது உள்ளாவான்.

வந்து வேலைசெய்யும் ஆள்களுக்கு மாமூல் ரேட்டில் உயர்ந்தரேட்டுபடிக்கு கூலிகொடுக்கப்படும். இராக்காலத்தில் வேலைசெய்தால், இரட்டிப்பு கூலி கொடுக்கப்படும்.

மேலும், மேல்சொல்லப்பட்ட உடைப்புகளை அடைக்கும்பொருட்டு, வைக்கோல், சோளத்தட்டு, மூங்கில், தழை முதலியவைகளை சப்பளை செய்யும்படியாக மேற்படி ஆபீஸராவது தாசீல்தாரராவது, கேட்டால், அவைகளை, கிராமஸ்தர்களைக் கேட்டு வாங்கிக்கொண்டு, கிராம முன்சீப் சப்பளை செய்யலாம். ஜரூராயிருந்தால், அகப்பட்ட இடத்தில்

எடுத்துக்கொண்டு, ரசீது கொடுத்துவிட்டு சப்பளை செய்யலாம். அப்படி எடுத்துக்கொண்டு போகப்பட்ட சாமான்களின் கிரயமும், அப்படி எடுத்துக்கொண்டு போனதினுல் நஷ்டம் உண்டாயிருந்தால், அந்த நஷ்டமும், சர்க்காரார், கொடுப்பார்கள். நஷ்டத்தைக்குறித்து விவாதம் நேரிட்டால், பஞ்சாயத்தி ஏர்ப்படுத்தப்படும்.

446. மேற்சொன்ன ஆபீஸராவது தாசில்தாரவர்களாவது, ஆசராயில்லாவிடில், ஜரூராயிருக்கும் பட்சத்தில், உடைப்பு உண்டாயிருக்கிற, அல்லது, உண்டாகும் ஸ்திதியில் இருக்கிற, இடத்திற்கு சமீபத்திலிருக்கும் கிராமத்தின் முன்சீப், தானே, சுதாவாய், மேற்பியாராவில் சொல்லப்பட்டபடிக்கு நடத்தலாம். மேலும், வேலைக்காரர்களுக்காகவும், ஜரூரான, வைக்கோல் முதலிய சாமான்களுக்காகவும், அக்கம்பக்கம் கிராம முன்சீப்களுக்கு யாதாஸ்து எழுதலாம்.

447. ஏரிகளில் மண் எடுத்தல், ஏரிகரைகள் மரம்மது செய்தல், நாகதாளிகளை வெட்டி எடுத்தல், இப்படிப்பட்ட வேலைகளை கிராமத்திலிருக்கும் வேலைக்காரர்களால் செய்விப்பது, மாமூலாயிருக்கும்போது, அப்படிப்பட்ட கிராமத்தின் முன்சீப் மேலதிகாரிகளுடைய உத்திரவைப்பெற்று கிராமத்திலிருக்கும் வேலைக்காரர்களை வேலைக்காக அழைக்கலாம். அப்படி அழைக்கப்பட்டபோது வேலைசெய்வதற்கு சம்மதி இல்லாதவர்கள், தாங்கள் செய்யவேண்டிய வேலைக்கு, மாமூல்ரோட்டில் உயர்ந்தரேட்டின்படி இரட்டிப்புக் கூலிகொடுக்கவேண்டியது. விவாதம் நேரிட்டால், மேற்படி கூலிதொகை தீர்மானிப்பதற்கு கிராம பஞ்சாயத்தி ஏர்ப்படுத்தப்படும்.

*** பவுண்டுகளைக் குறித்து.

448. 1871ம் ஞூத்திய, 1-வது நம்பர், பவுண்டு சட்டத்தின்படி கிராம முன்சீப்களில் அனேகர் பௌண்டு கீபர்களாக ஏர்ப்படுத்தப்பட்டிருக்கிறுர்கள்.

449. மாடுகள் பவுண்டுக்கு ஓட்டிக்கொண்டு வரப்பட்ட உடனே, "பௌண்டுகீபர் அவைகளை ஒப்பித்துக்கொண்டு, ஓட்டிக்கொண்டுவந்தவனுக்கு ரசீதுகொடுக்கவேண்டியது."

450. குடிகளுடைய புலங்கள், தோட்டங்கள், புழக்கடைகள், முதலிய இடங்களில் ஆடு, மாடுகள் பிரவேசித்து, கெடுதி செய்துக்கொண்டிருந்தால், மேற்படி புலங்கள், தோட்டங்கள், புழக்கடைகள், எந்த கிராமத்தில் சேர்ந்திருக்கின்றனவோ, அந்த கிராமத்திற்காக ஏர்ப்படுத்தப்பட்ட பவுண்டுக்கு அவைகளை ஓட்டிக்கொண்டு போகவேண்டியது.

ரோட்டுகள், கால்வாய்க்கரைகள், ஏரிகள், சர்க்கார் தோட்டங்கள், தோப்புகள், முதலியவைகளிலாவது, அவைகளின் பக்கங்களிலாவது, ஆடுமாடுகள் ஏறி, நஷ்டம் உண்டாகும்படியாக செய்துக்கொண்டிருந்தபோதும், சுவேச்சையாக திரிந்துகொண்டிருந்தபோதும், அவைகள் மேய்ந்துகொண்டிருந்த இடங்களுக்கு எந்த கிராமத்தினுடைய பவுண்டு சமீபமோ, அந்த பவுண்டுக்கு அவைகளை ஓட்டிக்கொண்டு போகவேண்டியது.

451. யானைக்குப்பவுண்டுசார்ஜி ரூ. 2. ஒட்டை, எருமைக்கடா, எருமை, இவைகளுக்கு அணா 8. குதிரை, குதிரைக்குட்டி, கோவேறுகழுதை, எருது, பசுவு, இவைகளுக்கு அணா 4. கன்றுக்குட்டி, எருமைக்கண்ணு, கழுதை, பன்றி, இவைகளுக்கு அணா. 2. ஆட்டுக்கும், வெள்ளாட்டுக்கும், இவைகளின் குட்டிகளுக்கும் அணா. 1.

452. பவுண்டில் அடைக்கப்பட்ட ஆடுமாடு முதலியவைகளின் சொந்தக்காரனாவது, ஏஜண்டாவது, அவைகளுக்காக கொடுக்கவேண்டிய பவுண்டு சார்ஜியையும், மேய்ச்சல் செலவையும் செலுத்தினால், பௌண்டுகீபர் அவைகளை அவரிடத்தில் ஒப்பித்துவிடவேண்டியது.

7 நாளுக்குள்ளாக ஆடுமாடு முதலியவைகளின் சொந்தக்காரர்கள், அவைகளை விடுவித்துக்கொள்ளாமல் போனால்,

அந்த சங்கதியை தாலூகாவுக்கு தெரியப்படுத்தவேண்டியது. அப்பொழுது, அவர்கள் மேற்படி ஆடுமாடு முதலியவைகளைக்குறித்து நோட்டீசு போட்டு, தண்டோரா மூலமாயும் பிரசித்தப்படுத்தி, அந்த நோட்டீசு தேதிமுதல் 7 நாளுக்குள்ளாக, சொந்தக்காரன்வந்து அவைகளை விடுவித்துக்கொண்டு போகாமல்போனால், அவைகளை ஏலத்தில் விற்பனை செய்துவிடுவார்கள்.

மேற்படி ஏலத்தில்வந்த தொகையில், பவுண்டுசார்ஜி வகைரு செலவுகள்போக மீந்ததொகை சர்க்காரில் 3 மாசம்வரைக்கும் டிபாசிட்டில் வைத்திருந்து அதற்குள்ளாக சொந்தக்காரன் ஆஜராகாமல்போனால், சர்க்காரில் சேர்க்கப்படும்.

453. ஆடுமாடு முதலியவைகளை, யாராவது நிஷ்காரணமாய் பவுண்டில் அடைத்துவைத்தால், அவைகளின் சொந்தக்காரர்களாவது, அவர்களுடைய ஏஜண்டுகளாவது, மாஜிஸ்திரேட்டாரிடத்தில், வாய்மொழி மூலமாயாவது, எழுத்து மூலமாயாவது, பிரியாது செய்துகொள்ளலாம்.

அதின்பேரில், அவர் விசாரணைசெய்து, மேற்படி பிரியாது வாஸ்தவமென்று தோன்றினால், பவுண்டுசார்ஜிவகைரு செலவுகளும், ஆடுமாடுகளை அக்கிரமமாக பவுண்டில் அடைத்ததனால் உண்டான நஷ்டத்திற்காக 100 ரூபாயிக்கு மேற்படாமல் பணமும், பிரதிவாதியினிடத்திலிருந்து கொடுப்பிக்கலாம்.

454. பவுண்டில் அடைப்பதற்காக, ஆடுமாடு முதலியவைகளை ஓட்டிக்கொண்டு போகையில், பலாத்காரமாக தடைசெய்கிறவர்களும், பவுண்டில் அடைத்துவைத்தபிறகு, அவைகளை அக்கிரமமாக ஓட்டிக்கொண்டு போகிறவர்களும், 6 மாசம் வரைக்கும் காவலுக்காவது, 500 ரூபாய் வரைக்கும் அபராதத்திற்காவது, அல்லது இரண்டிற்குமாவது, உள்ளாவார்கள்.

455. பவுண்டில் அடைப்பதற்காக ஆடுமாடு முதலியவைகளை ஓட்டிக்கொண்டு வந்துவிட்டவர்களுக்கு ரசீது கொடுக்க, பௌண்டுகீபர், தடைசொல்லக்கூடாது. மேலும், ரசீது கொடுக்காமல் ஆடுமாடு முதலியவைகளை பவுண்டில் வைத்துக்கொள்ளக் கூடாது.

பவுண்டில் அடைக்கப்பட்ட ஆடுமாடு முதலியவைகளை, பவுண்டு சார்ஜ் வசூல் செய்துக்கொள்ளாமல் விட்டுவிட்ட போதும், அப்படி அடைக்கப்பட்ட ஆடுமாடு முதலியவைகளுக்கு, கிரமமான தீனிபோடாமற் போனபோதும், பௌண்டுகீபர் 50 ரூபாய்வரைக்கும் அபராதத்திற்கு உள்ளாவான்.

456. பயிர் முதலியவைகளிலாவது, சர்க்கார் ரோட்டிலாவது, வேறெந்த இடத்திலாவது பன்றிகள் பிரவேசித்து, நஷ்டத்தை உண்டாக்கினால், அவைகளை பவுண்டுக்குள், ஓட்டி, பவுண்டு சார்ஜி வசூல் செய்வதுமல்லாமல், மாஜீஸ்திரேட்டாரிடத்தில், பிரியாதுசெய்து, மேற்படி பன்றிகளின் சொந்தக்காரனுக்கு 10 ரூபாய் வரைக்கும், அபராதம் போட்டுவைக்கலாம்.

457. ஆடுமாடு முதலியவைகளால், பயிர் முதலியவைகளுக்கு நஷ்டமுண்டானபோது, அப்படிப்பட்ட நஷ்டத்திற்காக அந்த ஆடுமாடு முதலியவைகளுடைய, சொந்தக்காரர்களின்பேரில், சிவில்கோர்ட்டில், தாவா கொண்டுவரலாம்.

கிராம உத்தியோகஸ்தர் விஷயம் முற்றிற்று.

சில்லரை விஷயங்கள்.

*** தாவா.

458. அசையும்பொருள், அசையாப்பொருள்களின் விஷயமாயும், தண்ணீர் பாத்தியதை, சுவர்பாத்தியதை, வழிநடை பாத்தியதை முதலிய அனுபவத்தில் வந்துகொண்டிருக்கும் பாத்தியதைகளைக் குறித்தும், மோசடியாய் எழுதிக்கொள்ளப்பட்ட தஸ்தாவேஜுகளை ரத்துசெய்வித்துக் கொள்ளும்பொருட்டும், தஸ்தாவேஜுகளில் பிழைகளைத் திருத்துப்பாடு செய்வித்துக் கொள்ளும்பொருட்டும், கிரமமான உடன்படிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளும்பொருட்டும், அக்கிரமமான உடன்படிக்கைகளை ரத்து செய்வித்துக் கொள்ளும்பொருட்டும், உடன்படிக்கையின்படி நடந்துகொள்ளாமல் தவறிப்போவதினுலாவது, மற்றெந்தவிதத்தினுலாவது நேரிட்ட நஷ்டத்தைக் குறித்தும், மானநஷ்ட முதலியவைகளைக்குறித்தும், வேலைக்காரர்களை ஒருவருடைய ஆதீனத்திலிருந்து பிரித்ததினுலுண்டான நஷ்டத்தைக் குறித்தும், மற்றும் இப்படிப்பட்ட அனேகவிஷயங்களைக் குறித்தும், கோர்ட்டில் தாவாக்கள் கொண்டுவரப்படுகின்றன.

459. எசமானனுடைய உத்திரவின்படி, வேலைக்காரன் வேலைசெய்துகொண்டிருக்கும்போது, அப்படிப்பட்ட வேலையினுல் யாருக்காவது நஷ்டம் நேரிட்டால், எசமானன் பேரில் தாவா கொண்டுவரலாம். ஆனுல் கண்டிராக்ட்டர் மூலமாக வேலை நடத்திக்கொண்டிருக்கும்போது, கண்டிராக்ட்டருடைய வேலைக்காரர்கள் செய்ததப்பிதங்களுக்கு கண்டிராக்ட்டர் உத்திரவாதியேயல்லாமல், எசமானன் சாதாரணமாக உத்திரவாதியாகமாட்டான்.

460. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் செய்யும் தப்பிதங்களால் நஷ்டம் உண்டானல், மேலதிகாரிகள் உத்திரவாதிகளாகமாட்டார்கள்.

இஞ்சினீர் இலாகா உத்தியோகஸ்தர்கள், விரோதத்தினலாவது, மற்றெந்தகாரணத்தினலாவது, தருணத்தில், பயிர்களுக்கு தண்ணீர்விடாமல் அக்கிரமமாய் நஷ்டம் உண்டுபண்ணினல், அப்படிப்பட்ட நஷ்டத்தைக்குறித்து, அவர்கள் பேரில் தாவாகொண்டுவரலாம்.

461. ஒருவனுடைய நிலத்திலேயாவது, புலத்திலேயாவது, மற்ருெருவன் நடப்பது, ஒருவனுடைய கிணற்றிலிருந்து, மற்ருெருவன், தண்ணீர்கொண்டுபோவது, ஒருவனுடைய சுவற்றின்பேரில் மற்ருெருவனுடைய வீட்டு கூரையை சுமத்துவது, ஒருவனுடைய நிலத்தில் மற்ருெருவனுடைய இரப்பு நீர் விழுவது, ஆகிய இவைகள் 20 வருஷகாலம் யாதொரு தடையும் இல்லாமல் அனுபவிக்கப்பட்டிருந்தால், அவைகளின் விஷயமாய் பாத்தியம் உண்டாகிறது. அப்படி பாத்தியம் ஏர்ப்பட்ட பிறகு அவைகளை அனுபவிக்கும் விஷயத்தில் தடைசெய்யப்பட்டால், தாவாகொண்டுவரலாம்.

உடன்படிக்கை செய்துக்கொண்டு மேற்சொன்னபடி எவ்வளவுகாலம் அனுபவிக்கப்பட்டபோதிலும் பாத்தியதை உண்டாகமாட்டாது.

462. தச்சன், கருமான், கன்னன், மேளக்காரன் முதலியவர்கள், அக்கம்பக்கத்தாருடைய சுகத்தைக் கெடுக்கும்படியாய் அதிகமாக சத்தம்செய்தால், அப்படிப்பட்ட சத்தத்தை நிருத்தும்பொருட்டு அவர்கள்பேரில் தாவாகொண்டுவரலாம். ஆனல், அவர்கள், 20 வருஷகாலமாக அப்படியே யாதொருதடையும் இல்லாமல் சத்தம்செய்துகொண்டு வேலைசெய்துக்கொண்டிருந்தால், தாவா தள்ளிவிடப்படும்.

அக்கம் பக்கத்தாருடைய சுகத்திற்கு கெடுதி நேரிடாமலிருக்கும்படியாக, தட்டான் முதலியவர்கள் வேலைசெய்து

கொண்டிருப்பதினால் சொல்ப சத்தமுண்டானால், அதைக் குறித்து தாவாகொண்டுவரக் கூடாது. ஆனால், தட்டான் வேலைசெய்வதினாலேயாவது, நெல், அவுல் முதலியவைகளை குத்துவதினாலாவது தூக்கம் பிடிக்காமலிருக்கும்படி அதிக சத்தம் உண்டானால், தாவாசெய்து, அப்படிப்பட்ட சத்தத்தை நிறுத்தும்படியாகசெய்யலாம். ஆனால் 20 வருஷகாலமாய் அப்படி சத்தம்செய்துக்கொண்டு வேலைசெய்வது மாமூலாக ஏர்ப்பட்டிருந்தால், தாவாசெய்யக்கூடாது.

463. ஒருவன் வீட்டிற்கு பக்கத்திலிருக்கும் மற்றொருவனுடைய நிலம் 20 வருஷகாலமாய் காலியாக இருந்தால் மேற்படி வீட்டிற்குள் காற்றும், வெளிச்சமும் வராமலிருக்கும்படியாயாவது, அல்லது குறைந்துபோகும்படியாயாவது அந்த காலி நிலத்தில் வீடுகட்டக்கூடாது. அப்படிகட்ட ஆரம்பித்தால் தாவாகொண்டுவந்து அதை நிருத்தலாம்.

464. அவரவர்கள் தங்கள் தங்கள் வீட்டில் இஷ்டமான இடத்தில் ஜன்னல்கள் வைத்துக்கொள்ளலாம். அப்படி ஜன்னல்கள் வைத்துக்கொண்டபோது அக்கம்பக்கத்தார் தங்கள் மறைவுகெட்டுப்போயிற்றென்று தடைசெய்யக்கூடாது. ஆனால், அவர்கள், அந்த ஜன்னலுக்கு குறுக்கே தங்கள் ஸ்தலத்தில், சுவராவது, தடுக்காவது கட்டிக்கொள்ளலாம். அப்படி குறுக்கே கட்டுவதினால் காற்றும், வெளிச்சமும் வராமற் போனபோதிலும் சும்மா இருக்கவேண்டுமேயல்லாமல், குறுக்கே கட்டப்பட்டசுவரை அல்லது தடுக்கையை எடுப்பிப்பதற்குக்கூடாது.

ஆனால், 20 வருஷகாலமாக யாதொரு தடையும் இல்லாமல், ஜன்னல் இருந்திருந்தால், அதற்கு குறுக்கே, சுவர், அல்லது தடுக்கு அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்கள், கட்டக்கூடாது.

465. நிலம், புலம், தண்ணீர் பாத்தியதை, வழி நடை பாத்தியதை முதலியவைகளின் விஷயமாய், விவாதமுண்டாய் ஜனங்களுடைய அமரிக்கையைக் கெடுக்கும்படியான கலகம் நடந்துகொண்டிருந்தபோதும், கலகம் உண்டாவதற்கு சித்த

மாயிருந்தபோதும், கலெக்ட்டரவர்களாவது, சப்கலெட்டரவர்களாவது, டிவிஜன் ஆபீசர் அவர்களாவது விசாரணை செய்து, நியாயமான சுவதந்திரம் இன்னாரதென்னும் சங்கதியில் பிரவேசிக்காமலே, மேற்படி, நிலம் புலம் முதலியவைகள் அதுவரைக்கும் யாருடைய சுவாதீனத்தில் இருந்ததாக தெரியவருகிறதோ, அவருடைய சுவாதீனத்திலேயே, சிவில் கோட்டாருடைய உத்திரவாகிறவரைக்கும், இருக்கவேண்டியதென்றும்-மேலும், மேல்சொல்லப்பட்ட தண்ணீர் சுவதந்திரங்கள், வழிநடை சுதந்திரங்கள் முதலியவைகள், அதுவரைக்கும், எப்படி மாமூலாய் நடந்துகொண்டுவந்ததாக அகப்படுகிறதோ, அப்படியே, சிவில்கோர்ட்டாரவர்களுடைய உத்திரவாகிறவரைக்கும், நடந்துகொண்டு வரவேண்டியதென்றும்--இதின் விஷயமாய், எதிர்கட்சிக்காரர்கள், சிவில் வியாச்சியம் செய்து நியாயமடையலாம் என்றும்-உத்திரவுசெய்வார்கள்.

*** பாபர்வியாச்சியங்கள்.

466. கட்சிக்காரன், ஒன்றுமில்லாத ஏழையாயிருந்தால், கோர்ட்டாருடைய உத்திரவைப்பெற்று, பாபர் வியாச்சியம் கொண்டுவரலாம். வியாச்சியம் அனுகூலமானால் டிக்கிரீ தொகையிலிருந்து, கோர்ட்டு செலவுகள், முதலில் எடுத்துக்கொள்ளப்படும். பிரதிகூலமானால் கோர்ட்டுசெலவுகள், வாதிகொடுக்கவேண்டியதென்று, உத்திரவு செய்யப்படும்.

467. தொந்திரவு செய்யவேண்டுமென்கிற கெட்ட எண்ணத்தோடு அக்கிரமமாய் பாபர்வியாச்சியம் கொண்டுவந்தால், 100 ரூ. வரைக்கும் அபராதமாவது, 1-மாசம் வரைக்கும் காவலாவது, அல்லது இரண்டுமாவது, அப்படிப்பட்ட பாபர்வியாச்சியம் கொண்டுவந்த வாதிக்கு விதிக்கப்படும்.

468. பாபர் வியாச்சியம் கொண்டுவருவதற்கு, கோர்ட்டார் உத்திரவு கொடுக்காமல்போனால், அதின்பேரில் அப்பீல் இல்லை. மானநஷ்டத்தைப்பற்றி பாபர் வியாச்சியம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

*** சிவில் ஜெயில்.

469. டிக்கிரி தொகையை செலுத்தாமல்போனால், பிரதிவாதியை காவலில் வைக்கும்பொருட்டு டிக்கிரிதாரன், மனுகொடுத்துக்கொள்ளலாம். அதின்பேரில், யுக்தமென்று தோன்றினால், கோர்ட்டார், பிரதிவாதியை வாரண்டு மூலமாக வரவழைத்து, காவலில் வைக்கலாம். ஆனால், பிரதிவாதி மிகவும் ஏழையாயிருந்து, கடன்காரர்களை மோசம் செய்யவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு ஒன்றும் செய்யாதிருந்தால் அப்படிப்பட்டவனை காவலில் வைக்க சம்மதிக்கமாட்டார்கள். மேலும், கடனாளி காயிலாவாயிருந்தால், அவனைக் காவலில் வைக்காமல் விட்டுவிடுவார்கள்.

470. கடன்விஷயமாய் ஸ்திரீகளின்பேரில் டிக்கிரியானபோது, அப்படிப்பட்ட டிக்கிரிதொகை அவர்களுடைய சொத்தின்பேரில் வசூல்செய்துகொள்ளவேண்டுமேயல்லாமல், அதின்பொருட்டு, அவர்களை காவலில் வைக்கவேண்டுமென்று மனுகொடுத்தால் அந்தமனு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

471. கோர்ட்டார் பிரதிவாதியை காவலில் வைத்தபோது, கடன் 50 ரூபாய்க்கு மேற்படாமலிருந்தால் 6 வாரங்களுக்குமேல் வைக்கக்கூடாது. 50 ரூபாய்க்கு மேற்பட்டால் 6 மாசங்களுக்குமேல் வைக்கக்கூடாது.

472. சிவில்காவல் அனுபவித்ததினால் கடன்தீர்ந்துபோனதாக எண்ணப்படமாட்டாது. ஆனால் அதேபாக்கித்தொகைக்காக மறுபடியும் காவல் விதிக்கப்படமாட்டாது. கடனாளிக்கு சொத்துக்கிடைத்தபோது கடனை வசூல்செய்துக்கொள்ளலாம்.

*** இன்சால்மெண்ட்டு.

473. கடனாளி கடனுக்காக காவலில் வைக்கப்பட்டபோதும், வாரண்டில் பிடிக்கப்பட்டபோதும், அவனுடைய சொத்தை ஜப்திபண்ணும்படி உத்திரவு செய்யப்பட்டபோ

தும், அந்த கடனாளி, தனக்குள்ள ஆஸ்தியையும், கடன்கரையும் கண்டெழுதி, இன்சால்மெண்ட்டுக்காக, ஜில்லா கோர்ட்டில், மனுகொடுத்துக்கொள்ளலாம்.

அதின் பேரில், கோர்ட்டார் செய்யும் விசாரணையில் கடனாளி தன்னுடைய சொத்தில் எதையும் மறைக்கவில்லையென்றும், கடன்காரர்களை மோசஞ்செய்யவேணுமென்கிற எண்ணத்தோடு, எந்தகாரியமும் செய்யவில்லையென்றும், காணப்பட்டால், கோர்ட்டார் மேற்படி இன்சால்மெண்டு மனுவை ஏற்றுக்கொண்டு கடனாளியை விடுவிப்பார்கள்.

474. இன்சால்மெண்ட்டு பெற்ற பிறகு முந்திய கடன்களுக்காக கடனாளியை காவலில் வைக்கக்கூடாது. ஆனால், பிறகு அவன் ஆஸ்தி சம்பாதித்தால் கடனில் மூன்றிலொரு பங்கு தீருகிறவரையிலும், அந்த ஆஸ்தியின்பேரில், இன்சால்மெண்ட்டு பெற்று 12 வருஷங்களுக்குள்ளாக டிக்கிரிகளை நிறைவேற்றலாம்.

*** சீவில் அப்பீல்.

475. முன்சிப் கோர்ட்டாருடைய தீர்ப்பின்பேரில் ஜில்லா கோர்ட்டாரவர்களுக்கும் - ஜில்லா கோர்ட்டாருடைய தீர்ப்பின்பேரில் ஹைகோர்ட்டாருக்கும் அப்பீல் ஏர்ப்படுத்தப்பட்டிருக்கிறது.

சப்ஜட்ஜீயவர்களுடைய தீர்ப்பின்பேரில் அப்பீல் — வியாச்சியமொத்தம் ரூ. 5000த்துக்கு மேற்படாமல்போனால், டிஸ்திரிக்ட்டு கோர்ட்டிலும், ரூ. 5000த்துக்கு மேற்பட்டிருந்தால், ஹைகோர்ட்டிலும் - தாக்கல்செய்யவேண்டியது.

வியாச்சியமொத்தம் ரூ. 10,000 த்துக்குக் கீழ்ப்படாமலிருந்தால் பிரிவீகௌன்சிலுக்கு அதாவது சீமைக்கு, கடைசீ அப்பீல் செய்துகொள்ளலாம்.

476. சிவில் விஷயங்களில் செகண்டு அப்பீல், அதாவது அப்பீல் தீர்ப்பின்பேரில் அப்பீல்,செய்துக்கொள்ளலாம். ஆனல் கீழ்கோர்ட்டாருடைய நடவடிக்கைகளில் முக்கியமான பிசகாவது, லோபமாவது, லா பாய்ண்டு விஷயமான பிசகாவது இருந்தாலொழிய, செகண்டு அப்பீல் அங்கீகரிக்கப் படமாட்டாது.

சாட்சியத்தை கீழ்கோர்ட்டார் நன்ருய் ஆலோசிக்கவில்லை என்னும் ஏது செகண்டு அப்பீலுக்கு பிரயோஜனப் படாது.

500 ரூபாய்க்கு மேற்படாத ரொக்கத்தொகையைக்குறித்தாவது, 500 ரூபாய் மதிப்புக்கு மேற்படாத அசையும்பொருளைக்குறித்தாவது, கொண்டுவரப்பட்ட வியாச்சியங்களில் கொடுக்கப்பட்ட தீர்ப்புகளின்பேரில் செகண்டு அப்பீலில்லை.

477. அப்பீல் இல்லாமல்போனல், கீழ்கோர்ட்டாருடைய நடவடிக்கையில் முக்கியமான பிசகாவது, சட்டத்துக்கு விரோதமான லோபமாவது இருந்தால் ஹைகோர்ட்டில் ரிவிழன் பிடிஷன் தாக்கல்செய்துகொள்ளலாம்.

478. ஸ்மால்காஸ்சைட்டில் கொடுக்கப்பட்ட தீர்ப்பின் பேரில் அப்பீல்கிடையாது. ஆனல் அப்பேர்பட்ட தீர்மானம், லாவுக்கு விரோதமாக இருந்தால் ஹைகோர்ட்டில் ரிவிழன் பிடிஷன் கொடுத்துக்கொள்ளலாம்.

479. அப்பீல் இல்லாதபோதும், அப்பீல் இருந்தாலும் அப்பீல் செய்வதற்கு முன்னும், தீர்ப்பைச்சொன்ன கோர்ட்டாருக்கே புனர்விசாரணை பண்ணும்படி ரிவ்யூபிடிஷன், கொடுத்துக்கொள்ளலாம். புதுதஸ்தாவேஜாவது புதுசாட்சியமாவது கண்டுபிடிக்கப்பட்டது என்பது, தீர்ப்பில் பிரத்தியட்சமான தப்பு இருக்கிறது என்பது, ஆகிய இப்படிப் பட்ட தகுந்த ஏதுக்கள் இல்லாவிடில் ரிவ்யூபிடிஷன் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கிரிமினல் விஷயத்தில் ரிவ்யூபிடிஷன் இல்லை.

480. ஜில்லாகோர்ட்டில் அப்பீல்செய்வதற்கு வாயிதா 30 நாள்.

ஹைகோர்ட்டில் அப்பீல்செய்வதற்கு வாயிதா 90 நாள். ஹைகோர்ட்டார் அசல்வியாச்சியத்தில் கொடுத்த தீர்ப்பின் பேரில் அப்பீல்செய்துகொள்வதற்கு வாயிதா 20 நாள்.

ஹைகோர்ட்டாருடைய தீர்ப்பின்பேரில் ரிவ்வியூமனுவு தாக்கல் செய்வதற்கு வாயிதா 20 நாள். மற்ற கோர்ட்டா ருடைய தீர்ப்பின்பேரில் ரிவ்வியூவாயிதா 90 நாள்.

481. தீர்ப்பு நகல்களை அடையும்பொருட்டு கடந்த நாள்கள் அப்பீல் வாயிதாவில் கூடிவரும்.

ரிவ்வியூவுக்காக கடந்த நாள்கள் அப்பீல் வாயிதாவில் சேர்ந்துவராது.

482. ரிவிழன்பிடிஷன் கொடுத்துக்கொள்வதற்கு வாயி தா இல்லை. ஆனபோதிலும் தாமசம்செய்து தாக்கல் செய் தால் ஹைகோர்ட்டார் அதில் பிரவேசிக்கமாட்டார்கள்.

*** கிரிமினல் அப்பீல்.

483. 2-வது அல்லது 3-வது கிளாஸ் மாஜீஸ்திரேட்டு கள் செய்த தீர்ப்பின்பேரில், 1-வது கிளாஸ் மாஜிஸ்திரேட் டுக்கும், 1-வது கிளாஸ் மாஜிஸ்திரேட்டு செய்த தீர்ப்பின் பேரில் ஜில்லாகோர்ட்டாருக்கும், அப்பீல் செய்துக்கொள் ளவேண்டியது. அப்பீல் வாயிதா 30 நாள்.

ஜில்லாகோர்ட்டாருடைய தீர்ப்பின்பேரில் ஹைகோர்ட் டாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம். வாயிதா 60 நாள்.

கிரிமினல் விஷயங்களில் அப்பீல் தீர்ப்பின்பேரில் அப் பீல் இல்லை.

484. 1-வது கிளாஸ் மாஜிஸ்திரேட்டாவது, செஷன் கோர்ட்டாராவது ஒரு மாசத்துக்கு மேற்படாமல் காவல்

தண்டனைமாத்திரம், அல்லது, 50 ரூபாயிக்கு மேற்படாமல் அபராதம் மாத்திரம், அல்லது, அடிதண்டனை மாத்திரம் விதித்தால் அந்த தீர்ப்பின்பேரில் அப்பீல் இல்லை.

இதில், இரண்டு மூன்றுவித தண்டனைகள் சேர்த்து விதிக்கப்பட்டிருந்தால், சுவற்ப சிட்சையாயிருந்தபோதிலும், அப்பீல் செய்துகொள்ளலாம்.

485. சிலகுற்றங்களை கலெக்ட்டரவர்கள் சம்மெரீயாக விசாரணை செய்யலாம். சர்க்காரார் அதிகாரம் கொடுத்திருந்தால், சப்கலெக்ட்டர் முதலிய 1-வது கிளாஸ் மாஜிஸ்திரேட்டுகளும், பெஞ்சி மாஜிஸ்திரேட்டுகளும் கூட சம்மெரீ விசாரணை செய்யலாம்.

அப்படிப்பட்ட சம்மெரீவிசாரணையில் மூன்று மாசங்களுக்கு மேற்படாமல் காவல் தண்டனை மாத்திரமாவது, 200 ரூபாயிக்கு மேற்படாமல் அபராதம் மாத்திரமாவது, அடிதண்டனை மாத்திரமாவது, விதிக்கப்பட்டால், அதின் பேரில் அப்பீல் இல்லை. இரண்டு மூன்று விதமான தண்டனைகள் சேர்ந்துபோடப்பட்டிருந்தால், சுவற்பதண்டனையாயிருந்தபோதிலும், அப்பீல் செய்யலாம்.

486. மேல் மூன்று பியாராக்களில் சொல்லப்பட்டஹேதுக்களால் அப்பீல் செய்யக்கூடாதபோது - கீழ்கோர்ட்டாருடைய தீர்ப்பு சட்டத்துக்கு விரோதமாயும், அனியாயமாயும் இருந்தால், ஹைகோர்ட்டில் ரிவிழன் பிடிஷன் தாக்கல் செய்துகொள்ளலாம்.

ரிவிழன் பிடிஷன் தாக்கல் செய்யப்பட்டபோது, கீழ்கோர்ட்டாருடைய தீர்ப்பை மாற்றிப்போட்டு, தண்டனையை ரத்து செய்வதற்கும், நியாயமென்று தோன்றினால் மேற்படி தீர்மானத்தை ஸ்திரப்படுத்தி தண்டனையை அதிகப்படுத்துவதற்கும் கூட, ஹைகோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு.

அப்பீல் செய்யப்பட்டபோது, தண்டனையை அதிகப்படுத்துவதற்கு, ஹைகோர்ட்டாருக்காவது ஜில்லாகோர்ட்டார் முதலியவர்களுக்காவது அதிகாரமில்லை.

487. பிராது அக்கிரமமாய் தள்ளிப்போடப்பட்டாலும், பிராதி அதின் பேரில் அப்பீல் செய்துகொள்ளக்கூடாது. ஆனல், அது கவர்ன்மெண்டாருக்குத் தெரிந்து யுக்தமென்று தோன்றினல், அவர்கள் அதைக்குறித்து 6 மாசங்களுக்குள்ளாக ஹைகோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்யலாம்.

*** போர்ட்டு அப்பீல் கவரன்மெண்டு அப்பீல்.

488. உத்தியோகங்கள் முதலியவைகளைப்பற்றி, கலெக்ட்டரவர்களுடைய தீர்மானத்தின்பேரில், 3 மாசங்களுக்குள்ளாக, ரிவினியூபோர்ட்டாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம். அப்பீல் பிடிஷனுக்கு 2 ரூபாய் கோர்ட்டுபீசு ஸ்டாம்பு ஒட்டவேண்டியது. ஒரேஸ்டாம்பாய் ஒட்டவேண்டுமே அல்லாமல், இரண்டு ஒரு ரூபாய் ஸ்டாம்புகளாவது, நான்கு அரை ரூபாய் ஸ்டாம்புகளாவது, ஒட்டக்கூடாது. அப்பீல் பிடிஷனேடு தீர்ப்பு முதலியவைகளின் பப்ளிக் நகல்களையும் அனுப்பவேண்டியது.

இப்படி செய்யப்பட்ட அப்பீலில், போர்ட்டார் செய்யும் தீர்மானத்தில் நியாயம் கிடைக்காமல் போனல், அவர்களுக்கு ரிவியூபிடிஷன் கொடுத்துக்கொள்ளலாம்.

489. போர்ட்டாருடைய தீர்மானத்தின்பேரில் கவரன்மெண்டாருக்கு ரிவிஜன்பிடிஷன் கொடுத்துக்கொள்ளலாம். அதற்கு ஸ்டாம்பு ஒட்டவேண்டிய அவசியமில்லை. வாயிதாவும் இல்லை. ஆனல் ஆலசியம் செய்யக்கூடாது.

490. போர்ட்டாருக்கும், கவர்ன்மெண்டாருக்கும், கொடுத்துக்கொள்ளும் மனுக்களை தபால்மூலமாக அனுப்பி வைக்கலாம்.

கோர்ட்டாருக்கு கொடுத்துக்கொள்ளும் மனுக்கள், அபபீல்கள், அப்பிளிகேஷன்கள் முதலியவைகளை, குத்தாக, அல்லது, வக்கில் மூலமாக தாக்கல் செய்யவேண்டுமேயல்லாமல் தபால் மூலமாக அனுப்பித்தால் வாபஸ் செய்யப்படும்.

491. போர்ட்டாருக்கும், கவர்ன்மெண்டாருக்கும் கொடுத்துக்கொள்ளும் மனுக்களிலுள்ள சங்கதிகளை அவர்கள் முன்பாக வாதிக்கும்பொருட்டு வக்கீல்களையாவது பாலிஸ்டர்களையாவது ஏர்ப்படுத்துவதற்கு ரூல்ஸ் இல்லை.

*** வகாலத்து நாமா.

492. ஹைகோர்ட்டில் நடத்தவேண்டிய விஷயங்களைக் குறித்து கொடுக்கப்பட்ட வகாலத்து நாமாவுக்கு 2 ரூபாய் ஸ்டாம்பு ஒட்டவேண்டியது.

முன்சீப்கோர்ட்டு, ஜில்லாகோர்ட்டு, மாஜீஸ்திரேட்டு கோர்ட்டு, கலெக்ட்டர் முதலியவர்களின் முன்பாக நடத்தவேண்டிய விஷயங்களைக்குறித்து கொடுக்கப்பட்ட வகாலத்து நாமாவுக்கு 8 அணு ஸ்டாம்பு ஒட்டவேண்டியது.

493. தஸ்தாவேஜி ரிஜிஸ்டர் செய்விப்பதற்காக கொடுக்கப்பட்ட "பவர் ஆப் அட்டர்னி" என்னும் அதிகாரபத்திரிகை 8 அணு ஸ்டாம்பு கடிதாசியின்பேரில் எழுதப்படவேண்டும். பிளீடருக்கு கொடுக்கப்படும் வகாலத்து நாமாவைப்போல வெறுங்கடிதத்தின்பேரில் எழுதி அதற்கு ஸ்டாம்பு ஒட்டக்கூடாது. மேலும் அப்படிப்பட்ட அதிகாரபத்திரிகையை ரிஜிஸ்டிராராவது, சப் ரிஜிஸ்டிராராவது, சர்டிபை பண்ணவேண்டியது. கிராம முன்சீப் சர்டிபை செய்தால் பிரயோஜனப்படாது.

மற்றவிஷயங்களில் கொடுக்கப்படும் அதிகாரபத்திரங்களைக்குறித்து, 533-வது பியாராவில் பார்க்கவேண்டியது.

494. பாலிஸ்டர்களுக்கு வகாலத்து நாமா அவசியமில்லை. கிரிமினல் விசாரணையில் பிரதிவாதி தரபு வக்கீலுக்கும் வகாலத்து நாமா அவசியமில்லை.

495. ஸ்டாம்பு ஒட்டாமல் வகாலத்து நாமா தயார்செய்வதும், வக்கீல்பேர் எழுதாமல் பிறகு எழுதுவதற்கு இடம்

விட்டு வகாலத்து நாமா தயார்செய்வதும், வெறுங்கடுதாசி யின்பேரில் கையெழுத்துப்போட்டு சர்டிபை செய்வித்து பிளாங்கு வகாலத்துநாமாக்களை தயார்செய்விப்பதும், மிக வும் அக்கிரமமென்று எல்லோரும் அறிந்துகொள்ளவேண் டியது.

கிராம முன்சீப் முதலியவர்கள் மேல்சொல்லப்பட்ட விதமான வகாலத்து நாமாக்களை சர்டிபை செய்யக்கூடாது. மேலும், வகாலத்து நாமாக்களை சர்டிபை செய்வதற்காக பணம் வாங்கக்கூடாது.

*** லிமிடேஷன், அதாவது, வாயிதாவிஷயம்.

496. லிமிடேஷன் விஷயமாய், 1877-ம் ௵த்திய 15-வது நம்பர் சட்டம் ஏர்ப்படுத்தப்பட்டு, பிறகு அதில் சில, சில, விஷயங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன.

497. வியாச்சியமூலம் உண்டானபொழுது, வாதி மைன ராயாவது, பைத்தியகாரனுயாவது இருந்தால், அந்த மை னரிடி, அல்லது பைத்தியம், தீர்ந்தநாள்முதற்கொண்டு, வாயிதா கணக்கிட்டு அந்த வாயிதாக்குள் வியாச்சியத்தைக் கொண்டுவரலாம். ஆனல், மைனரிடியாவது பைத்தியமா வது தீர்ந்தபிறகு, 3 வருஷங்களுக்கு மேற்பட்டு வாயிதா ஜாஸ்தி செய்யப்படமாட்டாது.

498. வியாச்சியமூலம் ஏர்ப்பட்டதற்குண்டான சங்கதி களையாவது, அதற்கு ஆதாரமான தஸ்தாவேஜுகளையாவது, பிரதிவாதி, அல்லது, அவனைச்சேர்ந்தவர்கள் வாதிக்குத் தெ ரியாமல் மறைத்து மோசம்செய்திருந்தால், அந்த மோசம் வாதிக்கு தெரிந்த நாள்முதல் வாயிதாகணக்கிடப்படும்.

499. அப்பீல் முதலியவைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வா யிதாவிஷயத்தில், கீழ்கோர்ட்டாருடைய தீர்ப்பு நகல்களைப் பெறுவதற்கு சென்ற நாள்கள் கூடிவரும்.

வாயிதா கடந்துபோனபோதிலும், அதற்கு தகுந்தகாரணங்கள் இருக்கும்பட்சத்தில், அப்பீலும், ரிவியூபிடிஷனும் கோர்ட்டார் தாக்கல் செய்துக்கொள்ளுவார்கள்.

500. வாயிதாவின் கடைசிநாளில் கோர்ட்டு மூடியிருந்தால், கோர்ட்டு திறந்த முதல்நாள் தாக்கலாகவேண்டியது.

கோர்ட்டு மூடியிருக்கும் நாள்களில், அப்பீல் முதலியவைகளை தாக்கல்செய்துகொள்ளும்பொருட்டு, சிலநாள்கள் ஏர்ப்படுத்தப்பட்டிருந்தால் அந்த நாள்களில் தாக்கலாக வேண்டியது.

501. வாயிதாகாலம் கடந்துபோவதற்குமுன், பிரதிவாதியாவது, அவனிடத்திலிருந்து அதிகாரம் பெற்ற ஏஜண்டாவது, வாதியினுடைய பாத்தியதையின் விஷயமாய் எழுத்து மூலமாக ஒப்புக்கொண்டால், அப்படி ஒப்புக்கொண்டதினம் முதற்கொண்டு புதிதாய் பூராவாயிதா ஏர்ப்படுகின்றது.

வாதிக்கு கொடுக்கவேண்டிய கடனைக்குறித்தாவது, அவனுடைய பாத்தியதையைக்குறித்தாவது ஒப்புக்கொண்டு, அதின் விஷயமாய் சிலநாள்கள் பொறுத்துக்கொள்ளவேண்டுமென்றாவது, அல்லது, அதை தனக்கு வேண்டிய வேறொருபாக்கிக்கு செல்லாக்கவேண்டுமென்றாவது, எழுதினாலும், புதியவாயிதா ஏர்ப்படுகின்றது. மேலும், அப்படி ஒப்புக்கொண்டு எழுதின கடிதம், வாதிபேருக்கல்லாமல், வேறுயார்பேருக்கு எழுதப்பட்டிருந்தபோதிலும் போறும்.

502. வாயிதாவுக்குள் வட்டிக்காகவாவது, அசலுக்காகவாவது, ஏதாகிலும் பணம்கொடுக்கப்பட்டிருந்தால், அந்த பணம் கொடுக்கப்பட்ட தேதிமுதல், புதுவாயிதா ஏர்ப்படுகின்றது.

அசலுக்காக பணம் செலுத்தப்பட்டபோது, அதைக்குறித்து பிரதிவாதியினுடைய சொந்த எழுத்தில் ருசுவு இல்லாமற்போனால் புது வாயிதா ஏர்ப்படாது.

503. 1865-ம் வருஷத்திய 8-வது நம்பர் ரெண்டு ரிகவரீ சட்டத்தை யனுசரித்து வியாச்சியமூலம் உண்டாயிருந்த போது, 30 நாள்களுக்குள்ளாக, கலெக்ட்டர் அவர்களிடத்தில், சம்மேரீ வியாச்சியமாவது, 6 மாசங்களுக்குள் சிவில் கோர்ட்டில் ரெகுலர் வியாச்சியமாவது, கொண்டு போகலாம். கலெக்ட்டருடைய சம்மேரீ தீர்ப்பின்பேரில், ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீல் வாயிதா 30 நாள்.

504. சிவில், கிரிமினல், முதலிய விஷயமாய், அப்பீல் செய்துகொள்வதற்கு ஏர்ப்படுத்தப்பட்ட வாயிதாக்களைப் பற்றி முன்னமே அப்பீல்களைக்குறித்து சொல்லிய பியாராக்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

வியாச்சியங்களுக்கும், கோர்ட்டாருக்கு கொடுத்துக் கொள்ளவேண்டிய அப்பளிகேஷன்களுக்கும் ஏர்ப்படுத்தப்பட்ட முக்கியமான வாயிதாக்களைப்பற்றி இதனடியில் சொல்லப்படும்.

505. ☞ ஒரு வருஷம் வாயிதா உள்ள வியாச்சியங்கள்.

அவதூறு, அக்கிரமமான காவல், அக்கிரமமான பிராது, அக்கிரமமான ஜப்தி, வேலைக்காரர்களை எஜமானனிடத்திலிருந்து அக்கிரமமாய் பிரித்தல் ஆகிய இவைகளால் உண்டான நஷ்டத்துக்காக கொண்டுவரப்படும் வியாச்சியங்களுக்கு வாயிதா—1 வருஷம்.

சர்க்காரார் எடுத்துக்கொண்ட பூமிகளுக்காக கம்பென்சேஷனைக்குறித்த வியாச்சியங்களுக்கு—1 வருஷம்.

தீர்வை பாக்கிக்காகவாவது கோர்ட்டு டிக்கிரீ நிறைவேற்றுவதிலாவது செய்யப்பட்ட ஏலத்தை ரத்து செய்யும்பொருட்டு கொண்டுவரப்பட்ட வியாச்சியத்துக்கு—1 வருஷம்.

சர்க்கார் பாக்கி வசூல் செய்யும்பொருட்டு, ரெவினியூ அதிகாரிகளால் செய்யப்பட்ட ஜப்தி அல்லது டிரான்ஸ்பர் ரத்து செய்விப்பதற்காக சர்க்காரார்பேரில் கொண்டுவரப்பட்ட வியாச்சியத்துக்கு—1 வருஷம்.

ஒருவர்பேரில் கொடுக்கப்பட்ட டிக்கிரியை நிறைவேற்றுகையில், மற்றொருவருடைய சொத்து எடுத்துக்கொள்ளப்பட்டால், அதைக்குறித்து வியாச்சியம் கொண்டுவருவதற்கு—1 வருஷம்.

வியாச்சியமல்லாமல், வேறு ஏதாவது வியவஹாரத்தில், சிவில்கோர்ட்டார் செய்த தீர்ப்பையாவது, உத்திரவையாவது, மாற்றுவதற்கு, அல்லது ரத்து செய்வதற்கு கொண்டுவரப்பட்ட வியாச்சியத்துக்கு—1 வருஷம்.

சர்க்கார் உத்தியோகஸ்தன், செய்தகாரியத்தையாவது உத்திரவையாவது ரத்து செய்விப்பதற்கு கொண்டுவரப்பட்ட வியாச்சியத்துக்கு—1 வருஷம்.

வேலைக்காரர்கள், குமாஸ்தாக்கள் முதலியவர்களுக்கு வரவேண்டிய சம்பளத்தைப்பற்றிய வியாச்சியத்துக்கு—1 வருஷம்.

தட்டான், வீட்டுவேலைக்காரன், கூலிக்காரன், முதலியவர்களுக்கு வரவேண்டிய கூலியைப்பற்றிய வியாச்சியத்துக்கு—1 வருஷம்.

போட்டசாப்பாட்டுக்காக, அல்லது வாடகைக்காக, ஓட்டல்காரர்களுக்கு வரவேண்டிய பணத்தைப்பற்றிய வியாச்சியத்துக்கு—1 வருஷம்.

கள்ளு, சாராயக்கடைக்காரர்களுக்கு, அவர்கள் விற்ற கள்ளு சாராயத்துக்காக வரவேண்டியபாக்கிக்காக கொண்டுவரப்பட்ட வியாச்சியத்துக்கு—1 வருஷம்.

506. இரண்டு வருஷம்—வாயிதாவுள்ள வியாச்சியங்கள்.

படகுக்காரர்கள், ஸ்டீமர்காரர்கள், ரெயில்வே கம்பெனியாரவர்கள் ஆகிய இவர்கள்பேரில், சரக்குகள் பட்டுவாடா செய்வதில் தாமசம் செய்ததினாலாவது, சரக்குகளை போக்கடித்ததினாலாவது உண்டான நஷ்டத்தைக்குறித்து கொண்டுவரும் வியாச்சியத்துக்கு—2 வருஷம்.

பெண்சாதியை சுவாதீனப்படுத்திக்கொள்வதற்காக செய்யப்படும் வியாச்சியத்துக்கு அவள், சுவாதீனத்திலிருப்பதற்கு, திரஸ்காரம் செய்த தேதிமுதல்—2 வருஷம்.

507. ☞ மூன்று வருஷம் வாயிதாவுள்ள வியாச்சியங்கள்.

தண்ணீர்சம்மந்தமான பாத்தியதைகள், வழிநடைபாத்தியதைகள், முதலிய அனுபோகத்திலிருக்கும் பாத்தியதைகளை தடைசெய்வதினல் நேரிடும் நஷ்டங்களைக்குறித்த வியாச்சியங்களுக்கு—3 வருஷம்.

ஏஜண்டுகளின்பேரில் வியாச்சியம்—3 வருஷம்.

கார்டியன் செய்தகிரயத்தை ரத்து செய்விக்கும்பொருட்டு வியாச்சியம் - மைனரிடீதீர்ந்துபோனதுமுதல்—3 வருஷம்.

அசையாப்பொருளின் சுவாதீனத்தைக்குறித்து மாஜிஸ்திரேட்டார் செய்த உத்திரவை ரத்துசெய்விப்பதற்கு வியாச்சியம்—3 வருஷம்.

அசையும்பொருளின் சுவாதீனத்தைக்குறித்தும், அசையும்பொருளுக்கு நேரிட்ட நஷ்டத்தைக்குறித்தும் வியாச்சியம்—3 வருஷம்.

வண்டிகள், படகுகள், வீட்டுசாமான்கள், குதிரைகள் முதலியவைகளுடைய வாடகையைக்குறித்த வியாச்சியம்—3 வருஷம்.

விற்பனை செய்யப்பட்ட சரக்குகளின் நிமித்தம் வரவேண்டிய பணத்துக்காக வியாச்சியம்—3 வருஷம்.

கைபதிலாக கொடுக்கப்பட்ட பணத்துக்காக வியாச்சியம்—3 வருஷம்.

கணக்கு பைசல்செய்த பிறகு ஏர்ப்பட்டபாக்கி விஷயமாய் வியாச்சியம் - கணக்கு பைசல்செய்யப்பட்ட தேதிமுதல்—3 வருஷம்.

ஆண்டிமாண்டு, பிராமிசெரி நோட்டுகளுக்கு - எழுதின தேதிமுதல்—3 வருஷம்.

கடன்தீர்க்கும் விஷயமாய் வாயிதா ஏர்ப்படுத்திக்கொண்டால்-அப்படி ஏர்ப்படுத்திக்கொண்ட வாயிதா தேதிமுதல்-3 வருஷம். வாயிதா இல்லாமல்போனால் பத்திரம் பிறந்த தேதிமுதல்—3 வருஷம்.

பலகெடுவுகளில் கடனைக்கொடுப்பதாக ஏர்ப்பாடுசெய்துக்கொண்டால் ஒவ்வொருகெடுவில் கொடுக்கவேண்டிய தொகைக்கு அந்தந்த கெடுவு தேதிமுதல்—3 வருஷம்.

வாதிப்பிரதிவாதிகளுக்கு நடந்துகொண்டிருக்கும் லாவாதேவி கணக்கின்பேரில் ஏர்ப்பட்டபாக்கி மொத்தத்துக்காக - மேற்படி கணக்கில் கடைசீபாபு எந்தவருஷத்திற்குச் சேர்ந்ததோ அந்தவருஷம் கடைசீமுதல்—3 வருஷம்.

ஜாமீனுசாமி கடன்தொகையை செலுத்திவிட்டபோது, அந்த தொகைக்காக கடனாளியின் பேரில் வியாச்சியம் - செலுத்திய தேதிமுதல் —3 வருஷம்.

ஜாயிண்டுபட்டாதாரன் எல்லா சிஸ்தையும், ஜாயிண்டு கடனாளி எல்லா கடனையும் செலுத்திவிட்டால், மற்றவன் பேரில் அவன்பங்கு பணத்துக்காக வியாச்சியம்—3வருஷம்.

பழைய சிஸ்திபாக்கிக்காக வியாச்சியம் - செலுத்த வேண்டிய தேதிமுதல்—3 வருஷம்.

கவுல்தாரன் கவுல்ஷரத்துக்கு விரோதமாக மரங்களை வெட்டினபோது, அதின் கிரயத்துக்காக வியாச்சியம்-வெட்டின நாள்முதல்—3 வருஷம்.

பைத்தியம் பிடித்திருந்த காலத்தில் கொடுத்துவிட்ட சொத்தின்பொருட்டு வியாச்சியம் - பைத்தியம் நீங்கி மேற்படி சொத்தை கொடுத்துவிட்டசங்கதி தெரிந்த நாள்முதல்—3 வருஷம்.

மோசத்தைக்குறித்து வியாச்சியம் - மோசம் தெரிந்தது முதல்—3 வருஷம்.

தஸ்தாவேஜுகளை ரத்துசெய்விக்கும்பொருட்டு வியாச்சியம் - ரத்துசெய்விப்பதற்கு பாத்தியதையை உண்டாக்கிய சங்கதிகள் வாதிக்கு தெரிந்த தேதிமுதல்—3 வருஷம்.

உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு வியாச்சியம் - நிறைவேற்றுவதற்கு ஏர்ப்படுத்திக்கொண்ட வாயிதாமுதல்—3 வருஷம்-அல்லது, நிறைவேற்றுவதற்கு நிராகரித்த தேதிமுதல்—3 வருஷம்.

உடன்படிக்கையை ரத்துசெய்விக்கும்பொருட்டு வியாச்சியம் - ரத்துசெய்விப்பதற்கு பாத்தியதையை உண்டாக்கின சங்கதிகள் தெரிந்த தேதிமுதல்—3 வருஷம்.

உடன்படிக்கையின்படி நடந்துகொள்ளாமல் போவதினால் உண்டாகும் நஷ்டத்தைக்குறித்து வியாச்சியம் - மேற்படி உடன்படிக்கை ரிஜிஸ்டர் ஆயிருந்தால் 6 வருஷம் - இல்லாமல்போனால்—3 வருஷம்.

508. ☞ ஆறுவருஷம் வாயிதாவுள்ள வியாச்சியங்கள்.

தத்தை ரத்துசெய்விக்கும்பொருட்டு வியாச்சியம் - அந்த தத்து நடந்த சங்கதி வாதிக்கு தெரிந்த தேதிமுதல்—6 வருஷம்.

தத்து கிரமமானதென்று தீர்ப்பு அடையும்பொருட்டு வியாச்சியம் - தத்து புத்திரனுடைய பாத்தியதைகள் தடைசெய்யப்பட்ட தேதிமுதல்—6 வருஷம்.

509. ☞ பன்னிரண்டுவருஷம் வாயிதாவுள்ள வியாச்சியங்கள்.

உயில்மூலமாக கொடுக்கப்பட்ட சொத்தைக்குறித்து வியாச்சியம் - அந்த சொத்துவரவேண்டிய தேதிமுதல்—12 வருஷம்.

அசையாப்பொருள் அடமானத்தின்பேரில் கொடுக்கப்பட்ட கடனைக்குறித்து வியாச்சியம்—12 வருஷம்.

அசையாப்பொருளை ஸ்வாதீனப் படுத்திக்கொள்வதைக் குறித்த வியாச்சியம்—12 வருஷம்.

ஜீவனும்ச பாத்தியதையை ஸ்தாபித்துக்கொள்ளும்பொருட்டு வியாச்சியம் - ஜீவனும்சம் கொடுக்கமாட்டேனென்று சொல்லப்பட்ட தேதிமுதல்—12 வருஷம்.

ஜீவனும்சம் ஏர்ப்பட்டிருந்தால் வரவேண்டிய பழைய ஜீவனும்ச பாக்கிக்காக வியாச்சியம்—12 வருஷம்.

வாரச பாத்தியதைனல் கிடைத்த சொத்தை ஸ்திரீயானவள் அக்கிரமமாய் திரான்ஸ்பராவது, தானமாவது செய்தால், அந்த திரான்ஸ்பரும், தானமும், தம்முடைய சுவதந்திரத்தை பாதிக்காமலிருக்கும்பொருட்டு தீர்மானம் அடைவதற்காக பின்வரும் வார்சுதார்கள் கொண்டுவரும் வியாச்சியத்துக்கு - மேற்படி திரான்ஸ்பர், அல்லது தானம்செய்த தேதிமுதல்—12 வருஷம்.

மேல்சொன்னபடி வியாச்சியம் கொண்டுவராமல், அந்த ஸ்திரீயினுடைய பின் வார்சுதாரர்கள், அந்த ஸ்திரீ யிறந்து போனபிறகு, சொத்தை சுவாதீனப்படுத்திக்கொள்ளும்பொருட்டு வியாச்சியம் கொண்டுவந்தால், அதற்கு வாயிதா-அந்த ஸ்திரீ யிறந்துபோன நாள்முதல்—12 வருஷம்.

பிதரார்ஜிதசொத்தை தகபபனர் அக்கிரமமாய் பிறருக்கு டிரான்ஸ்பர் செய்தால் அதை ரத்துசெய்விப்பதற்காக பிள்ளைகள் கொண்டுவரும் வியாச்சியத்துக்கு—12 வருஷம்.

510. ☞ அப்பளிகேஷன்களுக்கு வாயிதா.

மத்தியஸ்தர்களுடைய தீர்மானத்தை கோர்ட்டில் தாக்கல்செய்வதற்காக வாதியாவது பிரதிவாதியாவது செய்யும் அப்பளிகேஷனுக்கு—6 மாசம்.

மத்தியஸ்தர்களுடைய தீர்மானத்தை ரத்து செய்விப்பதற்காக—10 நாள்.

கட்சிக்காரன் ஆஜராகாமல் போனதினால் தள்ளிவிடப் பட்ட புனர்விசாரணை மனுவை மறுபடியும் பைலில் சேர்த்துக்கொள்வதற்காக—15 நாள்.

வாதி ஹாஜராகாமல் போனதினால் தள்ளிவிடப்பட்ட வியாச்சியத்தையாவது, அப்பீல்தாரன் ஹாஜராகாமல் போனதினால் தள்ளிவிடப்பட்ட அப்பீலையாவது, மறுபடியும் (பைலில்) சேர்த்துக்கொள்வதற்காக—30 நாள்.

யக்ஸ்பார்ட்டீ தீர்ப்பை ரத்து செய்விப்பதற்காக அந்த தீர்ப்பின்படி அமுல் விவஹாரம் ஆரம்பித்த தேதிமுதல்—30 நாள்.

பாபர் அப்பீல் செய்துகொள்வதற்கு வேண்டிய உத்திரவுக்காக கொடுத்துக்கொள்ளும் அப்பளிகேஷன் - டிக்கிரீ தேதிமுதல்—30 நாள்.

டிக்கிரீ நிறைவேற்றுவதில், அக்கிரமமாய் செய்யப்பட்ட கிரயத்தை ரத்துசெய்விப்பதற்காக—30 நாள்.

டிக்கிரீ நிறைவேற்றுகையில், கிரயம்தாரனுக்கு சொத்தை ஸ்வாதீனப்படுத்தும் விஷயமாய் தடங்கல் செய்யப்பட்டால் - அதைக்குறித்து பிராது—30 நாள்.

டிக்கிரீ நிறைவேற்றுகையில் கிரயம் செய்யப்பட்ட சொத்துக்கு கடனாளிக்கு சுவதந்திரமில்லை யென்கிற ஏதுவின்பேரில், கிரயத்தை ரத்துசெய்விப்பதற்காக, கிரயம்தாரன் கொடுத்துக்கொள்ளும் மனுவுக்கு - கிரயம் செய்யப்பட்ட தேதிமுதல்—60 நாள்.

சீமை அப்பீல் செய்துகொள்வதற்கு உத்திரவு அடையும்பொருட்டு ஹய்கோர்ட்டாருக்கு அப்பளிகேஷன்—6 மாசம்.

கோர்ட்டாருடைய டிக்கிரீயின்படிக்காவது, உத்திரவின்படிக்காவது, நடவடிக்கைகளை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளும், அப்பளிகேஷனுக்கு—3 வருஷம். மேற்படி டிக்கிரீயாவது உத்திரவாவது ரிஜிஸ்டராயிருந்தால்—6 வருஷம்.

*** தாவா, பிடிஷன், வகைறுக்களுக்கு ஸ்டாம்பு.

511. போலீசார்கள், வாரண்டில்லாமல் பிடிக்கக்கூடிய கேசுகளில் தவிற, மற்றகேசுகளில் கொடுக்கப்படும் பிரியாதுகளுக்கு 8 அணு ஸ்டாம்பு ஒட்டவேண்டியது.

ரெவினியூ அதிகாரிகளுக்கும், மாஜிஸ்திரேட்டாருக்கும், முன்சீப்கோர்ட்டு, சப்கோர்ட்டு, ஜில்லாகோர்ட்டாரவர்களுக்கும், கொடுத்துக்கொள்ளும் அப்பளிகேஷன்களுக்கும், பிடிஷன்களுக்கும்—8 அணு ஸ்டாம்பு ஒட்டவேண்டியது. ஹைகோர்ட்டாருக்கு கொடுத்துக்கொள்ளும் அப்பளிகேஷன்களுக்கு 2. ரூபாய் ஸ்டாம்பு ஒட்டவேண்டியது.

512. பாபர் வியாச்சியம் கொண்டுவருவதற்கு உத்திரவு கொடுக்கவேண்டுமென்று கேட்கும் அப்பளிகேஷனுக்கு 8 அணு ஸ்டாம்பு ஒட்டவேண்டியது.

பாபர் அப்பீல் செய்துகொள்வதற்கு உத்திரவாகும்படி ஜில்லாகோர்ட்டில் அப்பளிகேஷன் செய்துக்கொண்டால், 1 ரூபாய் ஸ்டாம்பும், ஹைகோர்ட்டில் செய்துக்கொண்டால், 2 ரூபாய் ஸ்டாம்பும், ஒட்டவேண்டியது.

513. நகல்கள் கேட்பதற்கும், தர்ஜுமாவுக்காகவும் கொடுத்துக்கொள்ளும் அப்பளிகேஷன்களுக்கு, 1 அணு ஸ்டாம்பு ஒட்டவேண்டும்.

514. தண்ணீருக்காகவும், சர்க்கார் காடுகளில் கட்டை வெட்டுவதற்காகவும் கொடுத்துக்கொள்ளும் மனுவுகளுக்கு, ஸ்டாம்பு வேண்டியதில்லை.

515. வியாச்சியங்களுக்கு, அவைகளுடைய மொத்தத்தை அனுசரித்து ஸ்டாம்பு வைக்கவேண்டியது.

ஜீவனும்சத்தைக்குறித்த வியாச்சியங்களுக்கு, 10 வருஷத்து ஜீவனும்ச மொத்தத்தின்பேரில், ஸ்டாம்பு நிர்ணயிக்கவேண்டியது.

சர்க்கார் நிலங்கள், தோட்டங்கள் முதலியவைகளை சுவா தீனப்படுத்திக்கொள்வதற்காக கொண்டுவரப்படும் வியாச்சி யங்களுக்கு - 10 வருஷத்திய தீர்வை மொத்தத்தின்பேரில் ஸ்டாம்பு போடவேண்டியது.

இனும்பூமிகளை சுவாதீனப்படுத்திக்கொள்ளும்பொருட்டு, கொண்டுவரப்படும் வியாச்சியங்களுக்கு, - முந்திய வரு ஷத்தின் லாபத்துக்கு 15 மடங்கு மொத்தத்தின்பேரிலும், அப்படிப்பட்ட லாபமில்லாவிடில், மேற்படி பூமியினுடைய மதிப்பின்பேரிலும், ஸ்டாம்பு போடவேண்டியது.

குதவையிருக்கப்பட்ட பூமிகளின் விஷயமாய் வியாச்சி யம் கொண்டுவரும்போது, குதவைத்தொகையை அனுச ரித்து ஸ்டாம்பு போடவேண்டியது.

அசையாப்பொருள் ஜப்தியை ரத்து செய்விக்கும்பொ ருட்டு கொண்டுவரப்பட்ட வியாச்சியத்துக்கு - அந்த அசை யாப்பொருளின் விலையின்பேரிலாவது, ஜப்தி மொத்தத்தின் பேரிலாவது, எது குறைந்திருக்கிறதோ அந்த தொகையின் பேரில், ஸ்டாம்பு போடவேண்டியது.

கிராம முன்சீப்களிடத்தில் தாக்கல் செய்யப்பட்ட தா வாக்களுக்கும், 1816-ம் வருஷத்திய 12-வது ரெகுலேஷன் படிக்கு கலெக்டரவர்களிடத்தில் தாக்கல் செய்யப்பட்ட தாவாக்களுக்கும், ஸ்டாம்பு போடவேண்டியதில்லை.

516. அனுபோக ஹக்கு விஷயமான வியாச்சியங்களுக் கும், அப்பீல்களுக்கும்—8 அணு ஸ்டாம்பு.

517. பெண்சாதியை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளும் பொருட்டு செய்யும் வியாச்சியங்களுக்கும், அப்பீல்களுக் கும்,—5 ரூபாய் ஸ்டாம்பு.

518. தத்து கிரமமானதென்று தீர்ப்பு பெறுவதற்கும், தத்தை ரத்து செய்விப்பதற்கும், மத்தியஸ்தர்களுடைய தீர்மானத்தை ரத்து செய்விப்பதற்கும், ரெவினியூ கணக்கு களில், பட்டாதார்களுடையவாவது புரொப்பிரயிடர்களு

டையவாவது பேர்களை மாற்றுவது, அல்லது ரத்து செய்வதற்கும் - இந்த விஷயங்களைக்குறித்து கொண்டுவரும் வியாச்சியங்களுக்கும், அவைகளைக்குறித்த அப்பீல்களுக்கும்—10 ரூபாய் ஸ்டாம்பு.

வாரசு ஸ்வதந்திரத்தினல் கிடைத்த ஆஸ்தியை ஸ்திரீயானவள், அக்கிரமமாய், டிரான்ஸ்பராவது, தானமாவது செய்தால், - அந்த டிரான்ஸ்பரும் தானமும் தங்களுடைய சுவதந்திரத்தை பாதிக்கமாட்டாதென்று தீர்ப்பு பெறுவதற்காக, பின்வரும் வாரசுதாரர்கள் கொண்டுவரும் வியாச்சியத்துக்கு, 10 ரூபாய் ஸ்டாம்பு.

தஸ்தாவேஜை ரிஜிஸ்டர் செய்யாமல் ரிஜிஸ்டிராரவர்கள் திருப்பிவிட்டால், - ரிஜிஸ்டர் செய்யவேண்டியதென்று, உத்திரவு அடையும்பொருட்டு, கொண்டுவரும் வியாச்சியத்துக்கு—10 ரூபாய் ஸ்டாம்பு.

519. டிக்கிரீ தேதிமுதல் 90 நாள்களுக்குள்ளாக ரிவியூ பிடிஷன் தாக்கல் செய்தால், அசல் வியாச்சியத்துக்கு, அல்லது, அப்பீலுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஸ்டாம்பில் பாதி ஸ்டாம்பு போரும். டிக்கிரீ தேதிமுதல் 90-வது தினத்திலாவது, பிறகாவது, ரிவ்வியூ பிடிஷன் தாக்கல் செய்தால் பூரா ஸ்டாம்பு போடவேண்டும்.

520. 1870-ம் வருஷத்திய 7-வது நம்பர் "கோர்ட்டுபீசு" ஆக்ட்டின்படிக்கு, வியாச்சியங்களுக்கும், அப்பீல்களுக்கும், அவைகளுடைய மொத்தத்தின்பேரில் கொடுக்கவேண்டிய பீசுகளுடைய பட்டி இதன் பின்பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. வியாச்சியத்தினுடைய மொத்தம் இரண்டு மொத்தங்களுக்கு மத்தியிலிருந்தால், ஜாஸ்தீ மொத்தத்துக்கு நிர்ணயிக்கப்பட்ட ஸ்டாம்பு போடவேண்டியது.

2500 ரூபாய்வரைக்கும் மொத்தமுள்ள வியாச்சியங்கள், முன்சீப் கோர்ட்டில் தாக்கலாகவேண்டியது. மேற்படி மொத்தத்துக்கு அதிகப்பட்ட வியாச்சியங்கள், சப்கோர்ட்டிலாவது, ஜில்லா கோர்ட்டிலாவது, தாக்கலாகவேண்டியது.

ரூ. க்கு.	பீசு- ரூ. அ.	ரூ. க்கு.	பீசு- ரூ. அ.	ரூ. க்கு.	பீசு- ரூ.	ரூ. க்கு.	பீசு- ரூ.	ரூ. க்கு.	பீசு- ரூ.
5	0 - 6	480	36 - 0	1,500	100	11,000	505	1,45,000	1,650
10	0 - 12	490	36 - 12	1,600	105	11,500	520	1,50,000	1,675
15	1 - 2	500	37 - 8	1,700	110	12,000	535	1,55,000	1,700
20	1 - 8	510	38 - 4	1,800	115	12,500	550	1,60,000	1,725
25	1 - 14	520	39 - 0	1,900	120	13,000	565	1,65,000	1,750
30	2 - 4	530	39 - 12	2,000	125	13,500	580	1,70,000	1,775
35	2 - 10	540	40 - 8	2,100	130	14,000	595	1,75,000	1,800
40	3 - 0	550	41 - 4	2,200	135	14,500	610	1,80,000	1,825
45	3 - 6	560	42 - 0	2,300	140	15,000	625	1,85,000	1,850
50	3 - 12	570	42 - 12	2,400	145	15,500	640	1,90,000	1,875
55	4 - 2	580	43 - 8	2,500	150	16,000	655	1,95,000	1,900
60	4 - 8	590	44 - 4	2,600	155	16,500	670	2,00,000	1,925
65	4 - 14	600	45 - 0	2,700	160	17,000	685	2,05,000	1,950
70	5 - 4	610	45 - 12	2,800	165	17,500	700	2,10,000	1,975
75	5 - 10	620	46 - 8	2,900	170	18,000	715	2,15,000	2,000
80	6 - 0	630	47 - 4	3,000	175	18,500	730	2,20,000	2,025
85	6 - 6	640	48 - 0	3,100	180	19,000	745	2,25,000	2,050
90	6 - 12	650	48 - 12	3,200	185	19,500	760	2,30,000	2,075
95	7 - 2	660	49 - 8	3,300	190	20,000	775	2,35,000	2,100
100	7 - 8	670	50 - 4	3,400	195	21,000	795	2,40,000	2,125
110	8 - 4	680	51 - 0	3,500	200	22,000	815	2,45,000	2,150
120	9 - 0	690	51 - 12	3,600	205	23,000	835	2,50,000	2,175
130	9 - 12	700	52 - 8	3,700	210	24,000	855	2,55,000	2,200
140	10 - 8	710	53 - 4	3,800	215	25,000	875	2,60,000	2,225
150	11 - 4	720	54 - 0	3,900	220	26,000	895	2,65,000	2,250
160	12 - 0	730	54 - 12	4,000	225	27,000	915	2,70,000	2,275
170	12 - 12	740	55 - 8	4,100	230	28,000	935	2,75,000	2,300
180	13 - 8	750	56 - 4	4,200	235	29,000	955	2,80,000	2,325
190	14 - 4	760	57 - 0	4,300	240	30,000	975	2,85,000	2,350
200	15 - 0	770	57 - 12	4,400	245	32,000	995	2,90,000	2,375
210	15 - 12	780	58 - 8	4,500	250	34,000	1,015	2,95,000	2,400
220	16 - 8	790	59 - 4	4,600	255	36,000	1,035	3,00,000	2,425
230	17 - 4	800	60 - 0	4,700	260	38,000	1,055	3,05,000	2,450
240	18 - 0	810	60 - 12	4,800	265	40,000	1,075	3,10,000	2,475
250	18 - 12	820	61 - 8	4,900	270	42,000	1,095	3,15,000	2,500
260	19 - 8	830	62 - 4	5,000	275	44,000	1,115	3,20,000	2,525
270	20 - 4	840	63 - 0	5,250	285	46,000	1,135	3,25,000	2,550
280	21 - 0	850	63 - 12	5,500	295	48,000	1,155	3,30,000	2,575
290	21 - 12	860	64 - 8	5,750	305	50,000	1,175	3,35,000	2,600
300	22 - 8	870	65 - 4	6,000	315	55,000	1,200	3,40,000	2,625
310	23 - 4	880	66 - 0	6,250	325	60,000	1,225	3,45,000	2,650
320	24 - 0	890	66 - 12	6,500	335	65,000	1,250	3,50,000	2,675
330	24 - 12	900	67 - 8	6,750	345	70,000	1,275	3,55,000	2,700
340	25 - 8	910	68 - 4	7,000	355	75,000	1,300	3,60,000	2,725
350	26 - 4	920	69 - 0	7,250	365	80,000	1,325	3,65,000	2,750
360	27 - 0	930	69 - 12	7,500	375	85,000	1,350	3,70,000	2,775
370	27 - 12	940	70 - 8	7,750	385	90,000	1,375	3,75,000	2,800
380	28 - 8	950	71 - 4	8,000	395	95,000	1,400	3,80,000	2,825
390	29 - 4	960	72 - 0	8,250	405	1,00,000	1,425	3,85,000	2,850
400	30 - 0	970	72 - 12	8,500	415	1,05,000	1,450	3,90,000	2,875
410	30 - 12	980	73 - 8	8,750	425	1,10,000	1,475	3,95,000	2,900
420	31 - 8	990	74 - 4	9,000	435	1,15,000	1,500	4,00,000	2,925
430	32 - 4	1,000	75	9,250	445	1,20,000	1,525	4,05,000	2,950
440	33 - 0	1,100	80	9,500	455	1,25,000	1,550	4,10,000	2,975
450	33 - 12	1,200	85	9,750	465	1,30,000	1,575	ஜாஸ்தி	
460	34 - 8	1,300	90	10,000	475	1,35,000	1,600	பட்ட	3,000
470	35 - 4	1,400	95	10,500	490	1,40,000	1,625	தொகை.	

தஸ்தாவேஜுகளுக்கு ஸ்டாம்பு.

521. இந்த விஷயமாய் 1879-ம் வருஷத்திய 1-வது நம்பர் சட்டம் ஏர்ப்படுத்தப்பட்டிருக்கிறது.

கிரமமான ஸ்டாம்பு இல்லாத தஸ்தாவேஜுகள் கிரிமினல் விஷயங்களில் தாக்கல் செய்துகொள்ளப்படுமே தவிர, சிவில் விஷயத்தில் தாக்கல் செய்துகொள்ளப்படமாட்டா. ஆனால் குறைவுபட்ட ஸ்டாம்பு தொகையை பர்த்திசெய்து, அந்த பர்த்தி தொகைக்குப் பத்துமடங்கு பினால்டி, என்றால், அபராதம் செலுத்தினால், அப்படிப்பட்ட தஸ்தாவேஜுகள் தாக்கல் செய்துகொள்ளப்படும். மேல்சொல்லப்பட்ட 10 மடங்கு பினால்டி தொகை 5 ரூபாயிக்கு குறைந்தால், 5 ரூபாய் கொடுக்கவேண்டும்.

மேலும், அந்த பினால்டி 5 ரூபாயிக்கு அதிகப்பட்டால், கலெக்ட்டரவர்கள் 5 ரூபாயை மாத்திரம் வைத்துக்கொண்டு, மற்ற பினால்டியை, யுக்தமென்று தோன்றினால், வாப்சு கொடுத்துவிடலாம்.

லாபம் அடையவேண்டுமென்கிற எண்ணத்தோடு, புத்தி பூர்வகமாய் கிரமமான ஸ்டாம்பு போடவில்லையென்று தோன்றினால், கலெக்ட்டரவர்கள் பிராசிக்குயூஷனுக்கு உத்திரவுசெய்வார். அதின்பேரில் விசாரணைசெய்யப்பட்டு, தகுந்த ஸ்டாம்பு போடாததற்காக 500 ரூபாய் வரைக்கும் அபராதம் விதிக்கப்படலாம்.

522. பிசகாயாவது, அவசரத்தினலாவது கிரமமான ஸ்டாம்பு போடாமல் தஸ்தாவேஜு எழுதப்பட்டபோது, ஒரு வருஷத்திற்குள்ளாக கலெக்ட்டரவர்களுக்கு அர்ஜீ கொடுத்துக்கொண்டு, குறைந்த ஸ்டாம்பு பர்த்திசெய்யும் பொருட்டு பணம்கட்டிவிட்டால், பூரா ஸ்டாம்பு போடப்பட்டதாக தஸ்தாவேஜின்பேரில் அவர் ரிமார்க்கு எழுதுவார்.

523. பிராமிசெரி நோட்டுகளும் உண்டிகளும் ரசீதுகள் முதலிய 1 அணு ஸ்டாம்பு ஒட்டவேண்டிய தஸ்தாவேஜுகளும், மேல் இரண்டு பியாராக்களில் சொல்லப்பட்டபடி, பினல்டி கட்டியாவது, கலெக்ட்டரவர்களுக்கு அர்ஜீ கொடுத்துக்கொண்டாவது, சரிப்படுத்திக்கொள்ளத் தகுந்தவைகளல்ல.

524. ஒட்டுதொகைக்கு போடவேண்டிய ஸ்டாம்பு ஒரோஸ்டாம்பாய் இருக்கவேண்டுமே தவிர இரண்டு மூன்று சிறிய ஸ்டாம்பு சேர்ந்து இருக்கக்கூடாது. ஒரோ ஸ்டாம்பு அகப்படாமற்போனால், ஸ்டாம்பு வெண்டரால் அந்தப்படிக்கு ரிமார்க்கு எழுதிவைத்துக்கொண்டு, சிறிய ஸ்டாம்புகளை உபயோகப்படுத்தலாம்.

525. ஸ்டாம்பு கடுதாசியின்பேரில் தஸ்தாவேஜு முழுவதும் எழுதுவதற்கு போராமற்போனல், பின்பக்கத்தில் எழுதக்கூடாது. வேறு கடுதாசியின்பேரில் எழுதி, ஸ்டாம்பு கடுதாசியோடு சேர்க்கவேண்டியது. அப்படி சேர்க்கப்பட்ட வேறு கடுதாசியின்பேரிலும், ஸ்டாம்பு கடுதாசியின்பேரிலும் சாக்ஷிகையெழுத்துகளும், தஸ்தாவேஜு எழுதிக்கொடுத்தவனுடைய கையெழுத்தும் இருக்கவேண்டும்.

526. ஸ்டாம்பு வாங்கின பிறகு, அது அவசியமில்லாமற்போனாலும், பிசகி கெட்டுப்போனாலும், 6 மாசங்களுக்குள்ளாக, கலெக்ட்டரவர்களுக்கு மனுவுகொடுத்துக்கொண்டு அந்த ஸ்டாம்புதொகைக்குச் சரியான வேறு ஸ்டாம்புகளாவது அல்லது ரூபாயிக்கு ஒரு அணு வீதம் குறைத்து ரொக்கபணமாவது அடையலாம்.

527. லைசென்சு இல்லாமல் கோர்ட்டுபீசு ஸ்டாம்புகளை விற்பது குற்றமாயிருக்கிறது. இதற்கு 6 மாசங் வரைக்கும் காவல் தண்டனையாவது 500 ரூபாய் வரைக்கும் அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

மேலும், ஸ்டாம்பு வெண்டர்கள் தங்களிடத்தில் ஸ்டாம்பு வைத்துக்கொண்டும், வேண்டியவர்களுக்கு விற்பனை செய்யாமல்போனால், மேலேசொல்லியபடி தண்டனைக்கு உள்ளாவார்கள்.

528. இருபது ரூபாயிக்கு மேற்பட்ட ரொக்கபணமாவது, செக்காவது, உண்டியாவது, பிராமிசெரி நோட்டாவது வாங்கிக்கொண்டபோதும், இருபது ரூபாயிக்கு மேற்பட்ட சொத்தை பாக்கிக்காக வாங்கிக்கொண்டபோதும், அப்படிப்பட்ட சொத்தையாவது, பணத்தையாவது கொடுத்தவன், ரசீது கேட்கும் பக்ஷத்தில், வாங்கிக்கொண்டவன் ஒரு அணு ஸ்டாம்பு ஒட்டி ரசீதுகொடுக்கவேண்டியது.

அப்படி கேட்கும்போது ரசீது கொடுக்காமல்போனால் 100 ரூபாய் வரைக்கும் அபராதம் போடப்படலாம்.

மேலும், இருபது ரூபாயிக்கு மேற்பட்ட ரொக்கபணத்தின் விஷயமாயாவது, சொத்துவிஷயமாயாவது, ஒரு அணு ஸ்டாம்பு ஒட்டாமல் ரசீது கொடுத்தால், அந்த சங்கதி கலெக்ட்டரவர்களுக்கு தெரியப்படுத்தப்படும் பக்ஷத்தில், விசாரணையாயி 500 ரூபாய் வரைக்கும் அபராதம் விதிக்கப்படலாம்.

20 ரூபாயிக்கு மேற்பட்டகடன் சேர்ந்ததாக கடிதத்தின் மூலமாக ஒப்புக்கொண்டபோதும்கூட, ரசீது ஸ்டாம்பு ஒட்டாமற்போனால், குற்றமாகவே எண்ணப்படும்.

20 ரூபாயிக்கு மேற்பட்ட ரொக்கபணமாவது, சொத்தாவது வாங்கிக்கொண்டபோது - ஸ்டாம்பு ஒட்டாமல் இருக்கவேண்டுமென்கிற எண்ணத்தோடு, 20 ரூபாயிக்கு குறைந்த தொகைக்கு ரசீது கொடுப்பதும், அல்லது, பெரிய தொகையை, சிறிய, சிறிய தொகைகளாக பிரித்து அவைகளுக்கு ஸ்டாம்பு ஒட்டாமல் இரண்டு மூன்று ரசீதுகள்

கொடுப்பதும், குற்றங்களாகின்றன. இதற்கு 100 ரூபாய் வரைக்கும் அபராதம் விதிக்கப்படலாம்.

529. சர்க்கார் தீர்வைவிஷயமாய் கொடுக்கப்பட்ட ரசீதுகளுக்கும், பியாங்கியில் போடப்பட்ட பணத்தின் விஷயமாய் பியாங்கியார் கொடுக்கும் ரசீதுகளுக்கும், ஸ்டாம்பு வேண்டியதில்லை.

வட்டிவிஷயமாயாவது, அசல் விஷயமாயாவது, பத்திரத்தில் எழுதப்பட்ட செல்லு ரசீதுக்கு ஸ்டாம்பு வேண்டியதில்லை.

மேலும், கடனுக்காக அல்லாமல் சும்மா வாங்கிக்கொள்ளப்பட்ட பணத்தின் விஷயமாய் கொடுத்த ரசீதுக்கு ஸ்டாம்பு வேண்டியதில்லை.

530. 20 ரூபாயிக்கு மேற்பட்ட கடனை ஒப்புக்கொண்டு எழுதப்பட்ட கடிதம் முதலிய தஸ்தாவேஜுகளுக்கு ஒரு அணு ஸ்டாம்பு ஒட்டவேண்டியது. கணக்கு பார்த்து பாக்கிதீர்த்துக்கொண்டு, கடனாளி கணக்கு புஸ்தகத்தில் கையெழுத்து செய்யும்பொழுதும்கூட, ஒரு அணு ஸ்டாம்பு ஒட்டவேண்டியது.

531. 20 ரூபாயிக்கு மேற்பட்ட தொகையுள்ள ஆண்டிமாண்டு பிராமிசெரி நோட்டுகளுக்கும், உண்டிகளுக்கும், ஒரு அணு ஸ்டாம்பு ஒட்டவேண்டியது.

ஒருவருஷத்துக்கு மேற்பட்டகெடுவுள்ள பிராமிசெரீ நோட்டுகளுக்கும், உண்டிகளுக்கும், பத்திரங்களுக்குப் போல, ஸ்டாம்பு போடவேண்டியது.

ஒருவருஷத்துக்கு மேற்படாத கெடுவுள்ள பிராமிசெரீ நோட்டுகளுக்கும், உண்டிகளுக்கும், இதன்கீழ் சொல்லப்பட்டபடி ஸ்டாம்பு போடவேண்டயது.

	ரூ.	200	வரைக்கும்	ரூ.	0 - 2 - 0
அதற்குமேல்	,,	400	,,		0 - 4 - 0
,,	,,	600	,,		0 - 6 - 0
,,	,,	1,000	,,		0 - 10 - 0
,,	,,	1,200	,,		0 - 12 - 0
,,	,,	1,600	,,		1 - 0 - 0
,,	,,	2,500	,,		1 - 8 - 0
,,	,,	5,000	,,		3 - 0 - 0
,,	,,	7,500	,,		4 - 8 - 0
,,	,,	10,000	,,		6 - 0 - 0
,,	,,	15,000	,,		9 - 0 - 0
,,	,,	20,000	,,		12 - 0 - 0
,,	,,	25,000	,,		15 - 0 - 0
,,	,,	30,000	,,		18 - 0 - 0
,,	,,	40,000	,,		24 - 0 - 0
,,	,,	50,000	,,		30 - 0 - 0

* * * * * *

532. பத்திரங்களுக்கு போடவேண்டிய ஸ்டாம்புகளின் விவரம்:—

	ரூ.	10	வரைக்கும்	ரூ.	0 - 2 - 0
அதற்குமேல்	,,	50	,,		0 - 4 - 0
,,	,,	100	,,		0 - 8 - 0
,,	,,	200	,,		1 - 0 - 0
,,	,,	300	,,		1 - 8 - 0
,,	,,	400	,,		2 - 0 - 0
,,	,,	500	,,		2 - 8 - 0
,,	,,	600	,,		3 - 0 - 0
,,	,,	700	,,		3 - 8 - 0
,,	,,	800	,,		4 - 0 - 0
,,	,,	900	,,		4 - 8 - 0
,,	,,	1,000	,,		5 - 0 - 0

இதற்குமேல் பிரதி 500 ரூபாயிக்கும் ரூ. 2-8-0 சேர்க்க வேண்டியது.

சில பஞ்சாங்கங்களில் ஸ்டாம்புகளின் விவரம் தப்பாய் போடப்பட்டிருக்கிறபடியால் தெரிவித்திருக்கிறோம்.

533. "பவர் ஆப் அட்டர்னி" என்னும் அதிகாரபத்திரகைக்கு இருக்கவேண்டிய ஸ்டாம்பு.—

ஏதாவது தஸ்தாவேஜு ரிஜிஸ்டர் செய்விப்பதற்காக கொடுக்கப்பட்ட பவர் ஆப் அட்டர்னிக்கு - 8 அணு. மற்ற விஷயங்களில் ஏதாவது ஒரு விஷயத்தைக்குறித்து கொடுக்கப்பட்டால் ஒரு ரூபாய் ஸ்டாம்பு - ஸர்வமுக்தியாராய் ஏர்ப்படுத்துவதற்கானுல், 5 ரூபாய்.

ஐந்துக்கு மேற்பட்டவர்களை ஜாயிண்டு ஸர்வமுக்தியாராய் ஏர்ப்படுத்துவதற்கானுல்—10 ரூபாய் ஸ்டாம்பு.

534. கிரிமெண்டு, என்முல், கரார் நாமாவுக்கு சாதாரணமாய் 8 அணு ஸ்டாம்பு இருக்கவேண்டும்.

வாட்கை கிரிமெண்டுகளுக்கு இருக்கவேண்டிய ஸ்டாம்புகளைக்குறித்து 537-வது பியாராவைப்பார்க்கவேண்டியது.

ஏதாவது சொத்து விஷயமாயாவது, ரொக்கவிஷயமாயாவது, தனக்கு சுதந்திரமில்லை யென்று ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுக்கும் உடன்படிக்கைக்கு - அந்த சொத்தின் விலை 1,000 ரூபாயிக்கு மேற்படாமலிருந்தால் 532-வது பியாராவில் சொல்லியபடி ஸ்டாம்பும் மேற்பட்டால் 5 ரூபாய் ஸ்டாம்பும், இருக்கவேண்டும்.

535. நகைகள், டைடல் டீட்கள், வீட்டுபத்திரங்கள், முதலிய அசையும் பொருளை குதவைவைத்து எழுதிய கடன் பத்திரங்களுக்கு—கடனைத்தீர்ப்பதற்கு ஏர்ப்படுத்திக்கொண்டகெடுவு 3 மாசத்துக்கு மேற்படாமலிருந்தால், 531-வது பியாரா கடைசியில் சொல்லப்பட்ட ஸ்டாம்பில் பாதியும், 3 மாசத்துக்கு மேற்பட்டு ஒரு வருஷத்துக்கு மேற்படாமலிருந்தால், 531-வது பியாராகடைசியில் சொல்லப்பட்டபடிக்கும் - ஒரு வருஷத்திற்கு மேற்பட்டிருந்தால், 536-வது பியாராவில் சொல்லப்பட்டபடிக்கும் ஸ்டாம்பு - போடவேண்டியது.

536. சுவாதீனப்படுத்தாமல், ஈடுகாட்டி எழுதப்பட்ட அடமான பத்திரத்துக்கு, அதின் மொத்தத்தின் பேரில் 532-வது பியாராவில் சொல்லப்பட்டபடி ஸ்டாம்பு போட வேண்டியது.

சுவாதீன அடமானங்களுக்கு - கடன் மொத்தம் 50 ரூபாயிக்கு மேற்படாமலிருந்தால், 8 அணா ஸ்டாம்பும், 50 க்கு மேற்பட்டால், 532-வது பியாராவில் சொல்லப்பட்ட ஸ்டாம்புகளுக்கு இரட்டிப்பு ஸ்டாம்பும், இருக்க வேண்டும்.

537. ஒரு வருஷக்கெடுவுக்கு உள்பட்டகுத்தகை வீட்டுவாடகை உடன்படிக்கைகளுக்கு, மேற்படி கெடுவுக்குள் செலுத்தப்படும் தொகையின்பேரில், 532-வது பியாராவில் சொல்லப்பட்டபடி ஸ்டாம்பு போடவேண்டியது.

ஒரு வருஷம் முதல் 3 வருஷங்கள்வரைக்கும் கெடுவுள்ள குத்தகை வீட்டுவாடகை உடன்படிக்கைகளுக்கு - ஒரு வருஷத்தில் செலுத்தப்படும் தொகையின்பேரில் 532-வது பியாராவில் சொல்லப்பட்டபடி ஸ்டாம்பு போடவேண்டியது.

மூன்றுவருஷ கெடுவுக்கு மேற்பட்ட குத்தகை வீட்டுவாடகை உடன்படிக்கைகளுக்கு 1 வருஷத்தில் செலுத்தப்படும் தொகை 50 ரூபாயிக்கு மேல்படாமலிருந்தால், 8 அணா ஸ்டாம்பும், - 50 ரூபாயிக்கு மேல்பட்டால் 532-வது பியாராவில் சொல்லப்பட்ட ஸ்டாம்புக்கு இரட்டிப்பு ஸ்டாம்பும், இருக்கவேண்டும்.

முன்னதாக பணம்வாங்கிக்கொண்டு - பிறகு பணமாவது, வாடகையாவது, கொடுக்கும்படி ஷரத்தில்லாமல் எழுதப்பட்ட குத்தகை வீட்டுவாடகை உடன்படிக்கைகளுக்கு - அப்படி முன்னதாக வாங்கிக்கொள்ளப்பட்ட தொகை 50 ரூபாயிக்கு மேல்படாமலிருந்தால், 8 அணா ஸ்டாம்பும்-50 ரூபாயிக்கு மேல்பட்டால், 532-வது பியாராவில் சொல்லப்பட்ட ஸ்டாம்புக்கு இரட்டிப்புஸ்டாம்பும்,போடவேண்டும்.

538. ஒரு வருஷத்துக்கு மேல்படாதகெடுவுள்ள வியவஸாய சம்மந்தமான குத்தகை சீட்டுகளுக்கு, அந்த வருஷத்துக்கு கொடுக்கப்படும் தொகை எவ்வளவாயிருந்தபோதிலும் ஸ்டாம்பு வேண்டியதில்லை.

ஒரு வருஷத்துக்கு மேல்பட்ட கெடுவுள்ள குத்தகை சீட்டுகளுக்கு - வருஷம் 1-க்கு கொடுக்கும்படி ஏர்ப்படுத்திக் கொண்ட தொகை 100 ரூபாயிக்கு மேல்படாத பட்சத்தில் ஸ்டாம்பு வேண்டியதில்லை - 100 ரூபாயிக்கு மேல்பட்ட பட்சத்தில். 537-வது பியாராவில் சொல்லப்பட்டபடி ஸ்டாம்பு இருக்கவேண்டும்.

539. தானபத்திரகைக்கு இருக்கவேண்டிய ஸ்டாம்பு தானஞ்செய்யப்பட்ட சொத்தின் விலை 50 ரூபாயிக்கு மேல் படாமலிருந்தால் 8 அணா. 50 ரூபாயிக்கு மேல்பட்டால் 532-வது பியாராவில் சொல்லப்பட்ட ஸ்டாம்புக்கு இரட்டிப்பு ஸ்டாம்பு இருக்கவேண்டும்.

540. உண்டிகள், செக்குகள், பிராமிசெரிநோட்டுகள், கவரன்மெண்டு வட்டிபத்திரங்கள் - இவைகளின்பேரில் கையெழுத்து செய்து திரான்ஸ்பர் செய்வதற்கு ஸ்டாம்பு வேண்டியதில்லை.

பத்திரங்கள், அடமான பத்திரங்கள், குத்தகை சீட்டுகள் - இவைகளை திரான்ஸ்பர் செய்து எழுதும் தஸ்தாவேஜுகளுக்கு, அசல் தஸ்தாவேஜுகளுக்கு போடப்பட்டிருக்கும் ஸ்டாம்பு போடவேண்டியது.

அந்த அசல் தஸ்தாவேஜுகளுக்கு போடப்பட்ட ஸ்டாம்பு 5 ரூபாயிக்கு மேல்பட்டிருந்தால், திரான்ஸ்பர் தஸ்தாவேஜுக்கு 5 ரூபாய் ஸ்டாம்பு போதும்.

மேல் சொல்லப்பட்டவைகள் தவிற வேறு திரான்ஸ்பர்களுக்கு - திரான்ஸ்பர் தொகை 50 ரூபாயிக்கு மேல்படாம

விருந்தால் 8 அணு ஸ்டாம்பு. 50 ரூபாயிக்கு மேல்பட்டால் 532-வது பியாராவில் சொல்லப்பட்ட ஸ்டாம்புக்கு இரட்டிப்பு ஸ்டாம்பு போடவேண்டியது.

541. கூட்டு வியாபார தஸ்தாவேஜுக்கு - 10 ரூபாய் ஸ்டாம்பு. கூட்டு வியாபாரம் முடிவுசெய்யப்படுகிற விஷயத்தில் எழுதப்பட்ட தஸ்தாவேஜுக்கு - 5 ரூபாய் ஸ்டாம்பு.

பாரீகத்துக்கு, விபாகம் செய்துகொள்ளப்பட்ட சொத்தின்பேரில் 532-வது பியாராவில் சொல்லியபடி ஸ்டாம்பு போடவேண்டியது.

கட்சிக்காரர்கள் தாங்களே ஏர்ப்படுத்திக்கொண்ட மத்தியஸ்தர்களுடையவாவது பஞ்சாயத்தார்களுடையவாவது தீர்மானத்துக்கு - தீர்மானதொகை 1,000 ரூபாயிக்கு மேல் படாமல் இருந்தால், அந்த தொகையின்பேரில் 532-வது பியாராவில் சொல்லியபடி ஸ்டாம்பும் 1,000 ரூபாயிக்கு மேல்பட்டால், 5 ரூபாய் ஸ்டாம்பும் இருக்கவேண்டும்.

542. தத்து வாங்கிக்கொள்வதற்காக கொடுக்கப்பட்ட அதிகாரபத்திரகைக்கு - 10 ரூபாய் ஸ்டாம்பு. மேற்படி அதிகாரம் உயில் மூலமாக கொடுக்கப்பட்டால் ஸ்டாம்பு வேண்டியதில்லை.

ஜீவனும்ச தஸ்தாவேஜுகளுக்கு - 12 வருஷத்திய ஜீவனும்ச மொத்தத்தின்பேரில் ஸ்டாம்பு போடவேண்டியது.

உயில்களுக்கு ஸ்டாம்பு வேண்டியதில்லை.

*** தஸ்தாவேஜுகளை ரிஜிஸ்டர்செய்வித்தல்.

543. தஸ்தாவேஜுகளை ரிஜிஸ்டர்செய்விப்பதைக்குறித்து 1877-ம் வருஷத்திய 3-வது சட்டம் ஏர்ப்படுத்தப்பட்டு பிறகு சில சில விஷயங்களில் திருத்தப்பட்டிருக்கிறது.

544. உயில்களும், அசையும் பொருளைக்குறித்து எழுதப்பட்ட தஸ்தாவேஜுகளும், ரிஜிஸ்டர் செய்யாமல் போனபோதிலும், செல்லுகின்றன.

அசையாப்பொருள் சிறிதாயிருந்தாலும், பெரிதாயிருந்தாலும், அவைகளைக்குறித்த தானபத்திரிக்கைகள் அவசியமாக ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டும்.

545. ஒரு வருஷத்துக்கு மேல்படாத கெடுவுள்ள குத்தகை சீட்டுகளும், வீட்டுவாடகை உடன்படிக்கைகளும், ரிஜிஸ்டர் செய்வது அவசியமல்ல, அதே விஷயத்தைப் பற்றி பிறகு வேறொருவருக்கு, குத்தகை சீட்டாவது, வாடகை உடன்படிக்கையாவது ரிஜிஸ்டர்செய்து எழுதிக்கொடுத்த போதிலும் முதலில் எழுதப்பட்டதே செல்லும்.

ஒருவருஷத்துக்கு மேல்பட்டு கெடுவு ஏர்ப்படுத்திக்கொண்டபோதும், வருஷம் ஒன்றுக்கு இவ்வளவு கொடுக்க வேண்டியதென்று வாடகையாவது, குத்தகையாவது, ஏர்ப்படுத்திக்கொண்டபோதும் - மேலே சொல்லப்பட்ட தஸ்தாவேஜுகள் அவசியமாக ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டும்.

546. வியவசாய பூமிகளின் விஷயமான குத்தகை சீட்டுகள் - வருஷம் ஒன்றுக்கு கொடுக்கும்படியாக ஏர்ப்படுத்திக் கொள்ளப்பட்ட தொகை 50 ரூபாயிக்கு மேல்படாமலும், கெடுவு, 5 வருஷத்துக்கு அதிகப்படாமலுமிருந்தால் - ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டியது அவசியமல்ல.

வருஷம் ஒன்றுக்கு கொடுக்கும்படியாக ஏர்ப்படுத்திக் கொள்ளப்பட்ட தொகை 50 ரூபாயிக்கு உள்பட்டிருந்தபோதிலும், 5 வருஷத்துக்கு மேல்பட்டு கெடுவு ஏர்ப்படுத்திக் கொண்டால், ரிஜிஸ்டர் செய்யவேண்டியது அவசியம். அப்படியே ஐந்து வருஷத்துக்கு உள்பட்டு கெடுவு ஏர்ப்படுத்திக்கொண்டபோதிலும், வருஷம் ஒன்றுக்கு கொடுக்கும்படி ஏர்ப்படுத்திக்கொண்ட தொகை 50 ரூபாயிக்கு மேற்பட்டிருந்தால் ரிஜிஸ்டர் செய்விப்பது அவசியம்.

547. அடமானங்கள், கிரயங்கள், இவைகளின் ரிஜிஸ்டர் விஷயமாக 565-வது பியாராவில் சொல்லப்பட்டிருக்கிறது.

548. உயில் மூலமாயல்லாமல் வேறு தஸ்தாவேஜு மூலமாக, தத்துவாங்கிக்கொள்வதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தால் - அப்படிப்பட்ட தஸ்தாவேஜு அவசியமாக ரிஜிஸ்டர் செய்யவேண்டியது.

549. அவசியமாக ரிஜிஸ்டர்செய்யப்படவேண்டிய தஸ்தாவேஜுகள், ரிஜிஸ்டராகாமல்போனால், செல்லமாட்டா. அவைகளால் எவ்விதமான பாத்தியதையும் உண்டாகமாட்டாது. மேலும், அப்படிப்பட்ட தஸ்தாவேஜுகளை சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

550. உயில்களும், தத்துவாங்கிக் கொள்வதைக்குறித்த அதிகார பத்திரிக்கைகளும், எந்த சப் ரிஜிஸ்டிரார் ஆபீசிலாவது, ரிஜிஸ்டிரார் ஆபீசிலாவது ரிஜிஸ்டர் செய்யப்படலாம். மேற்படி தஸ்தாவேஜுகளை, எழுதிவைத்தவனாவது - அவன் இறந்துபோனபக்ஷத்தில், அவைகளால் சுவதந்திரத்தை அடைந்தவர்களாவது - அவைகளை ரிஜிஸ்டர் செய்விக்கலாம்.

551. யாராவது, தன்னுடைய உயிலை எழுதி, கவரில் அடக்கம்செய்து, சீல்போட்டு, இன்னாருடைய உயில் என்று கவரின்பேரில் எழுதி, ஜில்லா ரிஜிஸ்டிரார் ஆபீசில் தாக்கல்செய்தால், அவர் தங்களுடைய ரிஜிஸ்டரில் எண்டர் செய்துகொண்டு, அந்த கவரை இருப்புப்பெட்டியில் பத்திரப்படுத்துவார். பிறகு உயிலை ரத்து செய்யவேண்டுமென்றாவது, மாற்றவேண்டுமென்றாவது, உயில்தாரருக்குத்தோன்றினால், மேற்படி கவரைக்கேட்டு வாங்கிக்கொள்ளலாம்.

கவரை வாபஸ் அடையாமல் உயில்தார் இறந்து போனால் அப்போது யாராவது ரிஜிஸ்டிராருக்கு மனுவுகொடுத்துக்கொண்டபக்ஷத்தில், அவர் மேற்படி கவரை உடைத்து உயில் ரிஜிஸ்டர் செய்வார்.

552. அசையும் பொருள் விஷ்யமான தஸ்தாவேஜுகளை, எந்த சப் ரிஜிஸ்டிரார் ஆபீசிலாவது ரிஜிஸ்டிரார் ஆபீசிலாவது ரிஜிஸ்டர் செய்விக்கலாம்.

அசையாப்பொருள் விஷயமான தஸ்தாவேஜுகளை, அந்த அசையாப்பொருள் எங்கெந்த சப் ரிஜிஸ்டிரார் இலாகாவில் சேர்ந்திருக்கிறதோ அந்தந்த சப் ரிஜிஸ்டிரார் ஆபீசுகளில் எதிலாவது, அல்லது அவைகளுக்குச் சேர்ந்த ரிஜிஸ்டிரார் ஆபீசிலாவது, ரிஜிஸ்டர் செய்விக்கவேண்டியது.

553. தஸ்தாவேஜுகள் எழுதப்பட்ட தேதிமுதல் 4 மாதங்களுக்குள்ளாக, அவைகளை ரிஜிஸ்டர் செய்வதற்காக தாக்கல் செய்யவேண்டியது.

அப்படி தாக்கல் செய்யாமல்போனால், 8 மாதங்களுக்குள்ளாக தாக்கல் செய்து, ஆலசியமானதற்குத் தகுந்த காரணம் காட்டினால் ரிஜிஸ்டருக்காக மாமூலாய் வாங்கிக் கொள்ளும் பீசுக்கு பத்து மடங்குக்குமேல்படாமல் அபராதம் வாங்கிக்கொண்டு தஸ்தாவேஜை ரிஜிஸ்டர் செய்யவேண்டியதென்று ஜில்லா ரிஜிஸ்டிரார் உத்திரவு செய்வார்.

554. மேல்சொல்லப்பட்டபடி, 4 மாதங்களுக்குள்ளாவது 8 மாதங்களுக்குள்ளாவது ரிஜிஸ்டர் செய்வதற்காக, தஸ்தாவேஜு தாக்கல் செய்யப்பட்டபோதிலும், தஸ்தாவேஜை எழுதிக்கொடுத்தவர்கள் எல்லோரும், ரிஜிஸ்டர் செய்யும் ஆபீசர் முன்பாக மேற்படி கெடுவுக்குள்ளாக. ஹாஜராகாமல்போனால், தஸ்தாவேஜு ரிஜிஸ்டர் செய்யப்படமாட்டாது.

ஆனால், அந்த ஆலசியம் 4 மாதங்களுக்கு அதிகப்படாமலிருந்து, தகுந்த காரணம் காட்டப்பட்டால், ரிஜீஸ்டர் செய்வதற்கு வாங்கிக்கொள்ளும் மாமூல் பீசுக்கு, பத்து மடங்குக்கு மேல்படாமல் அபராதம் வாங்கிக்கொண்டு, தஸ்தாவேஜை ரிஜிஸ்டர் செய்யவேண்டியதென்று ஜில்லா ரிஜிஸ்டிரார் உத்திரவு செய்வார்.

தஸ்தாவேஜு எழுதப்பட்ட தேதிமுதல் 12 மாதங்களுக்குள்ளாக, எழுதிக்கொடுத்தவர்கள் எல்லோரும், ஹாஜராகாமல்போனால், அதற்கு பிறகு ரிஜிஸ்டர் யெய்யப்படமாட்டாது.

தஸ்தாவேஜு எழுதிக்கொடுத்தவர்களுக்கு பதிலாக, அவர்களிடத்தில் வகாலத்து பெற்றவர்கள் ஹாஜராகலாம்.

555. ரிஜிஸ்டருக்காக கொண்டுவரப்பட்ட தஸ்தாவேஜுகளில், ஹம்சபாதங்கள், கிருக்குகள், திருத்தல்கள், பிளாங்குகள் முதலியவைகள், இருக்கக்கூடாது. இருந்தால், அப்பேர்பட்ட இடங்களில் அந்த தஸ்தாவேஜை எழுதிக்கொடுத்தவனுடைய கையெழுத்தாவது, இனிஷலாவது, இருக்கவேண்டியது.

556. காயிலா மனிதர்கள், கோஷா ஸ்திரீகள், இப்படிப்பட்டவர்கள் விஷயத்தில் - வண்டிவாடகையும், 10 ரூபாய் பீசும், கொடுத்தால், ரிஜிஸ்டர் செய்யும் ஆபீஸர், அவர்களுடைய வீட்டுக்குவந்து, தஸ்தாவேஜை ரிஜிஸ்டர்செய்வார்.

557. தஸ்தாவேஜை எழுதிக்கொடுத்தவனாவது, எழுதி வாங்கிக்கொண்டவனாவது, இறந்துபோனால், அவர்களுடைய வாரசுதாரர்கள் ரிஜிஸ்டர் செய்வித்துக்கொள்ளலாம்.

558. தஸ்தாவேஜு எழுதிக்கொடுத்தவன், அந்த தஸ்தாவேஜை ரிஜிஸ்டர் செய்விப்பதற்கு அசர்த்தையாயிருந்தால் அல்லது செய்விக்கமாட்டேனென்று சொன்னால், மேற்படி தஸ்தாவேஜை எழுதிவைத்துக்கொண்டவனாகிலும் அவனிடத்தில் வகாலத்து பெற்ற ஏஜண்டாவது, சப்ரிஜிஸ்டிரார் ஆபீசில் அந்த தஸ்தாவேஜை தாக்கல்செய்து, சம்மன்செலவு கட்டினால், எழுதிக்கொடுத்தவனுக்கு சம்மன் செய்யப்படும்.

559. தஸ்தாவேஜு எழிதிக்கொடுத்ததாக சொல்லப்படும் மனிதனாவது, அவன் இறந்துபோயிருந்தால், அவன் வாரசுதாரனாவது, தஸ்தாவேஜு எழுதிக்கொடுக்கவில்லையென்றுசொன்னால், சப் ரிஜிஸ்டிரார் அப்படிப்பட்ட தஸ்தாவேஜை, ரிஜிஸ்டர் செய்யமாட்டார். அப்பொழுது, சப்

ரிஜிஸ்டிராருடைய உத்திரவுக்கு நகல்பெற்றுக்கொண்டு, தஸ்தாவேஜு எழுதிவைத்துக்கொண்டவனாவது, அவனுடைய ஏஜண்டாவது, 30 நாள்களுக்குள்ளாக, ஜில்லா ரிஜிஸ்டிரார் அவர்களிடத்தில், அர்ஜி கொடுத்துக்கொண்டால், அதைக்குறித்து, அவர் விசாரணைசெய்து, தஸ்தாவேஜி எழுதிகொடுக்கப்பட்ட சங்கதி, உண்மை என்று தோன்றினால், அதை ரிஜிஸ்டர் செய்யவேண்டியதென்று, உத்திரவு செய்வார்.

அப்படி உத்திரவு செய்யப்பட்ட 30 நாள்களுக்குள்ளாக, அந்த தஸ்தாவேஜை ரிஜிஸ்டர் செய்வித்துக்கொள்ளலாம்.

560. மேலே சொல்லப்பட்ட ஹேதுவினால் அல்லாமல், வேறு எந்த ஹேதுவினாலாவது, சப் ரிஜிஸ்டிரார் தஸ்தாவேஜை ரிஜிஸ்டர் செய்யாமல் திருப்பிவிட்டால் 30 நாள்களுக்குள்ளாக, ஜில்லா ரிஜிஸ்டிராரிடத்தில் அப்பீல்செய்து கொள்ளலாம். அதின்பேரில், ரிஜிஸ்டர் செய்யவேண்டியதென்று ரிஜிஸ்டிராரவர்கள் உத்திரவு செய்தால், அந்த உத்திரவு தேதிமுதல், 30 நாள்களுக்குள்ளாக தஸ்தாவேஜை ரிஜிஸ்டர் செய்வித்துக்கொள்ளலாம்.

561. முதலிலாவது, அப்பீலிலாவது, தஸ்தாவேஜு ரிஜிஸ்டர் செய்யக்கூடாதென்று, ஜில்லா ரிஜிஸ்டிராரவர்கள் உத்திரவுசெய்தால், அதின்பேரில் அப்பீல் இல்லை. ஆனால், அந்த தஸ்தாவேஜை எழுதிவைத்துக்கொண்டவனாவது, அவனுடைய ஏஜண்டாவது, அதை ரிஜிஸ்டர் செய்யவேண்டியதென்று டிக்கிரீ பெறுவதற்காக, 10 ரூபாய் ஸ்டாம்பு கடுதாசியின்பேரில் சிவில் கோர்ட்டில் தாவா கொண்டுவரலாம்.

562. ரிஜிஸ்டர் செய்விக்கப்பட்ட தஸ்தாவேஜுகளுடைய, நகல்களை வேண்டுகிறவர்கள், ரிஜிஸ்டர் காலத்திலேயே கேட்டுக்கொண்டால், தேடுவதற்காக கொடுக்கவேண்டிய சார்ஜீ யில்லாமல், நகல்கள் கொடுக்கப்படும்.

அசையும்பொருள் சம்மந்தமான தஸ்தாவேஜுகளின் நகல்கள், பார்ட்டிகளுக்குத் தவிற மற்றவர்களுக்கு கொடுக்கப்படமாட்டா.

அசையாப்பொருள் சம்மந்தமான தஸ்தாவேஜுகளின் நகல்கள் கேட்டவர்களுக்கு கொடுக்கப்படும்.

உயில், தத்து அதிகார பத்திரிகை - இந்த தஸ்தாவேஜுகளின் நகல்கள் - உயில்தாரனும், மேற்படி அதிகாரபத்திரிகையை எழுதிக்கொடுத்தவனும், இறந்துபோனபிறகு, யார் கேட்டாலும், அவர்களுக்கு கொடுக்கப்படும். ஆனல், அவர்கள் ஜீவித்திருக்கும்போது, அவர்களுக்கும், அவர்களிடத்தில் அதிகாரம்பெற்ற ஏஜண்டுகளுக்கும் தவிற மற்றவர்களுக்கு கொடுக்கப்படமாட்டா.

563. ரிஜிஸ்டர் செய்யப்படும் தஸ்தாவேஜுகளின் விஷயத்தில் - ரிஜிஸ்டர்செய்யும் ஆபீசராவது, குமாஸ்தாக்களாவது, புத்தி பூர்வகமாய் தப்பு நகல்கள், தப்பு தர்ஜுமாக்கள், தப்பு ரிஜிஸ்டர்கள், எழுதினல், 7 வருஷம்வரைக்கும் காவல் தண்டனையாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும்.

மேலும், ரிஜிஸ்டர் செய்யும் ஆபீசர்முன்பாக, பொய்சங்கதிகள் சொன்னவர்களும், தப்பு தஸ்தாவேஜுகள், தப்பு தர்ஜுமாக்கள், தாக்கல்செய்தவர்களும், வேறுபேர்வைத்துக்கொண்டு ஆள்மாராட்டம்செய்து ஒருவருக்கு பதிலாக மற்றொருவர் ஹாஜராய் வேலை நடப்பித்துக்கொண்டவர்களும், இந்தக் குற்றங்களுக்கு உடந்தையாயிருந்தவர்களும், 7 வருஷம்வரைக்கும் காவலுக்காவது, அபராதத்துக்காவது, அல்லது இரண்டுக்குமாவது உள்ளாவார்கள்.

*** அடமானம், கிரயம், முதலாகிய திரான்ஸ்பர்கள்.

564. திரான்ஸ்பர்களுக்கு போடவேண்டிய ஸ்டாம்பு டியூடி விஷயமாய் 540-வது பியாரா பார்க்கவேண்டியது.

565. 100 ரூபாயிக்கு குறைந்ததொகைக்கு, அசையாப் பொருள், விற்பனை செய்யப்பட்டபோதும், அடமானம் வைக்கப்பட்டபோதும், சொத்தை சுவாதீனப்படுத்தினல் போறும். தஸ்தாவேஜு வேண்டியதில்லை. தஸ்தாவேஜு எழுதிக்கொண்டால் ரிஜிஸ்டர் செய்யவேண்டும். ரிஜிஸ்டர் செய்யப்பட்ட தஸ்தாவேஜு இருந்தால், சொத்து சுவாதீனப்படுத்தப்படாமல் இருந்தபோதிலும் செல்லும்.

நூறு ரூபாயிக்காவது அதற்கு மேற்பட்ட தொகைக்காவது, அசையாப்பொருள், விற்பனை செய்யப்பட்டபோதும், அடமானம்வைக்கப்பட்டபோதும், தஸ்தாவேஜு எழுதிக்கொண்டு ரிஜிஸ்டர் செய்வித்துக்கொள்வது அவசியம். இப்படி செய்துக்கொள்ளாமற்போனல் சொத்து சுவாதீனப்படுத்திக்கொண்டபோதிலும் செல்லாது. ரிஜிஸ்டர் செய்த தஸ்தாவேஜு இருந்தால் சொத்து சுவாதீனப்படுத்தப்படாமற்போனபோதிலும், செல்லும்.

566. எவ்வளவு விலையுள்ளதாயிருந்தாலும், அசையாப் பொருள், தானஞ்செய்யப்பட்டபோது, தஸ்தாவேஜு எழுதி ரிஜிஸ்டர்செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது. அந்த தஸ்தாவேஜில் தானங்கொடுத்தவனுடையவும் இருவர் சாக்ஷிகளுடையவும், கையெழுத்து இருக்கவேண்டும். அப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்ட தஸ்தாவேஜு இல்லாவிடில், சொத்து சுவாதீனப்படுத்தப்பட்டபோதிலும், தானம் செல்லாது. ரிஜிஸ்டர் செய்யப்பட்ட தஸ்தாவேஜு இருந்தால், சொத்து சுவாதீனப்படுத்துவது அவசியமில்லை.

அசையும்பொருள் தானம்செய்தபோது, சொத்து சுவாதீனப்படுத்தினல் போரும். தஸ்தாவேஜு எழுதவேண்டிய அவசியமில்லை. மேல்சொல்லப்பட்டபடி தானம் கொடுத்தவனுடையவும், இருவர் சாக்ஷிகளுடையவும், கையெழுத்துடன் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட தஸ்தாவேஜு இருந்தால், சொத்து சுவாதீனப்படுத்தப்படாமல் போனபோதிலும், தானம் செல்லும்.

567. பூமி, வீடு, சுவர், இப்பேர்ப்பட்டவைகள் அசையாப்பொருள். மற்றவைகள், அசையும்பொருள்.

கட்டடங்களுக்கு உபயோகமான மூங்கில்செடிகள், தேக்குமரங்கள், முதலிய விருக்ஷங்கள் - பையிர்பச்சைகள் புல் - இவைகள் அசையும்பொருள்.

கொய்யாமரங்கள், மாமரங்கள், தென்னமரங்கள் - இவைகள் அசையாப்பொருள். அவைகளுடைய பழங்கள், இலைகள் அசையும்பொருள்.

568. பட்டா திரான்ஸ்பர்கள் சப் ரிஜிஸ்டிரார் அவர்களுடைய ஆபீசில் செய்வித்துக்கொள்ளலாம்.

569. சொத்தை தானமாவது, கிரயமாவது செய்தபோது - அந்த ஆஸ்தியை எப்போதும் விற்ககூடாதென்றுவது, அதினல் உண்டாகும் வரும்படியை எப்பொழுதும் செலவு செய்யாமல் சேர்த்து வைக்கவேண்டுமென்றுவது, ஆஸ்தி வாங்கிக்கொண்டவன் இன்சால்மெண்டு ஏரினல் மேற்படி சொத்து கொடுத்தவனுக்கு வந்துசேரவேண்டுமென்றுவது - இப்படிப்பட்ட ஷரத்துகள் ஏர்ப்படுத்தப்பட்டால் அவைகள் செல்லமாட்டா. கிரயமும் தானமும் செல்லும்.

570. மைனர்கள், பைத்தியக்காரர்கள் இவர்கள் செய்த திரான்ஸ்பர்களும், குடித்து உடம்புதெரியாமல் இருக்கும் சமயத்தில் செய்யப்பட்ட திரான்ஸ்பர்களும், கடன்கொடுத்தவர்களை மோசம் செய்யவேண்டுமென்னும் எண்ணத்தோடு செய்யப்பட்ட திரான்ஸ்பர்களும், ஏதாவது அசையாப் பொருளைக்குறித்து கோர்ட்டில் வியாச்சியம் நடந்துகொண்டிருக்கையில் அதைக்குறித்து செய்யப்பட்ட திரான்ஸ்பர்களும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தின் விஷயமாயாவது, பிஞ்சின் விஷயமாயாவது, செய்யப்பட்ட திரான்ஸ்பர்களும் - செல்லமாட்டா.

571. வாடகைக்கு விடப்பட்ட வீடுமுதலிய அசையாப் பொருள் விற்பனை செய்யப்பட்டபோது, வாடகைக்கு இருக்கிறவனை அவனுடைய கிரிமெண்டு கெடுவுக்குள்ளாக போகும்படி செய்யமாளாது.

572. குத்தகை சீட்டுகளும், வீட்டுவாடகை கிரிமெண்டுகளும் எழுதிக்கொண்டபோது – அந்த பூமியையாவது வீட்டையாவது, குத்தகைக்கு அல்லது, வாடகைக்கு வாங்கினவன், வேறுயாருக்கும் குத்தகைக்காவது, வாடகைக்காவது, கொடுக்கக்கூடாதென்று நினைக்கும் பட்சத்தில், அது விஷயமாய் வெளிப்படையாக ஷரத்து கண்டெழுதவேண்டியது.

573. ஒரே ஆசாமிக்குச்சேர்ந்த இரண்டு பூமிகள், வெவ்வேருக அடமானம்வைக்கப்பட்டிருந்தால், அதில் ஏதாவது ஒரு அடமானத்தின் அசலும் வட்டியும் கொடுத்துவிட்டு, அதை இரண்டாவது அடமானத்துக்கு யாதொரு சம்மந்தமில்லாமல் மீட்டுக்கொள்ளலாம்.

*** பிராமிசெரி நோட்டுகள் – பத்திரங்கள்.

574. பிராமிசெரி நோட்டுகளுக்கும், பத்திரங்களுக்கும், இருக்கவேண்டிய ஸ்டாம்பு முதலியவைகளைக்குறித்து, 531, 532, 524, 525, பியாராக்களைப் பார்க்கவேண்டியது.

575. ஆண்டிமாண்டு பிராமிசெரி நோட்டுகள், ரசீதுகள், முதலியவைகளுக்கு, அவைகளை எழுதியபோதாவது, அதற்கு முன்பாவது, ஸ்டாம்பு ஒட்டி, அதின்பேரில் கையெழுத்து செய்தாவது முத்திரை குத்தியாவது ரத்து செய்யவேண்டியது. அப்படி ரத்தாக்காமல் போனபோதும், அல்லது, அதற்கு ஸ்டாம்பு பிறகு ஒட்டினபோதும், அந்த தஸ்தாவேஜு செல்லாது.

மேலும், மேல்சொல்லியபடி ஸ்டாம்பு ஒட்டாமல்போனல், 500 ரூபாய்வரைக்கும் – ஒட்டி ரத்தாக்காமல்போனல், 100 ரூபாய்வரைக்கும் – அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

576. தஸ்தாவேஜு மசூதா ஒருதேதியில் செய்து பின் தேதியில் ஸ்டாம்பு கடுதாசி விலைக்குவாங்கி, மசூதாவில் இருக்கிறபடி முன்தேதிபோட்டு பிசகாய் சிலசமயங்களில் தஸ்தாவேஜுகள் எழுதப்படுகின்றன. அப்படிப்பட்ட தஸ் தாவேஜுகள் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டபோது தொந்திரவு நேரிடுமாகையால் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது.

577. தஸ்தாவேஜில் எழுதப்பட்டபடி, தொகை முழு வதுமாவது, கொஞ்சமாவது, சேராமலே இருந்தால் அதை க்குறித்து நம்பத்தகுந்த ருஜுவிருக்கும் பட்சத்தில் உண் மையாக பெத்துக்கொண்ட தொகைக்கு மாத்திரமே கோர் ட்டார் டிக்கிரீ செய்வார்கள்.

578. மோசம்செய்தாவது பலவந்தப்படுத்தியாவது ஏ மாற்றியாவது, எழுதிவாங்கிக்கொள்ளப்பட்ட தஸ்தாவே ஜுகள் செல்லமாட்டா. மேலும், கோர்ட்டில் தாவாசெய் து, அப்படிப்பட்ட தஸ்தாவேஜுகளை ரத்து செய்வித்துக் கொள்ளலாம்.

579. பத்திரங்கள் முதலிய தஸ்தாவேஜுகளில், உபய கட்சிக்காரர்களும் ஒப்புக்கொள்ளாத ஷரத்துகளாவது, வெவ்வேறு விதமாக அர்த்தம் செய்துக்கொள்ளப்பட்ட ஷரத்துகளாவது சேர்க்கப்பட்டிருந்தால், அப்படிப்பட்ட ஷரத்துகள் செல்லமாட்டா.

580. வக்கீல் முதலியவர்கள் முன்னதாக செலவுசெய் து, வியாச்சியம் ஜெயித்தால் வரும்மொத்தத்தில் ஒருபங்கு கொடுக்கும்படியாக ஷரத்துகண்டு தஸ்தாவேஜு எழுதி வைத்துக்கொண்டால், அப்படிப்பட்ட தஸ்தாவேஜின்படி கோர்ட்டார் தீர்ப்பு செய்யமாட்டார்கள்.

581. சம்போகத்தின் நிமித்தம் மாதம் 1 க்கு இவ்வளவு கொடுப்பதாய் ஒருவேசிக்கு எழுதிக்கொடுத்த தஸ்தாவேஜு செல்லமாட்டாது. ஆனால், ஸம்போகம் செய்ததற்காக

கொடுக்கவேண்டிய பாக்கியைக்குறித்து எழுதிக்கொடுத்த தஸ்தாவேஜு செல்லும்.

582. ஒரு தஸ்தாவேஜு ஜாயிண்டாக இரண்டு மூன்று பேருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டால், அவர்களாவது அவர்கள் இறந்துபோனால் வாரஸ்தார்களாவது எல்லோரும் சேர்ந்து வியாச்சியம் கொண்டுவரவேண்டியது. அதில் ஒருவன்மாத்திரம் தன் பங்குக்காகவாவது, எல்லாமொத்தத்துக்குமாவது வியாச்சியம் கொண்டுவந்தால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

583. ஒரு தஸ்தாவேஜு இரண்டு மூன்று பேருக்கு ஜாயிண்டாக எழுதிக்கொடுக்கப்பட்டிருந்தபோது, அந்த தஸ்தாவேஜுப்படி கொடுக்கவேண்டிய தொகையை, அவர்களில் ஒருவரிடத்தில் மாத்திரமே கொடுத்து ரசீது வாங்கிக்கொண்டபோதிலும் செல்லும்.

584. தாங்கள் கொடுக்கவேண்டிய தொகை இவ்வளவு இவ்வளவென்று வெவ்வேறாக ஏற்படுத்திக்கொள்ளாமல், இரண்டு மூன்று கடனாளிகள் சேர்ந்து தஸ்தாவேஜு எழுதிகொடுத்தால், கடன் தொகை முழுவதும், அவர்கள் எல்லோர்களிடத்திலாவது, அல்லது அவர்களில் ஒருவரிடத்திலிருந்தேயாவது, வரப்படுத்திக்கொள்ளலாம்.

ஒரு கடனாளியின் பேரில் மாத்திரமே வியாச்சியம் கொண்டுவந்தால, கடன் தொகை முழுவதும் அவனிடத்திலிருந்து கிடைக்காமற்போனபோதிலும், மற்ற கடனாளிகளின்பேரில் பிறகு வேறு வியாச்சியம் கொண்டுவரக்கூடாது.

கடன் தொகை முழுவதும், ஒரேகடனாளிகொடுத்து விட்டபோது, அவன் மற்ற கடனாளியின்பேரில், அவர்கள் பங்கு பணத்துக்காக வியாச்சியம் கொண்டுவரலாம்.

585. பணம்கொடுத்தபோது, பத்திரத்தில் செல்லுவைத்தாலொழிய, செல்லமாட்டாதென்று ஷரத்து எழுதிக்கொண்டபோதிலும், பத்திரத்தில் செல்லுவைக்காமல் பணம் கொடுத்திருந்தால், அதைக்குறித்து ரசீதுனாலாவது சாக்ஷியத்தினாலாவது ருசுவுசெய்யலாம்.

*** செல்லு, வட்டி.

586. ஒருவனுக்கே இரண்டு மூன்று தொகைகொடுக்கவேண்டியதாக இருந்தபோது, செல்லுவைக்கும்படியாய் கொடுக்கப்படும் தொகை, எந்தபாக்கிக்காக செல்லுவைக்கவேண்டுமென்று செலுத்துகிறவன் கேட்டுக்கொள்ளுகிறானே, அந்த பாக்கிக்காக செல்லுவைக்கவேண்டியது விதியாயிருக்கிறது.

587. இந்த பாக்கிக்காக செல்லுவைக்கவேண்டியதென்று, தெரியப்படுத்தாமல் கடனாளி பணத்தை அனுப்பினல்-அந்த தொகையின் மொத்தம் முதலிய சந்தர்ப்பங்களைப் பார்த்து, இன்னபாக்கிக்கு செல்லுவைக்கவேண்டுமென்று கொடுக்கப்பட்டதாக தெரியவந்தால் அந்த பாக்கிக்காகவே செல்லுவைக்கவேண்டியது.

மேலே சொல்லியபடி தெரியாமல்போனால், கடன் கொடுத்தவன் தனக்கு அப்பொழுது வரவேண்டியபாக்கிகளில், எந்த பாக்கிக்காகவாவது செல்லுவைத்துக்கொள்ளலாம். லிமிடேஷன் பாரான கடனுக்காகவும்கூட செல்லுவைத்துக்கொள்ளலாம். ஆனல், இனிமேல் வரவேண்டிய வாயிதா பணத்துக்காகவாவது, இனிமேல் கொடுக்கவேண்டிய கடன் தொகைக்காகவாவது, செல்லுவைத்துக்கொள்ளக்கூடாது.

588. மேல்பியாராவில் சொல்லப்பட்டபடி கடன்கொடுத்தவனுக்கு, தன்னிஷ்டப்படி செல்லுவைக்க சுவதந்திரம் உண்டானபோது, அவனும்கூட செல்லுவைக்காமல் கொ

டுத்த தொகைகளை, வரவுவைத்துக்கொண்டு மாத்திரம் இருந்தால், அந்த தொகைகள் காலக்கிரமப்படி கடன்களுக்கு செல்லாகின்றன.

589. கடனாளியினால் கொடுக்கப்படாமலே, அவனுடைய பணம் எவ்விதத்தினாலாவது, கடன் கொடுத்தவன் வசத்தில் வந்தால், கடனாளியினுடைய இஷ்டப்படிக்கே, மேற்படி பணத்தை செல்லுவைத்துக்கொள்ளவேண்டியது.

590. கடனாளி, மிகுந்த அவஸரத்தில் அல்லது ஆபத்தில் இருந்ததினாலாவது, அவன் மிகவும் புத்திகுறைவானவனாய் இருந்ததினாலாவது, அக்கிரமமான வட்டிபோட்டு பத்திரம் எழுதப்பட்டிருந்தால் கோர்ட்டாருக்கு நியாயமென்றுதோன்றும் வட்டி மாத்திரம்தான் கொடுப்பிக்கப்படும்.

591. மேலும், வாயிதா நாளில் அஸலும் வட்டியும் கொடுக்காமல் தப்பிப்போகும் பட்சத்தில் பத்திரம் எழுதின தேதிமுதல் ஜாஸ்திவட்டி கொடுப்பதாக ஷரத்து ஏர்ப்படுத்திக்கொண்டிருந்தால் அந்த ஷரத்து செல்லாது ஆனால், வாயிதா தேதிமுதல் பணம் கொடுக்கிறவரைக்கும். ஜாஸ்திவட்டி கொடுப்பதாக ஏர்ப்படுத்திக்கொண்டிருந்தால் அது செல்லும்.

முற்றிற்று.